சுகஜீவனம்



பாலகுமாரன்

சுக ஜீவனம்

பாலகுமாரன்

மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559
email:- enquiry@thirumagalnilayam.com
website:- www.thirumagalnilayam.com

முதற் பதிப்பு ஆகஸ்ட், 1990
இரண்டாம் பதிப்பு 1992
மூன்றாம் பதிப்பு டிசம்பர், 1996
நான்காம் பதிப்பு டிசம்பர், 2009

© : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

TITLE	SUGA JEEVANAM
AUTHOR	BALAKUMARAN
FORTH EDITION	DECEMBER - 2009
PAPER	11.6 Cream Wove
TOTAL PAGES	320

Available at :
THIRUMAGAL NILAYAM
16/55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Phone : 24342899, 24327696
Fax : 91-44-24341559

விலை ரூ. 110/-

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Typesetting AMARAVATHI GRAPHICS
Chennai - 33. Cell : 9444169725

Printed by : Udayam Offset: 2845 4808, 2845 1906.



சமர்ப்பணம்




என் இனிய தோழி, எழுத்தாளர்

அனுராதா ரமணன் அவர்கட்கு



மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

சுக ஜீவனம்



இரண்டாவது முறை குயில் கூவும்போது ஸ்ரீராமுலு செட்டியார் படுக்கை விட்டு எழுந்து விட்டார்.

கட்டிலுக்கு அருகே உள்ள மேஜையைத் தடவி டேபிள் லேம்ப் சுவிட்ச் போட்டார். டைம்பீஸ் நாலே முக்கால் என்று காட்டியது. படுக்கையில் சம்மணமிட்டு உட்கார்ந்தார். கண்கள் மூடினார். நெஞ்சருகே இரண்டு கைகளையும் குவித்தார். மனசுக்குள்ளே எம்பெருமானை நோக்கி வணக்கம் சொன்னார்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்று நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்டுபடுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்

- மனசுள் பசு தோன்றியது. கழுத்து மணி அசைத்தது. கால் சதங்கை நகர்த்தியது.

'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்'

- குடம் குடமாய் நுரை தளும்பும் பால் தோன்றியது.

'நீங்காத செல்வம் நிறைந்து...'

- பசுவும், பாலும், பூக்களும், நெல் வயலும், நீர் வற்றாத குளமும், செல்வங்கள். எந்த தேசத்தில் மாதம் மும்முறை மழை பெய்கிறதோ அங்கே லக்ஷ்மி வாசம் செய்வாள். அங்கே புல் பூண்டுகள் பச்சென்று தழைக்கும். செந்நெல் கதிராகும். மீன்கள் துள்ளும், நீர்வளம், நிலவளம் நிறையும், வண்டுகள் பூக்களைச் சுற்றும். மடி நிறைந்த பசுக்கள் பெருகும். மழை வேண்டும், சகலரும் மழைவேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து...'

- தீங்கு செய்யாத மழை வேண்டும். அடித்துப் புரட்டி மழை நாசம் செய்துவிடக்கூடாது. குளிர் வரக்கூடாது. கொஞ்சம் வெயில், கொஞ்சம் மழை. அப்போதுதான் வயலும் வரப்பும் பூவும் பொறி வண்டும் பெருகி தேனும், பாலும், நெய்யும் அதிகம் உண்டு மக்கள் ஆரோக்கியமாய் வாழ முடியும்.

அதிகம் உழைத்து, உழைப்புக்கு தகுந்த செல்வம் தேடி, தேடின செல்வத்தை ஸ்ரீராமுலு செட்டியாரிடம் கொண்டு வந்து கொடுத்து தங்கமாய், தங்க நகையாய், வைரக் கம்மலாய், மூக்குத்தியாய், வளையலாய் மாற்றிக் கொண்டு போவார்கள்.

இதற்கு மழை வேண்டும். மழையே பெரிய செல்வம். தீங்கின்றி பெய்யும் மழைக்கு தினமும் மனசு உருகிப் பிரார்த்திக்க வேண்டும். நீங்காத செல்வம் அப்போதுதான் நிறையும்.

'நிறைந்தேலோ ரெம்பாவாய்...'

- என்று ஆண்டாள் பாசுரம் பாடியிருந்தாலும், 'நிறைந்து' என்று தனக்குத் தானே ஆசீர்வதித்துக் கொள்ள வேண்டும். செல்வம் என்னிடம் நிறையட்டும் என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீராமுலு செட்டியார் இடையே ஒரு பாசுரம் விட்டு இன்னொரு பாசுரம் தாவினார்.

'சிற்றஞ்சிறுகாலே வந்துன்னை சேவித்து - உன்
பொற்றாமறையடியே போற்றும் பொருள் கேளாய்.'

- இது அவருக்குப் பிடித்த பாசுரம். விடிகாலைப் பொழுதில் உன் திருவடி சேவித்து வணங்கி நான் கேட்கும் வரமென்ன தெரியுமா?

'பெற்றம் மேய்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களை கொள்ளாமற் போகாது.'

- வளம் தரும் பசுக்களை மேய்த்து வாழும் குலத்தில் பிறந்த கோபாலா, என்னை உன் சேவைக்கென சிறு பணிகள் செய்ய அழைக்காமல் இருக்காதே.

'இற்றை பறை கொள்வான் என்று காண் கோவிந்தா
என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உமக்கே நாமாட் செய்வோம்.'

- என்றென்றும் இன்னும் ஏழு ஏழு பிறவிக்கும் உன் அடியனாய் உன் பணிக்கு மட்டுமே ஆட்பட்டவனாய் என்னை வைத்துக்கொள்.

'மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்.'

- என் வேறு ஆசைகளைக் களைந்துவிடு எம்மானே.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் என்கிறபோது ஸ்ரீராமுலு செட்டியாரின் இரண்டு கைகளும், தலைக்கு மேல்

உயரும். வெங்கடாசலபதியின் பெரிய திருவடிகள் அவர் கண்முன்பு தோன்றும். 'உமக்கே நாம் ஆட் செய்வோம்' என்று சொல்கிறபோது வேறு எவர்க்கும், எதற்கும் கட்டுப்பட மாட்டேன். உம்மைத் தவிர வேறு எவரையும் வணங்கேன் என்கிற வன்முறை வரும்.

இது அவர் வழக்கம். இரண்டு பாசுரமும் சொல்லிய பிறகு எழுந்து பின்பக்கம் போவார். பல் துலக்கி இரண்டு சொம்பு நீர் அருந்தி வேட்டி மீது பெல்ட் இறுக்கி கை பனியன் போட்டுக் கொண்டு மேலே சால்வை போர்த்தி தெருவில் இறங்க, சவுகார்பேட்டை மெல்ல விழித்துக் கொள்ள முயல்வது தெரியும்.

சவுகார்பேட்டையின் குறுகலான தெருக்கள், மூன்றடுக்கு மாடி வீடுகள், சூரிய வெளிச்சம் அதிகம் புகவொட்டாது இருளோவென்று இருக்கும். செருப்புக் காலோடு நடக்கத் துவங்கினார் என்றால் துறைமுகம் சுவர் பக்கம் போய் நின்று சூரியோதயம் பார்த்துவிட்டு அதே வேகத்தில் திரும்ப, பளிச்சென்று விடிந்து விடும்.

திரும்பும்போது கடை வாசலை ஒருமுறை பார்த்து விட்டு வருவார். 'பங்காரு ஸ்ரீராமுலு செட்டி அண்ட்சன்ஸ்' ஏழு பூட்டுகளோடு ஒரு தெரு முனைக் கடையாய் இரண்டு வாசலாய் இருக்கும். அது லக்ஷ்மி வாசம் செய்யும் இடம். செங்கல் செங்கலாய் தங்கம் விற்கும் இடம். சீசன் இல்லாத காலத்தில்கூட இரண்டாயிரம் சவரன் நகை இருக்கும். நானூறு கிலோ வெள்ளி தேறும். பண்டிகை சீசனில்கூட ஐந்நூறோ ஆயிரமோ இருக்கும். நகையாய், பாத்திரமாய், விரல் நீளக் கட்டியாய், கம்பியாய், தகடாய், முத்திரைச் சவரனாய் தேவையெனில் செங்கல் கட்டியாய்க்கூட தங்கம் கிடைக்கும்.

இன்றைக்கும் அவ்விதமே ஏழு பூட்டுகளையும் கடந்து போகையில் உற்றுப் பார்த்துவிட்டுப் போனார்.

மண்ணடியிலிருந்து பால்காரர்கள் அலுமினியத் தூக்குகளில் பசும்பால் எடுத்துக்கொண்டு சைக்கிளில் விரைந்தார்கள். சவுகார்பேட்டை மார்வாடிகள் நிறைந்த இடம். ராஜஸ்தானியர்கள் காலையில் எருமைப்பால் சாப்பிடமாட்டார்கள். அதை கடவுளுக்கு நிவேதனம் செய்ய மாட்டார்கள். தண்ணீர் கலக்காத பசும்பால் எத்தனை விலை கொடுத்தாகிலும் வாங்குவார்கள். அதில் டீ கலந்து குடித்த பிறகு ஜிலேபி தின்பார்கள்.

இப்போதெல்லாம் ஜிலேபி திங்கிற மார்வாடிகளைக் காணோம். இரவு இரண்டு மணிவரை பீச் ரோடில் கார் ஓட்டி விட்டு அல்லது கடைசி ஷோ சினிமா ஆறாவது முறையாகப் பார்த்துவிட்டு காலை எட்டு மணிக்கு எழுந்திருக்கிறார்கள். பல்துலக்காமல் பீடா போடுகிறார்கள்.

இருபது வருடத்திற்கு முந்தி இந்த பனியாக்கள் காலை ஆறு மணிக்கு ஈர பஞ்சகச்ச வேட்டியும் மேலே காசித்துண்டும் நெற்றியில் சந்தனமும், காதில் பூவும், கையில் தாமிரத்தட்டும், தட்டில் நீர் சொம்பும், உத்தரணியும், சந்தன குங்கும கிண்ணங்களும், பூக்களும் ஏந்தி கோவிலுக்குப் போவார்கள். தானே கோவிலில் சுவாமிக்குப் பூ போட்டு சந்தன குங்குமமிட்டு வலம் வந்து வணங்கி கட்டித் தழுவி நெற்றியில் முட்டிக் கொண்டு இரண்டு புஷ்பம் எடுத்துப் பிரசாதமாய் தட்டில் போட்டுக் கொண்டு ராம நாமம் சொல்லியபடி வீடு திரும்புவார்கள், அந்த இரண்டு பூக்களையும் பணப்பெட்டி மீது வைத்து வணங்குவார்கள்.

இப்போது இந்த மார்வாடிப் பையன்கள் பேசினால் எச்சில்தான் பூ மாதிரித் தெறிக்கிறது. வியாபாரம் தெரிய வில்லை. இதற்கு என்ன விலை என்று கேட்டால் 'நீ சொல்லு!' என்கிறான்.

''முட்டாளே, நானா விற்கிறேன். நீ சொல்லடா உன் விலையை.''

''நீ இதை விற்பதற்குக் கேட்கிறாயா அல்லது உன் வீட்டு உபயோகத்திற்கா?''

''எதுவானால் என்ன... வாங்கி தரையில் போட்டு உடைப்பேன். விலை சொல்லு.''

''இல்லை. உனக்கென்றால் ஒரு விலை, நீ விற்பதற்கு என்றால் வேறு விலை.''

''முண்டம். வியாபாரம் பேசத் தெரியுமா உனக்கு. பொருளுக்கு விலை சொல்லுடா.''

''நீ சொல்லு,''

''ச்சீ போ!'' என்று எழுந்துவிடத் தோன்றும். எழுந்து நிற்கிறபோது தான் வாங்கினதை விட பத்து மடங்கு உயர்த்தி ஒரு விலை சொல்வான். வேண்டாம் என்று நகர, பாதியாய்க் குறைப்பான். கடை தாண்ட இன்னும் குறைப்பான். துண்டு உதறி நடக்கப் பின்னால் வந்து, 'என்னதான் தருவாய்?' என்று கேட்பான். கடைசியில் அவன் சொன்ன விலை ஒரு ரூபாய் என்றால் நாலணா என்று ஆரம்பிக்க வேண்டும். அல்பத் தனமாய் ஒரே ஒரு பொருள் வியாபாரம் படிய அரை மணி ஆகும்.

இருபது வருடம் முன்பு வியாபாரம் சவுகார் பேட்டையில் படுசுத்தம். ''முந்நூறு சவரன் தங்கம் இருக்கிறது. வேண்டுமா?''

''என்ன விலை?''

''மார்க்கெட் விலைக்கு இருபது ரூபாய் குறைத்துத் தருகிறேன்.''

''முப்பது தள்ளு.''

''இல்லை. இருபத்திரண்டு.''

''உனக்கும் வேண்டாம். எனக்கும் வேண்டாம். இருபத்தெட்டு தள்ளு.''

''எத்தனை?''

''நூறு.''

முத்திரைப் பவுனாய் நூல்பட்டுத் துணியில் அல்லது வெல்வெட் பையில் போட்டு அனுப்புவான். கரன்ஸியைப் பழைய ஹிண்டு பேப்பரில் சுற்றி கடைத் துணிப்பையில் ஸ்ரீராமுலு அனுப்புவார். இவர் உரசவும் மாட்டார். அவன் கரன்ஸி எண்ணிப் பார்க்கவும் மாட்டான்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்றில் வாங்கின கடை, அறுபத்தி மூன்றில் பல பேர் இதன் பெயர் சொல்லிப் பெயர் சொல்லி பிரபலமாயிற்று. கடை வாங்கின போது பதினாறு வயசு. அப்பா வாங்கிக் கொடுத்த கடை.

இருபது வயசு வரை தராசு அருகே போக விடவில்லை. ஒரு வியாபாரம் செய்ய விடவில்லை. கடை திறந்து தூசு தட்டி அப்பாவுக்கு எதிர்ப்பக்கம் நிற்க வேண்டும். கஸ்டமர்கள் இல்லையெனில் உட்காரலாம். கஸ்டமர்கள் இருக்கும்போது உட்காரக் கூடாது.

''சும்மா பாரு. வேடிக்கை பாரு.'' கடை ஆட்கள் வியாபாரம் செய்வதை நாலு வருஷம் பார்த்தபடியே இருந்தார். இருபதாவது வயசில் விஜயதசமி அன்று அப்பா கல் பிடித்து தங்கம் உரசக் கற்றுக் கொடுத்தார். ஏழு விதமான தங்கம் காட்டினார். பிறகு ஒரு வருஷம் கழித்து நவரத்தினக் கற்கள் பற்றி சொல்லிக் கொடுத்தார்.

''இதிலேர்ந்து நல்ல பச்சை எடு.''

வெள்ளி டப்பாவில் பதினாலு கற்கள் இருந்தன. பளபளப்பாய் மின்னுகிற பச்சைக்குக் கை போயிற்று. பளீரென்று பிடரியில் அடி விழுந்தது.

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்று சொல்லித் தரப்பட்டது. பச்சைக்கல் அடர்த்தியாய் இருக்கும். தூக்கி நேரே சூரிய ஒளியில் பிடிக்க, உள்ளே பசும்புல் தரையாய் மின்னும். நீரோட்டம் நெருக்கமான வரிகளாய் இருப்பது நல்ல கல்.

ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரல் நுனிக்கும் நடுவே பச்சைக்கல் பிடி. நேரே சூர்ய வெளிச்சத்திற்கு முன்பு வை. சூர்ய கதிர் ஊடுருவி கல் வழியே உன் கண்களுக்கு வரும். இடது கண் மூடு, வலது கண்ணால் கல் வழியே வரும் ஒளி வாங்கு. மெல்ல மெல்ல நோக்கி திருப்பு. பிறகு கீழ் நோக்கித் திருப்பு.

பச்சைக் கதிர் பாய்ந்து பாய்ந்து அடங்கும். ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு அடி தூரம் பச்சைக் கதிர் வீசும். இது நல்ல கல். சரியான பச்சை. கண்ணாடி பச்சையில் நிறம் சிதறும். ஒரு அடி உயரம் வீச்சு வராது. முள்ளுமுள்ளாய் சிதறும். பச்சை மூன்று அங்குலம் மேல் போகாது.

இப்போது உள்ளே கவனி. கண்ணை இடுக்கி கல்லுக்குள் பார், நீயே அந்தச் சின்னக் கல்லுக்குள் போவது போல் பார். மரு இருக்கிறதா, முடிச்சு இருக்கிறதா, வளையம் விழுகிறதா பார். சமமாய் அடர்த்தியாய் துடைத்தது போல கல் முழுவதும் பச்சை படர்ந்திருப்பின், எடுத்து சிரசு மீது வைத்து கண்களில் ஒற்றி தனியே எடுத்து வை.

அது ஜாதிப் பச்சை.

''இது என்னப்பா விலை?'' ஸ்ரீராமுலு கேட்டதற்கு அப்பா வாய்விட்டு சிரித்தார்

''நாய்னா, ஆசைக்கு விலை சொல்ல முடியாதுடா.

இது இருநூறு ரூபாய்க்கு வாங்கினேன். இந்த பச்சை நல்லா இருக்கேன்னு யாராவது ஆசையா கேட்டா ஆயிரம்

ரூபாய்ன்னு சொல்லு. அத்தினி விலையான்னா ஒரு அம்பது குறை. வேணும்னா உனக்காக தொள்ளாயிரம்ன்னு பேசு. எட்டு நூறு குறையாம வித்துரு.

கல்லுக்கு மதிப்பு கஸ்டமர் படற ஆசைல இருக்கு. ஆனா தங்கத்துக்கு மதிப்பு பம்பாய் மார்க்கெட் சொல்லும். தினம் தினம் இன்னிய விலை என்னான்னு சொல்லும்.''

''ஏம்பா பாம்பேல தங்கவிலை முடிவு பண்றது?''

''சணலுக்கு மார்க்கெட் கல்கத்தா. நெல்லுக்கு மார்க்கெட் ஆந்திரா, தஞ்சாவூர். பாக்கு கொட்டைக்கு மைசூர். பருத்திக்கு ராமநாதபுரம். ஏலக்காய்க்கு போடி. அதுபோல...''

''நீ சொல்ற பொருளு அந்தந்த இடத்துல விளையற பொருளு. தங்கம் என்னா பாம்பேலியா விளையுது?'' பிள்ளை கேட்க, அப்பன் சிரித்தான்.

''விளையற இடம் வேறதான். விளைஞ்சத வாங்கிப் போவ வக்கு இருக்கறவன் பாம்பேல இருக்கான். பம்பாய் லட்சுமி வீடு. அவ ஆட்சி பண்ற இடம். தங்கம் குவிஞ்சுருக்கற இடத்துலதான் விலை நிர்ணயம் நடக்குமே கண்டி...''

''ஒவ்வொரு நாளு ஒவ்வொரு விலை மாறுதே எப்படி?''

''அல்வா கிளறது வாய்ல சொன்னா தெரிஞ்சுக்குவியா, அசட்டு முண்டம். கூடவே கடைல இரு. பேசறது கவனி. தானா புரியும்.''

மார்க்கெட் புரிபட பத்து வருடமாயிற்று. கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரை மார்வாடிகளின் தங்க ஆட்சி பரவி இருப்பது புரிந்தது. சின்னப் பொறாமை சுடர் விட்டது. தழலாய் எழுந்தது. தீயாய்ப் பரவிற்று.

இவனை விட பங்காரு ஸ்ரீராமுலு பெரிய ஆளாய் வரவேண்டும் என்று வேகம் எழுந்தது. மார்வாடிகள் தங்கம் விட்டு நகர்ந்தபோது பங்காரு ஸ்ரீராமுலு செட்டி அண்ட் சன்ஸ் தமிழ்நாட்டின் தங்கக் கோட்டை ஆயிற்று.

கோட்டை பிடிபட்டதும் பொறுப்பு அதிகமாயிற்று. சவுகார்பேட்டையின் சகல அசைவுகளையும் கவனிக்க வேண்டியிருந்தது. உக்கம் சந்த் பெண்ணுக்கு கல்யாணம் ஆயிரம் சவரன் இடம் மாறும். பங்கஜ்லால் மருந்து வியாபாரத்துக்கு மாறுகிறான். கையிருப்பை இங்குதான் விற்பான். சந்திரே கவுடா, கோபாலு நாயக்கர் பேப்பர் வியாபாரத்தில் இறங்குகிறார்கள். பாதி விலைக்கு தங்கம் விற்பார்கள்.

உட்கார்ந்த இடத்தில் தகவல் வரும். மனசு கணக்கு போடும்.

பதினாறு கேரட் என்று அரசு தங்கத்தின் தரம் குறைத்ததே அன்று சவுகார்பேட்டை அடி தாங்காமல் ஆடிற்று. வாழ்க்கை இருண்டது. தங்கமுட்டை பறவைகள் சீச்சி என்று பறந்து போயின. துணியும், பேப்பரும் மருந்தும், பருப்பும் விற்கப் போயின. சிலர் துணிந்து நிலத்தில் முதலீடு செய்தார்கள். சிலர் காண்ட்ராக்டர் ஆனார்கள். பங்காரு ஸ்ரீராமுலு செட்டி அண்ட் சன்ஸ் இறுதிவரை தங்கமாய் நின்று தலை நிமிர்ந்தது.

நிமிர்ந்து இருபத்தைந்து வருடமாயிற்று. இந்த வெற்றி நீடிக்க வேண்டுமே என்கிற கவலைதான் மனசு அரிக்கிறது.

ஸ்ரீராமுலு செட்டி தன் தெருவுக்குள் நுழைந்தார். முதல் கடை வாசலிலிருந்து மூன்றாவது கடைவரை சாக்கடை அடைத்துக் கொண்டு நீர் வெளியே வந்தது. சவுகார் பேட்டையின் பெரிய சாபக்கேடு சாக்கடைதான். சிறிய மழைக்கும் தெரு சக்தியாகும், மழையற்ற போதும் சாக்கடை

அடைத்துக் கொள்ளும். எப்படித் தாண்டுவது என்று தெரியாது ஸ்ரீராமுலு விழித்தார்.

எதிரே இருபதடி தொலைவில் அவன் நின்று கொண்டிருந்தான். ஸ்ரீராமுலு தயங்குவது கண்டு உதவிசெய்ய நாலா பக்கமும் பார்த்தான்.

''நாய்னா, அங்கேயே இருங்க'' என்று தெலுங்கில் கூவினான். சாலையின் ஓரம் உள்ள கற்கள் இரண்டு எடுத்து வந்து சாக்கடை நடுவே பாதை மாதிரி போட்டான். இன்னும் இரண்டு செங்கல் எடுத்து வந்து போட்ட கல்லில் நின்று பாதையை நீளமாக்கினான். ஐந்தாவது கல் கிடைக்கவில்லை. அங்கே உள்ள பழக்காரியை எழுப்பி அவள் தலை பக்க மணை உருவி நாலு கல்லில் கால் வைத்து ஐந்தாவது இடமாய் போட்டான்.

பலகையில் நின்று 'ரண்டி நாய்னா!' என்று கை நீட்டினான்.

ஸ்ரீராமுலு அவன் வலக்கையைப் பிடித்தார். அவரோ அப்படியே ஒற்றை கல்லில் உடம்பு ஒட்ட ஒரு கணம் நின்றார். அவன் மறு கல்லுக்குப் போனான். கை நீட்டினான். மறுபடி அவன் உடல் ஒட்டி நின்றார். மெல்ல மெல்ல ஐந்து கற்களையும் அவன் கரம் பற்றி தாண்டினார். சாக்கடை தாண்டி சர்வஜாக்கிரதையாக தெருவுக்கு வர, அவன் குனிந்து அவரின் பாதம் தொட்டு வணங்கினான். ஜம்புலிங்கேஸ்வரர் கோவில் மணி அடித்தது.

''என்னா?''

''ஒண்ணுமில்லப்பா. உன் கூட பேசணும்.''

''இப்பமா.''

''நீ எப்ப சொல்றியோ அப்ப.''

''பதினோரு மணிக்கு கடைக்கு வா.''

''சரிப்பா.'' அவரைப் பின் தொடர்ந்தான்.

''என்னா?'' மறுபடியும் கேட்டார்.

''வீட்டு வாசல்ல வுட்டுட்டுப் போறம்பா.''

''சரி.''

வீடு வாசல் வரைக்கும் வந்தான். அவர் படியேற, மறுபடி குனிந்து பாதம் தொட்டு விட்டு திரும்பினான். கதவு திறந்தபடி அவனைத் திரும்பிப் பார்த்தார்.

வளர்ந்துட்டான் என்று நினைத்தார். சிறிய சந்தோஷம் மனசுள் பரவிற்று.

அவன் அவருடைய பிள்ளை. ஆனால், அவருடைய வாரிசு இல்லை. பங்காரு பரம்பரையில்லை. அவன் வேறு. அவன் அவருக்கும், ஞானாம்பாளுக்கும் பிறந்த பிள்ளை. ஆனால், ஞானாம்பாள் மனைவி இல்லை.

ஞானாம்பாள் இன்றும் அவர் சொத்துதான். ஆனால், ஆளுமை செய்வதில்லை. அவள் கேட்ட பொருளை இன்றும் அனுப்புவதுண்டு. ஆனால், போக்குவரத்து இல்லை. தேவையை டெலிபோனில் சொல்வாளே ஒழியே நேரே வருவதில்லை.

இன்றைக்கு ஏனோ பிள்ளையை அனுப்பியிருக்கிறாள். பெரிசா ஏதாவது கேட்பாளா? ஞானம் கேட்காமலேயே பெரிசு பெரிசாய் வாங்கிக் கொடுத்த காலம் ஒன்று உண்டு. அது அவரின் வசந்தகாலம்.

இது பங்காரு ஸ்ரீராலுமு செட்டியின் இலையுதிர் காலம்.



''உண்ண சோறில்லையே'' என்று ஒரு நாள்கூட ஸ்ரீராமுலு வேதனைப்பட்டதில்லை. ''உண்ணத் தெரிய வில்லையே உனக்கு'' என்று அவர் அம்மா வருத்தப் பட்டிருக்கிறார். ''அரைப்படி பால் குடிக்க முடியவில்லை. நீயெல்லாம் ஒரு ஆண் மகனா?'' என்று திட்டியிருக்கிறார்.

உடுக்கச் சட்டையில்லை என்று அவர் நொந்து கொண்டதில்லை. ''இது என் சட்டையா இல்லை வேறு எவருடையதாவது?'' என்று போட்டுக்கொள்ளாமலேயே சிறுசாய் போன சட்டையை பார்த்துக் குழம்பியிருக்கிறார்.

'தீபாவளிக்கு சட்டைத்துணி எடுக்க வாணாமாடா?'' அப்பா கேட்பார்.

''எடுக்கணும்.'' பிள்ளை பதில் சொல்லும்.

''துட்டு தரேன், போய் எடுத்துக்கறியா?''

''வேணாம். நீயே எடுத்துரு.''

தந்தை தனக்கு வாங்கின மஸ்லினில் பிள்ளைக்கு நாலு சட்டை தைத்துக் கொடுப்பார். அப்பனும், பிள்ளையும் ஒரே துணியில் சட்டை போட்டு கடை திறப்பார்கள். அப்பா முழுக்கை, பிள்ளை அரைக்கை. அவ்வளவுதான் வித்தியாசம்.

ஸ்ரீராமுலு சூட் எடுத்துக் கொண்டது கல்யாணத்தின் போதுதான். ரிசப்ஷனுக்குப் பிறகு அதைப் போடவே யில்லை. அதோடு கொடுத்த முழுக்கை சட்டையைப் போட ஆரம்பித்தார். அப்பா என்ன சொல்வாரோ என்கிற பயம் இருந்தது. பரவாயில்லை போடு, உனக்கு நல்லா இருக்கு. அப்பா அனுமதித்த பிறகு முழுக்கைச் சட்டை, தங்க பித்தான்கள் வைத்தது, போட்டுக் கொண்டார்.

அப்பா இருந்தவரை அவருக்கு எதிராய் ஒரு வார்த்தை பேசினதில்லை. பேசுவது முறையும் இல்லை. அவருடைய காலம் அப்படி. அவர் வாழ்ந்த இடம் அப்படி. தகப்பனை எதிர்த்துக் கொண்ட பிள்ளையை அவர் சமூகம் மதித்ததில்லை.

தங்கமும், வைரமும் தலைமுறை விஷயங்கள். இந்த வியாபாரத்துக்குக் கல்லூரியோ, புத்தகமோ கிடையாது. தகப்பனிடம் தான் தெரிந்து கொள்ள வேண்டும். தந்தையிடம் அடங்கி வித்தை தெரிந்து கொள்ளாதவன் எவருக்கு அடங்கி என்ன கற்றுக் கொள்ள முடியும்? தகப்பனை காட்டிலும் ஒரு நல்ல குரு உண்டா? எதிர்ப்பவன் ஏற்றம் பெற முடியுமா'

பிள்ளையை மட்டுமில்லை. அவர் சமூகம், தகப்பனையும் கவனமாய்ப் பார்க்கும், 'ஊர் கொள்ளாத செல்வம் இருந்து என்ன, உனக்கென்று பிள்ளை இல்லையா, அத்தனை சொத்தும் பாழ்' என்று நகைக்கும். 'உன் பிள்ளை உனக்கு அடங்கவில்லையா, ஊரை அதட்டாதே. உனக்கு அதற்கு யோக்கியதை இல்லை' என்றும் ஏசும்.

கணவன் மனைவி பிணக்கு வரலாம். அது வழக்கம். அண்ணன் தம்பி அடித்துக் கொள்ளலாம். அது இயல்பு. மாமனார் மாப்பிள்ளை சண்டை வரலாம். அது சுவாரசியம், அப்பன் பிள்ளை உறவு முறியக் கூடாது முறிந்தால் தரித்திரம். விநாச காலம்.

ஸ்ரீராமுலு மனைவி வலது கால் எடுத்து வீட்டிற்குள் வந்த பிறகு வியாபாரம் பலப்படத் துவங்கியது. அவள் வந்த மறு வாரமே ஏழுமலையானுக்கு நாக கேயூரம் செய்ய ஆர்டர் வந்தது. புஜத்தில் நாகம் சுற்றி இருப்பது போல் தோள் வளை.

ஆர்டர் காகிதமும் தங்க வில்லைகளும் சந்நிதியில் வைத்துத் தந்தார்கள். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து தலைமேல் வைத்து அப்பா சென்னை வந்தார்.

கிடைக்குமா இந்த பேரதிர்ஷ்டம்? தெய்வ சேவை கிடைக்குமா? எல்லோருக்கும். அப்பனும், பிள்ளையும் மாறி மாறி பட்டறையில் காவலிருந்து கேயூர வேலை முடித்தார்கள். தேவஸ்தானம் மகிழ்ந்தது.

கூலி எவ்வளவு? என்று கேட்கப்பட்டது.

ஒரு ரூபாய் என்று அப்பா பதில் சொன்னார். தேவஸ்தானம் பட்டு பரிவட்டம் கட்டி ஒற்றைப்பொன், கால் சவரன் சன்மானம் தந்தது.

சவரன் வந்த நேரம், மகத்தான வியாபாரம் நடந்தது. மயிலாப்பூர் வக்கீல்கள் வீட்டிற்கும், மாம்பலத்தில் உள்ள சினிமா ஸ்டார்கள் வீட்டிற்கும் நாற்பது ஐம்பது நகைகளைக் காரில் போட்டுக் கொண்டு போவார்கள். நாலைந்து விற்பார்கள். எடை போடு என்று அப்பாவை அவர்கள் கேட்டது இல்லை. எப்படியாவது விற்க வேண்டும் என்று அப்பா ஆசைப்பட்டதுமில்லை. அது சுபீட்சமான காலம்.

அப்பா இறந்த பிறகு, அவர் கூடவே போய் பல கஸ்டமர்களை பார்த்து பேசின பலத்தில் ஸ்ரீராமுலுவும் வியாபாரம் தொடர்ந்தார். இரண்டு பிள்ளைகள் பிறந்து அவர்கள் பள்ளிக்குப் போகும் நேரத்தில் அவர் மனைவியால் அவரை அதிகம் கவனிக்க முடியாமல் போயிற்று. மேலும் அவள் வீட்டில் சொத்து பிரிக்க விளை நிலங்களாய் ஆந்திராவில் கிடைத்தவைகளை விற்றுவிட்டு, கொஞ்சம் தங்கமாகவும், சவுகார்பேட்டையில் வீடுகளாகவும் மாற்ற முடிந்தது.

அந்த வீடுகளிலிருந்து கிடைக்கும் வாடகையை மனைவியே நின்று வசூலித்து, வீட்டு நிர்வாகம் செய்ய அனுமதித்தார். அவளும் வியாபார குடும்பத்துப் பெண். தன் சொத்து என்று சேர்ந்ததை தானே கவனிக்க வந்ததும் ஒன்றைப்

பத்தாக்க ஆயிரம் வழிகள் செய்தாள். ஒரு நாளின் பெரும் பகுதியை சொத்து பராமரிப்பிலும் மற்ற நேரத்தை பிள்ளைகள் பராமரிப்பிலும் கழித்தாள். ஸ்ரீராமுலுவுக்குத் தன்னை பராமரிக்க ஆள் தேவைப்பட்டது.

எழுவத்தியெட்டு கல் வைர நெக்லஸை பெரிய நடிகையிடம் விற்றுவிட்டு, இரண்டு தவணைகளாய் காசு வாங்க ஏற்பாடாகி இரண்டாவது தவணைக்குக் காத்திருக்கும் போது, ராமன் பழக்கமானான். அவன்தான் எங்கிருந்தோ காசுடன் உள்ளே வந்தான். நடிகையிடம் காதில் பேசி துண்டில் சுற்றியிருந்த நோட்டுகளை பிரித்துக் கொடுத்தான்.

''மிச்சம் எப்ப தருவாராம்?'' நடிகை கோபித்தாள்.

''தெரியலையேம்மா.''

''சொல்றது ஒண்ணு, செய்யறது ஒண்ணா. எனக்கு பிடிக்காதுன்னு சொல்லிடு.''

''சொல்லிவிட்டேனே. பாப்பா கோவம் உங்களுக்குத் தெரியாது, அது பேச ஆரம்பிச்சுது காது ஜவ்வு தானா சுருண்டுக்கும்னு சொல்லிவிட்டேனே.''

''பத்தாயிரம் குறையுதுங்க. வர மாசம் நிச்சயம் தந்துடறேன்.'' முத்துப் பல் வரிசை சிரிப்புடன் சொன்ன போது பதிலுக்கு சிரிக்காமல் வாங்கிக் கொண்டார். பெட்டியில் வைத்துப் பூட்டி காரில் ஏறிய போது ராமன் கும்பிட்டான்.

''என்ன?''

''வழியில இறங்கிக்கலாமாங்க?''

''வா.''

''ச்சேய். மானங்கெட்ட பிழைப்பு.'' உள்ளே உட்கார்ந்து அலுத்துக் கொண்டான்.

''யாருது?''

''என்னதுதான். இவ பாட்டுக்கு 'லட்சக்கணக்கில் காசு வாங்கிண்டு வா'ங்கறா. அவன் என்னைப் பார்த்தாலே நாய் மாதிரி விழறான். காரியம் முடிஞ்சதும் இவளே காசு வாங்கிண்டு வர வேண்டியதுதானே.''

''என்ன சொல்ற நீ.''

''உமக்கு எதுக்கு இது. நீர் நல்ல மனுஷன். வியாபாரம் தான் குறி.''

''அப்படி ஒண்ணுமில்லை. நானும் சாதாரண மனுஷன் தான்.''

''சாதாரணம்னா?!''

''உம்மை மாதிரிதான்.''

''நான் பரம தரித்திரன் செட்டியாரே.''

''நானும்.''

உணவிருந்தது, உடையிருந்தது, வீடிருந்தது, வாகனமிருந்தது, வசதியிருந்தது. வாழ்வில் இனம் புரியாத நேச வறுமையுமிருந்தது. அயன சயன சுகம் என்று ஜாதகத்தில் ஒரு இடமுண்டு. சுப கிரகங்கள் பார்க்கிறபோதுதான் அந்த இடத்தின் பலாபலன் நன்கு விளங்கும். சயன சுகம் என்பது மெத்து மெத்தென்ற படுக்கை மட்டுமில்லை, சம்போக சுகமும் அதில் அடங்கும்.

''அடடே, என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அப்படியே லெஃப்ட்லே திரும்புங்க.'' ராமன் கட்டளையிட்டான். ஸீட்டிலே வசதியாய் சாய்ந்து கொண்டான்.

வாழ்க்கை திசை மாறிற்று.

மவுண்ட் ரோட்டில் இடது பக்கம் சிந்தாதிரிப் பேட்டை. மார்க்கெட் தாண்டி கூவம் நதி நோக்கி வீதி.

''இரண்டு நிமிஷம் கார்ல உட்கார்ந்து போற வர்ற ஆட்களை வேடிக்கை பார்த்திட்டிருங்க. இதோ வந்துட்டேன்.''

ராமன் எங்கே நுழைந்தான் என்று தெரியவில்லை. கால் மணி நேரம் கழித்து வந்தான். கூட்டிக் கொண்டு போனான்.

தாயார்காரிதான் உட்காரச் சொன்னாள். பெரிய லோட்டாவில் நீர்த்த காபி கொடுத்தாள், கூடமும் முற்றமு மாய் இருந்த வீட்டில் பழைய குடும்ப போட்டோக்கள் இருந்தன. அவர் வாழ்க்கை நிலவரங்கள் கேட்டுக் கொண்டிருந்தாள். சூசகமாய் சொத்து மதிப்பு பார்த்தாள். சரளமாய் ராஜமுந்திரி தெலுங்கு பேசினாள்.

''த்தே... லோட்டா எடுத்துக்கிட்டு போ'' என்று குரல் கொடுத்தாள்.

கூடத்துக்குள் நிலவு தோன்றியது. அன்னமென அசைந்து வந்தது, ஓரம் கிழிந்த பாவாடைக்குள்ளிருந்து வெள்ளை முயல்களைப் போல பாதங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. தந்தக் கடைசலாய் கை நீண்டது. லோட்டா பற்றித் திரும்பியது. கருநாகசடை நெளிந்து போவது பார்க்க முடிந்தது.

''என் பொண்ணுதான்.'' தாயார் சிரித்தாள்.

''அப்ப வரேங்க.'' எழுந்து ஒரு அதிர்ச்சியுடன் வெளியே வந்தார். காரில் உட்கார்ந்தார். ராமன் ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான்.

''என்னடா இது.''

''அவங்களுக்கு இந்த வீடு கடன்ல இருக்கு, வர மாசம் முழுகும்.''

''எவ்வளோ?''

''பிசாத்து எழுவது ரூவா.''

கார் ஓட்டி வீட்டுக்கு வந்தார். இரண்டு நாட்கள் யோசித்தார்.

தானே தனியாய் அந்த பக்கம் போனார். உள்ளே போவம், இந்த வீடு விலைக்கு வருதாமேன்னு கேட்போம்.

அசட்டுத்துணிச்சலோடு படியேறினார். அந்தப் பெண் சுவரில் லேஸ் துணியில் மயில்கள் படம் போட்டு மாட்டிக் கொண்டிருந்தது. உயர்த்தின கையும், இடுப்பும், பின் பக்கவாளிப்பும் குதிகால் சிவப்பும் கண்ணில் முட்டிற்று, எழுவதாயிரத்துக்கு கண்ணை மூடிக்கிட்டு வாங்கலாம் என்று தோன்றிற்று.

''வாங்க வாங்க.'' அந்த அம்மாள் ஓடி வந்தாள். பெண் நிதானமாய் கீழிறங்கி உள்ளே போயிற்று.

''வீடுதானுங்களே. விலைக்குத்தான் விக்கவே மனசு இல்லை. வேற வழியில்லை, சோறு தின்னனுமே. வயித்துப்பாட்டுக்குத்தான் விக்கறோம். நம்ம சொத்த கண்ட கழுதைங்ககிட்ட போவாத உங்க மாதிரி நல்ல மனுசாள் கையில போனா எனக்கும் நிம்மதி.''

தோல் பை திறந்து எழுபதாயிரம் நோட்டு கற்றைகள் நீட்டினார். ''கடனை அடைச்சு வீட்டை பாப்பா பேருக்கு மாத்திருங்க.''

''காசு கொடுத்திட்டிங்களே, மாத்தாத இருப்பேனா.''

''த்தே... காபி கொண்டா.'' மறுபடியும் வெள்ளை முயல்கள் அருகே வந்து போயின.

''ஞானம்பா, நீ பேசிட்டு இரு. நான் போய் சேட்டு மூஞ்சில துட்டை வீசிட்டு வரேன்.''

''எப்ப வருவே?'' குயில் கூவிற்று

''அவன் என்னா வட்டி போடறானோ, எத்தினி கூட கேட்கிறானோ தெரியலையே, முன்னே பின்னே ஆவும். இது யாரு அந்நியமா அசலூரா, இங்கிருக்கிறவங்கதான். நம்ம பாஷை பேசறவங்கதான்.'' துணிப்பையில் காசு காசு இடுக்கிக் கொண்டு போனாள்.

பத்து நிமிடம் கூடத்தில் ஆளே வரவில்லை. ஒரு பக்கம் மாட்டி மறுபக்கம் மாட்டாத மயில் டிஸைன் லேஸ் பின்னல் காற்றில் ஆடிற்று, எழுந்து போய் மாட்ட முற்படுகையில் பின்னால் கனைப்பு சத்தம் கேட்டது.

''நானே மாட்டிடறேன். நவுந்துக்கங்க.''

ஸ்டூல் இழுத்து வந்து லேஸ் துணி கை உயர்த்தி மாட்டினாள்.

அம்மா, இதுதான் பெண் வாசனையா? கஸ்தூரி மஞ்சளும், குடிகுராவும் கலந்த வாசனையா? ரோஸ் வாசனையா? தேங்காய் எண்ணெயும், மல்லிகைப் பூச்சரமும் கலந்த வாசனையா?

''இது நீ போட்டதா?''

''ஆமா.''

''ஏன் இரண்டு மயிலையும் தள்ளித் தள்ளி போட்டிருக்க. கிட்ட போடக் கூடாது, ஜோடியா?''

''அதுங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆவலை.''

''செய்துட்டாப் போச்சு. கல்யாணம் ஆனா கிட்ட வந்துருமா.''

''வேற வழி. உங்களுக்கு நகைக் கடையா?

''ஆமா.''

''இந்தத் தோடு அழிச்சு புதுசு செய்ய என்ன ஆவும்?''

''வேணாம், கழட்டாதே.''

''ஏன்?''

''கழட்டினா பார்வைக்கு நல்ல இருக்காது.''

''இது போட்டுக்கிட்டா கூட நல்லா இல்லையே.''

''நல்லதா போட்டுறலாம்.''

''எப்ப?''

''சாயந்தரம் எடுத்தாரேன்.''

''ரசீது எம் பேர்லியே போட்டுருங்க.''

''ஏன்?''

''எங்கம்மா பொல்லாது. வீட்டைக் கூட தன் பேர்ல மாத்திக்கும் பாருங்களேன்.''

''இது வீடா. மாட்டுக் கொட்டா. வீடுன்னா வாசல்ல ஒரு தோட்டம், வராண்டா, ஹாலு உள்ளடங்கிய சமையலறை, மாடியில் பெட்ரூம்.''

''உங்க வீடு அப்படித்தானா?''

''என் வீடு வேறு மாதிரி. முரட்டு இடம். எல்லாம் ஹான்னு பெரிசா கிடக்கும்.''

அவர் எதைச் சொல்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது.

''எனக்குக் கூட சின்னதா அழகா ஒரு வீடு கட்டணும்னு ஆசை.''

''உன்னிய மாதிரியா?''

அவள் வெட்கப்பட்டாள். விரல் பற்ற, சாய்ந்து கொண்டாள். காற்றில் லேஸ் துணி மயில்கள் ஆடின.

இந்தத் தேசத்தில் காமம் என்பதையும் மனைவி என்பதையும் ஒன்றாக்கி விட்டார்கள்.

காமம் உணர்வு.

மனைவு உறவு. உணர்வு பொங்கும் இடத்தை உறவாக்கிக் கொள் என்று கட்டளையிட்டார்கள்.

ஞானாம்பாள் உறவானாள். சிந்தாதிரிப் பேட்டையில் அவள் அவருக்கு மனைவி என்று அழைக்கப்பட்டாள். சவுகார்பேடடையில் அவளுக்கு வேறு பெயர் கொடுத் தார்கள். ஆனால், அவர்களுக்கு இடையே நட்பு மட்டும் பலப்பட்டது.

அள்ள அள்ளக் குறையாத செல்வந்தன், அதே சமயம் அன்பு வறுமைக்காரன் என்பது அவளுக்கு பிடிபட்டுப் போயிற்று.

ஆசை அறுபது, மோகம் முப்பது, அதற்குப் பிறகு இருபது வருடம் அன்புதான் ஆட்சி செய்தது. அவரைப் பிடித்து அரியணையில் வைத்தது.

இப்போதும் அன்புக்குக் குறைவில்லை. மன்னன் அரியணை வேண்டாம் என்று நகர்ந்து விட்டான். ஆர்ப்பாட்டம் இல்லாத துறவு பூண்டு விட்டான்.

ஞானாம்பாள் என்கிற தேசமும் தேசத்து மக்களும் இன்னமும் அவர் சொத்து. மன்னர் துறவு பூண, அரசியே ஆட்சி செய்தாள். ஆசைகளை அடக்கி விடுவது மட்டும் துறவில்லை. ஆட்டம் போதும் முடியாது என்கிற நிலை கூட துறவுதான். ஸ்ரீராமுலு இரண்டாம் வகைத் துறவி.

அவர் ஆசையின் விளைவுதான் சாக்கடைத் தாண்ட கல் போட்ட பையன். பெண்ணுக்கு ஒண்ணரை லட்சம் செலவில் கல்யாணமாகி விட்டது. பையன் தனக்கொரு வழி தேடி இங்கே வந்திருப்பது கடை காசலில் தெரிந்தது.

சரியாய் பதினோரு மணிக்கு பையன் கடைக்கு வந்தான்.

எதிர்ச் சந்து கடைசியில் பத்துக்கு பன்னிரண்டு அடி இடம் வருகிறதாம். பகடி இரண்டு ரூபாய் கேட்கிறானாம்.

அம்மா ஞானாம்பாள் பகடி காசு தர ஒத்துக் கொண்டாளாம். பழசும் புதுசுமாய் எண்பத்தாறு சவரன் நகைகள் இருக்கிறதாம். கடை போட ஆசையாம். நைனா மனசு வைக்கணும்.

''என்னடா பண்ணணும்றே?''

''உம் பேரு சொல்லி கடை திறக்கணும்.''

அதாவது சவுகார்பேட்டையில் அவன் ஞானாம்பாள் பையன் மட்டுமில்லை. ஸ்ரீராமுலு பையன் என்று உலா வர வேண்டும்.

''என்னை என்னா செய்யச் சொல்றே அதுக்கு?''

''முத முதக் கடையில் ஏறி கற்பூரத்ல ரசீது காட்டி, கல்லால உட்கார்ந்து நீ போடணும்.''

''என் பேரு கூடாது கடைக்கு.''

''இல்லை.''

''என்ன பேரு?''

''ஞானம் ஜுவல்லரி மார்ட். அம்மா அப்படித்தான் சொல்லிச்சு.''

ஞானம் கெட்டிக்காரி. எங்கே அத்து மீறலாம் எங்கே கூடாது என்று தெரிந்தவள்.

''போ...''

''நைனா...''

''வரேம் போ...''

பையன் மறுபடி கால் தொட்டுவிட்டுப் போனான். இவன் பங்காரு ஸ்ரீராமுலு செட்டி அண்ட் சன்ஸ் இல்லை. ஞானம் ஜுவல்லரி மார்ட். ஆனால் ஞானம் யார்? ஞானத்தின் பிள்ளை யார்? சவுகார்பேட் தெரிந்துகொள்ள வேண்டும். அவன் வாரிசு உரிமை கேட்கவில்லை. வம்சப் பெயர் வேண்டும் என்று வாதாடவில்லை. வாழ உதவி கேட்கிறான். வளர உதவி கேட்கிறான். நான் இங்கு வந்ததே இவரால் என்கிற உண்மையைக் கேட்கிறான்.

என்று அவர் கால் அங்கு பட்டதோ, கடையில் முதல் ரசீது அவர் கையால் நின்றதோ அந்தப் பலத்தில் அவன் நூறு சவரன் வாங்க முடியும், விற்க முடியும். அவனுக்கென்று கஸ்டமர்கள் உருவாக்கிக் கொள்ள முடியும்.

''புதுசா காதுல மாட்ற செயின் இல்லையா?''

''இருக்குங்க.''

''நாலு பேட்டன் இருக்கு. வீட்ல வச்சிருக்கேன். வாங்கற ஐடியாவா இருந்தா எடுத்தாறேன்.''

நாற்பது பேட்டனும் பங்காரு ஸ்ரீராமுலுவில் இருக்கும். எடுத்துப் போய் விற்று மாலையே கணக்கு செட்டில் பண்ணி விட முடியும்.

''சின்ன கடையா இருக்கே தவிர நிறைய நகை வச்சிருக்கேன். பேர் வாங்கிவிட முடியும். பத்துப் பதினைந்தடியில் உட்கார்ந்து ஸ்ரீராமுலு செட்டி அண்ட் சன்ஸ் நகைகள் மொத்தமும் தன்னுடைய நகையாய் பாவித்து...''

''ஐந்து வருடம் இப்படி விற்றால் போதும். சவுகார்பேட்டையில் முன்னுக்கு வந்து விடலாம். இது தவிர அவனை வைரம் பார்ப்பதில் பண்டிதன் என்றும் சொல்கிறார்கள். இன்னும் நகைக்கடையை விடாத மார்வாரிகள் மறுபரிசீலனைக்கு அவனைக் கூப்பிடுகிறார்கள்.''


அரை மணியில் ஆள் வந்தது. இரண்டு லட்சம் பகடி கைமாறி விட்டதாம். போகிற வழியில் கடைப் பக்கம் நின்று கல்லா வைக்கும் மூலை எது என்று சொல்லச் சொன்னார்கள். கடை கல்லா விட்டு இறங்கி செருப்பு மாட்டி எதிர் சந்துக்குப் போன போது பழக்காரி சொர்ணம் தலைவிரி கோலமாய் வந்தாள். வாய்க்கடை ஓரம் ரத்தம் வடிந்திருந்தது.

''செட்டியாரே நில்லு. உம் மேலே ஆணை நில்லு'' எதிரே நின்று இரண்டு கைகளையும் விரித்து, வழி மறித்தாள். 'இதோ பார்.' மார்சேலை அவிழ்த்து தரையில் போட்டாள். ரவிக்கைக்குள் மஞ்சள் சரடு இருக்க, அதன் நுனி இரண்டும் அறுந்து வெளியே கிடந்தன.

''உம்புள்ளை மோட்டார் சைக்கிள்ல வந்து கூடை பழத்தை இடிச்சு நசுக்கிட்டு போயிட்சு. கண்ணா அவிஞ்சு போச்சுன்னு கேட்டேன். இறங்கி மூஞ்சிலதுப்பிச்சு. உன் எச்ச எம்மேலே பட்டுச்சு, என் எச்ச உம்மேலே பட எத்தினி நாழியாவுமின்னேன்...''

''தெருவுல இழுத்துப் போட்டு எட்டி உதைச்சுது செட்டியாரே. அட, பொறுத்துக்கலாம். அவமானம் பொறுத்துக்கலாம். அறுத்துப் போட்டு போறானே அதை பொறுத்துக்கணும்னு என்னா தலையெழுத்தா? நீ சொல்லு, சொல்லிட்டுப் போ.''

ஸ்ரீராமுலு செட்டியார் கண்களை மூடிக் கொண்டார். அந்த மோட்டார் சைக்கிள் பிள்ளை அவர் பிள்ளை. அவருடைய சொந்தப் பிள்ளை. அவர் வாரிசு அவருடைய இரண்டாவது மகன்.



நடுத் தெருவில் ஒரு பெண் தன்னை வழிமறித்துக் கொள்வது ஸ்ரீராமுலுவுக்கு அவமானம் தரவில்லை. சவுகார்பேட்டையின் பல வழக்குகள் நடுத்தெருவில்தான் அவரிடம் முறையிடப்படும். அவர் கடந்து போகும்போது எழுந்து நிற்பார்கள். நிறையப் பேர் கைகூப்புவார்கள். அப்படி கைகூப்பின ஆள் பின் தொடர்ந்து வந்தால் ஏதோ பிராது என்று அர்த்தம். ஸ்ரீராமுலு நின்று விடுவார்.

'ஒரு ஆயிரம் ரூவா கைமாத்தா கொடேன். வர மாசம் அடைச்சிடறேன்' என்பதிலிருந்து 'அக்கா புருஷன் தினமும் குடிச்சிட்டு வந்து கலாட்டா பண்றாரு. பொறுத்து பொறுத்து பார்த்தேன். நேத்திக்கு தாங்கலை. உங்க கடையிலேர்ந்து நாலாவது கடைதான்' என்பது வரை விதம் விதமாய் புகார்கள் வரும்.

'போன கடன்ல ஒரு நூத்திநாப்பது ரூவா நிக்குது. எப்படி ஆயிர ரூவா கேட்கறே?'' - போன கடனுக்கும், இந்த

கடனுக்கும் இடையே பதினேழு மாச இடைவெளி இருப்பினும் மறக்காது. மறந்திருக்கக்கூடும் என்று நினைப்பவன் முட்டாள்.

'வாங்கினு போ' நூத்தி நாப்பது கழிச்சு மிச்சம்தான் 'ஆயிரம் கடனாகத்' தரப்படும். புகார் சொன்னவன் அக்கா புருஷனை போகும்போதே கண்கள் தேடும். ''என்னா துரைசாமி, சவுக்கியமா?'' நின்று விசாரிப்பார். வாய் நிறைய பல்லும் முகம் முழுவதும் சந்தேகமுமாய் அவன் கடையை விட்டு கீழிறங்கிவிடுவான்.

''என்ன போச்சு இன்னிக்கு?''

''ஆறு கட்டி. இரண்டு கொலுசு.''

''அப்ப ஓட்டம்தான்!''

''ஏதோ உங்க புண்ணியத்துல.''

''ஓடுற ஜோர்லதான் குடிச்சுட்டு ஆடறீயா?''

''இல்லீங்க.''

''என்ன இல்லீங்க. ஒழுங்கா குடித்தனம் பண்ண முடியாத முண்டத்துக்கு ஏண்டா கல்யாணம்? எதுக்கு நகைக்கடை. விறகு வியாபாரமாடா பண்றே. இல்லை மாடு அறுத்து விக்கிறீயா. ஏண்டா குடிக்கற நீ? ஏன் குடிக்கற?''

''வீடு சரியில்லீங்க.''

''வுட்டுட்டுப் போடா. பொம்பளைய கை நீட்டி அடிக்கிறவன் கிட்ட லட்சுமி நிக்க மாட்டா. இரண்டு தடவ நீ ஆடறத பார்த்தா மார்வாடி மதிப்பானா? காலையில நீ சிரிச்சுப் பேசினத நம்புவானா? இடம் தெரிஞ்சு நடந்தே உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது. தண்ணி போட்டு ஆடின... ஒருத்தனை சாக்கடையில தள்ளி மூடினது ஞாபகம் இருக்கா? போ... மரியாதையா இரு.''

நடைபாதைக் கடையில் காசு வசூல் பண்ணி ஆடிக் கொண்டிருந்த ஒரு சேலத்து ஆளை குடிக்க வைத்து பாதாளச் சாக்கடையில் கால் இடறி தள்ள வைத்து மூடி போட்டு மூடி மேலே டெம்போவை நிற்க வைத்து நாலு நாள் கழித்து போலீஸுக்கு சொல்லி அப்புறப்படுத்தினார்கள்.

செய்தது ஸ்ரீராமுலு என்று எல்லோருக்கும் தெரியும். யாரும் வாய் திறக்கவில்லை. அவர் கட்டளையிட்டால் எது செய்யவும் ஆட்கள் இருந்தார்கள். ஆனால், அவர்கள் சவுகார் பேட்டையில் இல்லை. எங்கிருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது.

இன்று பழக்காரி உதடு வழியும் ரத்தத்துடன், தன் மகன் பெயரைச் சொல்லி கூவியபோது கொஞ்சம் சங்கடமாய்த்தான் போயிற்று. கொஞ்சம் கோபம் வந்தது.

''அவன் கூட அவுத்துப் போட்டு ஆடின நாய்தானே நீ? இன்னிக்கு வந்து என்னமோ அடிச்சுட்டானே கொன்னுட்டான்னு கூவறே.'' அவள் முகம் பார்த்து அதட்டினார்.

''உம் புள்ளை என்னை கெடுத்துட்டான்னு கூவுறேனா, இல்லை... நான் பத்தினின்னு உங்ககிட்ட சர்டிபிகேட்டு கேட்டேனா... எண்பது ரூவா சரக்கு இடிச்சு கூழாக்கிட்டுப் போறான். என்னடான்னு கேட்டா வாய்ல குத்தறான். இதுக்குக் கேட்பார் இல்லியா? இந்தாடின்னு நீ துட்டதூக்கிப் போட்டுறலாம். நசுங்கின பொருளு மறந்துருமா. நீ எத்தினி தடவ வேணா இடின்னு சொல்லிடறதா. புழுக்கை தங்கத்த நகத்துல மறைச்சா விரலை வெட்டிற மாட்டியா நீ? இருநூறு ரூவாதானேன்னு வுட்டுருவியா. அவன் இருநூறு குடுத்துட்டாதான் ஆறுமா...''

அவருக்குப் புரிந்தது. இது வியாபாரிக் கோபம். பொருளுக்கு நஷ்டஈடு கொடுத்தாலும் வியாபாரிக்கு நாசமான

பொருள் மறக்காது. நஷ்டஈடு கணக்காகாது. நாலணாவுக்கு நாலு பொருள் வாங்கி ஒரு பொருள் நாலணாவுக்கு விற்று ஒரு ரூபாய் லாபம் சம்பாதிக்கும் நிறைவு நஷ்டஈட்டில் வராது. இதுக்கு அவுத்துப் போட்டே சம்பாதிக்கலாமே; எதுக்கு பழக்கடை என்று கேட்கிறாள்.

தன்னை அடித்ததைவிட தன்னை அவமானப் படுத்தியதை விட தன் கடையை நாசம் செய்த கோபம்... என்ன செய்தாலும் தீராது. அவளை விட அவள் கடை உசத்தி. வியாபாரியை விட வியாபாரம் உயர்வு.

''நான் கேட்கிறேன் போ.''

''என்னா கேட்கப் போறே. உருண்டு அழிச்சதுக்கு துட்டத் தூக்கிப் போடறான்னா...? யாருக்கு வேணும் உன் துட்டு. சரக்குப் பிடிச்சுக்கிட்டு வந்து கூடைய இறக்கறேன், எட்டி, உதைச்சுட்டுப் போறான், இது கேட்க ஆளில்லையா?''

''கேட்கறேன் போ.'' இந்த முறை சீறலுடன் வார்த்தை வந்தது. செட்டியார் காசு நீட்டவில்லை. என்ன பொருள் எவ்வளவு அழிந்தது என்று கேட்கவில்லை. கேட்கிறேன் போ என்கிறார். கேட்பார்.

''உம் புள்ளைன்னு தொட்டு வாய் அடக்கி இறுக்கிக்கினு உட்கார்ந்துட்டேன் இல்ல... என் வவுத்தெரிச்சலுக்கு...''

''பொழுது சாயறதுக்குள்ள உன்னாண்ட வந்து அவன் நிப்பான். போ.''

இது சொல். இது தீர்வு. இங்கே முடிவு நஷ்டஈடு இல்லை. காசு இல்லை. பொருளுக்குப் பொருள் பதிலில்லை, உன்னை உன் வியாபாரத்தை அவமானத்தில் ஆழ்த்தியவன் உன்னிடம் வந்து நிற்பான், பேசிக்கொள்.

''ஆனா, இன்னொரு தடவ அவனோட ஏடாகூடமா எங்கினா இருக்கறதா கேள்விப்பட்டேன், செருப்பு பிஞ்சுடும். போ.''

அவளுக்கும் புரிந்தது. அவன் காசுக்கு ஆசைப்பட்டு கட்டிப் புரண்டால் இதுவும் நடக்கும். இன்னமும் நடக்கும். ஒண்ணு, பழ வியாபாரம் செய், இல்லை...

புரிந்தது.

அவள் உதடு துடைத்துக் கொண்டு போனாள். தெருவில் அங்கங்கே நின்றவர்கள், கடை விளிம்புக்கு வந்தவர்கள் அசைந்து நகர்ந்தார்கள்.

அவர் கவலையுடன் மேலே நடந்தார்.

நாலு மாதம் முன்பு விடியற்காலை நடைக்குத் தெருவில் இறங்கும் முன், வாசற்கதவு தாழ் போட, வராண்டா திண்ணையில் கூலிங் கிளாஸும் மோட்டார் சைக்கிள் சாவியும் இருந்தது. இரவு எங்கோ சுற்றிவிட்டு பிள்ளை வந்திருக்கிறான் என்பது புரிந்தது.

ஏன் வாசலில் இவைகள் இருக்க வேண்டும்? பிள்ளை உள்ளே இருக்கிறானா, வெளியே இருக்கிறானா? வராண்டா கதவுமூடி தெருவில் நிற்க வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தொட்டுப் பார்த்தார். பனி ஈரம் ஸீட்டில் படர்ந்திருந்தது. தெருக்கோடியின் இடதும் வலதும் காலியாய் இருந்தன. மோட்டார் சைக்கிள் பூட்டப்பட்டிருந்தது. சைலென்சரில் சூடு குறைந்திருந்தது.

நாலு எட்டு நடந்து எதிர் நடை பாதையினருகே போய் நின்றார், போர்வையை தலைவரை போர்த்தி நாலைந்து உருவங்கள் சுருண்டு கிடந்தன. ஆணா பொண்ணா என்றுகூடத் தெரியவில்லை.

''ஏய்'' என்று குரல் கொடுத்தார். எதுவும் அசையவில்லை. பின்னே யாரோ எழுந்து உட்காருவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தார்.

கூலி வெங்கடேசன், எழுந்து லுங்கி உடுத்திக் கொண்டான். போர்வையைச் சுற்றிக்கொண்டு ''ஐயா'' என்று வந்தான்.

''எப்ப வந்தது வண்டி?''

''நடு ராத்திரியேங்க.''

''உள்ள போய்ட்டானா?''

''இல்லீங்க.''

''எங்க?''

''தெரு முனைக்குப் போனாருங்க.'' கைகாட்டினான்.

''வா என் கூட.''

வழக்கமான பாதை விட்டு எதிர் பக்கம் நடந்தார்.

''கூட சொர்ணம் போச்சுங்க.''

''யாரது சொர்ணம்?''

''முனைல பழக்கடை போட்டு இருக்குதுங்களே.''

''சாமியப்பன் பொண்டாட்டியா?''

ஆமாங்க.''

தெரு முனை எதிர்வரிசையில் அவர் மனைவி பெயரில் உண்டான வீடு இருந்தது. கீழே இடித்து கடையாக்கும் வேலை நடந்து கொண்டு இருந்தது. கதவுகள் இல்லாத கடையின் வாசலில் செங்கல் அடுக்குத் தடுப்பு மாதிரி இருந்தது. படிகளுக்குப் பதிலாய் செங்கல்லே அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.

அவர் தாண்டின போது அவன் நின்றான்.

''என்னா?''

''உள்ள இருக்கலாமுங்க.''

''சத்தம் போடாதே, போய் பார்.''

கூலி வெங்கடேசன் உள்ளே பூனை மாதிரி ஏறிப் போனான். சுவருக்கும் செங்கல் அடுக்குக்கும் இடையே ஒரு ஆள்தான் போக முடியும் உள்ளே நுழைந்து ஒரு கணம் நின்று

விட்டு வெளியே வந்தான். படிகளில் கால் வைக்காது கீழே குதித்தான். சின்ன பதட்டம் தெரிந்தது.

''என்னடா?''

''இருக்காருங்க.''

''என்ன பண்றான்?''

''தூங்கறாருங்க.''

''கூட யாரு?''

''சொர்ணம்.''

தலை குனிந்து யோசித்துவிட்டு செங்கல்படியில் கால் வைத்தார்.

''வேணாமுங்க.''

''ஏன்?''

''இரண்டு பேருக்கும் உடம்புல துணியே இல்லீங்க.''

''உள்ள போய் அவன் பேண்ட் பின்னால் வச்சுருக்கும் எடுத்தாந்திரு.''

''வேணாமுங்க.''

''போய் எடுத்தாடா.''

அவன் மறுபடி வெளியே வந்து பேண்ட் நீட்டினான். செட்டியார் பர்ஸை உருவிக்கொண்டார். பேண்டை அவன் உள்ளே தூக்கி எறிந்தான்.

இருவரும் மறுபடி தெருவோடு நடந்தார்கள்.

''பாவங்க, அவரு. கடன் சொல்லிட்டு வரணும்.''

''வரட்டும். அப்பத்தான் புத்தி வரும். நீ என்ன ஆனாலும் இதை வாய்விட்டு சொல்லாதே. போ, போய் தூங்கு.''

கடன் சொல்லிவிட்டு வருவான் என்றுதான் அவரும் நினைத்தார். ஆனால், அந்த மடையன் விடிந்து பால்காரர்கள் போகும் நேரம் எங்கடி பர்ஸு என்று அவளை இழுத்துப்

போட்டு அடித்திருக்கிறான். சாமி சத்தியமா நான் தொடலை என்று அவள் கதறியும் கேட்கவில்லை. ஆபாசமாகி விட்டது. இரண்டு பேருக்குத் தெரிந்தது, தெரு முழுக்கச் சிரிக்கும் படியாயிற்று.

''நம்ம ராஜேந்திர பாபு-ஸ்ரீராமுலு புள்ளை சொர்ணத் தோட படுத்துக்கினுகாசு எங்கடின்னு போட்டு அடிச்சிருக்கான்.

-பின்னால் பேசிக் கொண்டார்கள்.

இவரு ஊரான் குடிச்சுட்டு அடிச்சதுக்கு நியாயம் சொல்றாரு. துரைசாமிய மறுபடி கேட்க முடியுமா ஸ்ரீராமுலு செட்டியாராலே.

ஆனால், எந்தக் காரணம் கொண்டோ மறுபடி துரைசாமி குடிக்கவில்லை. அந்தப் பெண்ணை விலக்கி வைத்து விட்டான். அவளுக்கு அவள் வீடு போட்ட நகைகளையும், தான் போட்ட நகைகளையும் எடுத்துக் கொடுத்துவிட்டு ரொக்கமாய் நாப்பதாயிரம் வழங்கிவிட்டு பெரிய கும்பிடு போட்டு வந்து விட்டான். அவர் வந்தால் துரைசாமி எழுந்து நிற்பானே தவிர பேசுவதில்லை. அவர் மகன் திருமணத்துக்கு வாழ்த்து தந்தி வந்ததே தவிர அவர் வரவில்லை.

அவன் கடையை இரண்டாகப் பிரித்து ஒன்றில் தங்கநகை வியாபாரமும் மற்றதில் சோப்பு சீப்பு பேனாவும் விற்கத் துவங்கினான். ஆனால், எந்தப் பொருளும் உள்ளூர் சரக்கு இல்லை. பர்மா பஜார் துவங்கிய நேரம் அது. அங்குள்ளவர்களுடன் நட்பு கொண்டு வெளியூர் பொருட்களை, கடத்தல் சாமான்களை விற்க, வியாபாரம் கொடி கட்டிப் பறந்தது. இரண்டு தடவை கஸ்டம்ஸ் ஆட்கள் வந்த போதும் ஏதோ பேசி அனுப்பினானே தவிர வியாபாரம் நிற்கவில்லை.

''நம்ம இடத்துல இந்தக் கடை அவசியமா? வேற எங்கனா போடச்சொல்லுங்க'' என்று மற்றவர்கள் புறம் பேசியபோதும் அவன் அசையவில்லை. ஸ்ரீராமுலுவால் அசைக்கவும் முடியவில்லை.

இன்று சொர்ணம்கூவியதுகூட அவன்கடைவாசலில்தான்.

''லோப்பல ரண்டி, நைனா'' ஞானாம்பாள் மகன் உள்ளே அழைக்க படியேறி கடைசுற்றிப் பார்த்தார். சுவர் முழுக்க நிலைக்கண்ணாடி ஒட்டி அதன்மீது மர ஷெல்ஃப் பொருத்தி உள்ளடங்கி வலது கோடியில் கல்லாவும், தராசும் வைத்து தெளிவாய் இருந்தது கடை. நகைகள் வைக்க வேண்டியதுதான் பாக்கி.

''எடுத்து வைக்கிற எடம் எதுடா?''

பிள்ளை விழித்தது.

''ஷெல்ஃப்புலியேவா விட்டுட்டுப் போவ. கடைய சாத்தச் சொல்ல?''

''பத்து மாலைதான் இருக்கும். ஷெல்ஃப்புல இருந்தா தப்பா...?''

''தப்புதான். பொட்டி வாங்கலியா?''

''அம்மா அரை காட்ரெஜ் வாங்கச் சொல்லிச்சு. இடம் இல்லியே வைக்கறதுக்கு. கண்ணாடி கேஸுக்குக் கீழே மரப்பெட்டி வச்சுருக்கு.''

''நீ தெரு பார்த்து உட்காரு. பொட்டிய சுவரோடவை. நா தரேன். எங்கிட்டே பழசு ஒண்ணு இருக்கு. எங்க அம்மா எடுத்தாந்த பொட்டி.''

பிள்ளை திகைத்தது. உதடு துடிக்க நின்றது. ''பகல்ல சாப்பாட்டுக்குப் பிறகு வீட்டுக்கு அனுப்பறேன். ஞானத்தை வீட்ல வச்சு பூஜை பண்ணச் சொல்லு. அவநகையோட இங்க எடுத்தா. கடை திறக்கச்ச பந்தல் போட்டு வரவங்களுக்கு டிபன் காபி கொடு.''

பிள்ளை தாவி கைபிடித்துக் கொண்டது.

''நூவே நா தேவதா. நூ பங்காரங் கொட்டே நா குடி'' குரல் தழுதழுக்கப் பேசிற்று.

''சரிதான் போடா.''

ஸ்ரீராமுலு கடை விட்டு நகர்ந்தார்.

மோட்டார் சைக்கிள் தெருமுனையில் உறுமி திரும்பியது. நடந்து போகும் நான்கு ஆட்களை மிரட்டி விலக்கி இவர் அருகில் நின்றது.

ராஜேந்திரபாபு, கறுப்புக் கண்ணாடியுடன் தெருவில் காலூன்றி வண்டியை இவர் எதிரே நிறுத்தினான்.

''ஏம்பா? அந்த பொம்பளை கிட்ட என்னிய நிக்க வைக்கிறேன்னியாமே. அவ வூட்டு வாசல்ல வந்து கத்தறா.''

''என்னா அதுக்கு.''

''அந்த எச்ச நாய் என்னா பண்ணிருக்குனு தெரியுமா? மாம்பழம் என்னடி விலைன்னு கேட்டேன். துட்டு இருக்குதான்னு பதிலுக்கு கேட்டுது. உனக்கு பேண்ட் பின்னால பர்ஸும் இல்லை. முன்னால...''

''போடா போய் துட்ட கொடுத்துட்டு மன்னிப்பு கேளு.''

''ஏன் கேட்கணும்? பஜாரி.''

''தெரிஞ்சுதானே போன?''

''துட்ட தூக்கிப் போட்டா பொறுக்கிட்டுப் போறா.''

''எவன் துட்டடா தூக்கிப் போடுவ. தராசு திருப்ப தெரியாது உனக்கு. இன்னும் எங்கிருந்து போடுவ. கல்லு பிடிக்கத் தெரியுமாடா உனக்கு. கூடைப் பழத்தை எட்டி உதைக்கிறத எங்கடாகத்துக்கிட்டே?

''வியாபாரம் ஆவுமா அவளுக்கு? உன்கடை வாசல்ல சவரம் பண்ண விடுவியாடா நீ. இறங்குடா முதல்ல.''

வண்டி ஹாண்டில்பார் சாய்த்துத் தள்ளினார். அவன் தடுமாறி விலக மோட்டார் பைக் இடமாய் சரிந்து விழுந்தது. ''பழக்காரியோட படுக்கறதும் அப்புறம் அடிக்கறதும் விளையாட்டாடா உனக்கு? போ, போய் துட்ட கொடுத்திட்டு மன்னிப்பு கேளு.''

''அது கெட்டுப் போன பொம்பளை நைனா.''

''அது வேற விஷயம். கூடைய எட்டி உதைச்சது தப்பு''

''ஒரு பொட்டச்சி அப்படிப் பேசறா.''

''ராத்திரி கூட்டிக்கிட்டு செங்கல் மறைப்புலபோன இல்ல... பேசுவா வெயில்ல நின்னு கத்துவா. கூப்படற போது புத்திளங்க போச்சு. அதுங்ககிட்ட மரியாதையா நடந்தா அதுங்களும் மரியாதையா இருக்கும். நீ அசிங்கம் பண்ணா அதுங்களும் அசிங்கம் பண்ணுது. போடா.''

''ஆமா போயி அதுக்கு நகைக்கடை வச்சுத்தரேன்.''

குனிந்து வண்டி நிமிர்த்தினான்.

நடந்து போனவர் திரும்பினார். நாலே எட்டில் மகனை நெருங்கினார். நடுத்தெருவில் பளீரென்று அறைந்தார்.

மறுபடி மோட்டார் சைக்கிள் சரிந்தது.



கீழே விழுந்த மோட்டார் சைக்கிளை ராஜேந்திரபாபு வெறித்துப் பார்த்தான்.

உடம்பு ரத்தம் மொத்தமும் உச்சி மண்டைக்குப் பரபரவென்று ஏறியது, அடிவாங்கிய கன்னம் நெருப்பாய் எரிந்தது. நடைபாதை ஓரத்து சிமெண்ட் கல்லை ஒரு கடைக்குப் படியாய் படுக்கப் போட்டிருந்தார்கள். வேகமாய்

நகர்ந்து அதை எடுத்தான். தம் பிடித்து உயரத் தூக்கினான். முழுப் பலத்துடன் தன் மோட்டார் சைக்கிளின் முகத்தில் ஒரு போடு போட்டான். ஹெட்லைட் சிதறியது. விளக்குக் கூடு உடைந்து பிளந்தது ஹான்டில் பார் நெளிந்தது.

ராஜேந்திரபாபு தந்தை போன திசைக்கு எதிர் பக்கம் போனான். மோட்டார் சைக்கிள் அங்கேயே அரை மணி நேரம் இருந்தது.

''இடைஞ்சலா இருக்குதே வழிலே...'' யாரோ கூவினார்கள். அவன் ஞானம் ஜுவல்லரி மார்ட் விட்டு கீழிறங்கினான். மோட்டார் சைக்கிளை எடுத்து சிரமத்துடன் தள்ளிக் கொண்டு போய் தன் கடை வாசலில் நிறுத்திக்கொண்டான். கடை துடைப்பம் கொடுத்து ஒரு பழம் விற்கிற பெண் பிள்ளையை கண்ணாடி அள்ள சொன்னான்.

''ரங்கசாமி, இனிமே அந்த மோட்டார் சைக்கிள் உன்னுது.'' எதிர்கடையில் இருந்து குரல் கொடுத்தார்கள். ''நீ கோபா நா பாக்யா. ஜமாய்.''

அவன் சிரித்தான். அவனுக்கும் அந்த மோட்டார் சைக்கிள் பிடித்திருந்தது. ஆனால், என்னுடையது என்று சொந்தம் கொண்டாட முடியாது. கேட்பாரே இல்லாது போனால், ஒரு நாள் அப்பாவிடம் சொல்லிவிட்டு தனதாக்கிக் கொள்ளலாம்.

நான் எடுத்துக் கொள்ளட்டுமா என்று கேட்கக்கூடாது, ரிப்பேர் செய்து விட்டேன், எங்கே கொண்டு வந்து விடட்டும், வீட்டின் முன்புறம் வைக்கட்டுமா? உள்ளே கொண்டுபோய் விடட்டுமா என்று கேட்கவேண்டும்.

''எதுக்கு இடத்த அடச்சிக்கிட்டு... சனியன். அந்த பன்னாடை இப்ப கார்ல போறான், மோட்டார் சைக்கிள் அலுத்துடுச்சு போல... நீ வச்சுக்க'' என்று சொல்வார்.

உடனே சரி என்று வரக்கூடாது.

''வேணாம் நைனா... வீட்ல விட்டுறேன்'' என்று மறுக்க வேண்டும்.

''சொல்லறத கேள். இதை என் கண் முன்னாடி காட்டாத... போ எடுத்துக்கிட்டு'' கூவுகிறபோது மெல்ல பணிவாய் நகர்ந்து விடவேண்டும். தெரு திரும்பி சந்துக்குள் நுழைந்ததும் துள்ளி நடக்கலாம். கையில் உள்ள சாவியை சுழற்றிக் கொண்டு போகலாம். விசில் கூட அடிக்கலாம்.

-இது அம்மா கற்றுக் கொடுத்த பாடம்.

அம்மா புடவை வேண்டும் என்றால் இருப்பதில் பழசு கட்டிக் கொள்வாள். நகை வேண்டும் என்றால் எண்ணெய் இறங்கின தோடும் தாலிக்கொடியுமாய்வளைய வருவாள்.

''என்னடி புடவை இது?''

''ஏங்க நல்ல புடவைதானே... போன தீபாவளிக்கு, முந்தின தீபாவளி வாங்கினது.''

''இல்லேன்னா கேளு. இப்படி இதக் கட்டிக்கிட்டு நிக்கறியே.''

அம்மா வேண்டும் என்று எதுவும் கேட்டதில்லை. எதுவும் கிடைக்காமல் இருந்ததில்லை. அப்பாவும் உன்னிடம் எத்தனை புடவை எங்கே என்று கேட்டதில்லை.

மணிக்கு அறுபது கிலோ மீட்டர் சுலபமாய் போகும் வண்டி கிடைத்துவிட்டால் பலதுக்கு சவுகர்யம். வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம்வரை கூடப் போய் அடமான நகைகள் வாங்கி பாலீஷ் போட்டு விற்க முடியும். பல தொடர்புகள். கிடைக்குமா... தெரியவில்லை.

ராஜேந்திரபாபு, உடைக்கறதை என் கடை முன்னாடி உடைச்சியே உன் விரலுக்கு மோதிரம் போடறேண்டா, உள்ளே குதூகலம் பொங்கியது.

'இவனாலேயே அந்த மூத்த பிள்ளை வீட்டை விட்டு போயிருக்கணும். அப்பா பிள்ளை தகராறுல' என்றாள் அம்மா. இருக்காது. அண்ணன் தம்பி சண்டையாய் இருந்திருக்க வேண்டும். ஒண்ணி செய்யலாமா? கடை திறப்பு இன்விடேஷனை போய் அவனுக்கு வைத்துவிட்டு வரலாமா? பின்னால் உதவாதா? நான் இரண்டாவது சம்சாரம் பிள்ளை என்றால் என்ன? அவன் தம்பிதானே போலாமா. அவனுக்கு என்னை அடையாளம் தெரியுமா? உள்ளே சேர்ப்பானா? ஏன் இங்கு வந்தாய் என்று கோபிப்பானா?

கோபித்தாலும் அலட்சியம் செய்தாலும் பத்திரிகை வைத்துவிட்டு பணிவாய் வர வேண்டும். முன்னேறுகிறேன் என்று அந்த குடும்பத்திற்குக் காட்டவேண்டும். போகலாம். அவன் ஆபீஸ் போகிற ஆள். கடை மூடின பிறகு எட்டு மணிக்குப் போகலாம். யாரோ அவன் மனைவி ரொம்ப அழகு என்றார்கள். செமை இங்கிலீஷ் பேசுவதாய் சொன்னார்கள். போய் அவளையும் பார்க்கலாம். அம்மாவிடம் உட்கார்ந்து கதை பேசலாம்.

அப்பாவின் முதல் அடி அவன் திருமணம். நாலே நாலு பேர் வைத்து நடத்தின திருமணம். நாலு நாட்கள் கடை திறக்கவேயில்லை. சவுகார்பேட்டை முழுக்க அந்த மனமுறிவு பேசப்பட்டது. பாலக்காட்டு ஐயராம். ஏதோ பரீட்சை எழுதின இடத்தில் சிநேகமாம்.

காதல், கல்யாணம் எதுவும் அப்பாவிடம் சொல்ல வில்லையாம். பெட்டி எடுத்துக்கொண்டு இறங்கினதோடு சரியாம். என்ன சண்டை, எதனால் மனமுறிவு என்று தெரியவே இல்லை. தெரிந்து கொள்ள வேண்டும். போய் அழைப்பிதழ் கொடுத்துவிட்டு வரவேண்டும்.

அலமாரி மரம் சீவல் சீவலாய் இழைக்கப்பட்ட மாதிரி உள்ளே நிதானமாய் ஒரு கணக்கு ஓடியது. அப்பாவுக்கு

சண்டை, ராஜேந்திரபாபுவை பிடிக்கவில்லை. எனக்கு என்ன, எனக்கு எல்லோரும் வேண்டும். எல்லா மனிதராலும் உபயோகம் இருக்கத்தான் செய்யும்.

போகும்போது சொர்ணத்திடம் பழம் வாங்கிக் கொண்டு போக வேண்டும். சொர்ணம் ஏதும் கதை சொல்லலாம். அண்ணனைப் பற்றி ராஜேந்திரபாபு சொர்ணத்திடம் விவரம் சொல்லி இருக்கலாம். அந்த ஆள் பேர் என்ன? வரதராஜ¨வா. சொர்ணத்திடம் கேட்க வேண்டும்.

சொர்ணம் பேசுமா. உதடு கிழிந்து ரத்தம் வந்ததே. ஒரு கிளிஸரின் பாட்டில் நாலு ரூபாய்க்கு வாங்கிக்கொடுத்தால் தானாப் பேசுகிறாள். 'உதட்ல போட்டுக்க சொர்ணம். உடனே ஆறிடும். இந்த மாத்திரை சாப்பாட்டுக்குப் பிறகு போட்டுக்க.' அவன் யோசனைகள் அவளுக்குப் பிடித்திருந்தன.

தேக்கு அலமாரி தூக்கி நிறுத்தப்பட்ட சுவரோடு பதிக்கப்பட்டது. இனி இதில் லட்சம் லட்சமாய் நகைகள் தொங்கவிடப்பட வேண்டும். ஏழுமலையான் கிருபை வேண்டும்.

ரங்கசாமிக்கு ஏழுமலையான் கிருபை இருந்தது. மருந்து கொடுத்ததும் சொர்ணம் அழத்துவங்கிவிட்டாள்.

''ப்ச்சு, எதுக்கு அழுவறே, பழம் ஒரு டஜன் போடு. நல்ல பழமா போடு. என் பேர் கெடுத்துடாதே. இது பெரியவர் புள்ளைக்கு.''

டக்கென்று பழம் போடுதல் நின்றது.

'பெரிய புள்ளைக்கு.'' குரல் தாழ்த்தி குசுகுசுப்பாய் சொன்னான்.

''அவருக்கு ஒரு பத்திரிகை வைக்கிறது மரியாதை இல்லையா?'' இதையும் ரகசியமாய் சொன்னான்.

''நிச்சயம் வைக்கணும். அது ராஜா, இந்த வாந்தி பேதில போறவன் மாதிரி இல்லை அது. கூப்பிட்டு பழம்

நீட்டினாக்கூட சிரிச்சுட்டு போய்டும். ஒரு வார்த்தை பேசாது, கபாலி இல்ல, இங்கே கூட கடை போட்டிருந்ததே, அது பார்க்குமாம் தினத்துக்கும். மயிலாப்பூர்ல தலைவர் வீட்டுக்கு நாலு வூடு தள்ளி இருக்குதாம், என்னா ரோடு அது, இரண்டு கேட்டு ஆஸ்பத்திரி, புள்ளை பெற ஆஸ்பத்திரி, சிலுவைக்கார பொம்பளைங்க வச்சுருக்குதே அதுக்குப் பக்கமாம்.''

அவனுக்கு இடம் புரிந்தது.

''போலாமா வேணாமான்னு ஒரு அச்சம்.''

''எதுக்கு அச்சப்படணும். அது குணமே தனி. ஒரு புள்ளை குழந்தையாம். இரண்டு பேரும் வேலைக்கு போறாங்களாம். அந்தப் பொம்பளை நறுக்கிப் பார்த்துட்டு பழம் வாங்குமாம். ஆனா சொன்ன விலை கொடுத்துடுமாம். நீ பத்திரிகை வையி. எப்படி இருந்தாலும் ரத்த பந்தம் வுட்டுருலாமா? என்னை இந்தப் பாடைல போறவன் அடிச்சான் பாரு இன்னிக்கு!''

''என்னாச்சு அது?''

''வந்து இருநூறு ரூவா கொடுத்துட்டுப் போனான். என்கிட்ட கொடுக்கலை. பக்கத்துக் கடைக்காரிகிட்டச் சொல்றான், 'தண்ணில தெரியாத அடிச்சுட்டேன். விட்டுறச் சொல்லு'ன்னான். எனக்கு நோட்டீஸ் கிடையாதா?''

''உனக்கு எதுக்கு நோட்டீஸு மலைப்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் இரண்டு இரண்டு டஜன் எடுத்துக் கிட்டு வந்து அடுக்கிட்டுப் போய்டு, போவச் சொல்ல நூறு ரூவா வாங்கிக்க.''

''அது அதெப்படி?''

''சரி, நூத்தம்பது?''

அவள் சிரித்தாள். அவன் ஆட்டோ பிடித்து மயிலாப்பூர் போனான்.

காம்பவுண்ட் சுவர் பக்கம் போய் நின்றான். வீட்டு வாசலில் பலகையில் பெயர் எழுதி இருந்தது. லட்சுமி என்று, அடுத்த பக்கம் வீட்டின் பெயர் இருந்தது. யாராவது வெளியில் வருவார்களா என்று காத்திருந்தான்.

ஜலங் என்று இரும்புக் கதவு குலுங்கும் சப்தம் கேட்டது. திரும்பினான். ஒரு குட்டி சைக்கிளில் ஐந்து வயதுப் பையன் கதவில் முட்டித் திரும்பி உள்ளே வேகமாய் போவது தெரிந்தது.

''டாடூ, ப்ளீஸ் ஸ்டாப் சைக்கிளிங்!''-பெண் குரல் உத்தரவிட்டது. பிள்ளை மறுபடி திரும்பி வந்து கதவில் முட்டி சப்தம் எழுப்பியது.

''டாடூ! ப்ளீஸ் ஸ்டாப் இட்''-தொளதொளப்பான கவுனில் ஒரு பெண் தலை விரித்துப் போட்டபடி வெளியே வந்தாள்.

அவன் கதவுக்கு அருகே போய் நின்றான். வணக்கம் சொன்னான்,

''யெஸ்!''

''ஸ்ரீராமுலு செட்டியார் பிள்ளை வீடு இதுங்களா?''

''யெஸ்.''

'உள்ளே வா' என்று சொல்லவில்லை.

''அவரைப் பார்க்க முடியுங்களா?''

''ராஜு, சம்படி வாண்ட்ஸ் யூ''-உள்ளே போனாள். குழந்தை சைக்கிளோடு மறுபடி கதவருகே வந்து நின்றான், இவனை வியப்புடன் பார்த்தான். இது ஸ்ரீராமுலு செட்டியார் முகமில்லை. பாலக்காட்டு முகம், இளம் சிகப்புக் கன்னம். மெல்லிய புருவம். மேல் எழுந்த நெற்றி. கண்ணில் அறிவுச் சுடர் தெரிந்தது.

''யாருங்க அது...?'' வாசல் விட்டு வெளியே! ஒரு ஆண் உருவம் வந்தது. இது அப்பாவின் முகம். அதே சாயல். ஆனால், கண்ணில் கடுமை இல்லை, கேள்வி இருந்தது.

''உங்களை ஒரு இரண்டு நிமிஷம் பார்க்கணுங்க.''

''உள்ள வாங்க.'' சொல்லிவிட்டு அவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

கதவு திறக்க முடியவில்லை. திறந்தால் பிள்ளை மீது இடிக்கும். சைக்கிளோடு கதவருகே நிற்கும் பிள்ளையை ஒதுங்கிப் போ என்று சொல்ல முடியவில்லை.

காத்திருந்தான்.

''எங்க அவரு?'' மறுபடி அவன் வெளியே வர, ரங்கசாமி தயக்கத்தின் காரணம் புரிந்துவிட்டது. ''டாடூ, இங்க வா. சுமி!'' பையனை எடுத்துக்கம்மா. உள்ள வரவிடாம நிக்கறாம் பாரு.''

பையன் பின்னடைய, சிறிதளவு கதவை திறந்து ஒருக்களித்து உள்ளே நுழைந்து மறுபடி மூடி தாளிட்டு நடக்க, சைக்கிள் சுற்றி வந்து வழிமறித்தது.

''என்ன தம்பி?'' குனிந்து கேட்டான்.

''லைசென்ஸ் எங்க?''

''வைசென்ஸா!''

''நா போலீஸ். லைசென்ஸ் எடு.'' பிள்ளை அதட்டிற்று.

''வணக்கம் ஐயா, நான் லைசென்ஸ் எடுத்தாரலீங்க'' -பயந்ததாய் நடிக்க, இடுப்பிலிருந்து துப்பாக்கி உருவி குறி பார்த்தது.

''சுட்டுறாதீங்கய்யா லைசென்ஸ் தந்துடறேன்.'' தோல் பையில் இருந்து ஒரு அழைப்பிதழ் எடுத்து நீட்டினான்.

பிள்ளை வாங்கிக்கொண்டது.

'போ' என்று உத்தரவிட்டது.

அவன் படியேறி வராண்டாவில் செருப்பு அவிழ்த்து உள்ளே போனான். உள்ளே மங்கலான வெளிச்சம். டி. வி. ஓடிக்கொண்டிருந்தது ஹால் முழுக்க கார்பெட் விரித்

திருந்தது. இனம் புரியாத ஓவியங்கள் இருந்தன! ஆங்கிலப் படத்தில் வரும் வீடு போல் இருந்தது.

''யாரு தெரியலையே.''

''நான் சிந்தாதிரிப்பேட்டைங்க. ரங்கசாமின்னு பேரு. ஞானம்பா புள்ளை நானு.''

''ஞானம்பா...ஓ... என்ன?'' அவன் முகம் மாறிற்று.

''ஒரு ஜ¨வல்லரி திறக்கறேன். நீங்க பெரியவங்க, எனக்கு மூத்தவங்க. உங்களுக்கு பத்திரிகை வைக்கணும். தரலாங்களா.''

''பை ஆல் மீன்ஸ்.''

பத்திரிகை எடுத்து பேர் எழுதி நீட்டினான்.

''வரது வராதது உங்க விருப்பம். உங்க சவுகர்யம். ஆனா, அம்மா உங்களுக்கு பத்திரிகை வச்சே ஆவணும்னுச்சு.''

''சரி.''

''அப்ப நா வரேங்க.'' எழுந்து கரம் குவித்தான்.

''இருங்க போலாம். அவசரமா?''

''இல்லீங்க.''

''சுமி ஏதாவது குடிக்கக் குடும்மா.''

''உங்க பேர் என்னா?''

''ரங்கசாமிங்க.''

''உக்காருங்க.''

''என்ன என்னைப்போய் ங்கன்னுட்டு... டா போட்டே கூப்பிடலாங்க...''

''நான் யாரையும் அப்படி கூப்பிடறதில்லை.''

''நல்ல பழக்கங்க.''

''ம்ம். பெரிய கடையா?''

''இல்லீங்க. பத்துக்குப் பதினாறு அடி; மூணு ரூவா பகடி கேட்டாங்க. அதிகம்தான். நல்ல இடம். வாங்கிட்டேன்.

நாப்பது அம்பது சவரனுக்கு ஆரம்பிச்சு மெல்ல மெல்ல வளரணும்.''

''ஆல்த பெஸ்ட்.''

''ரொம்ப நன்றிங்க.''

''அப்பா எப்படி இருக்காரு?''

''அப்படியே தாங்க.''

''அதட்டல் மிரட்டல் எல்லாம் இருக்கா இன்னமும்?''

''அது ஓயாதுங்க.''

''அப்பா எதுவும் உதவி செய்யறாரா?''

''கேட்க முடியுங்களா? பத்திரிகை கொடுத்து வாங்கன்னேன். பதிலே சொல்லலை. வரலாம். வராதியும் போகலாம்.''

காதல் பெண்மணி ஒரு பீங்கான் கோப்பையில் காபி எடுத்து வந்து ட்ரேயுடன் நீட்டினாள்.

எழுந்து நின்று வாங்கிக் கொண்டான்.

''கோல்ட் மட்டும் தானா, கல் வேலை...?''

''தோடு வரைக்கும் வச்சிருக்கேன். தரம் பார்க்க அனுப்புவாங்க. பார்த்து சொல்றது மட்டும்தான்.''

''கல்லு பார்ப்பீங்களா?''

''ஒரு அளவு தெரியுங்க. போன மாசம்கூட திருப்பதிக்குப் போய் நூறு இருநூறு பிரிச்சுக் கொடுத்துட்டு வந்தேன்.''

''ராஜேந்தர் எப்படி இருக்கான்?''

''இப்ப நல்லவர் ஆயிட்டாரு.''

''கேள்விப்பட்டேன் ரொம்ப அலட்டறான்னு.''

''வசதியா வளர்ந்துட்டாரு, நாம சொல்லக்கூடாது.''

''எங்க வீட்டுக்குப் போவீங்களா?''

''இல்லீங்க. இதுவரைக்கும் படி மிதிச்சது கிடையாது எனக்கு இங்க வரக் கூடப் பயம். அம்மாதான் திட்டினாங்க. போய் நின்னு கொடுத்துருன்னு.''

''ஏன் திட்டறது? எதுக்குத் திட்டறது?''

''ஆயிரம் இருந்தாலும்...''

''அது எங்க அப்பா பண்ணினதவறு. நீங்க என்ன செய்ய முடியும்? சுமி, இவரு யார் தெரியுமா?''- மடமடவென்று ஆங்கிலத்தில் பேசினான். அவனுக்கு எதுவும் புரியவில்லை.

பிள்ளை ஓடிவந்து அம்மாவிடம் அழைப்பிதழ் நீட்டியது.

''என்ன கவர் இது டாடு?''

''நா கொடுத்தேங்க.''

''ஏன்?''

''புள்ளை வழியில மடக்கி லைசென்ஸ் கேட்டது. மாட்டேன்னா முடியலை. கொடுத்தேன். போலீஸ் ஐயா லைசன்ஸ் சரியா இருக்குங்களா?'' பிள்ளை ஓடிப்போய் கண்ணாடி மேஜையிலிருந்த பேனா எடுத்து ஏதோ கிறுக்கி அவனிடம் நீட்டியது.

''டாடு, ஏன் கிறுக்கறே வேஸ்டாயிடுச்சு பார்.'' அவன் கத்தினான்.

''இருக்கட்டுங்க.'' நீட்டின அழைப்பிதழை கண்ணில் ஒற்றி வாங்கிக் கொண்டான். அவர்கள் இவருவருக்கும் அவன் பணிவு பிடித்திருந்தது. பிள்ளை செய்கை மகிழ்வு கொடுத்தது.

''இவன் கிட்ட அந்த ஜாப் தரலாமா?'' அந்தப் பெண்மணி கேட்டாள்.

''என்னங்க?''

''ஒரு வளையல் நசுங்கிடுச்சு.''

''கொண்டாங்க.''

அவள் கொண்டு வந்த வளையலை இரண்டு நிமிடம் சுற்றிப் பார்த்துவிட்டு தன் புறங்கையில் திணித்து அழுத்தி, அழுத்தித் திருகினான். பையில் இருந்து பூதக் கண்ணாடி எடுத்துச் சோதித்தான். மறுபடி திருகினான். நசுங்கல் நேராயிற்று. வேட்டியால் கரகரவென்று தேய்த்து பாலீஷ் செய்து பவ்யமாய் நீட்டினான்.

''ஹய்! சரியாயிடுச்சு ராஜு. எப்படிங்க இது?''

''லேசான வளைசல்மா. ஆனா, இது வேணாம்.''

''ஏங்க?''

''மெல்லிசா விரிசல் விட்டுருக்குது. மறுபடி நசுங்கும். மாத்திடுங்க.''

''எத்தினிக்குப் போகும்?'' இன்னொரு வளையலும் எடுத்து வந்தாள்.

''ஒண்ணே முக்காம்மா.'' கையில் எடை போட்டு நீட்டினான்.

''கரெக்ட்! எப்படிச் சொன்னீங்க?''

'பழக்கம் தாங்க. பதினாறு வயசிலேர்ந்து இதுதானே தொழிலு. அண்ணன் என்ன தொழில் செய்யறீங்க.''

''கம்ப்யூட்டர் இன்ஜினீயர்.'' அவளே பதில் சொன்னாள். ''நானும், அவரும் சேர்ந்து கம்பெனி வச்சிருக்கோம்.''

''ரொம்ப நல்லதுங்க. திறக்கற அன்னிக்கு வரலைன்னாலும் என்னிக்காவது இரண்டு பேரும் கடைக்கு வரணும். கஸ்டமராவாவது என் கூட பேசிட்டு இருக்கணும்.'' கை கூப்பினான்.

வரதராஜு முகம் கலங்கியது.

''ச்சே, அப்படியெல்லாம் இல்லப்பா. நல்லா முன்னுக்கு வா. இந்த பணிவு, திறமை உன்னை முன்னுக்கு கொண்டாந்துடும்.''

''அண்ணனை கும்பிடறேங்க.''

-கீழே நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினான்.

அவன் திறமையே பணிவுதான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.



சுப்புலட்சுமி எல்லா ஜன்னல் கதவுகளையும் சார்த்தி விட்டு வாசல் பூட்டினாள். திரைச்சீலைகள் இழுத்து விட்டாள். கட்டில் மீதுள்ள படுக்கை விரிப்புகளை இழுத்து சரிசெய்துவிட்டு சோபாவில் தூங்கும் குழந்தையை வாரி அவன் அறைக்கு எடுத்துப் போய் கட்டிலில் படுக்க வைத்தாள். அவன் பொம்மைகளை அடுக்கி வைத்தாள். மெல்ல கதவு சார்த்தினாள்.

வரதராஜு இன்னமும் டி.வி. பார்த்துக் கொண் டிருந்தான். படுக்கையில் உட்கார்ந்தபடி டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் தன்னைப் பார்த்து முகத்திற்கு லோஷன் தடவிக் கொண்டாள். நைட்டியை தளரவிட்டு வயிறு முழுவதும் கிரீம் தடவினாள்.

இது பழைய வீடு. நாலு லட்சத்திற்கு வாங்கியது. சிறியதாய் இருக்கிறதே என்று யோசித்த போது தோட்டம் சுற்றி இருக்கிறது, அடுத்தடுத்து கட்டிக் கொள்ளலாம் என்று எண்ணம் வந்தது. கட்ட முடியவில்லை. எல்லாக் காசும் கம்பெனியில் போட வேண்டி இருந்தது.

குழந்தை பிறந்த பிறகு வீட்டு செலவு அதிகரித்து விட்டது. திருமணமாகி ஏழு வருடங்கள் ஆகிவிட்டன.

இருப்பதை அழித்து புதுவிதமாய் செய்து கொள்ள முடிகிறதே தவிர புது விதமாய் கடைக்குப் போய் பத்து பவுன் நகை எடுக்க முடியவில்லை. இந்தக் காசை கம்பெனியில் போட்டால் என்ன என்றுதான் தோன்றுகிறது.

இருபத்து நாலு தொழிற்சாலைகளின் உற்பத்தி கணக்குகளை அவர்கள் கம்பெனி கம்ப்யூட்டரில் செய்து கொண்டிருக்கிறது. இன்றைய உற்பத்தி நிலைமை, போன வருடம், போன மாதம், உண்டான உற்பத்தி நிலைமை, கையிருப்பு, செலவு என்று பல வகையான கணக்குகள்.

அந்த கம்பெனிகளின் கணக்குகள் மட்டுமின்றி வேறென்ன செய்தால் வியாபாரம் பெருகும்? மார்க்கெட்டில் அவர்கள் நிலை என்ன? யார் போட்டியாளர்? போட்டியின் கடுமை எத்தகையது? என்ன வழி உயர்வதற்கு என்று யோசனை வேறு சொல்வார்கள்.

மவுண்ட் ரோடிலிருந்து பிரியும் ஒரு முட்டுச் சந்தின் நாலாவது மாடியில் தென் திசை பக்கம் ஆபீஸ் இருந்தது. குழந்தையை ஒன்பது மணிக்கு பள்ளியில் இறக்கிவிட்டு புருஷனும், மனைவியும் பறப்பார்கள். முற்றிலும் குளிரூட்டப்பட்ட இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டால் கணக்கு கணக்குத்தான். சின்ன ஸ்கிரீனில் தெரியும் பச்சை எழுத்துகள்தான். மூன்று மணிக்கு ஆட்டோ பிடித்து குழந்தையைக் கூட்டிக் கொண்டு சுப்புலட்சுமி வீட்டிற்கு வந்து விடுவாள்.

அவன் ஏழு மணிக்குத் திரும்புவான். மிகுந்த களைப்புடன் இரவு படித்து யோசிக்க வேண்டிய விஷயங்களுடன் வருவான்.

நல்ல வருமானம்தான். இப்படி வியாபாரம் பெருக்க புதுப்புது உத்திகள் சொல்லி விளக்கிப் பேசி கணக்கு

காண்பித்து சவடால் அடிப்பதில் மயங்கி பெருந்தொகை வரத்தான் செய்தது.

இனியும் வருமா? என்று தெரியவில்லை. மெல்ல மெல்ல எல்லா தொழிற்சாலைகளும் தாங்களே தங்களுக் கென்று கம்ப்யூட்டருக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. விவரம் தெரிந்தவர்களைத் தங்கள் கம்பெனிக்கு மட்டும் என்று காசு கொடுத்து வைத்துக் கொள்கின்றன.

இரண்டு மூன்று வருடங்களில் தற்போது கையிலிருக் கும் எல்லாக் கம்பெனிகளும் சொந்த கம்ப்யூட்டருக்கு போய் விடும். பிறகு மளிகைக் கடைக்கும், சோப்பு, சீப்பு விக்கிற கடைக்கும்தான் கன்ஸல்டன்ஸிக்குப் போக வேண்டும். அங்கே இந்த எம். பி. ஏ. சவடால் செல்லுபடியாகாது.

கம்ப்யூட்டர் ட்ரெயினிங் சென்டர் ஆரம்பிக்கலாமா என்பது சுப்புலட்சுமியின் எண்ணம். வரதராஜு ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பதில் தானே ஏதேனும் பெரிய கம்பெனியில் சேர்ந்து விடலாம் என்று சொன்னான்.

அப்படியானால் இது. இந்த கன்ஸல்டன்ஸி வியாபாரம். ஏழு வருட உழைப்பு. லாபமுமில்லை, நஷ்டமு மில்லை. இருக்கிற சாதனங்களை விற்றுவிட்டு வீடு பெரியதாய் கட்டி, மாச சம்பளம் வாங்குகிற ஆளாய் மாறலாம். நானும் ஒரு கம்பெனி நடத்தினேன் என்று பெருமை பேசலாம்.

கால மாறுதல்களில் வளர்ச்சி வேகம் பல வகையில் மட்டுப்படும் என்பது உண்மை. கம்ப்யூட்டர் வியப்பாய் இருந்தபோது, அப்படின்னா என்ன என்று சாதாரண ஜனம் கேட்டுக் கொண்டிருந்தபோது சுப்புலட்சுமியும் வரதராஜுவும் முழுத் தெளிவோடு படித்து முடித்தார்கள். படிக்கும் இடத்தில்தான் பழகினார்கள். நட்பு வலுப்பட

காதலித்தார்கள். திருமணம் செய்து கொள்ளலாமா என்று யோசித்தார்கள்.

சுப்புலட்சுமி பாலக்காடு பக்கம். ஆனால், இரண்டு முறைதான் பாலக்காடு பார்த்திருக்கிறாள். நான்கு முறைதான் குருவாயூர் போயிருக்கிறாள். இந்த திருமணம் வரதராஜு அப்பாவுக்கும் பிடிக்கவில்லை, சுப்புலட்சுமி வீட்டிலும் ஆதரவு இல்லை.

அவ்வளவு பெரிய நகைக் கடையையும், ஸ்ரீராமுலு செட்டியார் அண்ட் சன்ஸ் போர்டும் பார்த்த பிறகு சுப்புலட்சுமிக்கு திருமணம் நடக்குமா என்று சந்தேகம் வந்து விட்டது.

ஒற்றைக்கல் கடுக்கனும் நெற்றி திருமண்ணும், அடர்ந்த புருவமும் கொண்ட வரதராஜுவின் அப்பாவைப் பார்த்த போதெல்லாம் பயம் வயிற்றைக் கவ்வியது.

''ஏன் இந்த பொண்ணை கட்டிக்கணும்ன்றே, எதுனா செய்துட்டியா?''

''ஆமா, இரண்டு தடவை.''

உண்மையில் பேச்சுத் தவிர எதுவுமே நடக்கவில்லை. வரதராஜு ஒரு முத்தம் கூட கொடுத்ததில்லை.

''எதுனா கொடுத்தனுப்ப முடியுமா?''

''இல்லை. கேஸ் போட்டுருவாங்க அவங்க வீட்ல.''

''என்ன ஜாதி?''

''ஐயரு.''

''அவங்கப்பா என்ன செய்யறாரு?''

''இன்கம் டாக்ஸ் ஆடிட்டர்.''

மேஜையில் தாளமிட்ட விரல்கள் நின்றன.

''என் சொத்து ஒரு பைசா பேறாது.''

''நான் அதுக்கு வரலை. இது தாத்தா சொத்து எனக்குத் தெரியும். என்கிட்ட வேலை இருக்கு. எனக்கு இந்தப் பொண்ணு உதவும். நீங்க நின்னு கல்யாணம் நடத்தி வைக்கிறது...''

''இல்லை. நான் வர மாட்டேன். எங்கப்பா சொத்து மதிப்பு அப்ப பத்து லட்சம். இப்ப பதினைஞ்சு லட்சம். மத்தது என் உழைப்பு. எனக்கு உனக்கு உன் தம்பிக்குன்னு பிரிச்சா ஆளுக்கு அஞ்சு தேறும். உன் பங்குக்கு வாங்கிட்டுப் போ.''

''சரி.''

''அப்ப அந்த பொண்ணை வுட மாட்டியா?''

''ஒரு நாள் உட்கார்ந்து அதோட பேசி பாரு. வுடமுடியுமான்னு சொல்லு.''

''நான் பேசத் தயார் இல்லை. நீ போ. ஒரு வாரம் பொறுத்து அஞ்சு லட்சம் அனுப்பறேன். எங்க இருப்ப? பொண்ணுக்கு தகப்பன் வீட்லியா?''

''இல்ல. தனியா வீடு பார்க்கணும்.''

''நகைக் கடைக்கு வர மாட்டியா?''

''என் படிப்பு வேற.''

''உன்னை படிக்க வச்சது என் தப்பு. சரி, போ. கெடுத்துட்டேன்ற, என்ன செய்யறது? அப்புறம் ஐயா ஆத்தான்னா ஒரு பைசா பேறாது.''

''வேணாம்.''

அந்தக் காசில் வாங்கிய வீடு. ஐந்து லட்சத்தோடு ஒரு வெங்கடாசலபதி படம் அனுப்பினார். அது கம்பெனியில் இருக்கிறது. சுப்புலட்சுமியின் அப்பாவுக்கு நாலு பெண்கள். எல்லாக் காசும் கல்யாணச் செலவாய் கரைகிறதே என்று கவலைப்பட்டவர் மூன்றாவது பெண் காதல் சாமர்த்தியத்துக்கு உள்ளே மெச்சினாலும் வெளியே முகம் தூக்கினார். தனக்கு பெரிய அவமானம் என்றார்.

கோவிலில் தாலி கட்டி ஹோட்டலில் ரிசப்ஷன் வைத்து பதினாலாயிரத்திற்குள் கல்யாணத்தின் அத்தனை செலவும் முடிந்தது.

''எனக்கு ஒழுங்கா கல்யாணம் ஆகியிருந்தா என்ன செலவு பண்ணி இருப்பே?'' சுப்புலட்சுமி கேட்டாள்.

''இரண்டு லட்சம்'' அப்பா பதில் சொன்னார்.

''அத காசா கொடு.''

''ஏன்?''

''கம்ப்யூட்டர் கன்ஸல்டன்ஸி வைக்கப் போறோம்.'

அப்பாவிடம் வாதாடி மூன்று தவணைகளாய் வந்த காசில் கம்பெனி திறக்கப்பட்டது. கம்ப்யூட்டர்கள் வாங்கப்பட்டன. முதல் மூன்று வருடம் செலவு. பிறகு மெல்ல மெல்ல கண்ணுக்குத் தெரியாத சரிவு வந்தது. ஊர் முழுக்க இப்படி கம்பெனிகள் முளைத்தன. போட்டி பலமாயிற்று. வாடிக்கையாளர்கள் சொந்தக் கம்ப்யூட்டர் வாங்க, இன்னும் சில வருடங்களில் மூடப்படலாம் என்ற பயம் பரவிற்று.

இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்வதைக் கூட இந்த பயம் தடுத்தது. சோற்றுக்கு பஞ்சம் வந்து விடாது. லட்சம் லட்சமாய் சம்பாதித்த திறன் குறையும். எங்கோ கைகட்டி சேவகம் புரியும் நிலை வரும்

இது நிம்மதிதான். ஆனால், வீழ்ச்சியும் கூட.

அவன் ஆங்கிலச் செய்தி முடிந்ததும் டி.வி.யை அணைத்துவிட்டு படுக்கை அறைக்குள் நுழைந்தான். நைட்டியைப் பிரித்து உடம்பெல்லாம் கிரீம் தடவிக் கொண்டிருக்கும் மனைவியைப் பார்த்தான்.

''ராஜு, முதுகுல தடவி விடுப்பா.''

அவள் மொத்தமாய் உருவி எறிந்துவிட்டு அவனுக்கு முதுகு காட்டி உட்கார்ந்தாள்.

விரல்களில் கிரீம் எடுத்து முதுகு முழுவதும் தேய்த்தான். பிடரியிலும், தோள்பட்டையிலும் தடவினான். அவள் புஜங்களில் பின்புறம் தடவி வழித்தான்.

''அப்புறம் வேறெங்கே?''

''எங்க வேணா உன் இஷ்டம்.''

அவள் திரும்பி அவனைப் பார்த்து உட்கார்ந்தாள். இந்த அழகுதான் அவனை முதன்முதலாய் அவளைப் பார்த்து ஹலோ சொல்ல வைத்தது. அவனுடைய நிதானம்தான் அவளை அவனுக்கே அருகே ஈர்த்தது.

இயல்பிலேயே சுப்புலட்சுமி படபடப்புக்காரி. ஹலோ சொல்லி விட்டுமறுபடி படிக்கிறவனை பார்த்ததும் கொஞ்சம் அதிசயம் தட்டிற்று. பழக அவன் ஆழ யோசித்துச் சொல்கிற பதில்கள் பிடித்துப்போயின.

''அவ்ளோ பெரிய நகைக் கடையை விட்டுட்டு வரோமே இவளோடன்னு வேதனை இல்லையா?'' திருமணத்திற்குப் பிறகு கேட்டாள்.

''கடை பெரிசுதான். நல்ல பிஸினஸ்தான். ஆனா, ரொம்ப பழைய சம்பிரதாயம். புது ஐடியா எதுவும் எடுபடாது. கம்ப்யூட்டர் தராசு வரதையே ரொம்ப பேர் எதிர்த்தாங்க. கம்ப்யூட்டர்ல பில் போடலாம்ன்னேன்.

'ஏன்னு?' கேட்டாரு அப்பா...

'சட்டுன்னு போட்டுரும். போன வருஷம் இந்த தேதில எத்தினி வியாபாரம்னு சொல்லும்'னு சொன்னேன்.

'நமக்கு மட்டும் சொல்லுமா? யார் கேட்டாலும் சொல்லுமா?'

'யார் கேட்டாலும் சொல்லும்'னேன். 'அப்போ சரிப்படாது'ன்னுட்டாரு. 'ஒரு அவசரம் ஆபத்துன்னா போனவருஷ பில்புக்க எரிச்சுடலாம். இதை எரிக்க முடியுமா? 'ஏன் வம்பு?'ன்னுட்டாரு.

''நகை பேடர்ன்ல மாறுதல்...''

''பெரிசா இல்லை. அதே தாலிக்கொடி. தாமரைப் பூத்தோடு. அவல் சங்கிலி. அன்ன பதக்கம். அதிகம் மாறாத இடம் அது. அது தவிர...''

தவிர?''

அப்பா இருக்கிற இடத்துல நான் இருக்கிறது கஷ்டம். அவரு, வந்தா நிக்கணும். அவரு போன பிறகுதான் உட்காரணும். பேண்ட் போடக் கூடாது. கலர் துணி, கட்டம் போட்ட சட்டை கூடாது. முடி வாரா வாரம் வெட்டணும். சனிக்கிழமை எண்ணெய் தேய்ச்சிக் குளிக்கணும். நெத்திக்குவுடணும். எனக்கு பிடிக்கலை.''

''என் சமையல் சாப்பாடு உங்களுக்குப் பிடிக்குமா?''

''இந்தச் சாப்பாடு பிடிச்சிருக்கு''-அவளைத் தொட்டுக் காட்டினான். பாலக்காட்டுப் பெண்ணை ஆந்திரத்து இளவரசன் அயர அடித்தான்.

இவளிடம் வந்த பிறகு மொத்தமாய் மாறிப் போனான். ஆயினும் அடி மனசில் பதிந்தவைகள் சிலது மாறவில்லை. சனிக்கிழமை ஷேவ் செய்ய மாட்டான். தவறாது தலைக்குக் குளித்துவிட்டு வெங்கடாசலபதி முன் நிற்பான்.

''இன்னிக்கு உங்க டைரக்டர்ஸ் மீட்டிங் இருக்கே, ஷேவ் பண்ணலை?''

-உண்டியலில் அபராதம் நூறு ரூபாய் போட்டுவிட்டு ஷேவ் செய்வான். அல்லது கவனமாய் வெள்ளி இரவே மழித்துக் கொள்வான்.

''நகை உரச தெரியுமா?''

''சொல்லிக் கொடுத்தாரு. ஆனா, மறந்துப் போச்சு.''

''எடை சொல்ல முடியுமா?''

''குத்து மதிப்பா.''

''இது எவ்வளவு?''

''இது தங்கமே இல்லை.''

''எப்படிச் சொன்னீங்க கரெக்டா.''

''இந்தச் செயின் இந்த கையிக்கு எப்படி கனக்கும் தெரியுமா. இது வெள்ளி முலாம் பூசியிருக்கு.'

''இது மாதிரி தங்கத்துல செய்துக்கணும்.

''பார்ப்போம், கம்பெனி வளரட்டும்.''

ஆசைக்கோ, அன்புக்கோ குறைவில்லை. கூடக்கூட பெண்டாட்டி வேலையில் உதவிசெய்வது மகாபெருமை. ஆனால், ' ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வளர முடியாத தொழில் எடுத்துக்கொண்டு விட்டோமே' என்கிற வேதனை அவனுக்கு அதிகமாகவே இருந்தது.

அசையாது மனைவியையே பார்த்துக் கொண்டிருந்த வனிடம் அது தெரிந்தது.

''என்ன யோசனை?'' அவள் அவன் தலையைக் கலைத்தாள்.

''ஒன்றுமில்லை. எனக்குத் தெரிஞ்சு எடுபிடிபையன் அவன். இன்னிக்கு சொந்தமா கடை வைக்கிறான்.''

''யாரு?''

''வந்தானே, ஞானாம்பா பையன்.''

''பதினாறடிக்கு பத்தடின்னுதானே சொன்னாரு.''

''பெரிய விஷயம். சவுகார் பேட்டைல இரண்டு லட்சம் ரூபா விஷயம்.''

''வாடகையா?''

''வாடகை வேற. பகடியே இரண்டு லட்சம். கஸ்டமர் பிடிச்சுட்டா பத்து வருஷத்துல உயர்ந்துடுவான். வேலை வேற தெரிஞ்சிருக்கு.''

''எப்படிச் சொல்றீங்க?''

'உன் வளையலை நிமிர்த்தினானே, உருட்டி உருட்டி அதுலியே தெரிஞ்சு போச்சு.''

''என்ன அதுக்கு இப்ப?''

''பேசாத நகைக்கடையிலேயே இருந்துருக்கலாம். இத்தனை கஷ்டப்பட்டு மேலும் இல்லாம, கீழும் இல்லாம நிக்கிறோம்.''

''வாஸ்தவம். இருநூறு பவுனோட நெல்லூர் பொண்ணு கிடைச்சுருக்கும். எழுந்திருன்னா எழுந்திருக்கும். உட்காருன்னா உட்காரும்.''

''ப்ச்சு, நான் அதைச் சொல்லலை, இன்னிக்கு பெரிய அஸைட்டே, நீதான். இப்படி ஒரு பொண்டாட்டிதான், கட்டிக்கிட்டு என்னடா கிழிச்சேன்னா உனக்கும்தானே அவமானம்.''

''சந்தோஷமா இருக்கோம்பா. நிறைவா இருக்கோம் நாம, நம்ம வீடு நம்மக் குழந்தை யாருக்கும் பயமில்லாத சுதந்திரமா இருக்கோம். கம்பெனி இல்லேன்னா என்ன, வேற வேலையா கிடைக்காது. பத்தாயிரம் ரூபா சம்பளம், அலவன்ஸ்...''

''சம்பளக்காரன்தானே. பிஸினஸ்மேன் இல்லையே?''

''நகைக்கடை ஆளா யோசனை பண்ணி பாருங்க.''

''அது வாழ்க்கையே வேற. பாதி தெலுங்கு, பாதி தமிழ், மாலைமுரசு, திருப்பதி குடைன்னு போற வாழ்க்கை, சவுகார்பேட்டை சாது வாழ்க்கை. இப்படி தோட்டமும் நைட்டியும், பொண்டாட்டிக்கு கிரீம் தடவறதும் நடக்காது.''

''அப்புறம் ஏன் வருத்தம்?''

''வருத்தமில்லை குழந்தைக்கு இன்னும் பெரிய சவுகர்யம் செய்ய முடியாது போகுமோன்னு தோணுது. எங்கப்பாகிட்ட இருந்தா...''

''சவுகார்பேட்டையில ஜட்டியோடு வீட்டு வாசல்ல சுத்திக்கிட்டு இருப்பான். நமக்கு மாறத் தோணிச்சு மாறிட்டோம். இனிமே பழைய இடம் திரும்ப முடியாது.''

''ஒரு தடவை பார்த்துட்டாவது வரணும்.''

''அப்பாவையா?''

''இல்லை, சவுகார்பேட்டையை.''

''இந்த கடை திறப்புக்கு போவமா?''

''வரியா?''


''நான் ரெடி.''

''போலாம். கார்டு எங்க?''

''ஹால்ல இருக்கு.''

எழுந்தான்.

''படுங்கப்பா. காலைல பார்த்துக்கலாம்...'' இழுத்தாள். அவன் நிதானமாய் அவள் மீது படர்ந்தான்.



''இது கடை திறப்பா? இல்லை கோவில் கும்பாபிஷேகமா...? ஏங்க இவ்வளவு கலாட்டா பண்றாங்க?''

தெருவின் நகைக்கடைக்காரர்கள் ஒன்றுகூடி வியந்தார்கள்.

''அவங்க இன்னிக்கு கடை திறக்கிறபோது வேற யார் கடையிலியும் யாரும் நுழையக் கூடாது. பாருங்க, தெரு அடைச்சு சேர் போட்டிருக்கறதை.''

''சரி, அரை அவர் கூத்துதானே.''

''எப்படிங்க அரை அவரு...? சேர் போடவே இரண்டவரு ஆச்சுங்க. எடுக்க மூணவரு ஆகும். அப்பால பந்தல் பிரிக்கணும். பிரிச்ச குப்பையை வாரி போடணும். இன்னிக்குப் பொழுதுக்கு இவங்க ஆட்டம்தான்.''

''ஏதோ பத்து நிமிஷம் மங்களகரமா நாயனம் வாசிப்பாங்க இங்க வாசல்ல பாண்டு. சந்துமுனையில நாயனம். அது தவிர முருகா... முருகான்னு ரேடியோ பாட்டு இத்தினி சத்தம் தேவைதானா?''

''ஆர்வம் தான்.''

''அளவு இருக்கணுங்க. ஓட்டல் தெறக்கறமா எல்லா ஜனத்தையும் கூப்பிடறதுக்கு. இல்லை சினிமா கொட்டாயா...? தங்கம் விக்கிற இடம். வரக்கூடிய ஜனம்தான் வரணுமே தவிர, கண்ட ஆளுங்களும் நுழையற இடமா இது? எல்லாம் செய்து போட்டோ எடுத்து கடைல மாட்டிக்குவான்.''

''மாட்டிக்கிட்டா கட்டி கட்டியா வித்துருமா...? துட்டு கொழுப்புங்க. அடக்கம் போதலை.''

''எப்படி அடக்கம் வரும். நீ யாருன்னு நின்னு கேட்டா ஸ்ரீராமுலு கூத்தியாள் புள்ளைன்னுதான் சொல்லணும்.''

''அதான் உறுத்தலு. அதனாலதான் சத்தம். ஸ்ரீராமுலு பெரிய புள்ளை வரதராஜு நடக்கறதும் தெரியாது, நிக்கறதும் தெரியாது. பத்து கேட்டா ஒண்ணு பதில் சொல்லும். ஒன்பதுக்கும் சிரிச்சுக்கிட்டே நிக்கும். இவனுக்குத் தான் சரியான பொறப்பு இல்லைன்னு ஒரு உறுத்தல். பயம். சத்தம் போட்டு ஸ்ரீராமுலு புள்ளைன்னு சொல்றான். நீங்க எல்லாம் கேட்டுக்கணும்.''

''ஆமா. பெரிய புள்ளைய ஏன்விட்டுட்டாரு ஸ்ரீராமுலு?''

''இவரு அடாவடி தாங்காத ஓடிட்டான்.''

''அது இல்லப்பா... அவன் மலையாளத்து ஐயர் பெண்ணை லவ் பண்ணிக் கட்டினதுல அவருக்கு ஆத்திரம்.''

''அது ஒண்ணுமில்லை. அப்படிப் பார்த்தா அந்தப் பொண்ணு வூட்லதான் ஆத்திரப்படணும். அவங்க நம்ம கஸ்டமருதான், செக்கச் செவேர்னு தக்காளிப்பழமா வருவாரு பெரியவரு. உரத்துப் பேசமாட்டாங்க. இன்கம்டாக்ஸ் வக்கீலு, ஒரு கேஸுக்கு அட்வான்ஸ் அஞ்சாயிரம். பெரும் பணம். அந்தப் பொண்ணு செட்டியார் புள்ளையே சொர்க்கம்னு இருக்குது.''

''எப்படி தொடுப்பு வந்தது.''

''ச்சீ... தொடுப்பு கிடுப்புன்னு அசிங்கமா பேசக் கூடாது. லவ்வு. சொல்லு லவ்வு. கம்ப்யூட்டர் படிக்கச் சொல்ல கரெண்ட் பாஸாயிடுச்சு, இரண்டு பேரும் படிச்ச புள்ளைங்களா... சத்தம் போடாத கல்யாணம் கட்டி ஹனிமூன் போயிட்டு வந்து விவரம் சொன்னாங்க. என்ன செய்யமுடியும். உன்இஷ்டம்னுஸ்ரீராமுலுகும்புடுபோட்டாரு.''

''ஆ ஊன்னுவாரே.''.

''அதெல்லாம் இங்கதான். ஐயரு நசுக்கிடுவான். இப்ப ஆம்பளை புள்ளை ஒண்ணு பொறந்து சவுக்கியமா இருக்காப்பல.''

''இரண்டாவது பையன் சுரேந்திரபாபுதான் பழக்காரப் பொம்பளைக்கு நடுவுல கொடி கட்டிப் பறக்கிறான்.''

''துட்டுக் கொழுத்தா எல்லா பசங்களும் செய்யறதுதான். இவன்தான் என்னவோ கூச்சல் கிளப்பிக் கிட்டு...''

''ஏங்க கூச்சல் வருது? அஞ்சு ரூவா கேட்ட இடத்துல பத்து ரூவா தந்தா கூச்சல் வருமா? இவன் போயிட்டு,

நாலைஞ்சு ஆரஞ்சுப் பழம் எடுத்தாந்துறானாம். கூவாத என்ன செய்வாளுங்க.''

''ஏம்பா பாண்டு வாத்தியம் இங்க வருது.''

''நாம கூடி பேசறது பார்த்துட்டு ஞானாம்பா பையன் இடம் மாத்தறான்.''

- பேசிக் கொண்டிருந்த நாலு பேரும் கலைந்தார்கள். அவரவர் கடைக்குப் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

உலகம் என்பதற்கு கை கால் உண்டா. தெரியாது. ஆனால் வாய் இருக்கிறது, ஓயாது பேசும் வாய் இருக்கிறது. நல்லது கெட்டது எவருக்கு நடந்தாலும் எங்கு நடந்தாலும் ஒரு அலட்டலோடு இடித்துப் பேச, குறை கூற, கேலி செய்ய, ரகசியம் பேசும் வாய் இருக்கிறது. அது பேசத்தான் செய்யும் யாரும் தடுக்க முடியாது.

பத்தேகாலுக்கு மெல்ல கூட்டம் சேர்ந்தது. 'பத்தரைக்குக் கடை திறப்பு' என்று நேரம் போடப்பட்டிருந்தது பிரபலமானவர்கள் வருகை தந்து வாழ்த்த இருக்கிறார்கள் என்று போட்டிருந்தது.

பத்து இருபதுக்கு வரதராஜு மனைவியும் குழந்தையுமாய் போலீஸ் ஸ்டேஷன் பார்க்கிங்கில் வண்டி நிறுத்தினான். குழந்தையை தோளில் போட்டுக்கொண்டு மனைவியோடு நடந்தான். நடக்க நடக்க பரவசமானான்.

''சுமி, இதெல்லாம் நான் தினம் நடந்து போன இடம். இந்தத் தெருவுலதான் எங்க வீடு இருக்கு. எது சொல்லு?''

''மறந்து போச்சு ராஜு.''

''அதோ பார். யெல்லோ பில்டிங். க்ரீன் பார்டர். மேல ஒரு லேடி சிலை நிக்கும்.''

''யாருடைய சிலை?''

''தெரியாது. ரோமானிய சிலை மாதிரி இருக்கும் நூறு வருஷத்து சிலைன்னு சொல்வாங்க. சுமி இது என்ன தெரியுமா?''

- சிவன் கோவில் வாசலில் விற்றுக்கொண்டிருந்த கட்டியான பொருளைக் காட்டினான்.

''யேய்... இது சாம்பிராணி. இது ஏன் இங்க விக்கறாங்க. கொஞ்சம் வாங்கிட்டுப் போவோமா, சின்ன வயசுல எங்கம்மா எனக்கு போடுவாங்க...''

''உம்புள்ளை புகை தாங்குவானா? இந்தக் கடைல நான் தினம் முறுக்கு வாங்குவேன்.''

''யப்பா... பெரிய சரித்திர சின்னம்.''

''சரித்திரம்தான் ஆயிடுச்சு சவுகார்பேட்டை எனக்கு.''

''உங்கப்பா வந்திருப்பாரா?''

''வரலாம்.''

''பயமா இல்லை உங்களுக்கு.''

''பயம் இல்லை. ஒரு கலக்கம் இருக்கு. ஏண்டா வந்தேன்னு கேட்பாரோன்னு கலக்கம் இருக்கு.''

''கூப்பிட்டாங்க வந்தோம்.''

''ஏன் கூப்பிட்டேன்னு அவனைத் திட்டுவாரோ என்னவோ?''

''ரொம்ப நல்ல மனுஷனாத் தெரியுது அந்தப் பையன்.''

''பாவம் அவங்கம்மா யாரோ தெலுங்கு பிராமினாம். வறுமை. அப்பாகிட்ட மாட்டியிருக்காங்க.''

''நீங்க கூட அப்படி யாராவது வச்சுக்குவீங்களா?''

''ஆமா... உன்னை மல்லாத்தறதே பெரும்பாடா இருக்கு. இன்னொண்ணைக் கட்டிக்கிட்டு என்ன செய்ய? என் அபிப்பிராயத்தில் ஒரு பொம்பளையே கூட ஆம்பளைக்கு

அதிகம். நான் சட்டம் போடறவனா இருந்தா கல்யாணம் செய்து ஏழு வருஷம் பொறுத்து கண்டிப்பாய் துறவறம் சகலரும் பூண வேண்டும்.''

''அது என்ன ஏழு வருஷம்?''

''நமக்கு ஏழு வருஷம் ஆச்சே.''

''ஓஹோ, துறவு ஞாபகம் வந்திடுச்சா உங்களுக்கு வீட்டுக்கு ராத்திரி வாங்க சொல்றேன்.''

''நடு ரோட்ல கிள்ளாதே.''

''கிள்ளுவேன்.''

''இங்க எல்லாரும் எனக்குத் தெரிஞ்சவங்க சுமி. எம் மேலே ரொம்ப மதிப்பு வச்சிருக்கறவங்க.''

''அப்ப இன்னும் நல்லா கிள்ளுவேன்.''

''எதுக்கு... ச்சு... சனியனே விடு. நகம் பதியுது பார்...''

''ஸ்ரீராமுலு செட்டியார் புள்ளை என்கிட்ட படாத பாடு பட்டுக்கிட்டிருக்கார்னு தெரிய வேணாமா?''

''வாங்க தம்பி...''-குரல் கேட்டது. சுப்புலட்சுமி அவன் புஜத்தில் இருந்து கை எடுத்தாள்.

''நல்லா இருக்கீங்களா... செட்டியார் பேரனா இது... அம்மா சாயலாவே இருக்குது. வாங்கம்மா... நானு கவுரி ஜுவல்லரி! டேய் சீனுவாசலு பெரிய புள்ளை வந்திருக்குது பாரு. அவரு நாதன் ஜுவல்லரிம்மா. நாங்க எல்லாம் ஒரு தாய் புள்ளையா வளர்ந்தவங்க. பெரிய புள்ளைய ரொம்ப நாளா தெரியும்!''

''ரொம்ப நாளா என்ன? டிராயர் போடாத காலாத்துலேர்ந்து தெரியும்னு வச்சுக்கங்களேன். வாங்க வாங்க. சீனுவாசலு. இட்டுக்கினு போ. கடை திறக்கறம்னு நோட்டீஸ் வச்சாங்களா...''

''ஆமா...''

''முன் இடமா பார்த்து உட்கார வை. வாங்கம்மா... போய் உட்காருங்க. வழி விடுங்க பிரதர். லேடீஸ் போட்டும்.''

தள்ளி நின்று கைகூப்பி முன்னால் அனுப்பினார்கள். போன பிறகு ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

''ஞானம்பா புள்ளைய என்னமோ நினைச்சேன். எதுக்கும் வராத பெரிய புள்ளைய வர வச்சுட்டானே.''

''அது எப்படி... கன்னு கன்னுதான். பன்னி பன்னிதான்.''

''யோவ் மட்டப்புத்தி. இப்படி எங்க எதிர பேசுவீரு. நாளைக்கு ஞானாம்பா புள்ளை கிட்ட போய் கைமாத்தா நாலு சவரன் கேட்பீரு. வாய பொத்திக்கிட்டு சும்மா இரும்.''

அவன் கடை விட்டு இறங்கி வந்தான். பெரிய ரோஜா மாலை எடுத்து வரதராஜுக்குப் போட்டான். குழந்தை கையில் ஆப்பிள் கொடுத்தான். ஓரமாய் நின்றிருந்த ஞானாம்பாள் முன் வந்து சுப்புலட்சுமியை நோக்கிக் கும்பிட்டாள். தட்டிலிருந்து மல்லிகைச் சரம் எடுத்துக் கொடுத்தாள்.

''நீங்க வந்தது ரொம்ப சந்தோஷம். உட்காருங்க.''

''யாரு வரணும்?''

''வந்துடுவாங்க. உட்காருங்க.''

''வந்தாச்சு. வந்தாச்சு.'' முந்நூறு நானூறு இளைஞர் களுக்கு நடுவே அந்தச் சினிமா நடிகர் தெருவுக்குள் நுழைந்தார். கலைந்த தலையும், கறுப்புச் சட்டையும், கறுப்புப் பேண்ட்டும் சிறிய கண்களுமாய் தலை கோதி உள்ளே நுழைய, போடப்பட்ட அத்தனை நாற்காலிகளும் சிதறின.

ஒரு காட்டாறு மதகு பிய்த்துக் கொண்டது போல் இளைஞர் கூட்டம் மேடை நோக்கி வந்தது.

சுப்புலட்சுமி எதிர்கடைப் பக்கம் ஒதுங்கி கொண்டாள். புருஷனை அருகே இழுத்துக் கொண்டாள். மக்கள் என்கிற ஆறு மேடையைச் சுற்றிக் கொண்டது. அந்த நடிகர் மேடையில் ஏற, கைதட்டியது. கூடவே ஏறும் மக்களை அந்த நடிகரே தடுத்து நிறுத்தினார். 'போறும் நின்னுடுங்க' என்றார். நின்றது.

யாரோ மாலை போட்டார்கள். கூட்டம் கை தட்டியது. அவன் அருகே ஓடிவந்து வணக்கம் சொன்னான். கையில் எலுமிச்சை கொடுத்தான்.

''கடை திறந்துடலாமா?''

அப்பாரு வரலீங்க. தெரு முனையில மாட்டிக் கிட்டாரு, வர முடியலை.''

''எங்க?'' நடிகர் எட்டிப் பார்த்தார்.

- சந்தில் பிதுங்குகிற கூட்டம். பார்த்துவிட்டு ஸ்ரீராமுலு பேசாது நின்றார்.

'மடையன் என்ன இப்படி கூட்டம் கூட்டி விட்டான். சலூன் திறப்பு விழாவா?' - உள்ளே சீற்றம் தூக்கியது.

நடிகர் எழுந்து நின்று கூட்டம் பார்த்து வணங்கினார்.

''இந்தக் கடையின் முக்கியஸ்தர் ஸ்ரீராமுலு செட்டியார் அவர்களை மேடைக்கு வருமாறு அழைக்கிறேன்'' என்றார்.

'எங்கடா வர்றது. நெக்கையா இருக்கு... பறந்து வர்றதுக்கு' - ஸ்ரீராமுலுக்கு மேலும் கோபம் வந்தது.

''அப்பாரு அங்க நிக்கறாருங்க.''

''தயவுசெய்து வழி விடுங்க. செட்டியார் உள்ள வாங்க.'' கூட்டம் அவன் குரலுக்குப் பணிந்து இரண்டாய் பிளந்தது. மோசஸ் சொல்ல கடல் பிளந்ததாமே, அது போல் ஜனங்கள் பிரிந்தார்கள். பாதை தந்தார்கள். ஸ்ரீராமுலுக்கு மட்டும் அனுமதித்தார்கள்.

ஸ்ரீராமுலுக்கு பெரிய மாலை நடிகர் போட, மறுபடியும் கைதட்டல் எழுந்தது. பெயர்ப் பலகையில் வெள்ளை மஸ்லின் போர்த்தியிருந்தது. நீளக்கயிறு மேடைக்குக் கொண்டு வரப்பட்டது. நடிகர் கையில் கயிறு முனை தரப்பட்டது.

''எனது நண்பருடைய இந்தக் கடைய, ஞானாம்பாள் ஜுவல்லர்ஸ்ன்னு பேர் வச்சுருக்கற கடைய என் குரு, என் வழிகாட்டி ராகவேந்திரர் பெயர் சொல்லி திறந்து வைக்கறதுல பெருமைப்படறேன். இறைவன் இவருக்கு எல்லா நல்லதையும் செய்யட்டும். கடவுள் பக்தியைவிட பெரிய பக்தி தாய் மேல வச்சிருக்கிற பக்தி. தன் தாய் பெயரால் திறக்கப்பட்ட இந்தக் கடை பெரிய லெவல்ல வரணும்னு கடவுளை வேண்டிக்கிறேன்.

ஸ்ரீராமுலு செட்டியார் - உழைப்பாளி. நாணயம் உள்ளவர். அதனால்தான் இவ்வளவு பெரிய கடை வச்சு நடத்த முடியுது. அவரு முத முத கணக்கு எழுதித் துவங்குகிற வியாபாரமும் நல்லா நடக்கும். ஸ்ரீராமுலு செட்டியாருக்கும் அவர் மகனுக்கும் என் அன்பு, என் வணக்கம். கடவுள் அவர்களுக்குத்துணையா இருக்கட்டும். ஜெய் ராகவேந்திரா.''

-கயிறு சுண்ட மஸ்லின் துணி அவிழ்ந்து ஞானாம்பாள் ஜுவல்லர்ஸ் விளக்கு எரிந்தது.

நடிகர் கடைக்குள் ஏறினார். ஸ்ரீராமுலு கல்லாவில் உட்கார, முதல் வியாபாரம் ஒரு பவுன் மோதிரம் காசு கொடுத்து வாங்கி பில் எழுதி இரண்டும் நடிகருக்குக் கொடுக்க, ஏகப்பட்ட காமிராக்கள் கண்சிமிட்டின. நடிகர் காசு கொடுத்தார்.

''அப்ப வரேங்க...'' நடிகர் கைகூப்ப, அவன் அவரோடு ஒட்டி வெளியே வந்தான். ''அவங்க என் அண்ணாரு, அது அண்ணி. கம்ப்யூட்டர் கன்ஸல்டன்ட்ஸ் ரெண்டு பேரும்.''

''ஐ ஸீ''- நடிகர் படிப்பு கேட்டுவிட்டு கை குவித்தார். அருகே நின்று போட்டோ எடுத்துக் கொண்டார். குழந்தையைக் கொஞ்சினார்.

திரும்ப நடந்தார். மதகு நீர் வெளியே வழிந்தது.

போலீஸ், வேனிலிருந்து இறங்கி கூட்டம் விலக்கி அவரை காருக்குள் கொண்டு போயிற்று.

அந்த சந்தில் எல்லா நாற்காலிகளும் உடைந்து விட்டிருந்தன. இரண்டு கடைக் கண்ணாடிகள் விரிசல் விட்டிருந்தன. வெள்ளம் வடிந்த இடம் போல அந்த சந்து இருந்தது.

நடிகர் கார் ஏறியதும் அவன் மீண்டும் சந்துக்கு ஓடி வந்தான். அப்பா மூத்த மகனையே பார்த்துக் கொண்டிருப்பது கவனித்தான்.

''நான்தான் கூப்பிட்டேன் நைனா.''

''நல்லா இருக்கானா?''

''பேசுங்க நைனா.''

''என்ன பேசறது. அவன் புள்ளையா?''

''ஆமா... எடுத்தாரட்டா. ஏங்க. அப்பாரு கூப்பிடறாரு.''

வரதராஜு மெல்ல முன்னேறினான். சுப்புலட்சுமி அவன் முதுகோடு ஒட்டி வந்தாள்.

''தாத்தாவுக்கு வணக்கம் சொல்லு.''

- பிள்ளை கைகூப்பிற்று.

ஸ்ரீராமுலுக்கு உள்ளே ஆடிற்று. குழந்தை உடம்பில் பொட்டுத் தங்கம் கூட இல்லாமல் வைத்திருக்கிறானே என்று குமுறல் வந்தது. மலையாளத்துப் பெண் சாயலாய் நிறம், மூக்கு. ஆனால், அந்தக் கண்கள்... பழுப்பு நிறக் கண்கள்... பங்காரு வம்சத்துக் கண்கள் இந்தப் புள்ளைக்கும் இருக்கின்றன.

பிள்ளை உச்சியில் கை வைத்து வாழ்த்தினார்.

''டேய்.''

''அப்பா.''

''உட்கார்ந்து பில் போடு.''

''எதுக்குப்பா...''

''அந்த மூணு சவரன் சங்கிலி எடு.''

அவன் எடுத்துத் தர, நாலு பிடி சங்கிலியை உற்றுப் பார்த்தார். ஸீல் கவனித்தார். குழந்தை கழுத்தில் போட்டார்.

''எதுக்குப்பா இது?'' வரதராஜு கேட்டான். ஸ்ரீராமுலு பதில் சொல்லவில்லை. பில்லுக்குசெக் எழுதி ஞானாம்பாள் மகனிடம் நீட்டினார். ''எல்லாம் சரி... நடிகரை ஏன் கூப்பிட்ட... எவனாவது கடைல கை வச்சிருந்தா நல்ல இருக்குமா... இனிமே இப்படி முட்டாள்தனம் பண்ணாதே! நான் வரேன் வரதராஜு, வா, கடைக்குப் போகலாம்.''

''எந்தக் கடைக்கு...?''

''நம்ம கடைக்குடா.''

''வேணாம்பா.''

''ஏன்?''

''என் வழி வேற...''

''கடை நடத்தவா கூப்பிட்டேன். உட்கார்ந்துட்டுப் போ...''

''உட்கார்ந்தா மனசு சங்கடப்படும். வேணாம்.''

''மனசு சங்கடப்படற மாதிரி செய்துட்டம்னு இப்பமாவது புரியுதா?''

''என் சங்கடம் ஐயோ விட்டுட்டமேன்னு இல்லை.''

''பின்னே...?''

''உனக்கு சரியா ஆள் இல்லையேன்னுதான் ராஜேந்திரபாபு பத்தி நிறைய தப்பு சொல்றாங்க.''

''நான் வுட்டுட்டேன், எப்படியோ நாசமாப் போட்டம். நீ வா.''

''எங்கப்பா?''

''மறுபடி வந்து கடை கவனிச்சுக்க.''

''வேணாம்பா.''

''ஏன்?''

''என் இடம் நல்லா இருக்குது. நல்ல வருமானம் வருது. மதிப்பு இருக்குது.''

''மாசம் ஒரு லட்சம் சம்பாதிப்பியா?''

''இல்லை, இருபதாயிரம் வரும்.''

''பிசாத்து காசு. கடைல உட்கார். இரண்டு, மூணு லகரம் பார்க்கலாம்.''

''பார்த்து என்ன...? எனக்கு இது போதும்.''

''ஏன் உன் பொண்டாட்டி படியேறா தேன்னுட்டாளா...?''

''நான் ஒண்ணும் சொல்லலை.''- சுமி முணு முணுத்தாள்.

''பின்ன ஏன் வரமாட்டேன்றீங்க?''

''என் வேலைல உள்ள சந்தோஷம் கடைல இல்லை.''

''எனக்கு வயசாச்சுப்பா, வந்துக் கடை எடுத்துக்க.''

''முடியாதுப்பா.''

''கடைய என்னடா செய்யறது?''

''மூடிடுப்பா... இல்லை, அந்தப் பையனுக்குக் கொடுத்திடு. ஞானாம்பா பையன் நல்லாத்தானே இருக்கான். கல்லு பார்த்துச் சொல்றானாமே.''

''நான் உன்னியதான் கூப்புட்டேன்.''

''இல்லப்பா... நான் வரதா இல்லை.''

''நிச்சயமாவா?''

''உறுதியா... நான் நகைக்கடை ஆள் இல்லை. எனக்கு கம்ப்யூட்டர்தான் வசதி. உனக்கு ஞானாம்பாள் புள்ளை வேணாம்னு பட்டுதுன்னா, ராஜேந்திரனை சரிபண்ணு. தலைல போட்டு கடைல உட்கார வை.''

''நான் என்ன செய்யணும்னு எனக்குச் சொல்லித் தரயா...?''

''என்னை வரச் சொல்லி கட்டாயப்படுத்தறதால சொல்றேன்.''

''அவனால நான் செய்யற வியாபாரம் செய்ய முடியாதுடா. அழிச்சுருவான்.''

''என்னால முடியாதுப்பா.''

''முடிவு பண்ணிட்டியா?''

''ஏழு வருஷம் முன்னால பண்ண முடிவு இது.''

''இன்னும் மாறலையா?''

''கடைசி வரை மாறமாட்டேன்.''

''நான் வெறுத்துப் போயிட்டேனா வரதராஜ¨?''

''இல்லப்பா... கடை வெறுத்துப் போச்சு. இந்த நகை வியாபாரம் பிடிக்கலை எனக்கு. மாங்கா மாலை, அவல் செயின்னு பத்துத் தலைமுறையா ஒரே மாதிரி வியாபாரம் எனக்கு சரிப்படாது. எனக்கு புதுசா புதுசா கண்டு பிடிக்கணும், சேலஞ்ச் வேணும். இது போர்.''

ஸ்ரீராமுலு கண் மூடினார்.

''சரி, போய் வா! நான் செத்தா வருவ இல்லை?''

''அப்பா-!''

''மனுஷா பிறக்கறதும் சாவறதும் ஒரே மாதிரி தான். ஆயிரம் தலைமுறையா ஒரே மாதிரிதான். வராத இருந்து [illegible]''

குழந்தை தலையில் மறுபடி கை வைத்துவிட்டு நகர்ந்தார். விரைவாய் தெரு முனைக்குப் போய் கார் ஏறிக் கொண்டார். காரில் இருந்தபடி அந்தக் குழந்தையையே பார்த்தார்.

''எங்க போணுங்க?''

''ஞானாம்பா வீட்டுக்கு.''

''அவங்க இங்க இருக்காங்களே.''

''எவனையாவது விட்டு உடனே அவளை வீட்டுக்கு வரச் சொல்லு.''

-ஒரு ஆள் ஞானாம்பாள் தேடி ஓட, கார் சிந்தாதிரிப் பேட்டை நோக்கிப் போயிற்று.



தன் இளமைக்கும், அழகுக்கும் கொடுக்கப்பட்ட விலைதான் இந்த வீடும், வாசலும் என்பது ஞானாம்பாளுக்கு நன்கு தெரிந்து இருந்தது. எந்த வருமானமும் இல்லாமல் நகைகளை விற்று விற்று தின்று வீடும் அடமானம் வைத்து இனி விற்பதற்கு எதுவும் இல்லை என்கிற நிலைக்கு வந்தபோது பேசப்பட்ட பேரம்தான் ஆசைநாயகிப் பட்டம்.

கூவம் ஆற்றுக்கரையில் நின்று போகிறவனைக் கூவி கூப்பிட்டு சீரழியாத நிலை கிடைத்ததே அது பெரும் அதிர்ஷ்டம். அம்மா சாகும்போது கூட சொன்னாள். ''நகைக் கடைக்காரரை விட்டறாதடி... எத்தினி கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கிட்டு அவரைப் இறுக்கிப் பிடிச்சுக்கோ. புள்ளை தலையெடுக்கிற வரைக்கும் பொறுத்துப் போ.''

நிறைய பொறுத்துப் போக வேண்டியிருந்தது. அவளுடைய சின்னச் சின்ன ஆசைகளைக்கூட அழித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

ஞானாம்பாளுக்குப் பாட வேண்டும். தெலுங்கில் கீர்த்தனையோ, சினிமா பாட்டோ ஏதோ பாடிக் கொண்டிருக்க வேண்டும். ஸ்ரீராமுலுவுக்கு பாட்டுச் சத்தம் கூடாது. நூறு விதமாய் தையலும், பூவேலைகளும் ஞானாம்பாளுக்குத் தெரியும். ஸ்ரீராமுலுக்கு எல்லாம் வெளேர் என்று இருக்க வேண்டும். சலவைக் குறிகூட துணியில் இருக்கக் கூடாது.

ஞானாம்டாளுக்கு நிறைய சிரித்துச் சிரித்துப் பேச வேண்டும். விடுகதைகள், சிரிப்புகள் வினோத கணக்குகள் பேச வேண்டும். ஸ்ரீராமுலுக்குப் பொம்பளை அதிகம் பேசக் கூடாது.

மூன்று வருடங்கள் மூச்சுத் திணறிற்று. செத்துப் போய் விடலாம் என்று பலமுறை தோன்றியது. 'ஓடிவிடலாமா எவனோடாவது' என்றும் எண்ணியதுண்டு. ஆனால், இந்தக் காசு எங்கே போனாலும் கிடைக்காது.

எழுபதாயிரம் ரூபாய் கொடுத்து வீட்டை மீட்டு அவள் அம்மா பெயருக்கு எழுதி அவள் இறக்க, ஞானாம்பாள் பெயருக்கு பழைய வீட்டை முகப்புத் தவிர மற்றத்தனையும் மாற்றி கல்லு, கல்லாய் மரச்சாமான்கள் கொண்டு வந்து போட்டு புடவைகள் அடுக்கி, தங்கத்தில் இழைத்து வைரத்தில் கோத்து வாழ வைத்தார்.

''உனக்கு வேண்டியது துட்டு, நகை. எனக்கு வேண்டியது நீ. நடுவுல என்ன அன்பு பாசம்... வெங்காயம். அதெல்லாம் நம்மால முடியாது.'' இரண்டே வாக்கியத்தில் தெளிவுபடுத்தி விட்டார்.

இருந்தால்தானே தருவதற்கு?

தனக்கு ருசித்தால்தானே பிறருக்குத் தர முடியும். அன்பு அவருக்கு ருசித்த விஷயமில்லை. பிறர் ருசிப்பதையும் விரும்புவதில்லை. அதுவும் 'பொம்பளைங்கக்கிட்ட அன்பு வச்சோம்... கவுத்துருவாளுங்க' என்றுதான் பேசுவார்.

''உனக்கு என்ன புள்ளை வேணுமா? கலைச்சுடு'' கட்டளையிட்டார்.

''கடைசிக் காலத்துல எனக்கு யாராச்சும் துணை வேணாமா?''

''பொண்ணு பொறந்துச்சுன்னா என்ன செய்வ?''

''எனக்குப் புள்ளைதான் பொறக்கும்.''

''சரி, அப்படி பொண்ணா இருந்தா தூக்கி கூவத்துல போட்டுருவேன், சரியா? அது உனக்கும் தொந்தரவு. எனக்கும் தொந்தரவு.''

சூல் கொண்ட நாளிலிருந்து பிள்ளைப் பேறு வரை நெஞ்சுள் கலவரம் பொங்கிப் பொங்கி வந்தது. பிள்ளை என்று சொன்னதும் ஓவென்று அழுதாள். 'என்னை நரகத்திலிருந்து மீட்க நாராயணா நீயே வந்தாயோ' என்று கதறினாள்.

ஆறு மாதம் ஸ்ரீராமுலு வரவில்லை. காசு மட்டும் வந்தது அவள் மறுபடியும் கூடலுக்குத் தயார் என்று கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகே வீடு வந்தார். பையனுக்குப் பெயரிட்டார்.

ஞானாம்பாள் வாழ்க்கையின் ஒரே பிடிப்பாய், ஒரே சந்தோஷமாய் அந்த பிள்ளை வளர்ந்தான். அம்மாவின் இரும்புப் பிடியில் அசுர அன்பில் நிமிர்ந்தான்.

''தம்பி, சாமி கும்புடறா.''

''எதுக்கும்மா?''

''அவருதான் உனக்கு அதிர்ஷ்டத்தைத் தரணும். நல்லா கும்புடு.'' கும்பிட்டான்.

''தம்பி, அப்பாவுக்குக் கால் புடிச்சு விடு போ...''

''போம்மா...!''

''இந்த மாசம் துட்டு வரணுமே. புடுச்சு விடு போ...''

''முறைக்காதே. முஷ்டி மடக்காதே. பல் கடித்துப் பேசாதே. கோவமூட்டினாலும் கூச்சல் போடாதே.''

''ஏம்மா?''

''நமக்கு நம்ம காரியம் முக்கியம். நாம அடிபடாத நமக்கு நல்லது செய்துக்கணுமே தவிர சண்டை போட்டு வீணாயிறக்கூடாது.''

''ஏம்மா நாம அப்படி நடந்துக்கணும்?''

''நாம ஏழைங்கடா. எல்லா விதத்திலும் நாம ஏழைங்க, ரங்கசாமி. காசு பணமில்லை. மனுஷா இல்லை பெரிய மதிப்பும் இல்லை. எதிர்த்துர முடியுமா யாரையும்? எதிர்த்தா உன்னையும், என்னையும் அசிங்கமா பேசுவாங்க. அடக்கமா இருந்து, மொள்ள, மொள்ள நாலு பேர் கண்ணுல உறுத்தாத பெரிய ஆளாயிடணும். உறுத்தற மாதிரி வளர்ந்துடக் கூடாது, வைப்பாட்டிக்கு வந்த வாழ்வைப் பார்த்தியான்னுவாங்க.''

''நீ ஏம்மா இந்த மாதிரி விஷயத்துகுகு சரின்னு சொன்னே?''

''இல்லேன்னா சாக்கடைல தள்ளியிருப்பாங்க ரங்கசாமி. சாக்கடைல விழறதுக்குக் குப்பைத் தொட்டி பரவாயில்லைதான்?''

பிள்ளைக்கு பத்து வயதில் புரிந்து போய் விட்டது. புரிய வைத்தது ஞானம்பாள். வெட்கப்பட்டு தன் நிலையை மூடி மறைப்பதைவிட விவரமாய் பிள்ளைக்குச் சொல்ல, அது

வேகமாய் வளரும் என்று கணக்குப் போட்டாள். காயப்படாது நிமிரும் என்று நினைத்தாள். அவள் கணக்கு தவறாகவில்லை.

கடை திறந்தபோது அவள் முன்வரிசையில் நிற்க வில்லை. கடைக்குள்ளே ஏறவில்லை. எதிர்ப்புறம் கூட்டத் தோடு கூட்டமாய் தோளில் போர்த்திய தலைப்பு பிடித்துக் கொண்டு சகல மனிதர்களையும் உற்று பார்த்துக் கொண் டிருந்தாள். இதுதான் ஞானம்பாள் என்று எவருக்கும் தெரியாது. தெரியும்படி அவள் எங்கும் உலா வந்ததில்லை.

அந்த நடிகன் வந்து கடை திறந்ததில் பல பேர் அரண்டு போய் விட்டார்கள் என்பது புரிந்தது. எந்த அறிவிப்பும் இல்லாது 'பிரபலமானவர்கள்' என்று போட்டு அந்த நடிகர் வர, அடேயப்பா என்று பல நகைக்கடைக்காரர்கள் வியந்தது காண் முடிந்தது. பலர் கண்களில் பயமும், பொறாமையும் கூடர் விட்டன. ஆனால், தன் பிள்ளையை எல்லோரும் ஸ்ரீராமுலு பையன் என்று அழைத்தது நிம்மதி கொடுத்தது.

ஆனால், ஸ்ரீராமுலுக்குப் பிடிக்கவில்லை என்பது உடனே தெரிந்துவிட்டது. அங்கேயே கூச்சல் வருமோ என்று மனசு சங்கடப்பட்டது. ஆனால் கூப்பிட்டனுப்பி, நான் முன்னால் போயிருக்கிறார் என்றதும் பயம் வந்தது. ஆட்டோ பிடித்து மகனிடம்கூட விஷயம் சொல்லாது வீட்டுக்கு விரைந்தாள்.

கோட்டு அவிழ்த்து விட்டு பஞ்சகச்சம் அவிழ்த்து தட்டுச்சுற்று வேட்டியாகி கூடத்தில் உட்கார்ந்திருந்தார்.

ஞானாம்பாள் நேரே சமையலறைக்குப் போனாள். எதுனா குடுத்தியா என்று வேலைக்காரப் பெண்ணை கேட்டாள். இல்லை என்றதும் காபி கலந்தாள். கூடத்துக்கு எடுத்து வந்தாள்.

எடுத்தவுடன் ஸ்ரீராமுலு சீறினார்.

''என்னடி கூட்டம் இது; அசிங்கம் புடிச்சாப்புல... யாரைக் கேட்டு நடிகனைக் கொண்டாந்தான் கடை திறக்க?''

''கடைசி நேரத்துல வரதா முடிவாச்சாம்... உங்களை நல்லாத் தெரியும்னாங்களாம். அவரு புள்ளைதான்னு சொன்னானாம். உடனே வர ஒத்துக்கிட்டாராம்.''

''எழுதி ஒட்டிக்கச் சொல்லுடி, அவனை எம் புள்ளைதான்னு. கொழுப்பெடுத்து ஆடறீங்களா அம்மாவும், புள்ளையும்? தப்பு என்னுது. கிட்ட வா நாயேன்னா மூஞ்சிய நக்கிடறீங்களே... நகைக் கடை தொறக்கற முறையா இது?''

''அவரா வரேன்றபோது எப்படி வேணாங்க முடியும்?''

''யார்கிட்ட கதைவுடற, அவரா வரேன்னாருன்னு?''

''நிசந்தாங்க, அவரு வீட்டு நகை மொத்தமும் பாலீஷ் போட்டு விரல் உசரம் ராகவேந்திரர் ஐம்பொன் சிலைக்கு பீடம் வச்சு, புது வீடு கட்டினதுக்கு நவரத்தினம் படில வச்சு எல்லாம் செய்துட்டு வந்தான். துட்டு வாங்கலை. அந்த பிரியத்துல...''

''என்கிட்ட ஒரு வார்த்தை சொல்ல வேணாமா?''

''தப்புதான். அப்பாவுக்கு வீட்டுக்கு போன் பண்ணட்டா... போன் பண்ணட்டான்னு நூறு தடவை கேட்டான். வேணாம், இல்லாத வழக்கம், செய்யாதேன்னுட்டேன். ஞாயித்துக் கிழமை கடை லீவா?''

''சாக்கு சொல்லுடி.''

''இல்லீங்க. சத்தியமா இதான் நடந்தது...''

''எதிர்க்கடை பக்கத்துக்கடை எல்லாம் எரிவானுங்க. எரிச்சலோடயா வியாபாரம் துவங்கறது? எல்லாம் கிடக்க வரதாஜ ்வை ஏன் கூப்பிட்டீங்க?''

''தலைவர் வீட்டுக்கு ஆலிவர் ரோட் போனானாம் பத்திரிகை வைக்க.''

''யாரு அவரா... அவரை எப்படித் தெரியும்?''

''அங்கியும் போய் வேலை செய்துட்டு வந்தானே... கார் போட்டு கூட்டிட்டுப் போனாங்களே. அப்ப வாசல்ல நின்னுக்கிட்டு இருந்தானாம். வரதராஜு பார்த்து வீட்டுக்கு வான்னுச்சாம். வாய் வார்த்தையா கூப்பிட்டது. வந்துட்டாங்க. பேரப்புள்ளை ரொம்ப நல்லா இருக்கு. மடி விட்டு இறங்கவேயில்லை உங்க அச்சே அது. கண்ணு, மோவாய், காது கூட உங்க மாதிரியே வளைஞ்ச காது.''

''பார்த்தியா?''

''நீங்க வர வரைக்கும் என் மடியிலதான் புள்ளை உட்கார்ந்திருந்துச்சு. தாய்ப்பாலு சீக்கிரம் மறக்கடிச்சுட்டாப் பல... வாயில விரல் போட்டுக்குது. கைய எடுத்துவிட்டா என் தாலில இருக்கிற குண்டு எடுத்து வாயில வச்சுக்குது.''

ஸ்ரீராமுலு கண்கள் மூடினார். ஞானம்பாள் புரிந்து கொண்டாள். கோபம் நடிகர் வந்ததால் அல்ல. வரதராஜு வந்தது. அது கோபம்கூட இல்லை. துக்கம். அப்பாவும், பிள்ளையும் பேசினது தெரிந்தது. விவரம் தெரியவில்லை. ஏதோ பேச்சு நடந்திருக்கிறது வேதனைப்படும்படி. என்ன வென்று இவர் வாயாலேயே சொல்ல வைக்க வேண்டும்.

''மத்தபடி பேரப்புள்ளை நல்லா திடமா இருக்கா... கை காலு பார்த்தியா?''

''துள்ளுது. இறக்கி விட்டா கடைக் கடையா ஓடுது.''

''செயினு போட்டேன்.''

''பார்த்தேனே. அது போதுமா, நெஞ்சுல வச்சு முத்தம் குடுத்தா குறைஞ்சுடுமா?''

''ஐயோ! செய்யணும் ஞானாம்பா. இறக்குடா எம் புள்ளையன்னு நடு ரோட்ல சொல்லிவிட்டான்னா...''

''அதெப்படி சொல்லுவாங்க. அப்பன் வேணாம். ஆயா வேணாம்னு அத்துக்கிட்டு அவங்க போயிடலாம். புள்ளை உங்க பேரப்புள்ளை இல்லேன்னு ஆயிடுமா? உங்களுக்கு உரிமை இல்லேன்னு ஆயிடுமா? பெரியவங்க அத்துக்கிட லாம். குழந்தை தாவுதே. ரத்த பாசம் வுடுமா. நீங்க தோள்ல தூக்கி வீட்டுக்கு கூட்டிட்டு போயிருக்கணும்.''

''மாட்டேன்னுட்டான்.''

''எதுக்கு?''

''கடைக்கு வாடான்னு கூப்பிட்டேன். எனக்கு கடை புடிக்கலை. கம்ப்யூட்டர் போறும்னுட்டான்.''

''உங்களுக்குப் பேசத் தெரியலை. நான் சொன்னா எடுத்தெறிஞ்சி திட்டுவீங்க. இத்தினி நாள் கழிச்சு புள்ளை பாக்கறீங்க. நல்லா இருக்கியா, என் உதவி ஏதாவது வேணுமா? உன் பொண்டாட்டி கழுத்துல ஏன் நகை இல்லை? வா... ஆறு சவரன்ல சங்கிலி எடுத்துக்கிட்டுப் போன்னு கூப்பிடணும். மருமகளை உள்ளே கூப்பிட்டு வெள்ளியில சாமி படம் தந்திருக்கணும். பேரனுக்கு மூணு சவரன் சங்கிலி போட்டீங்களே அசிங்கமா இருந்தது எனக்கே.''

''ஏன், ஏன்?''

''உங்க யோக்கியதைக்கு மூணுசவரன் போடலாமா? எடைக்கு எடை தர வேணாமா?''

''என்னவோ பையனப் பார்த்த பதட்டத்துல கைல கிடைச்சது போட்டேன்.''

''வெளியில பார்க்கிறவன் என்னா சொல்வான்... செட்டியார் மகாகஞ்சம்னு பேச மாட்டான்?''

''முட்டாத்தனம்தான்.''

''அதவிட பெரிய முட்டாத்தனம்...''

''ஏய்... என்னா?''

''மருமகள் கிட்ட ஒருவார்த்தை பேசலை நீங்க.''

''அடிபோடி... அந்த மலையாளத்துப் பொம்பளைய பார்த்தாலே பத்திக்கிட்டு வருது.''

''குட்டி உறவு, தாய் பகையா? அண்ட விடுவாளா அந்தப் பொம்பளை உங்களை. பேரப் புள்ளைய கொஞ்சணும்னா பெத்தவக்கிட்டதான் போகணும். மருமக அசர்ற மாதிரி சொர்ணாபிஷேகம் பண்ண வேணாமா? நீங்க போட்ட மூணு சவரனை தூக்கிக் கடாசிடப்போறான்னு நினைச்சேன்.''

''வெட்டிடுவேன்.''

''கிழிச்சீங்க இதெல்லாம் ஞானம்பாக்கிட்ட நடக்கும். அவ புள்ளை கிட்ட பேசமுடியும். பேசிப் பாருங்களேன். அந்தப் பொம்பளைக் கிட்ட. சந்தி சிரிக்கப் பண்ணிடுவா. ராஜேந்திரபாபு நல்லவன்னு செய்திடுவா.''

''அந்தத் தறுதலை வேற என்னைப் பாடாய் படுத்துறான், ஞானம்பா... ஒரு நாளைக்கு பத்தாயிரம் ரூபா செலவு பண்றான்.''

''பண்ணட்டும். அப்பதான் உங்களுக்கும் உங்க பொண்டாட்டிக்கும் புத்தி வரும்.''

''நீ ஏண்டி வேற என்னை சாவடிக்கிற?''-ஸ்ரீராமுலு முகம் பொத்திக் கொண்டார்.

ஞானாம்பாள் மெல்லச் சிரித்தாள். உள்ளே பயம் நீங்கியது. என்னவோ எதுவோ என்று ஓடிவந்த அச்சம் மறைந்தது. மிகச்சரியாய் எடைபோட்டுத் தாக்கியிருக்கிறோம் என்று புரிந்து கொண்டாள்.

போர் முறையை மடமடவென்று மாற்றினாள்.

பெண்ணுக்கு அச்சமும் கலவரமும் ஆண் கொடுப்பானாயின் அதே அச்சமும் கலவரமும் அவள் வேறு வழியில் அவனுக்குத் தந்துவிட முடியும். குடும்பத்தை பூமியாக ஆண் செய்வானாயின் அங்கே தந்திரப் போர் நடத்த பெண்ணால் முடியும். கூர்மையான அம்புகள் விட்டு துன்புறுத்த முடியும். மயங்கிச்சரிய, கதையால் அடித்து சித்தம் கலங்க வைக்க முடியும். கைது செய்து காவலில் நிறுத்த இயலும்.

சொல்லம்பால் சித்ரவதை செய்த ஞானாம்பாள், பெரிய கதை எடுத்து அருகே போனாள். வலி தெளிந்து எழுந்திருக் கட்டும் என்று காத்திருந்தாள். வலி குறைக்கும் வழிகளை நாடினாள். வேலைக்காரப் பெண்ணை வாசலுக்கு அனுப்பி தாழிட்டாள்.

'உள்ள வாங்க' என்று படுக்கை அறைக்கு இழுத்துப் போனாள். மடியில் புருஷனை சாய்த்து நெஞ்சு நீவினாள்.

ஞானாம்பாளை பல கோணங்களில் பார்த்தவர்தான் ஸ்ரீராமுலு. எல்லாவித மன வக்கிரங்களையும் களியாட்டங் களை நடத்தி தீர்த்துக் கொண்டவர்தான். அந்த நினைவேதும் இன்றி நெஞ்சுக் கவலை கொடுத்த களைப்பால் சுருண்டு அவள் மடியில் கிடப்பது சுகமாய் இருந்தது.

பொம்பளை என்பது சுகத்துக்கான சமாசாரம் என்பதுதான் அவருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது அவர் கடைப்பிடித்ததும் அதையேதான். இன்று வித்தியாசமாய் யாராவது சொல்ல மாட்டோமா என்று ஏங்கியபோது ஞானம் இழுத்துப்போய்ப் படுக்க வைத்து உடம்பு தடவி விட்டது இதமாய் இருந்தது.

ஒரு மவுன இடைவெளிக்குப் பிறகு ஞானம்பாள் மெல்ல பேசத்துவங்கினாள்.

''என் புள்ளைய வளர்க்க என்ன பாடுபட்டிருக்கேன்னு உங்களுக்குத் தெரியுமா? இப்ப கூப்பிட்டு, டேய் கழுத்த அறுத்துக்கிட்டு சாவுடான்னு நான் சொன்னாபோதும்! எந்த கத்தியாலம்மான்னுதான் எம்புள்ளை என்னிய கேட்குமே தவிர ஏன் சாவணும்னு கேட்கவே மாட்டான்.

அடேய்! நான் உங்கப்பாருக்கு சட்டப்படி பொண்டாட்டி இல்லேடா, ஆனாலும் அவருதான் எனக்கு புருஷன். அவருதான் உங்கப்பா. உங்கப்பா மனசு நோகும்படி ஒரு வார்த்தை சொன்னே... பொலி போட்டுருவேன்னு சொல்லி வச்சிருக்கேன்.''

''அது பாவம்டி... நிமிர்ந்து பார்த்துப் பேசாத புள்ளை அது.''

''அப்படி வளர்த்திருக்கேன் நான். ஆனா பேசத் தெரியாத புள்ளை இல்லீங்க. நாலு பெரிய மனுஷங்க வீடு போய் நகை தொட்டு பாலீஷ் போடுறவன் பேசத் தெரியாத பேசினா உள்ள விடுவாங்களா? நூறு கஸ்டமருங்க இருக்காங்கம்மா... கடை போடட்டுமான்னு கேட்டான். அப்பாவ முதல்ல கேளுன்னுதான் அனுப்பினேன்.''

''நான் உடனே சரின்னுட்டேனே.''

''எங்க போனாலும் மரியாதையா பேசணும், பெரியவங்ககிட்ட பணிவா இருக்கணும்னு உரையேத் திருக்கேனே... உங்க ஐயா பேர் கெடுத்துடக்கூடாது நீன்னு மிரட்டி வச்சிருக்கேன். அப்படி அதட்டி வளர்க்கத் தெரியாத அம்மாவும், அம்மாவுக்குத் தெரியாத துட்டு கொடுக்கிற அப்பாவும் இருந்தா இப்படித்தான் முடியும் கதை.

பொம்பளைங்களோட பழகற வியாபாரம் இது. கழுத்து கால், இடுப்புல போடுற நகை சமாசாரம் இது. ஒரு பார்வை, ஒருவீச்சு... மாராண்ட போனாக்கூட 'ச்சீ இந்தக் கடை வேணாம்'னு எழுந்து போயிருவாங்க பொம்பளைங்க.

பழக்கார பொம்பளையோட நடு ரோட்ல அடிச்சு சண்டை போட்டா நகைக்கடைல உட்கார்ந்து வாங்கம்மா சொல்ல முடியுமா? பார்வையே தப்பா போகக் கூடாதுன்ற போது பழக்காரி உறவு நல்லா இருக்கமா? எப்படி வுட்டீங்க... உங்க தப்பு இது. இவ்வளவு தூரம்வுட்டுட்டு நடுரோட்டுல கன்னதுல அடிச்சா திருந்திடுவானா. ஒண்ணு அதட்டணும், இல்ல மிரட்டணும். புள்ளைங்க வளர்க்கற லட்சணமா இது. தாங்காத மூத்த பிள்ளை ஓடிப்போச்சு.

இப்பவும் சொல்றேன். வரதராஜ ரத்தினம். சொக்கத் தங்கம். புள்ளையக் கீழ இறக்கிவிட்டு இரண்டுகையும் தூக்கி கும்புட்டுச்சு அந்த மலையாளப் பொண்ணை குத்தம் சொல்லாதீங்க. படிச்ச கர்வம் துளிகூட இல்லை. ரங்கசாமி நல்லா வந்துடுவான். கவலைப்படாதீங்கன்னுச்சு. நான் யாரு என்ன உறவு அவளுக்கு. என்கிட்ட இத்தினி இதமா பேசணும்னு என்ன விதி...? தலையெழுத்து. வந்தோம் இரண்டு நல்ல வார்த்தை சொல்வோம்னு சொல்லிச்சு. அது மனுஷத்தனம்.''

''என்னாடி சொல்ற விவரங்கெட்டத்தனமா. எனக்குத் தெரிஞ்சு நான் நொந்துக்கற விஷயத்தையே.''

''என்கிட்ட என்னிக்கு மனசு விட்டுப் பேசியிருக்கீங்க. இன்னிக்குத்தான் பேச ஆரம்பிக்கிறீங்க?''

''சொல்லு. என்னா செய்யணும்னு சொல்லு?''

''எப்பாடு பட்டாவது மூத்த புள்ளைய கடைல கொண்டாந்து வச்சுடுங்க. இல்லேன்னா கஷ்டம் பின்னால.''

''நல்லா தெரிஞ்சுதான் சொல்றியா?''

''எனக்குத் தெரிஞ்சது சொல்றேன்.''

''வரமாட்டேன்னிட்டானே?''

''வழியில மடக்கி வரியான்னா எவன் வருவான். எல்லாத்துக்கும் ஒரு முறை இல்லை. ஒரு நாளைக்காவது புள்ளைக்கு பிஸ்கட் வாங்கிட்டுப் போயிருக்கமா... அவன் பொண்டாட்டிக்கு புடவை துணி குடுத்தமா? இல்லியே, உங்களுக்கு உங்க கவுரவம். அவனுக்கு அவன் கவுரவம்.''

''என்ன செய்யணும்னு சொல்லித் தொலையேண்டி.''

''உங்களுக்கு என்ன வேணும். அதைத் தெளிவா சொல்லுங்க முதல்ல.''

''சுரேந்திரபாபு சரியில்லை. என்னால கடைல உட்கார்ந்து கண்காணிக்க முடியலை. கண்காணிக்கலைன்னு தெரிஞ்சா யாரு வேணா கை வச்சிடுவாங்க. நாப்பது வருஷம் கூட இருக்கிறவன்கூட திருடுவான். தங்கம் அப்படிப்பட்ட விஷயம். அது தவிர...''

''ம்ம்... அது தவிர.''

''ஆயிரம் போட்டி. நீ யாரு என்னை அதட்டன்னு எதிர் குரல் வருது. எனக்கு பயந்து வேற தெருவா போன பசங்க என் தெருவுலியே கடை போட்டு உட்கார்ந்திருக்கானுங்க. அத விடு. அதை இழுத்தா ஆயிரம் கதை சொல்ல வேண்டியிருக்கும்.''

''அதாவது பயப்படறீங்க.''

''இப்ப பயமில்லை. பின்னால பயந்து வாழவேண்டி வந்துடுமோன்னு ஒரு அச்சம் என்னை மாதிரி, என் நிதானமா செய்ய சுரேந்திர பாபுவால ஆவாது. வரதராஜுவால முடியும். இரண்டு வருஷத்துல ட்ரெயின் பண்ணிடுவேன்.''

''ரங்கசாமிய தயார் பண்ண முடியாதா?'' அவள் அடக்க முடியாது கேட்டாள். பெண்புத்தி சறுக்கி விட்டு விட்டது.

''அல்பம். ஆசைக்கு ஒரு அளவு இருக்கணும். பங்காரு ஸ்ரீராமுலு செட்டி அண்ட் சன்ஸ் பாதி உரிமை என் பொண்டாட்டியிது, அது கிட்டக்கூட ரங்கசாமி வர முடியாது.''

கூண நேரம் ஞானாம்பாள் கண்ணில் வன்மம் மின்னிற்று. புத்தியின் முழு வலிவும் சேர்த்து யோசித்தாள்.

அவள் புள்ளை வாழ்க்கை அவள் மணக்கண் எதிரே பிரகாசமாய் தெரிந்தது.

புத்திசாலி மனைவியை ஸ்நேகமாக்கிக் கொண்டவனுக்கு நூறு யானை பலம். எதிரியாக்கிக் கொண்டவனுக்கு ஊர் முழுவதும் பகை. அவளை எதிரியாகவும் விலக்காமல், ஸ்நேகிதியாகவும் மதிக்காமல், சும்மா கிடடி என்கூட, என்று அலட்சியப்படுத்தியவனுக்கு அவனே நோய். மெல்ல மெல்ல கொல்லும் நோய்.

ஸ்ரீராமுலு செட்டியார் பலவீனமான நேரத்தில் நோய் அவருள் புகுந்தது.

8

''**வீ**ட்ல நூறு ரூபா காசு இல்லை. ஒரு பொட்டு தங்கமில்லை. கடை திறக்கறேன், கடை திறக்கறேன்னு எல்லாத்தையும் வாங்கி அப்படி இப்படின்னு விசிறி எறிஞ்சுட்டான். இப்பம் வெளிய வாசல்ல போறதுக்குக் கூட காசு இல்லை. சொன்னா வெட்கக் கேடு''-ஞானம் தனக்குத் தானே பேசிக்கொண்டாள்.

காசு காசு என்று பேசும் ஞானம்பாளிடமா இந்த வேலையை, பிள்ளையைத் தன்னிடம் சேர்க்கும் பொறுப்பை ஒப்படைப்பது என்கிற சந்தேகம் ஸ்ரீராமுலு மனசுக்குள் வந்தது. ஆனால், வேறு யாரிடம் ஒப்படைப்பது என்று தெரியவில்லை.

ஞானத்தைவிட ரங்கசாமியின் விநயத்தின் மீது நம்பிக்கை இருந்தது. அவனையும் இவள் உடன் அழைத்துப் போனால் இன்னும் தெளிவாக இவர் பிள்ளை யோசிக்க உதவக்கூடும். ஒரு வேளை இந்த உதவி செய்துவிட்டு ரங்கசாமி தன்னிடம் அதிக உதவிகளை எதிர்பார்க்கலாம்.

பத்து இருபது சவரன் நகைகளை நாலைந்து மாதம் கணக்கே செட்டில் செய்யாது, கடையில் வைத்துக் கொண்டிருக்கலாம். பழைய நகைகள் விலைக்கு வருகிறது. இருபதாயிரம் கைமாற்று கொடு என்று கேட்கலாம். கொஞ்சம் செய்ய வேண்டிவரும்.

பிள்ளை மனம் மாறி வந்து கடை நிர்வாகம் கையில் எடுத்துக் கொண்டால், எனக்குத் தெரியாது, என் பிள்ளையைக் கேள் என்று தள்ளி விட்டு விடலாம். பிள்ளையிடம் அதிகம் இவர்களோடு வைத்துக் கொள்ளாதே என்று எச்சரித்து விடலாம்.

என்னவோ வரதராஜு விலகிப் போனாலும் அவனிடம் மனசு ஒட்டுவது போல், சுரேந்திரபாபு தெருப்பொறுக்கியாய் இருந்தாலும் அவனிடம் ஒரு வாஞ்சை எழுவது போல் ரங்கசாமியிடம் நெஞ்சு ஒட்டவில்லை. ரங்கசாமி நல்ல பிள்ளை, பணிவான பையன், நல்ல வேலைக்காரன், ஆனாலும் உயர்த்தி வைத்துக் கொள்ள முடியவில்லை. ஞானம் அவனுக்கு என்ன விஷம் ஊட்டி என்னவித ஆங்காரத்தோடு வளர்த்திருப்பாள் என்று புரியவில்லை.

என்னிக்காவது ஒரு நாள் கொத்துவான் என்றுதான் பயம் வருகிறது.

தன் மனைவியோடு ஒப்பிடும்போது ஞானம் அழகி, ருசி, அருசி அறிந்த பெண். சாமர்த்தியம் அதிகம். எல்லாவித தேவைக்கும் உபயோகப் பட்டவள். இருப்பினும் அவளைப் பார்க்க பார்க்க காமம் வருகிறதே தவிர காதல் வரவில்லை.

இந்த வயசுக்கும் திமுசு கட்டையாய் இருக்கிறாள். பாதி தொப்புள் தெரியும்படி புடவை உடுத்தி இடுப்பு அகலம் காட்டி, நெஞ்சு எடுப்பாய் துணி மடிப்பில் உட்கார வைத்து கை இறுக்கமாய் சோளி அணிந்து மை கீறின புருவமும் வெள்ளைப் பல்லும் பேசரியுமாய் இருக்கிறவளைப் பார்க்கும் போது கிளறுகிறது. ரோட்ல போறபோது எவனா உத்துப் பார்க்காத இருப்பானா இவளை. பார்க்கத்தான் செய்வான் என்கிற பொறாமை எழுகிறது.

''என்ன அப்ப நானும் என் புள்ளையும் போட்டமா, உங்க புள்ளை வீட்டுக்கு?''

''என்னா?''

''இத்தினி நேரம் என்னா யோசனை?''

''என்ன வயசு உனக்கு?''

''அடி சக்கை. இதுதான் உத்து உத்துப் பார்த்துக்கிட்டு இருந்தீங்களா? கண் எங்கியோ மேயுதேன்னு பார்த்தேன். மேஞ்சு என்ன புண்ணியம், ஆசை இருக்கு தாசில் பண்ண...''

''ஏன் தாசில் பண்ண முடியாதுன்னு முடிவுக்கு வந்துட்டியா?''

''யப்பா... நான் சொல்வனா? என்னிய நிமிர ஒட்டாத நாசம் பண்ண ஆளாச்சே நீ. படுங்க கொஞ்சம். ஒன்னவர் தூங்கி எழுந்து காபி சாப்பிட்டு போலாம்.''

''அவரைச் சாய்த்து நெற்றியில் விரல்கள் பதித்து புருவங்களை, நெற்றிப் பொட்டை மசாஜ் செய்தாள். அந்த உரசலில் சுகமாய் தூக்கம் வந்தது, உடம்பு முழுவதும் கொத்து கொத்தாய் பிடித்துவிட, அந்த இதத்தில் உலகம் மறந்து போயிற்று.

எழுந்து வீட்டுக்குப் போகும்போதுகூட தூக்கம் கலையவில்லை. எல்லாம் சுலபமாய் முடிந்து விடும் என்கிற நம்பிக்கையே அதிகம் இருந்தது.

''என்னம்மா திடீர்னு காணாத போய்ட்டே?''

''உங்கப்பாரு இங்க வந்து உட்கார்ந்து கூப்பிட்டு அனுப்பிச்சாரு. என்னவோ ஏதோன்னு ஆட்டோ பிடிச்சு வந்துட்டேன்.''

''என்னவாம்?''

''வேற என்ன? நீ சிறக்கறது பிடிக்கலை. அதெப்படி நடிகரை கூப்பிடலாம். யார்கிட்டே கேட்டு உள்ள வரச் சொன்னே. எதுக்கு பேண்டு. எதுக்கு மேளம்னு ஆரம்பிச்சாரு.''

''ஐயோ!''

''வாயப் பொத்திக்கிட்டு சும்மா இருங்க, உங்க மூஞ்சிக்கு யாரும் வந்திடலை. என் புள்ளை வேலைக்கு பாராட்ட வந்திருக்காங்கன்னேன்.''

''புடிக்கலையா?''

''புடிக்காத என்னா, ஒரு பொறாமைதான்.''

''அப்பா என்கிட்ட நல்லாத்தானம்மா பேசறாரு.''

''நீ மட்டும் இருந்து உன்னைய சுத்தி ஆள் யாரும் இல்லாதிருந்தா அப்படியே அன்பு வழியும். நாலு ஆள் இருக்கச் சொல்லக் கொண்டாடத் தோணாது.''

''கண்டுக்க மாட்டாருன்றியா. இன்னிக்கு கடைல ஏறி கணக்கு எழுதி நடிகருக்கு பில்லு போட்டு... காசு வாங்கி எல்லாரும் பார்த்தார்களே.''

''இதான் முதல், இதுதான் கடைசியும்கூட.''

''கடைசியா? என்னம்மா சொல்றே. ரசம் கலக்காத ஊத்து.''

ஞானம் பிள்ளைக்கு தெளிவு ரசம் பரிமாறினாள். மனசைக் கலக்கினாள்.

''அவருக்கு பிள்ளை பாசம் அதிகமாயிருச்சு. பேரப் பிள்ளையைப் பார்த்ததும் நெஞ்சு இரண்டா உடைஞ்சுப் போச்சு. அவனை யார் கூட்டியாந்தது ரங்கசாமியான்னு கத்தினாரு. இல்லே நான்தான் போய் நேட்டீஸ் வச்சுட்டு வரச் சொன்னேன். ஒரு மரியாதைக்குன்னு சொன்னேன்.''

''ஏம்மா?''

''அந்த கோவத்தை உன் மேல உன் கடை மேல காட்டினார். அவர் கோவம் என்னோட போவட்டும். எத்தினியோ பட்டாச்சு. பத்தோட, பதினொண்ணு அத்தோட இது ஒண்ணு.''

ரங்கசாமிக்கு இனம் புரியாத துக்கத்தில் வயிறு கலங்கியது.

மேற்கொண்டு உண்ண முடியவில்லை. கையெட்டும் தூரத்திலிருந்து குடிநீர் சொம்பு எடுத்து சோற்றுக் கலத்தில் கை கழுவப் போனான்.

''இருடா என்னாச்சு உனக்கு?'' ஞானம்பாள் மகனைத் தடுத்தாள்.

''மனசு சரியில்லை.''

''ஏன் என்ன?''

''முன்னிய மாதிரி நாலு இடத்தில நக்கை பாலீஷ் பண்ணி, கம்பி முடுக்கி, விட்டது பத்த வச்சு அஞ்சோ பத்தோ சம்பாதிச்சுகிட்டு இருக்கலாம். நாலு மார்வாரி கடையில பழைய நகைக்கு புரோக்கர் வேலைக்கு போகலாம். கடை போடு, கடை போடுன்னு நச்சரிச்சே. இப்ப பாரு இத்தினி

கஷ்டம். முத நாளே வந்து நிக்குது, இவரு மனசார நமக்கு உதவமாட்டாரு. இவர நம்பி இத்தினி காசு போட்டு... முதல் போட்டு...'' உதறி எழுந்திருந்தான்.

''உட்கார்ரா, முதல்ல தட்டு முன்ன உட்காரு.'' ஞானம் அவனைப் பிடித்து உட்கார வைத்தாள்.

''இப்ப என்ன ஆயிடுச்சுன்னு சோத்து மேல துக்கப்பட்டு எழுந்து நிக்கறே? உட்காருடா தம்பி உட்கார்ந்து சாப்பிடு. உலகம் அப்படித்தான். நாம ஓடினா விரட்டறது அது சுபாவம். நாம ஓடக்கூடாது, ஒதுங்கணும். மறுபடி பாயற போது தலை மேல போடணும்.''

''எங்கம்மா? இத்தினி கஷ்டம் பட்டுட்டே. இனிமேலாச்சும் உன்னிய உட்கார வச்சு ஒரு கஷ்டமும் இல்லாத...''

பிள்ளைத் திக்கித் திணறிப் பேசும்போது நெஞ்சு குளிர்ந்தது ஞானாம்பாளுக்கு. தன்னை பாதுகாக்க பிள்ளை இருக்கிறான் என்கிற நம்பிக்கை புது பலம் கொடுத்தது.

''டேய் கண்ணு. நான் உனக்கு அம்மாடா, எத்தினி வேதனை நான் பட்டாலும் உன்னைய ஒரு உயர்ந்த இடத்துல வச்சுட்டுப் போவேனே கண்டி, ஞானம்பா கேனத்தனமா வாழ்க்கைப்பட்டு ஒரு புள்ளையப் பெத்தா, கேடுகெட்ட விதமா வளர்த்தான்னு ஊர் பேச விடமாட்டேன். முகத்தை துடை முதல்ல. யானைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கு ஒரு காலம் வராதயா போய்விடும்?

வரதராஜு வேணும் கடைக்குன்னு புலம்பறாரு. நான் போய் பேசறேன் ரங்கசாமியோடன்னு சமாதானப் படுத்தினேன். எதுக்கு, அப்பனும் பிள்ளையும் சேர்றதுக்கு இல்லை, அந்தப் புள்ளைய வளைச்சு உனக்கு ஒரு காபந்து செய்துடணும். அவனுக்கு நகை வேலை தெரியாது. அப்பன்

கத்துக்கொடுத்து இனிமே நிமிர முடியாது. அவனுக்கு ஆள் வேணும், நெளிவு சுளிவு சொல்லித் தர. அப்பங்காரனை நம்பறதைவிட புள்ளய நம்பலாம். நீ என்னைக் கூட்டிட்டுப் போ வரதராஜு வீட்டுக்கு, நான் பேசறேன்.''

''அவங்க ரொம்ப மாடர்ன் குடும்பம்மா.''

''என்னடா மாடர்ன். சோறு சமைச்சுத்தானே சாப்பிடறாங்க. எனக்கும் தெரியும்டா கண்ணு! சிந்தாதிரிப் பேட்டையிலேயே இருக்கிறவள்னு நினைக்கிறியா? நான் நாலு புஸ்தகம் படிச்சு மனுஷா மாறாத பார்க்கலியா. என்னை கூட்டிக்கிட்டுப் போ.''

இரண்டு நாள் கழித்துப் போனார்கள். ஏழு மணிக்கு கடை சார்த்திவிட்டு ஏழரை மணிக்கு வரதராஜு வீட்டு படியில் ரங்கசாமி ஏறினான்.

ஞானாம்பாள் பளிச்சென்று தலை வாரி குங்குமமிட்டு நெற்றியில் செந்தூரம் தீற்றி பட்டுப் புடவை போர்த்தி கையில் பிஸ்கட் டப்பாவுடன் வாசலில் நின்றாள்.

புருஷனும், மனைவியும் பேப்பரில் விளம்பரங்கள் தேடிக் குறித்துக் கொண்டு விவாதித்துக்கொண்டிருந்தார்கள். பிள்ளை ஹால் முழுவதும் பொம்மைகள் இறைத்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''வணக்கம் அண்ணே.''

''அடடே வாங்க வாங்க.'' வரதராஜு எழுந்திருந்தான். சுப்புலட்சுமி எழுந்திருக்காமல் திரும்பி புன்னகை செய்தாள். அன்று புடவையில் இருந்தாள். கையில்லாத ரவிக்கை புஜங்களின் செழுமையைக் காட்டியது.

''தொந்தரவுக்கு மன்னிக்கணும். அன்னிக்கு நீங்க கடைக்கு வந்ததுக்கு ரொம்ப சந்தோஷம். வருவீங்கன்னு

தெரியும். ஆனாலும் வந்து போனது ஆச்சரியமா இருந்தது. நன்றி சொல்லிவிட்டுப் போகலாம்னு...'' ஆப்பிள்கூடையை மேஜையில் வைத்தான்.

''என்னப்பா இது எதுக்கு இதெல்லாம்? கூப்பிட்டே வந்தோம். படு கிராண்ட் பண்ணிட்டியே கடை திறக்கறதை. அவரு நடிகர் நல்ல பழக்கமா?''

''நல்ல பழக்கங்க. அம்மா வந்திருக்காங்க.''

''யாரு?''

''அம்மா. எங்க மதர்! அண்ணனைப் பார்த்து நன்றி சொல்லணும்னு வாசல்ல இருக்காங்க.''

''எங்க வாசல்லியா. ஏன் அங்க நிக்க வச்சிட்டு சுமி, போய் கூப்பிடு.''

''வரதுக்கு கூச்சப்படறாங்க.''

''என்ன கூச்சம்? வாங்கம்மா.'' வெளியே வந்து கை கூப்பினான். சுப்புலட்சுமி வராண்டாவைக் கடந்து படியில் நின்ற ஞானம்பாள் கை தொட்டு உள்ளே அழைத்தாள்.

''ஏம்பா இதுக்கு நீ வந்தா போதாதா. பெரியவங்களை ஏன் சிரமப்படுத்தி. அம்மா உட்காருங்க.''

''இருக்கட்டும்.''

ஞானாம்பாள் சுவரோரம் நகர்ந்து நின்றுகொண்டாள்.

''அம்மாவுக்கு அண்ணிய, குழந்தைய ரொம்ப பிடிச்சுப் போச்சு. எவ்வளவோ படிச்சவங்க எத்தினி அடக்கமா வந்து நடத்திக் கொடுத்து... அழுதுட்டாங்க, நீங்க போனதும்.''

''நம்மளை மதிக்கிறவங்களை நாம மதிக்கணும். அதான் என் பாலிஸி!'' வரதராஜன் நின்றபடி பேசினான்.

''அதில்லீங்க தம்பி. எங்க நிலைமைக்கு நீங்க வந்தது பெரிய கவுரவம். நடிகரு வந்தது போனது யாரும் பேசலை.

செட்டியார் புள்ளை வந்துட்டாரு, செட்டியார் புள்ளை வந்துட்டாருன்னு உங்களப் பத்திதான் பேச்சு. என் புள்ளை கடைக்கு பொண்டாட்டி குழந்தையோட வந்துட்டு போனீங்க, முத முத வந்த குழந்தைக்கு நாம ஒண்ணுமே தரலியேன்னு நீங்க போன பிறகுதான் தோணிச்சு. ஒரு கல்கண்டுகூட குழந்தை கையிலே கொடுக்கலியேன்னு தவிச்சுட்டேன். கண்ணா என் ராச வாடி தாயி... ஆயாகிட்ட வா...!''

பெரிய பிஸ்கட் டின்னையும் கீ கொடுத்தால் ஓடுகிற கார் பொம்மையும் கொடுத்தாள். பிள்ளை கார் பொம்மையை ஆவலுடன் பார்த்தது.

''போ, போய் வாங்கிக்க.'' வரதராஜு பிள்ளையை முன்னே தள்ளினான்.

பிள்ளை முன்னேறி இரண்டும் பெற்றுக்கொண்டு 'நன்றி' என்று ஆங்கிலத்தில் சொல்லிற்று.

''என் கண்ணு என்னா பேசுதுடி இது இங்கிலீஷ்ல?' வழித்து நெட்டி முறித்தாள். தன் இடுப்பிலிருந்து சிறிய பர்ஸ் எடுத்து ஒற்றைச் சலங்கை மணியாரத்தை எடுத்து அவன் இடுப்பில் சுற்றி கொக்கியிட்டாள்.

''என்னங்க இது தங்க நகையா?''

''ஆமாம். சின்ன வயசுல ரங்கசாமி போட்டுக்கிட்டு இருந்தது. பாலீஷ் பண்ணி எடுத்தாந்தேன்.''

''இது தப்பு... எதுக்கு இத்தினி விலை மதிப்பா... நெறைய இருக்கும் போல இருக்கே?''

''இரண்டே முக்கால் சவரன்தான். என் பேரனை வெறுங்கையோட வந்து நான் பார்க்கறது நல்லா இருக்குமா?''

''அதுக்கு இத்தினி விலையிலா?''


''ஏதோ கடவுள் கொடுத்து நல்லா இருக்கோம் தம்பி. ஒரு கடை திறக்கிற அளவுக்கு, சவுகார்பேட்டையில் நிக்கற அளவுக்கு இருக்கோம். உங்கள மாதிரி படிச்சவங்க எங்களுக்கு மதிப்பு கொடுத்து வந்தது எத்தினி பெருமை... ஞானம்பா இரண்டாந்தாரம், உங்கப்பாக்குன்னு நினைக்காத என்னையும் மனுஷியா நினைச்சு எம்புள்ளைய ஒரு ஜென்மமா நினைச்சு...'' ஞானம்பா பேச முடியாது அழுதாள்.

''லட்சம் கொட்டிக் கொடுத்தாலும் இந்த அளவுக்கு ஈடாவாது. ரங்கசாமி பள்ளிக்கூடத்தில படிக்கச் சொல்லவே சுத்துபத்து ஜனம் கேலி செய்யும். உங்கப்பா ஏன் நைட்ல மட்டும் வராரு. ஏன் உன் கூட பள்ளிக்கூடத்துக்கு வரலை. ஏன் அம்மாவ மட்டும் ஃபீஸ்கட்ட கூட்டியாறேன்னு. வந்து அழுவான். அப்பாவ பள்ளிக்கூடம் வரச் சொல்லுன்னு சொல்ல முடியுமா நான்?''

''நீ வருவேன்னு நான் நினைக்கல தம்பி. எம் புள்ளைக்கு பெரும் மதிப்பும் கொடுத்துட்டே. எங்களை சவுகார் பேட்டையில தலைநிமிர்ந்து நடக்க பண்ணிட்டேயப்பா, நான் வயிறு குளிர்ந்து சொல்றேன். நீ ரொம்ப நல்லா யிருக்கணும், உன் பொண்டாட்டி, இந்த கிளி கொஞ்சுற அழகோட, தொங்க தொங்க தாலி கட்டிக்கிட்டு நல்லா இருக்கணும். எங்க தெய்வம் இந்த ராசா ஒகோன்னு வரணும்.'' கண்ணில் நீர் வழிய அவள் வாழ்த்த வரதராஜு கண் கலங்கினான்.

''பாட்டி கால்ல விழுந்து கும்புடு!'' பையனை அவள் காலடியில் போட்டு அதே வேகத்தில் அவள் பாதங்கள் தொட்டு தலையில் வைத்துக் கொண்டான்.

வாழ்த்து ஒரு வகை தூண்டில். வரதராஜு அதில் சுலபமாய்ச் சிக்கினான்.



அரை மணி நேரத்தில் ஞானாம்பாள் அந்த வீட்டின் இயல்பு புரிந்து கொண்டாள்.

அழுத்தி வைக்கப்பட்ட பெண்ணுக்கு விடுதலை வெளிச்சம் தெரிய ஆயிரம் யானை பலம் வரும். புத்தி நூறு விஷயங்களை கிரஹித்துக் கொள்ளும். இந்த பிள்ளை உள்ளே வந்து கொடியேற்றினால் தன் பிள்ளைக்கு தலைமைப் பதவி நிச்சயம் என்பது மனசில்பட, வஞ்சனையின்றி இதமான மொழிகள் இறைத்தாள்.

''நான் ஒண்ணு சொல்றேன் சுப்புலட்சுமி. வயசுல பெரியவள்னு கேட்டுக்கோ. வெளிய புள்ளைய கொண்டார போது ஒரு பொட்டு கறுப்பு கன்னத்துல வை. கிழவி ஏதோ உளறுதுன்னு நினைக்காதே. நாலு பேர்கண்ணு நாலுவிதமா படும்.

உன் ஜாடையா, உன் நிறமா புள்ளை இருக்கிறது. பெரிய விஷயம், அம்மா ஜாடை புள்ளைக்கு வரது பெரும் அதிர்ஷ்டம். உனக்கு அந்த இடத்து மனுஷாள் பத்தி தெரியாது. மனசார உன்னிய ஒத்துக்கமாட்டாங்க. மனவாடான்னு கேட்டுட்டுத்தான் பேச்சே துவங்கும். நான் நிறைய பட்டுருக்கேன்.''

''நீங்களும் தெலுங்குதானே?''

''என்னா தெலுங்கு போ. நான் பிறந்து வளர்ந்தது மெட்ராஸ்ல. படிச்சதெல்லாம் தமிழ். எங்கப்பா வக்கீல் குமாஸ்தா.''

''அப்படியா பேரு?''

''நடேசய்யர்ன்னுவாங்க.''

''பிராமினா... சொன்னார் இவர். ஆமா ஏன் இப்படி இவங்க அப்பாகிட்ட...''

''வறுமை, சுப்புலட்சுமி.

சொல்லத் தரமில்லாத வறுமை. பத்தாயிரம் ரூபா இல்லாத ஒரு கல்யாணம் நடக்குமா? பத்து ரூபா இல்லை, வேலைக்கு அனுப்ப அப்பல்லாம் பயம். இப்ப எல்லாரும் சொல்றாங்க. வரதட்சணை வாங்கக் கூடாதுன்னு. அப்ப யாரும் சொல்றதும் இல்லை, சொன்னா மரியாதையும் இல்லை.''

''எஸ். எஸ். எல். சி. யா?''

''பி.யூ.சி. சேர்ந்துட்டேன். காசு இல்லைன்னு நிறுத்திட்டா.''

''இவருடைய அப்பா நல்ல மாதிரியா?''

''எதிர்த்துப் பேசாத, சொல் பேச்சு கேட்டுண்டுருந்தா நல்ல மாதிரிதான். ஏன் இப்படின்னு கேட்டா போச்சு.''

''கஷ்டப்பட்டீங்களா?''

''அது தனிக்கதை. வாங்கின அடி உதைக்கு கணக்கே இல்லை. அது ஏன் இப்ப. எனக்கு மனுஷா வேணும் சுப்புலட்சுமி. யாரும் வீட்டுக்கு வரக்கூடாது, யார் வீட்டுக்கும் போகக் கூடாதுன்னு...''

''ஏன்?''

''ஸ்ரீராமுலு வைப்பாட்டி நாலு பேர் தெரிய நடந்து வரலாமா? இங்க பார்த்தேன் அங்க பார்த்தேன்னு யாராவது சொன்னா கோவம் வரும். ஏண்டி போனேன்னு உதை விழும். வேண்டாம்மா இந்தக் கஷ்டம். என் எதிரிக்குக்கூட வரக் கூடாது.'' ஞானம்பாள் கண்கள் துடைத்துக் கொண்டாள்.

சுப்புலட்சுமிக்கு உள்ளே நெகிழ்ந்து போயிற்று. பெண்கள் இந்த தேசத்தில் எத்தனை வகையான கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

''இன்னொண்ணும் சொல்றேன் சுப்புலட்சுமி, பொம்மனாட்டிக்கு புருஷனைவிட புள்ளைகள்தான் ஆதாரம். எம்புள்ளை என்னைக் காப்பாத்துவான்கிற நம்பிக்கைலதான் இத்தனை நாள் உசிரோட இருந்தேன். அது வீண் போகலை. இவன் என் மேல ரொம்ப மரியாதை பாசம்.

ரொம்ப அடக்கம். பணிவு.

தப்பு தண்டாவுக்கு போக மாட்டான் சுப்புலட்சுமி. ஆயிரம் சவரனுக்கு நம்பலாம். நம்பியிருக்காங்க. நான் அப்படி வளர்த்திருக்கேன். பணம் காசு இன்னிக்கு வரும், நாளைக்கு போகும். நல்ல பேர்தான் கடைசி வரைக்கும் நிலைச்சு நிக்கும்.''

''என்னசாப்பிடறீங்கமாமி? மாமின்னுகூப்பிடலாமா?''

''சொன்னாலும் சொல்லாட்டாலும் நான் உனக்கு மாமியார்தான். மாமின்னு கூப்பிடறது நம்ம வழக்கம் இல்லை. அம்மான்னு கூப்பிடு.''

''சரி, என்ன சாப்பிடறீங்க அம்மா?''

''காபி தாயேன். எப்படி போடறேன்னு பார்க்கலாம்.''

''ஐயோ, நான் சமையல்ல வீக்கு.''

''அது சரி. ஆபீஸுக்கும் போயிண்டு சமையலையும் கவனிச்சுக்கறது லேசா?''

''சுமாரா செய்வேன். இவர்தான் காரமே இல்லை. காரமே இல்லைன்னு மிளகாய்ப் பொடியை சாம்பார்ல ஊத்தி...''

''வேண்டாம். காரம் காட்டாதே. உப்பும், காரமும் சேர்ந்து சேர்ந்துதான் மூக்கு மேல கோவமும், நாக்கு தெறிய வார்த்தையும் வருது.''

''இப்ப இப்ப என் வழிக்கு வந்துட்டார்.''

''இங்கே வா.''

''என்னம்மா?''

''ஆபரேஷன் கீபரேஷன் பண்ணிக்கலையே.''

''இல்லை. கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கோம்.''

''சமர்த்து. இன்னும் ஒண்ணு பெத்துக்கோ, அது நல்லது.''

''ஆசைதான். கம்பெனி கட்டி இழுக்கணுமே. நான் வேற இப்படி வயிறும் வாயுமா அலைஞ்சா...''

''ஸ்டடியாயிடுத்து இல்லையா?''

''ஸ்டடிதான். காம்படிஷன் ஜாஸ்தி. நாயா அலைஞ்சாத்தான் முடியும்.''

''தலையெழுத்தைப் பார். அவ அப்பா கிட்ட இருக்கிற சொத்துக்கு உன்னைக் கண்ணுல வச்சு காப்பாத்தலாம். கடைக்கு வான்னு கூப்பிட்டாராமே.''

''இவர் முடியவே முடியாதுன்னுட்டார்.''

''கடைக்கு வேண்டாம். புள்ளையா போய்ட்டு வந்துண்டுருக்கலாமே!''

''எனக்கு ஒட்டுமான்னு தெரியலையே? கிட்ட போக வெட்டி முறிஞ்சுதுன்னா.''

''அதுக்காக போகாதிருப்பாளா? இரண்டாவது தத்தாரியா இருக்கான். எல்லா சொத்தும் அங்க போய் சீரழியும். பாதிக்குக் குறைச்சலா கிடைச்சாக்கூட இது மாதிரி பத்து வீடு வாங்கலாம்.''

''இப்ப போனாச் சொத்துக்கு வரான்னு பேச்சு வரும்.''

''நீ போகாதே. உன் புருஷனை அனுப்பு. புள்ளைய அனுப்பு. அவரை இங்க வரச்சொல்லு. இடது கையால ஒதுக்கினாப்பல போய்டக் கூடாது. உங்கப்பா எப்படி? வசதியா?''

''அவர் வரையில் வசதி. அங்கியும்தான் இது பிடிக்கலை. முழு மனசா ஏத்துக்க முடியலை.''

''இப்படி இருக்கக் கூடாது சுப்புலட்சுமி. நெருப்புன்னா வாய் வெந்துடாது. ஒரு பணக்கஷ்டம், மனக் கஷ்டம்னா மனுஷா வேண்டாமா? புருஷனும் பொண்டாட்டியும் எதிரும் புதிருமா நிக்கறதா, என்னை மாதிரி அன்னக்காவடி வந்து என்ன புண்ணியம்?''

''அப்படிச் சொல்லக் கூடாது. நீங்க வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு. இப்படி யாரும் வந்து பேசினதே யில்லை.''

''வரணும், வரணும்னு ரொம்ப நாளா ஆசை சுப்புலட்சுமி. கம்ப்யூட்டர் படிச்சவா உன்கூட பேசமாட்டா, அங்க வந்து வழியாதேன்னு என் புள்ளையே அதட்டினான்.''

''புல்ஷிட்.. என்ன கம்ப்யூட்டர். இனிமே அஞ்சாங் கிளாஸ் குழந்தை எல்லாம் படிக்கப்போறது.''

''அப்படியா?''

''ரொம்ப ஈஸி அம்மா. இரண்டு நாள்ல உங்களுக்கு சொல்லிக் கொடுத்துடுவேன்.''

''வேண்டாம். எனக்கு அடுப்படி போறும். என்ன பண்றே அடுப்புல.''

''ஏதாவது ஒரு வெஜிடபிள் பண்ணணும். இங்க சாப்பிடறேளா?''

''ஐயோ எதுக்கு. காய் எடு, நான் நறுக்கறேன்.''

சுப்புலட்சுமி கூட அரிசி அளந்து குக்கரில் போட்டு மூடினாள். ஞானாம்பாள் காயும் ரசமும் புதிதாய் செய்து முடித்தாள். நரை முடிக்கு மருந்திலிருந்து முகச்சுருக்கம் போக்கும் வழி வரை பட்டுப் புடவையிலிருக்கும் வைர பேசரி வரை இருவரும் நிறைய பேசினார்கள்.

வரதராஜு வீட்டு நகைகள் கொண்டு வர சோப் தண்ணீரில் அலசி இரண்டு இடுக்கு அழுக்கு குத்தி எடுத்து நாய் தோல் போட்டு பரபரவென்று மெருகேற்றி ஒவ்வொன்றாய் தர, சுப்புலட்சுமி வியந்து போனாள்.

ரங்கசாமி தந்த ஆல்பத்தில் நடிகருடன் தானும் வரதராஜுவும் இருந்த போட்டோவேண்டுமென்று கேட்டாள்.

''எதுவேணா எடுத்துக்கங்க அண்ணி.''

நாலைந்து போட்டோக்களை உருவிக் கொண்டாள்.

நிமிர்ந்தே பார்க்காத மைத்துனனுக்கு சாப்பிடும்போது நிறைய நெய் ஊற்றினாள்.

சுப்புலட்சுமி கூட்டுக் குடும்பத்தில் இருந்து கிளைத்து வந்தவள். வீடுமுழுக்க ஜனங்களும் விசாரிப்புகளுமாய் வளர்ந்தவள். திருமணத்திற்கு பிறகு தனிமை ஏற்பட முதலில் மிரண்டாலும் மெல்ல மெல்ல பழக்கமாயிற்று. மறுபடி வீட்டின் மவுனம் உடைந்து, உற்வு மாதிரி ஒரு பெண்மணி உள்ளே நுழைந்து ஊர்க் கதை பேசி உதவ, உடனே ஒட்டிக் கொள்ளத் தோன்றியது.

வரதராஜு மென்மையான குணம் உடையவன். உரக்க பேசுவதும், சிரிப்பதும் அநாகரீகம் என்று நினைப்பவன். அவன் குடும்பத்தில் இருந்து அவனைப் போலவே ஒரு ஆள் முணுமுணுப்பாய் பேசி கூப்பிட்ட குரலுக்கு எழுந்து நின்று சொன்ன வேலையை செவ்வனே முடித்து வேறு என்ன வேலை என்று கேட்கிற விநயம், ரங்கசாமியின் பணிவு பிடித்திருந்தது.

திருமணமான பிறகு அப்பாவிடம் போக, சுரேந்திரபாபு சுப்புலட்சுமியை கண்களாலேயே கற்பழித்தான்.

''இதை எங்கியோ பார்த்துருக்கேம்பா ஏன் இதைப் போயி...'' அவன் பாஷையில் சுப்புலட்சுமியைப் பேச காதில்

வாங்காது வந்து விட்டான். இன்று அவன் வயது ஒத்த ரங்கசாமி நிமிர்ந்து முகம் நோக்காமல் அண்ணி, அண்ணி என்று அழைக்க... அவன் மீது நம்பிக்கையும் நல்லெண்ணமும் பரவியது.

வெகு நாளைக்குப் பிறகு அந்நியர்களுடன் அந்த வீட்டில் விருந்து நடந்தது.

ஞானாம்பாள் குழந்தையை முத்தமிட்டு கொஞ்சி சுங்குமம் ரவிக்கை வாங்கிக் கொண்டாள்.

''ராஜு, நான் பொண்டாட்டிக்கிட்ட சிலது பேசியிருக்கேன் கேட்டுக்க. அப்பா கூட வர போக இரு. மொத்தமா அறுத்துக்காதே.''

''அதெல்லாம் கஷ்டம்மா எனக்கு. அவர் கர்வமெல்லாம் தாங்கற பொறுமை இல்லை, அநாவஸ்யமா, நெஞ்சு நிமிர்த்தி நான் யார் தெரியுமான்னுவாரு, சரிதான் போய்யான்னுருவேன்.''

''இல்லை ராஜு! அவரு கர்வம் ஆடிப்போய் கிடக்கு. இல்லேன்னா எம்புள்ளைக்கு கடை போட்டு கொடுப்பாரா, இல்லை வந்து நின்னு திறப்பாரா? ஊர் சுத்தி பகை. செத்துருவோம்னு பயம். அவரு பழைய மாதிரி இல்லை.''

''போய் கடைல உட்காரச் சொல்றீங்களா?''

''வேணாம். வீட்டுக்குப் போ. அம்மாகிட்ட பேசு. தம்பிக்கு புத்தி சொல்லு. புள்ளையத் தூக்கி அப்பாகிட்ட விடு. என் வேலை எனக்கு முக்கியம். எதுனா கஷ்டம்னா கூப்பிடுப்பான்னு சொல்லு.''

''அவ்வளவுதான் வந்து உட்கார்ந்துருவாரு.''

''உட்காரட்டுமே உன் தகப்பன்தானே?''

''சுப்புலட்சுமி தாங்க மாட்டா. எனக்கும் அவளுக்கும் சண்டை வரதுதான் மிச்சம்.''

''இல்லை. நான் சுப்புலட்சுமிகிட்ட பேசிட்டேன். நான் எதுக்கு சொல்றேன்னு அவளுக்குப் புரிஞ்சு போச்சு. இது சரியான டைம். அவரு சுப்புலட்சுமியை மதிக்கலே... அவருக்குத்தான் கஷ்டம்னு சொல்லிட்டேன்.''

''ஏங்க என் அம்மா மாதிரி நீங்க இத்தினி கஷ்டப்படறீங்க இதுக்கு?''

''நான் ஒண்டியா வளர்ந்து ஒருத்தரும் உதவறதுக்கு இல்லாத நாசமா போனேன்தம்பி. எம்புள்ளையும் தனி மரமா ஆயிடப்படாது. உன்னிய மாதிரி படிச்சவங்க, சுப்புலட்சுமி மாதிரி விவரம் உள்ளவங்க அவனை வகைப்படுத்தணும். அவனுக்கு அண்ணன் வேணும் வரதராஜு. அவரு வர முடியாத இடத்துக்கு ரங்கசாமி போனா காய்வாரு போவாதே நீயும்னு வாரு. நான்மறுபடியும் ஒத்துமையா குடும்பத்தை பலமா செய்யணும்னு நினைக்கறேன். நீயும் தனியாகவே இருந்துடக்கூடாது. உம்புள்ளையும் ஆள் படை இல்லாத வளரக்கூடாது.''

ஞானாம்பாள் ஒரே மூச்சில் பல கத்திகளை அவனுள் இறக்கினாள். எதிர்காலம் பற்றிய வேள்வியை எழுப்பினாள்.

வரதராஜுவுக்கு மூச்சு முட்டியது.


''வேணா அப்பாரு வரட்டும்.''

''நெசந்தானே? வந்த பிறகு மூஞ்சி தூக்க மாட்டியே?''

''எப்படிம்மா தூக்கறது. ஆயிரம் ஆனாலும் அவரு என் அப்பா.''

''இது போதும். இலை தானா ஒட்டிக்கும்.''

ஞானாம்பாளின் முதல் தாக்குதலில் கோட்டை கதவு விரிசல் விட்டது. கோட்டையை முற்றிலும் கைப்படுத்துகிற வரையில் அவளுக்கு தூக்கம் இல்லை என்பதும் புரிந்தது.



பாம்பும் கீரியும் சண்டையிட்டவிலகி நின்று வேடிக்கை பார்ப்பது நல்லது. விலக்குகிறேன், நட்பு வளர்க்கிறேன் என்று இடையில் நுழைவது பேராபத்து - 'சண்டை எதற்கு?' என்று தடுக்க, பாம்பும் கொத்தும். கீரியும் பிடுங்கும்.

ஆனால், வித்தைக்காரனுக்கு பாம்பும் முக்கியம், கீரியும் அவசியம். சீறிச் சண்டையிடுகிற பிராணிகளுக்கு நடுவே போய் பாம்புக்குதுணியையும், கீரிக்கு ரப்பர் பந்தையும் காட்ட, அவை திசை மாறி கிடைத்தது தாக்கி சமனமடையும்.

ஞானாம்பாள் அதைத்தான் செய்தாள்.

பேசிப் பேசி அவர்களின் ஆத்திரம் தணித்தாள். பேசவிட்டு கனம் குறைத்தாள்.

''வீட்டுக்கு வரேன்னானா? அப்ப கடைக்கு வரமாட்டானாமா... அவன் வரவே தேவையில்லை போ.''

''முட்டாள்தனமா பேசாதீங்க. வீட்டுக்கு வந்து சீராடட்டும் முதல்ல. அவன் பொண்டாட்டிகிட்ட மொள்ள பேசி அவ ஆயி அப்பன் பத்தி கேட்டு நீங்க அடுக்கி வச்சிருக்கிற நோட்டுக் கத்தைய, தங்க நகைங்களக் காட்டுங்க. நகைக்கு அசராத பொம்பளை உண்டா? அது தவிர அவங்க வியாபாரம் அத்தினி திடம் இல்ல போல.''

''எப்படிச் சொல்ற?''

''ஒண்ணும் சுரத்தாதன் கம்பெனி பத்திப் பேசலை.''

''பேரப் புள்ளைய பாத்தியா?''

''எம் மடிலதான் இருந்தது.''

''என் ஜாடை தெரிஞ்சுதில்ல?...''

''நல்லா தெரியுதே. முழி, மூக்கு, காது எல்லாம் அப்படியே உங்களையே உரிச்சு வச்சிருக்கு. நிறம் கொஞ்சம் நல்ல நிறம்.''

''புள்ளை பேசுதா?''

''உத்து உத்துப் பாக்குது. பேசுறத நீங்க பாக்கற மாதிரியே.''

''எப்ப வரானாம்?''

''நேரம் காலம் சொல்லலை. யோசனை பண்ணு, வந்து போயிட்டு இருன்னேன். சரிம்மான்னான்.''

''அம்மான்றானா உன்னை?'' கேலியாய் ஸ்ரீராமுலு கேட்டார்.

''ஆமா - பெத்த தாயாரே நீதான்னுட்டான். வயசான பொம்பளைங்களை எல்லாரும் அம்மான்னுதான் கூப்புடு வாங்க.''

''எதுனா கொடுத்தியா புள்ளைக்கு?''

''உங்க பேர் சொல்லி தங்க மணி அரணை போட்டேன். ரொம்ப சந்தோஷம் அந்த பொண்ணுக்கு. நான் சொல்றத புரிஞ்சுக்கங்க. மருமகளை வச்சுத்தான் மகனை மடக்கணும்.''

''புரியுது.''

''ஒரு தடவை போய் வூட்டுக்கு வாம்மான்னு கூப்புடறது.''

''வீட்டுக்கா? அட போ... எங்கனா பொது எடத்துல பார்த்தா...?''

''எக்கேடோ கெட்டுப் போங்க! அப்பனும் புள்ளையும் ஒண்ணானா எனக்கென்னாவப் போவுது...? கொடி கட்டிப் பறந்தா எனக்கென்னா கிடைக்கப் போவுது? எம் பொழப்பு நாறப் பொழப்பு. ராத்திரி எட்டு மணிக்கு மேல குடித்தனம் பண்றவ நானு.''

''ஏய் நாயே... ஜாஸ்தி பேசாத. ஒரு பேச்சுக்குக் கேட்டா நீதான் எல்லாத்தியும் தூக்கி நிறுத்தறவ மாதிரி பேசறியே... இறிராப் போச்சா?''

ஞானாம்பாள் பேசாது உட்கார்ந்திருந்தாள்.

ஸ்ரீராமுலுவுக்கு தாழ்ந்து போவதில் கூச்சம் இருந்தது. வீட்டுக்கு வராதே என்று விரட்டியடித்துவிட்டு இப்போது பிள்ளையின் வீட்டுப்படி மிதிக்க வெட்கம் வந்தது.

ஆனால், வெட்கம் பார்த்தால் முடியாது. விரைவாய் செயல்பட வேண்டும். வெளிப்பார்வைக்காவது அப்பனும் பிள்ளையும் சேர்ந்து விட்டார்கள் என்கிற அபிப்பிராயம் தர வேண்டும். ஸ்ரீராமுலுச் செட்டியாருக்கு ஆள் பலம் கிடைத்து விட்டது என்று சவுகார்பேட்டை அச்சப்பட வேண்டும்.

ஞானாம்பாள் பயந்தாள். இந்த ஆள் தயங்கித் தயங்கி தெரு வரை போய் பின்னடைந்து விடுவானோ?... அந்த கூப்புலட்சுமி 'யெஸ்' என்று வெளியே வந்தால் ஒன்று மில்லை என்று கார் ஏறி விடுவானோ...? பொது இடத்தில் பார்க்க முடியுமா? அது நல்லதா.

''ஒண்ணு செய்யுங்க.''

''என்ன?''

''அவங்க இருக்கற ரோடுலதான் இஸபெல்லா ஆஸ்பத்திரி இருக்கு.''

''ம்ம்...''

''நீங்க அங்க போய் ஜெனரல் செக்கப் பண்ணிக்கிற போது நான் பேரனை இட்டாரேன். மருமக வந்தா நல்லா இருக்கியாம்மான்னு கேளுங்க. வாங்கன்னு கூப்புட்டா வீட்டுக்குப் போங்க. என்னதான் விரோதமா இருந்தாலும் அப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னா புள்ளை வராத இருக்குமா? அதும் இரண்டு கட்டடம் தள்ளி இருக்கற ஆஸ்பத்திரிக்கு வராத இருக்குமா?''

''இது செய்திடலாம். யாரு டாக்டரு அங்க?''

''ரங்கசாமியை கேட்டா எல்லாம் சொல்றான். என் கைச் செலவுக்கு ஒரு ஆயிரம் ரூபா கொடுங்க. பேரப் புள்ளை வந்தா எதனா வாங்கித் தரணுமில்ல.''

ஜார்ஜ் டவுனிலிருந்து மயிலாப்பூர் ஆஸ்பத்திரிக்கு ஏன் வந்தார் என்று வரதராஜுக்குப் புரியலை. ஆனால், செய்தி கேட்டதும் திக்கென்றிருந்தது. எட்டேமுக்காலுக்குக் கிளம்பி ஒன்பது மணிக்கு மவுண்ட் ரோடில் நுழைந்து ஒன்பது பத்துக்கு ஆபீஸ் மாடியில் இருக்க வேண்டும். ஒன்பது முப்பதுக்கு ஒரு அப்பாயின்மெண்ட் சிமெண்ட் கம்பெனி யுடன், பதினோரு மணிக்கு இன்னொரு பிஸினஸ் தோல் வியாபாரியுடன். இரண்டு மணிக்கு லஞ்ச், பழைய கப்பல் உடைக்கிற ஆளுடன், பிறகு வீட்டுக்கு வந்து விடலாம். வீடியோ பார்க்கலாம்னு நினைத்துக் கொண்டிருந்தான்.

''அப்பா ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆயிட்டிருக்கங் கண்ணே'' என்று ரங்கசாமி சொன்ன போது ஏனோ அப்பாவின் மரணம் போல் அது ஒலித்தது.

இரண்டு நிமிடத்தில் பயப்பட ஒன்றுமில்லை என்பது ரங்கசாமி பேச்சில் தெரிந்தாலும், அப்பா செத்துப்போய் விடுவாரோ என்கிற பயம் அகலவில்லை.

அப்பா செத்துப் போவது நமக்கு சந்தோஷமா? உடனே ஏன் அப்படி யோசிக்கிறோம். இது விருப்பமா? ஒரு வேதனை - அதிர்ச்சி, வேண்டும் என்கிற உள் விழைவா? இல்லை வயதானவருக்கு உடம்பு சரியில்லை என்கிறபோது மரணம் என்கிற எண்ணம் இயல்பா? இத்தனை வேலைகளை இப்போது என்ன செய்வது...?

முதல் அப்பாயின்ட்மெண்ட் மட்டும் கேன்ஸல் செய்யலாமா, இல்லை ஒரு பத்து நிமிஷம் தலைகாட்டி விட்டு தாமதமாய் போகலாமா, பேசிப் பார்ப்போம்.

சிமெண்ட் கம்பெனி மானேஜர் வீட்டுக்கு போன் செய்தான். சம்பந்தப்பட்ட ஆளை எடுத்தார். விஷயம் சொன்னான்.

''அடட, முதல்ல அதைக் கவனிங்க! நம்ம வேலை எப்ப வேணா வச்சுக்கலாம். என்ன வயசு உங்க அப்பாவுக்கு? பயப்படும்படியா ஒண்ணுமில்லையே... அலட்சியமா விட்டுடாதீங்க. முழுக்க டெஸ்ட் பண்ணச்சொல்லி... எந்த ஹாஸ்பிடல்...நாலு வருஷத்துக்கு முன்னாடி எங்கப்பா இப்படித்தான் நெஞ்சு வலின்னு உட்கார்ந்தார், ஜஸ்ட் ஒன் அவர்... பிராணன் போயிடுத்து. ஸாரி. நான் பயமுறுத்தலை. கடவுள் உங்கள் தந்தையைக் காப்பாற்றுவார். கவனமா இருக்கணும்கறதுக்காக சொல்றேன்.''

'ஏன் இவருக்கும் உடனே மரணம் பற்றி பேசத் தோன்றியது?'

- வரதராஜன் குழம்பினான்.

இத்தனை நாள் ஒட்டாத அப்பா இப்போது ஒட்டினாற் போல இருக்கிறது. எனக்கு ஒட்டவில்லை. நான் வரமாட்டேன்! வேறு வேலை இருக்கிறது என்று சொல்ல முடியாதோ என்று தோன்றிற்று. ரங்கசாமி தப்பாய் நினைப்பான் என்று பயம் வந்தது. 'அடப்பாவி இவ்வளவுதானா நீ?' என்று கேலி செய்வானோ என்று தோன்றிற்று. வேறு யார் கேள்விப் பட்டாலும் நெஞ்சழுத்தம் என்று திட்டுவார்களோ என்று தோன்றியது. எனக்கு ஒட்டியதோ, ஒட்ட வில்லையோ ஊருக்குள் பேர் வாங்க போய் பார்க்க வேண்டும்.

சுடுகாடும், ஆஸ்பத்திரியும் ஒரே மாதிரி இடம். சுடுகாடு சுத்தமாய் நம்பிக்கை தீர்ந்துபோன இடம். ஆஸ்பத்திரி கொஞ்சம் நம்பிக்கை தரும் இடம்.

இரண்டு வயசு குழந்தையை ஒரு தாய் தோளில் போட்டு வராண்டாவில் கூடவே நடந்து வந்தாள். குழந்தை ஆசனவா

யில் தவுல் கட்டை மாதிரி சொருகியிருந்தது. ஆசனவாய் சிறியதாய் இருக்கிறதாம். மலம் தடைப்படுகிறதாம். இரண்டு மூன்று வருடம் அப்படி இருக்க வேண்டுமாம். முகம் திருப்பி வேறு பக்கம் போகத் தோன்றியது.

ஏ.ஸி. ரூமின் கதவுகள் அழுந்த மூடியிருந்தன. மெல்ல தட்டினான். ஞானம்பாள் கதவு திறந்தாள். ''உள்ள வா'' என்று தாழ்ந்த குரலில் கூப்பிட்டாள். கூச்சல் வேண்டாம் என்பது போல் குரல் இருந்தது. திரைக்குப் பின் அப்பாவின் கால்கள் தெரிந்தன.

உள்ளே போய் நின்றான்.

அப்பா கண்கள் மூடிப் படுத்திருந்தார். நெஞ்சில் ஒயர்கள் பொருத்தி மானிட்டர் வைத்திருந்தார்கள்.

இருதயத்துடிப்பு டி. வி. மாதிரி பெட்டியில் பதிவாகிக் கொண்டிருந்தது. இடது கையில் சலைன் ஏற்றி இருந்தார்கள்.

''என்னம்மா ஆச்சு?''

''தலை சுத்தல். நெஞ்சு வலி. டாக்டர் இங்க வச்சு நாலு நாள் பார்க்கணும்ட்டாரு.''

''ஏன் திடீர்னு?''

''தெரியலையே. விடிகாலைல ஆள் வந்தது. ரங்கசாமி ஓடினான் உங்க வீட்டுக்கு. டாக்டர் ஊசி போட்டாராம். உடனே சேருன்னாராம்.''

''தூங்கறாரா?''

''மயக்கமா இருக்குன்னாரு. எழுப்பட்டா.''

''வேணாம்.''

''கடை திறக்கற அன்னிக்கு நல்லா இருந்தாரே...''

''ஏதோ சண்டை போல வீட்ல, இப்படி கிடக்கும் போது வந்து பார்க்க வேண்டாமா உங்கம்மா... அங்க அப்படி என்ன இருக்கு காவல் காக்கறதுக்கு?''

''என்ன சண்டை?''

''ஏன் கடை திறந்து குடுத்தீங்கன்னு சண்டையாம். பாபு வந்து கத்தினானாம். உங்கம்மாவும் கத்தியிருக்காங்க. வேணாம்ப்பா... எனக்கு கடையும் வேணாம்... கண்ணியும் வேணாம். பூவோட பொட்டோட போய்ச் சேர்ந்தா சரி. எனக்குத் தெரியும் இது நல்லதில்லைன்னு... எனக்குத் தெரியும்ப்பா... புள்ளை ஆசைப்பட்டானே. தொழில் தெரியுதேன்னு ஆறடிக்கு ஆறடி திறந்தது தப்பாப் போச்சு!''

''இதுல சண்டை என்னா... அவனும் அவருக்குப் பொறந்தவன்தானே?''

''ஒத்துக்கமாட்டாங்க வரதராஜு, ஒத்துக்க மாட்டாங்க. அவனை உள்ளவே வுடலை. கார்ல ஏத்தலை. பின்னாலேயே சைக்கிள் மிதிச்சுக்கிட்டு வந்துருக்கான்.''

''சுரேந்திரபாபு எங்கே?''

''தூக்கம் வருதுன்னு பூட்டான்.''

''சோம்பேறி.''

''சோம்பலு இல்லை. தண்ணி. டாக்டர் முறைச்சு முறைச்சு பார்த்தாரு அவனை. ரூம்ல ஒரே வாசனை.''

''ரங்கசாமி எங்க?''

''டாக்டர் பின்னாடி போயிருக்கான். மருந்து வாங்க.''

''காசு இருக்கா?''

''ஆயிரம் ரூபா வச்சுருக்கேன்.''

''போறாதும்மா.''

''ரங்கசாமி எதுனா நகை வச்சு எடுத்தாருவான். திறந்து ரெண்டு நாள்லியே கடை சாத்திட்டு வரணுமேன்னு கவலை அவனுக்கு.''

''வேணாம். அவன் போய் கடை திறக்கட்டும். நான் இங்க இவரைப் பார்த்துக்கறேன்.''

''உனக்கும் வேலை இருக்கே தம்பி.''

''இல்லை சொல்லிட்டேன். இன்னிக்கு போகலை.''

''நான்தான் இருக்கேனே.''

''தனியா கஷ்டப்படுவீங்க. நான் இருக்கேன்.''

''இரு. மொள்ள எழுப்பறேன்.''

''கண்ணு முழிச்சுப் பாருங்க. வரதராஜு வந்துருக்கு. பாக்கறீங்களா?''

ஸ்ரீராமுலு கண் விழித்தார். அவருக்கு இந்த நாடகம் பிடிக்கவில்லை. இப்படியெல்லாம் அவர் செய்ததில்லை. அவனைப் பார்த்துவிட்டு கண் மூடிக்கொண்டார்.

''என்னங்க. உங்க வரதராஜு வந்துருக்கு.''

''சரி...''

''கோவமா?''

''இல்லை.''

''புள்ளைய வான்னு கூட சொல்லலையே?''

''யாரைப் போய் நாம வான்னுசொல்றது... போன்னு சொல்றது... உனக்கு இஷ்டமிருந்தா இரு. இல்லேன்னா போ. துட்டு போட்டா டாக்டரும், நர்ஸும் பாத்துக்கறாங்க.''

''அப்படியெல்லாம் பேசாதீங்க. உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னதும் பறந்து வந்திருக்கு.''

''அடி போடி, நான் பார்த்துட்டேன் எல்லாத்தியும். யாரும் யாரையும் நம்பி இல்லை. காசு இருந்தா மனுஷன், இல்லாட்டி பொணம். நம்ம கிட்ட குறைஞ்சு போச்சு... ஓடிட்டாங்க. உம் புள்ளைக்கிட்ட இருக்கு ஒட்டறாங்க.''

''ச்சு... இது என்ன பேச்சு?''

''அப்படித்தான்... அப்படித்தான் பேசுவேன்.'' ஸ்ரீராமுலு கத்தினார்.

வரதராஜு அருகே வந்து அவர் கை பிடித்துக் கொண்டான்.

''காசு குறைந்து விட்டது என்றா ஓடி வந்தேன்... என்ன பேச்சு இது?'' ஸ்ரீராமுலு இருமினார். வரதராஜு நெஞ்சு நீவி விட்டான்.

''உங்க காசுக்கு ஆசைப்படறாங்கன்னு எல்லாரையும் ஒரே மாதிரி நினைக்கறீங்க. பாருங்க... இந்த குணம் இருக்கிறவரைக்கும் நீங்க உருப்படமாட்டீங்க. எல்லாரையும் தூக்கி எறிஞ்சு பேசறீங்க பாருங்க.''

''அம்மா, சும்மா இருங்க. அவரு பேசட்டும்.''

''கிளி மாதிரி, மருமக மான் குட்டி மாதிரி, பேரக் குழந்தை. ஏன் ஒட்டலை? துக்கிரிப் பேச்சு.''

''என்னாடி பேசிட்டேன்? என்னா சொல்லிட்டேன்? என் மருமகளையும், பேரனையும்?'' - எழுந்து உட்கார்ந்தார். வரதராஜு அவரை சிரமப்பட்டு படுக்கையில் சாய்த்தான்.

''வீட்டுக்கு வான்னு மருமகளைக் கூப்பிட்டீங்களா? நல்லா இரும்மான்னு ஒரு பந்து மல்லி வாங்கிக் கொடுத்தீங்களா? வந்தவளைக் கண்டா ஆவாது. வம்சத்தைக் கொண்டா கொட்டறேன்னா எப்படி வருவாங்க.''

''எனக்கு புத்தி சொல்றியா?'' டேபிளில் வைத்த கண்ணாடி டம்ளரை எடுத்து அவளை நோக்கி வீசினார். குறி தப்பி சுவரில் பட்டு கண்ணாடி டம்ளர் உடைந்தது.

ஞானாம்பாள் அழ, வரதராஜு பதறி தகப்பனை அணைத்துக் கொண்டான்.



''வியாதின்னு ஒண்ணும் இல்லை, மிஸ்டர் வரதராஜு. வயசானதுதான் வியாதி. எல்லா உறுப்பும் அது செய்ய வேண்டிய வேலைல பாதி திறமைலதான் செய்யுது. அவருடைய வயசுக்கு இது நார்மல்.''

''உடம்பு பவர் குறைஞ்ச அளவுக்கு வேலைய குறைச்சுகிட்டா இன்னும் பத்து வருஷம் சுகமா நடமாடலாம். அதுக்கு மேல கேரண்டி தரமுடியாது. ஸோ, இப்போதைக்கு பயம் இல்லை என்றாலும் வயசானது நிஜம். நிறைய ரெஸ்ட் வேணும். பத்து மணி நேரம் தூங்கணும்.''

- டாக்டர் சந்தோஷமாக பேசிக் கொண்டு போனார்.

''கம்ப்ளீட்டா டெஸ்ட் முடிச்சு அனுப்பறேன். மேக் ஹிம் சியர்ஃபுல். கண்ணாடி டம்ளரெல்லாம் உடைக்க வேணாம்னு சொல்லுங்க.''

''ஸாரி டாக்டர்.''

''மற, நண்பனே! வயசானவங்களோட நாம பேசினா சண்டைதான் வரும். உன் புள்ளைய பேசவுடு. இன்னிக்கு காலையில எங்கப்பா முதுகுல என் பையன் நாலு வயசு, ஷூ போட்டிருக்கற காலோட கழுத்த கட்டிண்டு ஏர்றான். ஒரே சிரிப்பு. இதே நான் சத்தமா பேசினா போதும்... கோவம் வர்றது. பக்கத்து வீட்ல போய் எம்புள்ளை என்னை மதிக்கிறதில்லைன்னு புலம்பறார். பேரன் செருப்பால் மிதிச்சா தேவலை... புள்ளை கத்தி பேசக்கூடாது. விசித்திரமான சைக்காலஜி. இல்லை...? என்ன செய்யறது? மேக் ஹிம் ஹேப்பி.''

- நகர்ந்து போனார்.

வரதராஜு ஹாஸ்பிடல் விட்டு வெளியே வந்தான்.

மறுபடி இவரோடு ஒரு உறவு அல்லது ஸ்நேகம் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இது நாள்வரை எந்தத் தொடர்பும் இல்லாதிருந்தது ஒரு விடுதலை உணர்வு கொடுத்தது. ஏகப்பட்ட உறவுகள், ஏகப்பட்ட கவலைகள் என்றில்லாமல் முழு கவனமும் வேலையிலும். வீட்டிலும் இருக்கும்போது மனைவி மீதும் செலுத்த முடிந்தது.

சுப்புலட்சுமிக்கும், வரதராஜுவுக்கும் இடையே ஒரு நட்புணர்வு வெகு சீக்கிரம் வந்ததற்கு இந்த சிறிய வட்டம் காரணம். சில சமயம் தோணும், யாருமே இல்லையே உறவு என்று. ஆனால், குழந்தை பிறந்த பிறகு அதுவும் போயிற்று. நானூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலைக்காரி, நாலாயிரம் ரூபாய் செலவில் ஒரு நர்சிங்ஹோம். குழந்தை பெற போதுமானதாய் இருந்தது.

உதவியாளர்களிடம் கம்பெனியை ஒப்படைத்து விட்டு ஒரு வாரம் கூடமாட உதவி செய்தான். இரவு நேரம் குழந்தையைத் தாலாட்டவும் பால் கரைத்து பாட்டிலில் அடைத்து ஊட்டவும் கற்றுக்கொண்டான். ''நீ தூங்கு சுபி... நான் கவனிச்சுக்கிறேன்'' என்று உதவி செய்தான்.

''ஏ குட்டி! இவ்விட வரு'' என்று பெண்களை விளிக்கும் சுப்புலட்சுமி வீட்டு ஆண் கூட்டத்தில் அவன் அதிசயமாய் திகழ்ந்தான்.

''ஏ... ஏ... அந்த நகைக் கடைக்காரர் பையன் சுப்புலட்சுமி பாவாடை தோய்க்கறான். எம்.பி.ஏல படிக்கறச்ச கத்துண்டானாம்.'' வாய் விட்டுச் சிரித்தார்கள். வரதராஜு கவலையே படவில்லை. சுப்புலட்சுமி காதலானாள்.

''உனக்கு என்ன வேணும் சுப்புலட்சுமி? நம்மாத்து லேந்து எது வேணாமோ... புள்ளை பேறுக்கு நாங்க ஏதும் செய்யலை'' அப்பா கேட்டார்.

''பைசா... பைசா கொடு.'' கட்டை விரலை சுண்டி கேட்டாள்.

''காசு போதுமாடி பொண்ணே. மனுஷா வேண்டாமா?''

''வந்து என்ன பண்ணுவேள். என் புருஷன் எனக்கு பாவாடை தோய்க்கறாரா... பாத்திரம் தேக்கறாரான்னு உளவு பார்ப்பேள். என் புருஷனுக்கு நான் பண்ணுவேன். எனக்கு என் புருஷன் செய்வார். அது போதும். கீப் யுவர் ஹேண்ட்ஸ் அவுட்.''

''காசு மட்டும் வேணுமாக்கும் பெத்தவர்கிட்டே ருந்து?''

''இத்தனை ராங்கித்தனம் கூடாதுடி புருஷனைக் கொண்டாடு. வேண்டாங்கல. அதுக்காக பெத்தவாளை எட்டி உதைக்கணுமா என்ன... அதுவும் காசு வாங்கிண்டு.''

''என் புருஷனை என்னிக்காவது தாங்கியிருக்கியா...? மனசார கூப்பிட்டு மரியாதை பண்ணியிருக்கியா. இது பூஜை ரூம். அது கிச்சன். இது அப்பாவோட தியான ரூம்னு பூட்டு பூட்டின கதவு காட்டினேள். வேலைக்காரனை விட்டு சாதம் போட்டேள். நீங்க சாப்பிடுங்கோ. எனக்குப் பசிக்கலைன்னு விலகி நின்னேள். அவருக்குத் தெரியாது, உங்க ஜாதி வெறி... நீசத்தனம்? எனக்கு என்ன கண்ணா அவிஞ்சு போச்சு...? பெண்ணு வேணும், மாப்பிள்ளை ஆகாதுன்னா எப்படி...?''

''இப்ப என்ன பண்ணணும்? ஆவணி அவிட்டத்துக்கு கூப்பிட்டு புருஷனுக்குப் பூணூல் மாட்டி விடணுமா?''

''அடடடடா... நீங்க செய்ய மாட்டேளாக்கும்! செய்வேள். அவர் அந்தண்ட நகர்ந்தும் வீடு அலம்பி தலைக்கு ஜலம் விட்டு இன்னொரு பூணூல் போட்டுக்க மாட்டேளா?''

''அன்னிக்கு உன் தலை மயிரைப்பிடிச்சு இழுத்துண்டு வந்து ஒழுங்கா இருன்னு சொல்லியிருக்கணும். செய்யலை பாரு. அதான் தப்பு.''

''ஆயி அப்பன்னு பார்க்காம கொலை பண்ணிட்டு ஜெயிலுக்கு போயிருப்பேன். ஏழு வருஷம் ஜெயிலுகுள்ளயே ஸி. ஏ. முடிச்சு பி. எல். பாஸ் பண்ணி வெளிய வந்து இவரை கல்யாணம் செய்துண்டிருப்பேன்.''

பெண்ணின் வெறி கண்டு வீடு திகைத்தது, வரதராஜு வியந்தான்.

''போதும் நர்ஸிங்ஹோம் செலவிலேர்ந்து தொட்டில் கட்டி, பேர்வச்சு, முடி இறக்கி வித்தியாப்பியாச செலவுவரை இந்தா இருபதாயிரம். நானும் கொண்டாட வேண்டாம். நீயும் என்னைக் கொல்ல வேண்டாம். சவுக்கியமா இரு.''

வரதராஜு அன்றிரவு அவளை இறுக்கிக் கொண்டு உடம்பு தடவி சமாதானப்படுத்தினான். உள்ளே இருக்கிற கோபம் நீக்கு என்று வலியுறுத்தினான்.

''என் கோவம் வீட்டு மேல இல்லை, ராஜு. அது ஆம்பளை ஆதிக்கம் பண்ற இடம். பொட்டக்குட்டின்னு பெண்களைக் கூப்பிடும் இடம். இந்த ஆணாதிக்கம் வெறுக்கிறேன். என் புடவையை, என் பாவாடையை என் புருஷன் தோய்ப்பதில் சிரிப்பென்ன, என்ன கேவலம் இது. அந்த ஆணாதிக்கம் உனக்கு வரக்கூடாது ராஜு. அதனால்தான் அறுத்தேன்'' என்றாள்.

வரதராஜு வீட்டில் ஆணாதிக்கம் இல்லை. பெண்ணாதிக்கமும் இல்லை. வரதராஜு குடல் வாய் வீங்கி துடித்தபோது இரவோடு இரவாக ஆஸ்பத்திரியில் சேர்த்தாள். சென்னையில் பெரிய டாக்டரை கூட்டி வந்து எட்டு மணி நேரத்தில் ஆபரேஷன் செய்வித்தாள். கம்பெனி, வீடு, குழந்தை, வரதராஜு எல்லாம் ஒரு பெண்ணாய் நின்று சமாளித்தாள்.

''நிறைய செலவு ஆகியிருக்குமே.''

''யெஸ். ஆனா, கையைக் கடிக்காது.''

''எப்படி?''

''இன்ஷூர் பண்ணியிருக்கேன். நம்ம மூணு பேரையும் பதினாலாயிரம் ரூபாய் செலவு. பன்னெண்டாயிரம் க்ளெய்ம் பண்ணிடலாம்.''

''ஏய்... எப்போ?''

''உனக்கு மறந்து போச்சு ராஜு. இது நாலாவது வருஷம் பிரிமியம். அறநூறு ரூபாய்தான்.'' - அவள் மதியூக மந்திரி. அசராத வேலைக்காரி. அற்புதமான சிநேகிதி. அழகான மனைவி. எல்லா ஆட்டத்துக்கும் ஈடு கொடுக்கிற தாசி.

அவள் தன் வீடு விலக்கியதும், அவள் துணிந்து தன் வீடு அறுத்ததும் இது அத்தனையும் வலுப்பட உதவிற்று. வேறு எவர் தயவும் இன்றி இடையூறும் இன்றி எள்ளலோ, எரிச்சலோ இன்றி நானும் நீயும் ஒன்று என்று வாழ முடிந்தது.

ஐந்து வருட வாழ்க்கை ரம்யமாய் மனசுள் நிற்க, மறுபடி தேடிப் போய் விலங்கு போட்டுக் கொள்வது அவசியம்தானா?

அப்பா இன்னமும் அந்த மலையாளத்துப் பொம்பளை என்றுதான் பேசுகிறார். 'அவருக்கு உதவி செய்' என்று சுப்புலட்சுமியை கட்டளையிடத்தான் வேண்டுமா?

இன்னமும் டம்ளர் தூக்கி அடிக்கிறார். மேல பட்டிருந்தால் என்னவாவது...? சுப்புலட்சுமி மீது தூக்கி எறிந்தால் என்ன நேரும்?

''செருப்பு பிஞ்சிடும். கிழட்டு நாயே. யார் கிட்ட ஆடறே?'' ஒரே உதறலில் சுப்புலட்சுமி அப்பாவைத் தூக்கி எறிந்து விடுவாள்.

அப்பா மதிக்கிற ஆள் இல்லை மனைவி, மதிக்காத வனை மறப்பதே இல்லை. ஞாபகம் வைத்து வீழ்த்துவாள்.

இடைவிடாத போர் துவங்கும். இரண்டு பக்கமும் தான் அடிபட நேரும்.

இந்த விஷயத்தை எப்படி தொடர்வது? சுப்புலட்சுமியை போய் பார் என்று ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாமா...? குழந்தையைக் கொண்டு போய்க் காட்டு என்று சொல்லலாமா? அப்பா ஏன் இவ்வளவு அருகே வந்து ஆஸ்பத்திரி தேர்ந்தெடுத்தார். தான் எத்தனை கஷ்டப்படறேன் பார் என்று காட்டவா? வரதராஜ¨ யோசனையுடன் வீட்டுக்குள் நுழைந்தான்,

''எப்படியிருக்கு... என்ன ஆச்சாம்?''

''நார்மல். பயப்படற மாதிரி ஒண்ணும் இல்லை. வயசாயிடுச்சு. கம்ப்ளீட் ரெஸ்ட் வேணும்னாரு டாக்டர்.''

''என்னைக் கேட்டாரா?'' சுப்புலட்சுமி ஆவலுடன் கேட்டாள்.

வரதராஜ¨ யோசித்தான், அப்பா கேட்கவில்லை என்று நிஜம் சொன்னால். வரதராஜ¨வையும் போகாதே என்று செய்வாள். நேரடியாய் இல்லையெனினும் மறைமுகமாய் செய்வாள்.

''கேட்டார்.''

''போய் பார்த்துட்டு வரட்டுமா?''

''குழந்தையையும் பாக்கணுமாம்.''

''ஒரு தடவை போலாம். ஆஸ்பத்திரி போறது குழந்தையோட நல்லதில்லையே. நோயாளிகள் இருக்கிற இடம். ஒரு தடவை கூட்டிண்டு போகட்டுமா?''

''போ. ஆனா சுபி... எங்கப்பா குணம் உனக்குத் தெரியும். பின்னால இதைச் சொன்னார் அதைச் சொன்னாருன்னு வருத்தப்படாதே.''

''வயசானவர் அப்படித்தான் இருப்பார். எனக்குத் தெரியாதா... என்னை எங்கேன்னு கேட்டாரில்லையா?''

''கேட்டார், எப்படி போகப் போற?''

''நீங்க ஆபீஸ் கிளம்புங்க. நான் வரலை. இன்னிக்கு அவரைப் பார்த்துட்டு வீட்டுக்கு வந்துடறேன்.''

''கடைக்கு வா, அது இதுன்னுவார். உன் கிட்டயம் கேட்பார்.'!

''அதுக்கு உடனே யெஸ்னு சொல்லிட முடியுமா. நம்ம பிராப்ளம் நமக்குத்தானே தெரியும்.''

''வற்புறுத்தினா?''

''வரமுடியாது... பிரச்சினை இருக்குன்னு சொல்லறது.''

''என்ன பிரச்சினைன்னு கேட்டா?''

''காம்ப்படீஷன் ஜாஸ்தி, கஷ்டப்படறோம்னு சொல்றது.''

''காசு தூக்கி விட்டெறிவார் சுபி.''

சுப்புலட்சுமிக்கு உள்ளே சந்தோஷம் மலர்ந்தது.

''பார்ப்போம்.''

''பார்ப்போம்னு சொல்லிட்டு மாட்டிக்காத. உங்கப்பாவைத்தூக்கி எறிஞ்சு போட்டு இருபதாயிரம் வாங்கின மாதிரி வாங்கிடலாம்னு பார்க்காத. செலவழிக்கிற ஒவ்வொரு பைசாவுக்கும் பலன் எதிர்பார்க்கிறவர் எங்கப்பா.''

''என்ன எதிர்பார்ப்புன்னு தெரியாதேயா போகும்?''

''அவர் பின்ற வலையை உன்னால கண்டுபிடிக்க முடியாது. எது வலைன்னு தெரியாது.''

''நான் ஒண்ணும் கமிட் பண்ணிக்கலை. நீங்க தைரியமா போகலாம் ஆபீஸுக்கு.''

''வீட்டுக்கு வந்து போன் பண்ணு.''

வராண்டாவில் எதிர் கோடியில் அவள் வருகையை ஞானம்பாள் பார்த்து விட்டாள்.

''உங்க மருமக வருது குழந்தையோட.''

''எங்கே?'' - அவர் ஆவலாய் எழுந்தார்.

''ஐயோ... பேசாம படுங்க, கண்ணை மூடிக்கிட்டு.''

கண் மூடிக் கொண்டார்.

மெல்லிய பவுடர் நறுமணம் நாசிக்கு வந்தது.

''வாம்மா...'' - ஞானம்பாள் வரவேற்பது காதில் வந்தது.

''எப்படி இருக்கு இப்போ?''

''பயமில்லை. ஆனா, நடமாடக் கூடாதுன்னுட்டார்.''

''ஸலைன் வச்சிருக்கு.''

''பலஹீனம். அதனால குளுக்கோஸ் ஏத்தறாங்க.''

''கன்னுக்குட்டி வாடா இங்க! தாத்தா பாருடா.'' ஞானம்பாள் குழந்தையை வாங்கி முத்தமிட்டு அவருக்கு அருகே எடுத்துப் போனாள்.

பெரியவர் உடல் மெத்து மெத்தென குஞ்சுக் கைகள் முகம்பட ஏங்கியது.

பட்டது.

சில்லென்று குழந்தை முகம் முத்தினான்.

ஸ்ரீராமுலு கண் விழித்தார். இடது கையால் குழந்தையை அணைத்துக் கொண்டார். தலையைத் தடவினார். நிமிர்ந்து மருமகளை நோக்கி 'வாம்மா' என்று தலையசைத்தார்.

''என்ன இப்படி திடீர்னு படுத்திட்டீங்க?''

''போற வேளை வந்துட்டுதும்மா.''

''ச்சே... ச்சே... அதெல்லாம் ஒண்ணும் ஆவாது.''

''இல்ல தாயே... உடம்பு சொல்பேச்சு கேட்கலை.''

''உங்களுக்கு மனசுல ஏதோ வேதனை. கடை திறக்கறபோது கூட கவனிச்சேன். ரொம்ப டென்ஷனா இருந்தீங்க.''

''எப்பவும் - டென்ஷன்தான்.'' ஞானாம்பா ஒத்து ஊதினாள்.

''லட்ச லட்சமா புரள்ற வியாபாரம். ஒரு நாளைக்கு இருபதாயிரம் முப்பதாயிரம் பிஸினஸ் பண்ற இடம்.''

''கோல்ட் மார்க்கெட் டல்லுங்கறாங்களே...''

''நல்லா இருக்கேன்னு வெளியே சொல்ற காலமா இது? சொன்னா விடுவானா? டல்லுன்னுதான் வெளிய சொல்லணும். எப்பவும் போல குறைவில்லாத நடக்குது.''

''நகை வாங்கறது குறைஞ்சுடலையா. ஜனங்க வீடு டி.வி-ன்னு வாங்கறதுகளே தவிர...''

''ஒரு நாளும் குறையாது. முன்ன தங்க நகை போடறது சிலர்தான். இப்ப எல்லா பொம்பளைங்களும் போடறாங்க. பரவலாயிடுச்சு குறைஞ்சபட்சம் ஒவ்வொரு பொம்பளை கிட்டயும் இரண்டு கிராம் தங்கம் இருக்கும். முன்ன, குறிப்பிட்ட சில பேரை மட்டும் நம்பி இருந்தது வியாபாரம். இப்ப எல்லா ஜனங்களும் நகை போடறாங்க. நூத்து நாப்பது கடை இருந்த மெட்ராஸ்ல அம்பது வருஷத்துல இரண்டாயிரத்தைந்நூறு கடையாயிடுச்சு. விக்காதயா திறப்பாங்க.''

''பையிங் கப்பாஸிடி.''

''அதிகமாயிடுச்சும்மா. பொம்பளைங்க வேலைக்குப் போக ஆரம்பிச்சதுல இந்த வியாபாரம் நல்லா நின்னுச்சு.''

''எனக்கு இது பத்தி தெரிஞ்சுக்கணும்னு ரொம்ப ஆசை. அவர் பேச மாட்டார் நகை பத்தி.''

''உனக்கு என்ன தெரியணும் கேளு, நான் சொல்லித் தரேன்.''

''இருபத்திநாலு கேரட்ன்றது.''

''நூத்திதொண்ணூத்தொம்பதுக்கு பேர் இருபத்தி நாலு கேரட் விக்கிறதில்லை. அதாவது நகை மேல இருபத்திநாலு கேரட் இருக்கும். உள்ளாற பதினெட்டு கேரெட்தான்.''

''அப்ப இது இருபத்திநாலு இல்லையா?''

''எங்க செய்தது?''

''அவள் கடை பெயர் சொன்னாள்.''

''நிச்சயமா இல்லை.''

''இதோ பார். இதுதான் இருபத்திநாலு கேரட்.''

கழுத்து புலிநகச் செயின் கழட்டி கொடுத்தார். ''.அதையும் இதையும் பக்கத்துல வச்சு உத்துப் பார்.''

''வித்தியாசம் தெரியலையே?''

''உனக்குத் தெரியாது. எனக்கு தெரியும்.''

''இந்தாங்க.''


''வேணாம்.''

''இது உங்க செயின்தானே? இந்தாங்க.''

''உனக்கு வச்சுக்கம்மா. என்கிட்ட வேற இருக்கு?''

''ஐயோ... அவர் திட்டுவார். ஆறு பவுன் இருக்கும். ஸாரி, இது வேண்டாம். ஏற்கெனவே...'' - பதட்டமானாள்.

அவள் பதட்டம் அவருக்குப் பிடித்திருந்தது.



தாயி, உன் மேல எனக்குக் கோவம் இருந்தது உண்மைதான். எல்லாத் தகப்பனுக்கும் தாய்க்கும் இதுவே கோவம் இருக்கத்தான் செய்யும். நாளைக்கு உன் புள்ளை கல்யாணமாயிடுச்சும்மா எனக்குன்னு வந்து நிக்கிறபோது உனக்கும் இந்த கோவம் எப்படின்னு புரியும். வேணாம் உனக்கு இந்த வேதனை வேணாம். ஆனா, என் பேரப்புள்ளை யோட உன்னைப் பார்த்தப்போ மகாலட்சுமி மாதிரி இருந்தது. உனக்கும் அங்கேயே நகை எடுத்து குடுத்திருப்பேன். வேணாம் போடான்னு தூக்கிப் போட்டுடுவியேன்னு...?''

''ச்சே...! தங்க நகையை யாராவது தூக்கிப் போடுவாளா? உங்க புள்ளை உங்களோட ஒட்டலை. நான் எப்படி வர முடியும், சொல்லுங்கோ அவருக்கு வியாபாரத்துல இஷ்டமேயில்லை. கம்ப்யூட்டர்தான். இதை எப்படி விருத்தி பண்றதுன்னுதான் எந்த நேரமும் யோசனை. வர்ற காசெல்லாம் அதுலதான் போடறாரே ஒழிய...''

''அம்மா, நான் எட்டாவது வரை படிச்சேன். வர்ற காசெல்லாம் அதுல போட்டு என்ன எடுக்கறீங்க. நீயும் வியாபாரிதானே. எதுவோ விக்கறவங்கதானே. எவ்வளவு போடறீங்க... எவ்வளவு லாபம். எத்தினி மறுமுதல்... எனக்குப் புரியும்படி சொல்லு.''

''என்னத்தச்சொல்ல...?''மனசு உள்ளேநொந்துகொண்டது. கிழவரைப் பிடித்து கம்ப்யூட்டரில் போட்டால் என்ன. பண முதலீடு கேட்டால் என்ன? கூடாது, இப்போது கேட்கக் கூடாது. ராஜ¤வைக் கேட்காமல் எதுவும் செய்யக் கூடாது.

''ஒத்தைக்கு இரட்டை வருது. ஆனா, காம்ப்டீஸன் அதிகமாயிட்டிருக்கு. கஸ்டமரை பிடிச்சு வச்சுக்க ஜகஜாலம் செய்யவேண்டியிருக்கு.''

''தேவையா... நீயும் ஓடி, அவனும் ஓடி இந்தப் புள்ளய பலைக்காரிக்கிட்ட விட்டு தேவையா இது? உட்கார்ந்து ம்பாதிக்கிற மாதிரி எவ்வளவு பெரிய இடம். இருக்கிறப்ப இந்த ஆட்டம் வேணுமா? நான் கடமுடன்னுதான் இருப்பேன். என் வளர்ப்பு, என் குணம் அப்படி. இங்கிலீஷ் தெரியாது. தெலுங்கு, தமிழ்தான். 'இங்க வாடா'ன்னா ட்ட மாதிரி இருக்கும். இதையே இங்கிலீஷ்ல சொன்னா இதமா நிக்கும். எனக்குச் சத்தம் போட்டு பேசிப் பழக்கம். தெலுங்குல பேசினா சண்டை மாதிரி தோணுது.''

''நீங்க அவர்கிட்ட பேசறதெல்லாம் என்கிட்ட பேசினா ப்படி...''

''நான் பேசறதா இல்லையம்மா. ஆனா ஒண்ணு நிச்சயம். ஆயிரம் ஆனாலும் வரதராஜு என் புள்ளை. சொத்த இரண்டா பிரிச்சு வச்சிருக்கேன். நான் செத்த பிறகாவது அவனை வந்து அனுபவிக்கச் சொல்லு. அவன் கடையை டுத்து நடத்தினாலும் சரி, கழட்டி கம்ப்யூட்டர்ல போட்டாலும் சரி.''

''ஐயோ! என்ன இப்படியெல்லாம் பேசிண்டு? யாருக்கு வேணும் இப்ப பணமும் சொத்தும்? மனுஷா நன்னா இருந்தா சரி, இதோ உங்க மூணாவது புள்ளை கடை திறக்கறேன்னு இவங்களோட வந்தான். எத்தனை சந்தோஷமா இருந்தது தெரியுமா? வளையல் நெரிசலை நேர் பண்ணியதும், பாலீஷ் போட்டதும் தேஞ்ச நகையை நான் மாத்தித் தரேன்னதும் எத்தனை இதமா இருந்தது மனசுக்கு?''

'மூணாவது புள்ளை' என்கிற வாசகம் ஸ்ரீராமுலுக்குப் பிடிக்கவில்லை. க்ஷண நேரம் முகம் சுருங்கி இயல்புக்கு மீண்டது. ஞானம்பாளின் கூர்மையான கண்கள் இந்த மாற்றத்தைக் கண்டு கொண்டன. 'அப்படி மூஞ்சி சுருக்கிற

மாதிரி ஆயிட்டமா நாங்க? உன்னைய வைக்கிற இடத்துல வைக்கறேன், வா' உள்ள வெஞ்சினம் தோன்றி அடங்கியது. மாறாத புன்முறுவலுடன் அமைதியாய் நின்று கொண்டிருந்தாள்.

''அதெல்லாம் கத்துக்கிட்டு வர்றதா சுப்புலட்சுமி சாப்பாடு, ரத்தம், அவரு செஞ்ச தொழிலு புள்ளைக்கு இல்லாதயா போயிடும்? அதனாலதான் அவரு கிடந்து தவிக்கிறாரு. கடையைக் காப்பாத்த ஆளில்லையே, இரண்டு தலைமுறையாகஷ்டப்பட்டு வளர்த்தமேன்னு புலம்பறாரு.''

''புரியறது. அவர் மனசு மாறணும்.''

''மாத்த நீ முயற்சி பண்ணு சுப்புலட்சுமி. நகைக்கடைல உட்கார்றது அவமானமில்லைன்னு சொல்லு.''

''சொல்றேன். கிளம்பட்டா. நாழியாறது. இந்தச் செயின் வேண்டாமே!''

''அத நீ கழட்டக்கூடாது!'' ஸ்ரீராமுலு அதட்டினார். ''ஒண்ணு நீ நினைவுல வச்சுக்கம்மா. இது இந்த நகை எனக்கு ஒரு விஷயமே இல்லை. நீ சரிபண்ணிக்கொண்டா உன் புருஷனை, இந்த மாதிரி நூறு நகை உன் மடில கிடக்கும்.''

''அறநூறு பவுனா... மூளை கம்ப்யூட்டராய் கணக்குப் போட்டது. வியந்தது. உள்ளே ஆசைக் காற்று வீசி, சுயநலத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. உள்ளே எரிந்த சுயநலப்பார்வை வழியே வியப்புப் புகையாய் படர, ஸ்ரீராமுலுக்கு 'இந்த மலையாளத்துப் பொம்பளைய மடக்கிடலாம்' என்கிற நம்பிக்கை வந்தது.

பேரனை அணைத்து முத்தம் கொடுத்து மருமகளிடம் கொடுத்தார். பவ்யமாய்க் கைகூப்பினார்.

அறநூறு பவுன்... பவுன் இரண்டாயிரத்து ஐந்நூறுன்னா பதினைந்து லட்சம்... என் மடியில மட்டும் இன்னும் வீடு,

வாசல், கடை, கார் என்று பிரித்தால் சுலபமாய் எட்டு, பத்து லட்சம் தேறும். இன்னும் கூடவே கிடைக்கலாம். ராஜுவுக்குப் பிடிக்குமா? எப்படித் துவக்குவது?

மாலை வரை புருஷன் வரவுக்கு காத்திருந்தாள். வந்ததும் உபசரித்தாள், களைப்பு நீங்கி அவன் குழந்தையோடு விளையாடத் துவங்கிய போது பேச்செடுத்தாள்.

''இன்னிக்கு புது காண்ட்ராக்ட வந்திருக்கு, சுபி. அப்பாவுக்கு உடம்பு எப்படி? என்னசமாசாரம்னு?'' பர்ஸனலா ஆரம்பிச்சு, ''ஒரு பெட்டர் அட்மாஸ்ஃபியர் கிடைச்சுது. பார்ட்டிய கன்வின்ஸ் பண்ண ஈஸியா இருந்தது. இனிஷியலா லட்ச ரூபா வரும். அஞ்சு வருஷ காண்ட்ராக்ட். மொத்த தொழிற்சாலையின் கணக்கும் நம்ம கம்ப்யூட்டர்லதான் செய்யப் போறோம். வளர்ந்து வர்ற கம்பெனி வருஷ முடிவுல இரண்டு இரண்டரை ஈஸியா பில் பண்ணலாம். வருஷா வருஷம் கூட்டலாம். இந்த ஜாப்ப வச்சு இன்னும் பலது பிடிச்சுடலாம்.''

அப்பாவின் நகை காட்டினாள். விவரம் சொன்னாள்.

''மறுபடி நகையா? குழந்தைக்குப் போட்டாரு சரி! உனக்கெதுக்கு...? கழட்டக்கூடாதுன்னா அப்படியே வர்றதா?''

''என்ன செய்யறது ராஜு.''

''ஓகே. கழட்ட வேண்டாம். அப்பாக்கு அந்த விலைக்கு ஒரு செக் அனுப்பலாம்.''

''ஏய்... எப்படி?''

''வொர்க் அட்வான்ஸ் முப்பதாயிரம் செக்!'' பெருமை பிடிபடதூக்கிக் காட்டினான்.

அவளுக்கு சந்தோஷமாகவும் இருந்தது. கவலை யாகவும் இருந்தது. அறநூறு பவுன் நகைகள் வேண்டும் என்றும் தோன்றியது. இங்கே இந்த இரண்டரை லட்சம் சும்மா

வராது, வருடம் பூராவும் நாயாய் உழைத்தால் முப்பது நாப்பது ஐம்பது என்று பிய்த்து பிய்த்து தரப்படும். ஆனால், எந்த சிரமமும் இல்லாமல் பரம்பரைச் சொத்தாய் பாத்தியதை உள்ள சொத்தாய் பதினைந்தரை லட்சம் வருகிறேன் என்கிறது.

''அப்பா வேண்டாம்னே வச்சுட்டீங்களா?''

''அது நல்லது.''

''ஏன்?''

''எங்கப்பாவ ஒரு மணி நேரம்கூட உன்னால தாங்க முடியாது.''

''இல்லப்பா. நான் இன்னிக்கு நாப்பது நிமிஷம் இருந்தேன். நல்லா பேசினார்.''

''அது வேற முகம். வீட்ல வேற முகம்.''

''கடிச்சா தின்னுட முடியும்?''

''அவசியமானா அதையும் செய்வாரு.''

''ரொம்ப பயமுறுத்தறீங்க. இல்லை பயந்து பேசறீங்க.''

''நகை கொடுத்த சந்தோஷம் தாங்காத எங்கப்பாரை சப்போர்ட் பண்றியா? லுக் ஹியர் சுபி! எங்கப்பா இப்படித் தான். என் பொண்டாட்டிய திட்டினா என்னான்னு நான் வுட்டறலாம். நீ பொறுத்துக்கலாம். ஆனா என் புள்ளை பொறுத்துக்கமாட்டான். தேவையும் இல்லை. எந்தச் சூழ்நிலையிலும், நாம இனி வளர்ந்துடலாம் இந்தக் குழந்தைக்கு ஏன் அந்த இடம்? அந்த சந்து சவுகார்பேட்டை... கூச்சல் கலாட்டா... வேணாம் சுபி. ஆசைப்படாதே.''

''ஈவினிங், அப்பா பார்க்கப் போறீங்களா?''

''யெஸ்!''

''இந்த செயினை அவர்கிட்டேயே கொடுத்துடுங்கோ.''

''அது நல்லாருக்காதே.''

''நீங்க வேணாம்னு சொன்ன பிறகு நான் எப்படி போட்டுக்கறது.''

''கோவமா சுபி?''

''இல்லப்பா நான் வேற விதமான மனசால நினைச்சேன். இது சரிப்படாதுன்னு உங்களுக்குத் தோணித்துன்னா ஓகே! யூ நோ பெட்டர்.''

''அதுக்காக செயின் திருப்பணுமா?''

''வேற?''

''செக் தருவோம். எத்தனை கிராம்?''

''ஆறு பவுன். புலி நகம் வேற போட்டுருக்கு.''

''பதிமூணு, பதினாலு இருக்கும்... பழைய நகைன்னு மதிப்பு போட்டா.''

''சரி... பத்து ரூபா கொடுங்களேன்.''

பத்தாயிரம் ரூபாய்க்கு செக் எழுதி பையில் வைத்துக் கொண்டான். ''சுபி, அப்பாவ நகர்த்தி வைக்கறது உனக்கு வருத்தம் இல்லையா...?''

''இருந்தது, ஆனால் அவளால் வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை. 'மறுபடி ஒரு சந்தர்ப்பம் வரும். பார்ப்போம்' என்று யோசித்தாள். ஆக மொத்தம் சங்கிலி என்கிட்டதான் இருக்கும் என்று நினைத்தாள். புருஷன் கொடுத்தா என்ன... மாமனார் கொடுத்தா என்ன... எனக்கு வேண்டியது நகை. கழுத்து நிறைய நகை. இன்னிக்கு எங்க போகலாம்? பீச்சுக்கு... வேணாம். கோவில் போலாம். நிறைய லேடீஸ் வருவார்கள். அந்த ரங்கசாமி பையனைக் கூப்பிட்டு இந்த புலி நகம் எடுத்துட்டு வேற டாலர் போட்டுத் தரியான்னு கேட்கணும். ஆறு பவுன்... நல்ல காத்திரமா இருக்கு. கழுத்து நிறைஞ்சு கிடக்கு.''

அவன் படியிறங்கி ஆஸ்பத்திரி நோக்கி நடந்தான். அப்பாவிடம் நலம் விசாரித்தான். கம்பெனிக்கு புது காண்ட்ராக்ட் வந்திருப்பது பற்றி சொன்னான். நல்ல லாபம் வரும் என்று நம்பிக்கை தெரிவித்தான். கஷ்டப்பட்டு பிடித்த பார்ட்டி என்று கர்வம் பொங்கச் சொன்னான். போகும் போது 'தப்பா எடுத்துக்காதீங்கப்பா' என்று அவர் சட்டைப் பையில் சொருகினான்.

''என்னடா இது?''

''செக்... பத்தாயிரத்துக்கு.''

''ஏன்?''

''சங்கிலி கொடுத்தியாமே?''

''பரிசுடா.''

''அதான் என் புள்ளைக்குக் கொடுத்தியே?''

''மருமகளுக்கு தரக்கூடாதா?''

''காரணமில்லாத எதுக்கு?''

''என்கிட்ட இருக்கு. தரேன்.''

''உன்கிட்ட இருக்கிறதெல்லாம் எனக்கு வேணும்னா நான் ஏன் தனியா வரேன். எனக்கிருக்கிறது எனக்குப் போதும்.''

''அசிங்கப்படுத்தறியே.''

''இல்லப்பா, வாங்கறதுதான் அசிங்கம்.''

''ஏண்டா?''

''எல்லாத்துக்கும் ஒரு அளவு வேணும்பா.''

''அப்பா புள்ளைக்கு நடுவுல கூடவா?''

''ஆமா.''

''என்ன அளவு...?''

''நாலு அடி தள்ளியே நிப்போம்.''

''காரணம்?''

''நீ வேற நான் வேற... உன் புத்தி வேற... என் புத்தி வேற. உன் தொழில் வேற. என் தொழில் வேற. உன் இடத்துல நீ பெரிய ஆள். என் இடத்துல நான் பெரிய ஆள்.''

''வரதராஜு.''

''ஐயம் ஸாரி. இது நம்ம ரெண்டு பேத்துக்கும் நல்லது. உடம்பு சரியில்லைன்னு போது பார்க்க வர ஒரு உணர்ச்சியாவது இருக்கும். இல்லேன்னா...?''

''இல்லேன்னா...?''

''அதுகூட விட்டுப் போகும். வேணாம்பா. நீ நல்லா இருக்கணும் நான் நல்லா இருக்கணும். இது விலகி இருந்தாதான் முடியும்.''

''திமிரு காட்டற பார்த்தியா?''

''இது திமிரு இல்லை. தன்னம்பிக்கை.''

''என் பேரப் புள்ளைகளை என்கிட்டேர்ந்து பிரிக்கிறியே.''

''இல்லப்பா எப்ப வேணா வா... கொஞ்சு. விளையாடு. அஞ்சோ பத்தோ கொடு. இரண்டுமணி நேரம் உட்கார்ந்துட்டு போ.''

''அப்ப வர மாட்டே.''

''எங்க?''

''கடைக்கு?''

''நிச்சயமா வர மாட்டேன்.''

ஸ்ரீராமுலு கண் மூடினார். அவர் பயங்கள் அவருள் பெரிதாயின. மனசு ஒருமுகப்படுத்தி அவைகளை உள்ளடக்கினார். சிரித்தார்.

''சரி, வராத. உன் இஷ்டம். எங்க இருந்தாலும் நல்லா இருந்தா சரி.''

''மனசு கஷ்டப்படுத்தியிருந்தா மன்னிச்சிடுப்பா.''

''கஷ்டம்தான். என்ன பண்றது, எனக்கு விதிச்சது தானே எனக்குக் கிடைக்கும்.''

''நாளைக்கு வந்து பாக்கறேன்.''

பதில் சொல்லவில்லை. கண்கள் மட்டும் அலைந்தன. மனசு கணக்குப் போட்டது.

அவன் தெளிவாய் இருக்கிறான் என்பது புரிந்து போயிற்று. இந்த பொம்பளைப் பேச்சு கேட்டு இந்த நாடகம் போட்டது பிசகு. ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடற மாட்டை பாடிக் கறக்கணும். அத விட்டுட்டு புல்லாங்குழல் ஊதினா... ஆடிப் பாடி ஊதிப் பாத்தாச்சு. இவன் மசியரதா தெரியலை. இனி அடி உதைதான். நொச்சென்று ஒரு தட்டு தட்டி விட வேண்டியதுதான். 'எப்படித் தட்ட' என்பதுதான் கேள்வி.

அதை இங்கே உட்கார்ந்து யோசிக்க முடியாது. சுவுகார்பேட்டை போய்விட வேண்டியதுதான். வந்த காரியம் நிறைவேறவில்லை. இங்கென்ன படுக்கை?

இடக்கையில் குத்தின சலைன் வாட்டரைப் பிய்த்து போட்டார். ஊசி குத்தின இடத்தில் ரத்தம் பொட்டு திரண்டு நின்றது. உற்றுப் பார்த்தார்.

என் ரத்தம் என்னை எதிர்க்கிறது. முறைத்துப் பார்க்கிறது. என் எதிரே மார் தட்டுகிறது. எப்படி அடிக்க? எப்படி அதட்ட? கை ரத்தம் மெல்ல வழிந்து கோடாய் உறைந்தது.

என் ரத்தம் என்னை மிரட்ட, அவன் ரத்தம் அவனை மிரட்டும்.

கரெக்ட். பொண்டாட்டி, புள்ளை, உத்தியோகம் இருக்கிற திமிரு தானே வரமாட்டேன்ற. பிரிச்சுட்டா?

எதைப் பிரிப்பது? அவன் உத்தியோகத்தையா. என்னால் முடியுமா? அவன் மனைவியையா? இல்லை

அவன் பிள்ளையைப் பிரிப்போம். எப்படி... எப்படி பிரிப்பது. மனசு வேகமாய் இயங்கியது.

''ஏய்...'' அதட்டினார்.

'என்னங்க.'' ஞானாம்பாள் உள்ளே வந்தாள்.

''பில் செட்டில் பண்ணிட்டு வீட்டுக்குப் போ. நான் சவுகார்பேட்டை போறேன்.''

''ஏங்க...?''

''சொன்னதைச் செய்.''

நூறு ரூபாய் காசு எடுத்துப் பையில் போட்டுக் கொண்டார். துண்டு உதறி வெளியே கிளம்பினார். படியிறங்கினார். பின்னால் ஓடி வந்த ஞானம்பாளைத் தடுத்து நிறுத்தினார்.

''சொன்னதைச் செய்.'' அதட்டினார்.

அவர் மனசுள் பெரிய வலை நெசவு ஆரம்பித்து விட்டது

வரதராஜுக்கு நான் அவசியம் தேவைப்படணும். தேவைப்படற அளவு ஒரு காரியம் நடக்கணும்.

என் பிடிப்பை, என் பலத்தை சவுகார்பேட்டையில் காட்ட எனக்கு ஒரு நல்ல துணை வேண்டும். வரதராஜுவுக்கு ஒரு நல்ல பெயர் இங்கு இருக்கிறது. அவன் துணை அவசியம்.

சவுகார்பேட்டையில் புகுந்துவிட்ட கள்ளக் கடத்தல் ஆட்களை, வலிவு கூடின போதை மருந்து ஆட்களை எதிர்க்கத் துவங்கிட்ட சக வியாபாரிகளை, பேட்டை ரவுடிகளை மறுபடி முழு பலத்துடன் அடக்க இவன் அவசியம்.

அரை நாள், ஒரு நாள் ஒரு வாரம் வந்து இருந்தா போதாது. இரண்டு மாதம் தங்க வேண்டும். அந்த நேரம் மருமகளை நகை காட்டி வீழ்த்தலாம். மகனைத்தன் பலம் காட்டி மாற்றலாம். இங்கே பகடைக்காய் பேரன்,

எப்படிச் செய்ய...? என்ன செய்ய? பையனை மகனைப் பிரிக்க முடியுமா...? எப்படி பிரிக்க...? ஆள் விட்டு எடுத்து வரச் சொல்வோமா... கடத்தி வரச் சொல்வோமா...? வந்து எங்கே வைக்க... என் வீட்டிலா? முடியாது.

''ஞானம் வீட்டில்...''

''ஞானம் வீட்டுக்கு வரதராஜு வரமாட்டான் இல்லை. வந்தாலும் வருவான். அம்மா அப்பாவைப் பிரிந்து பிள்ளை வாடாது இருக்குமா? ஜுரம் வந்து மனசு கிலேசமாகி நோகாது இருக்குமா? ஞானத்திடம் பிள்ளை ஒட்டிக் கொண்டு விட்டது.''

''ஞானம் இதில் வேண்டும். இதில் பங்கு பெற வேண்டும். ஒப்புக் கொள்வாளா? உன் நல்லதுக்கு சொல்றேன் என்று சொல்ல வேண்டும். அவள் பிள்ளையை கூட நாலு நகை கொடுத்து மடக்கலாம்.''

''ஞானம் வீடு பெரிய வீடு. பின்னே இரண்டு குடித்தனக்காரர்கள் காலி பண்ணச் சொல்வோம். பகடி கொடுத்து நகர்த்துவோம். மறுத்தால் ஆள் வைத்து மிரட்டி காலி பண்ண வைப்போம். அந்த வீட்டில் பிள்ளையை வைத்து விடுவோம். ஞானம் காவல் காக்கட்டும், உடந்தை யாகட்டும்.''

''யாரை விட்டு பிள்ளையைத் தூக்கி வரச் சொல்வது? எவனை வேண்டுமானாலும் அனுப்பலாம். வெளியூர் ஆள் கூப்பிடலாம், போலீஸ் கேஸ் ஆனாலும் புரியாமல் போகும்.''

''பிள்ளையைக் காணோம் என்று என்னிடம் மகன் வரட்டும். 'நான் தேடித் தருகிறேன்' என்று தங்க வைக்கலாம்.''

''ஏன் பிள்ளை காணாமல் போனது?'' என்று யோசித்தால்...?''

என்னைத் தொந்தரவு செய்கிறார்கள் என் எதிரிகள் என்று சொல்லலாமா? எனக்கு எதிரிகள் அதிகம் என்று அழலாமா? இவன்தான் காரணம் என்று கள்ளக்கடத்தல் காரனை கைக்காட்டலாமா? எனக்கு துணையாய் இரு. நான் அவனை ஒழிக்கிறேன் என்று நாடகம் போடலாமா? நாடகம் போட முடியுமா? முடியும். இந்த இரண்டு நாளும் ஒரு நாடகம் தானே போட்டோம். இரண்டு மாசம் போட முடியாதா?

இது சரியா? இந்தத் திட்டம் சரியாக வருமா?

இல்லைக் கொக்குத் தலையில் வெண்ணெய் விஷயமா? யோசி... யோசி புத்தி விரட்டினார். புத்தி சிலந்தி இழையாய் வலை பின்னிற்று. நடுவே அசைவின்றி இரைக்குக் காத்திருந்தது.



ஒரு பல மாடிக் கட்டடத்தில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. பத்தாவது மாடியில் படுத்து இருந்தவன் புகை உணர்ந்து திடுக்கிட்டு விழித்தான். சுற்றிலும் தீ பரவியிருப்பது தெரிந்தது.

ஓடி ஜன்னல் கதவுகள் திறந்தான். ஜன்னலுக்கு கீழே இரண்டங்குல பைப் எதிர்க் கட்டடத்திற்கு போடப் பட்டிருப்பது பார்த்தான். மடமடவென்று பைப்பில் நடந்து எதிர்க் கட்டடத்திற்கு போய் ஜாக்கிரதை ஆனான்.

'இத்தனை உயரத்தில் இரண்டங்குல குழாயில் நடந்து எப்படி எதிர்ப்பக்கம் போனாய்?' எல்லோரும் வியந்து கேட்டார்கள். தீயணைத்த பிறகு விசாரித்தார்கள். நடந்த

வனுக்குத் தெரியவில்லை. நாமா நடந்தோம்? அவனுக்கும் வியப்பு!

புத்தி இவ்விதம்தான். எறும்புகூட நசுக்காதவனுக்கும் கொலை வெறி வரும். வெட்டிக் கொல்வதே வாடிக்கையாக உள்ளவனுக்குள் எங்கோ ஈரம் இருக்கும். இரக்கம் இருக்கம்.

ஸ்ரீராமுலு வியந்தார். ஒரு ரூபாய்க்கு வாங்கி இரண்டு ரூபாய்க்கு விற்கிற சாமர்த்தியம்தான். கடைக்கு வந்த ஆளை எழுந்து போக விடாத பேச்சும், நடவடிக்கையும் உள்ளவர் தான். கள்ளக்கடத்தல்காரரும் போதை மருந்து ஆட்களும் சவுகார்பேட்டைக்குள் வந்துவிட்டார்களே என்கிற சாதாரண கவலை, அந்தக் கவலையின் விளைவு தன் பேரனையே கடத்தத் தோன்றியது. எப்போது, எந்த க்ஷணம் என்பது அவருக்கும் புரியவில்லை. பேரன் மீது ஆசையாய் இப்படி யோசிக்கிறோமோ? என்று சிந்தித்தார். இல்லை பேரனைப் பிடித்திருக்கிறது. ஆனால், கொள்ளை ஆசை என்பது இல்லை.

பிள்ளை மீது பிடிப்போ அவன் விலக விலக வரும் வேதனையோ? இல்லை. அவன் செத்துப் போனால் நெஞ்சு துக்கப்படும். இருக்கிறான் எங்கோ என்பதால் கிடக்கட்டும் கழுதை என்றுதான் தோன்றுகிறது. பிறகு ஏன் அவன் இங்கே வரவேண்டும் என்று விரும்புகிறோம். எதற்கு அலைகிறோம்? ஏன் கெஞ்சுகிறோம்? ஏன் திட்டமிடுகிறோம்.

முப்பத்தி இரண்டு வருஷ அரசவை கலையும். மந்திரிகள் கட்சி மாறுவார்கள், 'நான் மாறப் போகிறேன், முடிந்தால் தடுத்து நிறுத்திக் கொள்' என்று சவால் விடுவார்கள். வேறு ஆளைத் தலைவன் என்று வலம் வருவார்கள். ஸ்ரீராமுலு பழைய பெருங்காய டப்பா, ஒரு தட்டு தட்டுங்க விழுந்திடுவார் என்பார்கள். அடி ஆட்களும் பணபலமும் கொண்டவனை முன்னே அனுப்பி மிரட்டுவார்கள்.

''வர திங்கட்கிழமை யாரும்கடை திறக்கக்கூடாது.''

''ஏண்டா?''

''அன்னிக்கு காந்தி ஜெயந்தி.''

''காந்தி ஜெயந்திக்கு கடைய அடைக்கிற வழக்கமில்லையே.''

''இனிமே வழக்கம்.''

கிட்டத்தட்ட இப்படி ஒரு மிரட்டல் வந்தது

''மீறித் தொறந்தா தொறக்கற பார்ட்டிக்கு செக்யூரிட்டி கிடைக்காது. நடக்கற நல்லது கெட்டதுக்கு அவங்களே பொறுப்பு.''

ஸ்ரீராமுலு கண்மூடி யோசித்தார். சிரித்தார் ''இப்படியே எல்லார் கிட்டேயும் சொல்லிடேன்.''

சொல்லப்பட்டது. ஸ்ரீராமுலுவிடம் போன் போட்டு கேட்டார்கள். திங்கள் தன் கடை திறந்திருக்கும் என்று இவர் பதில் சொன்னார். அந்த திங்கள் அமாவாசை. எந்த நகை வியாபாரிக்கும் நல்ல நாளில் கடைமூட விருப்பமில்லை. கூட நாலு கஸ்டமர் வருகிற நாளில் காந்தி பெயர் சொல்லி அடைக்க விருப்பமில்லை.

''ஐயா தொறந்தா நாங்களும் திறப்போம். ஆனா, நல்லது கெட்டது நடந்தா...ன்னு மிரட்டறாங்களே.''

''பார்ப்போம் என்ன நடக்குதுன்னு.'' நூற்றுக்கு தொண்ணூறு பேர்கடை திறந்து காபந்துடன் இருக்க எதுவும் நடக்கவில்லை. மிரட்டியவனுக்கு வேண்டியவன்கூட பிற்பகலில் கடைதிறந்து உட்கார்ந்து கொண்டான்.

மிரட்டியவனுக்கு தேர்ந்தெடுத்த நேரம் தவறு என்பது பின்னர் புரிந்தது. மிரட்டிய ஆளுக்கு பக்க பலமாய் இருந்தவர்கள் அவனை 'முட்டாள்' என்று திட்டினார்கள். அந்த முறை கம்பீரமாய் தப்பியாயிற்று.

கொஞ்சம் அமைதியா இரு. ஸ்ரீராமுலுவ சரியான இடம் பார்த்து சாய்க்கணும். எங்கியாவது தப்புபண்ணுவாரு வியாபாரத்துல. அப்ப கவுத்தணும். போ, போய் புதுசா பெல்ட் வந்துருக்கு. வாங்கிறியான்னு கேளு. சிங்கப்பூர் பவுனுன்னு சொல்லு. விசாரி போ.

விசாரிப்பு வந்தது.

''அதெல்லாம் தப்பு. அப்படிப்பட்ட பொருளை வாங்கறதும் இல்லை, விக்கறதும் இல்லை.''

வலை கிழிந்து தொங்கியது.

கடை ஆட்களைக் கலைக்க முயற்சி செய்தார்கள்.

''தனியா கடை போடும்மா. வெளிலே கில்ட் வியாபாரமுன்னு போர்ட் போடு. உள்ள தனியா பொட்டி கட்டி உன் இஷ்டத்துக்கு ஸ்டாக் வை. ஸ்டாக் நான் தரேன். என்னது வித்து பத்து பர்ஸண்ட் எடுத்துக்க.''

''எத்தனை நாள் தருவான். தராது போனால் கில்ட் கடையில் என்ன வியாபாரம் ஆகும்? தந்த சரக்கில் தவறு இருந்தால் யார் பொறுப்பு? மேலே இருவத்தி நாலும் உள்ளே பதினெட்டு கேரட்டும் நகை செய்ய முடியாதா? அப்படி சரக்கு கஸ்டமர் கண்டுபிடித்தால் திருப்பி காசு தர வக்கு உண்டா?''

ஸ்ரீராமுலு அண்ட் சன்ஸ் சுகமான இடம். சுகமா இரு - அவர்களுக்குள்ளாகவே மறுத்துவிட்டார்கள். கடை போட்டிருந்தால் இன்னியோட ஆறுமாசம் என்று நப்பாசை மட்டும் அழியவில்லை. எங்களுக்கு எதுனா நல்லவழி செய்யணும் என்று கோரிக்கை வைக்க மறுக்கவில்லை.

இதுவே ஜீரணிக்க கஷ்டமாய் இருந்தது. இன்னும் என்னென்ன வருமோ என்கிற பயம் எழுந்தது.

கடையை வரதராஜு பார்த்துக் கொண்டால் தெருவில் இறங்கலாம். நாலு பக்கம் சுத்தி நடமாட்டங்கள் அறியலாம்.

கணித்து, கண்ணி வைத்து காட்டிக் கொடுக்கலாம். இந்த ஆள் தப்பு என்று எதிர்பிரசாரம் கடைகடையாய் செய்யலாம். தன் பலம் பெரும்பலம். கடையை மூடிவிட்டு இதைச் செய்ய முடியாது. அப்போது பேச்சு எடுபடாது. கடையை வைத்துக் கொண்டு இதைச் செய்ய முடியாது. அது ஜாக்கிரதை ஆகாது.

வரதராஜு வேண்டும். சுரேந்திரபாபு லாயக்கில்லாதவன். கடையில் அவனை வைப்பதைவிட கள்ளக்கடத்தல் காரனோடு சிநேகம் வைக்கலாம்.

வேறு வழியில்லை. வரதராஜு வேண்டும். ஞானம் சொன்ன நெஞ்சுவலி நாடகம். மயிலே மயிலே இறகு போடு என்கிற விதம். இது சரிப்படாது. உடனடியாய் வேலையாகாது.

ஏதேனும் படீரென்று வில் ஒடிந்த விதமாய் நடக்க வேண்டும். ஏதேனும் நடந்து அவன் இங்கே வந்துவிட வேண்டும். வந்து பத்து நாட்கள் தங்கினால் போதும். அந்த மலையாளத்துப் பெண்ணை பிடித்து விடலாம். இதவிட சவுகர்யமா உன் வீடு?' என்று காட்டி விடலாம் வீட்டில் உள்ள அத்தனை நகைகளையும் அவள் எதிரே போட்டு மயக்க மடைய வைக்கலாம்.

அந்தப் பெண் பணக்காரியே இல்லை. அது வெறும் பிளாஸ்டிக் டப்பா. எவர்சில்வர் டம்ளர். இங்கிலீஷில் டாம் டும் என்று பெயர் போட்டால் பிளாஸ்டிக் டப்பாவோ, எவர்சில்வரோ மதிப்பாகி விடுமா? நூற்றி எட்டு காசுமாலை கனம் தெரியுமா? தெரிந்தால் நகர மாட்டாள். தெரிய வைக்க வேண்டும்.

இதற்கு ஒரே வழி.

யோசித்தார்.

சுரேந்திரபாபு இதில் சம்பந்தப்படக்கூடாது. அவன் அம்மாவுக்கும் தெரியக்கூடாது. ஞானத்திடம் சொல்லலாமா?

ரங்கசாமியை துணைக்கு வைத்துக் கொள்ளலாமா? ஞானத்தை நம்ப முடியாது. இனி இதை வைத்து அவ்வப் போது காசு கேட்டால் தராது இருக்க முடியாது.

ஆள் தயார் செய்ய வேண்டும்.

யார் ஆள்? எங்க நம்பலாம்? என் பேரப்பிள்ளையை யாரிடம் நம்பித் தரலாம். கடையில் வேலை செய்கிற எத்திராஜுலு? கரெக்ட், சரியான ஆள். ஐம்பத்திநாலு வயசு. கடை மொத்தமும் சில சமயம் ஒப்படைத்து போவது உண்டு. ஒரு துரும்பு குறையாது. தனியே கடைவைக்கும் தணியாத ஆசை இருக்கிறது.

''கடை வைக்க உதவி செய்கிறேன். தனியே பணம் தருகிறேன், நீ, உன் மனைவி இரண்டு பேரும் இடம் மாறி விடுங்கள். நான் சொல்லும் இடத்தில் குடியேறுங்கள். நான் கொண்டு வந்து தருவதை பார்த்துக் கொள்ளுங்கள் ஒரு வாரமோ, ஒரு மாசமோ என்னை நம்பி வைத்திருங்கள்.''

''விஷயம் வெற்றியாய் முடியட்டும். உன்னைச் சவரனில் குளிப்பாட்டுகிறேன்.''

யாரை அனுப்பலாம். நகரத்து அடியாட்கள் வேண்டாம். பொன்னேரி பக்கம் இருக்கிறவனைக் கூப்பிடலாம். அங்கே என் நிலம் நீச்சு கவனிக்கிற மணி, கண்ணபிரான், பெருமாள்?

பெருமாள் வண்டி ஓட்டட்டும். மணி குழந்தையை எடுத்துட்டு வரட்டும். கண்ணபிரான் துணைக்கு போகட்டும்.

மாட்டினால்? வேற லாயர் வைத்து விடுவித்து விடுவோம். செலவு செய்வோம்.

பழியை யார் மேல் போடுவது?

ரதன் சந்தாவத் சவுக்கார். அவன்தான் ரூபாய் சேர்க்கிறான். அவன்தான் பேண்ட் துணியிலிருந்து பிஸ்கட்

வரை விற்கிறான். பேனாவிலிருந்து பிரிண்டிங் இங்க் வரை சிங்கப்பூர் சரக்காய் வைத்திருக்கிறான்.

மசால் வடை வியாபாரம் பண்ணா கூட பாதிக்கு பாதி போட்டு எடுக்கலாம். பத்து பர்ஸண்ட் தங்க வியாபாரத்தில் வராது என்று பேசுகிறான்.

நிறைய மார்வாடிகளை மடக்கி பல இடங்களை பல பெயரில் மடக்கிப் போட்டு விட்டான். பழக்கடை ஆட்களை அவன் பக்கம் இழுக்கிறான். சின்ன வியாபாரிகளுக்கும் கேட்ட போது கடன் தருகிறான்.

பெரிய வியாபாரியையும் அழைத்து விருந்து வைக்கிறான். ஸ்ரீராமுலு கடை தாண்டும்போதெல்லாம் பிள்ஹாரன் அடிக்கிறான்.

அவனை எதிர்கொள்ள வேண்டியது மிக அவசியம். அவனை ஆடவொட்டாமல் அடிப்பது மிக முக்கியம். நாலு பக்கமும் ஆட்கள் விட்டு அவன் நடமாட்டம் தெரிந்து அவன் ஆட்களை அவன் அறியாது விலைக்கு வாங்கி ஒரு மூலையில் அவனை ஆணி அடித்து தீர வேண்டும்

திட்டமிட்டு, திட்டமிட்டு அங்குலம் அங்குலமாய் நகர வேண்டும்.

கடையை வரதராஜுவிடம் கொடுத்துவிட்டு நெஞ்சு வலிக்கிறது என்று பெயர் சொல்லி மொத்த கேஸுகளையும் மெண்ணையில் உட்கார்ந்தே செய்ய வேண்டும். எத்தனை செலவானாலும் பரவாயில்லை என்று துவங்க வேண்டும்.

என்ன தவறு வரும்? பிள்ளை கடத்துவதில் குழப்பம் வரலாம். அவன் அடையாளம் தெரிந்து விடலாம். போலீஸ் நுழையும், மைலாப்பூர் போலீஸுக்கு பொன்னேரி மணி தெரிந்திருக்க நியாயமில்லை.

அங்கேயே காணாமல் போன உடனேயே, எனக்கு ரதன் சந்த் மீது சந்தேகம் என்று பேர் சொல்லிவிட வேண்டும் எழுதிகூடக் கொடுக்கலாம். அவனை விசாரிக்கும்படி வைக்கலாம். கலவரப்படுத்தலாம், போய் அவன் வீட்டு வாசலில் கத்திவிட்டுக் கூட வரலாம்.

சந்தாவத் என்னைச் சந்தேகப்படுவானா? அது முட்டாள் சவுகார். கோபப்படுவான். கடை வாசல் அடித்து உடைப்பான். அதை வைத்து அனுதாபம் தேட வேண்டும். நாளைக்கு உங்களுக்கும், இந்த கதிதான். இவன் கூட சேர்ந்தால் என்று பயமுறுத்த வேண்டும்.

பல மாங்காய்கள் விழும். ஒரே கல்லில் பல பழங்கள் விழும். கல் ஒழுங்காய் நினைத்தபடி பட்டால்!

கல் படுமா?

பொன்னேரி மணி போதுமா? மணி என்ன கூலி கேட்பான்?

பத்தாயிரம் பதினைந்து தரலாம். காசாய் தரக் கூடாது. காட்டி விடுவார்கள். உடுத்தி பேசி குடித்து நடமாடி விடுவார்கள். ஆளுக்கு ஏக்கர் நிலம் பொன்னேரியில் எழுதி வைத்து விடலாம். கைசெலவுக்கு கொஞ்சம் காசு தரலாம். எல்லாம் நல்லபடி முடிந்தால் மோதிரம் போடலாம்.

எத்திராஜுலு பேச மாட்டார். அவர் மனைவியை அழைத்து மிரட்டிவிட வேண்டும்.

எங்கே வைப்பது பிள்ளையை? பொன்னேரியிலா? இல்லை, அருகே வெகு அருகே நான் இருக்கும் இடத்திற்கு மிக அருகே! போய் பார்த்து வரும் சவுகர்யத்துக்கு.

பிள்ளை இருக்குமா? ஜுரம் வந்து படுத்தினால்? பயந்து பயந்து அழுதால்? எடுத்து வரும் போது அடிபட்டால்?

படக்கூடாது. பட்டாலும் பார்த்தக் கொள்ள வேண்டியதுதான். எங்கே இதை ஆரம்பிப்பது. மணியிடமா? இல்லை எத்திராஜுவிடம்.

என்று ஆரம்பிப்பது?

இன்றே, இப்போதே! இங்கேயே.

டெலிபோன் சுழற்றினார். 'எத்திராஜுலுவ வீட்டுக்கு வரச்சொல்லு.'

உள்ளே கவலை படர்ந்தது.

ஐயா, ஏழுமலையானே, என் விரல்ல இருக்கிற நாலு மோதிரமும் உன் உண்டில போடறேன், எனக்கு இதை முடிச்சுக் கொடு. மனசு கைகூப்பியது.



பொன்னேரி மணிக்கு மனைவி மீது ஆசையில்லை. மகள், மகன் மீது ஆசையில்லை. தாய் தந்தைமீது ஆசை யில்லை. நண்பர்கள் மீது நம்பிக்கையில்லை. கடவுள்மீது பிடிப்பு இல்லை. உடுத்திக் கொள்வதோ, உண்பதோ சுகம் இல்லை. உள்ளே காமமோ, கவர்ச்சியோ இல்லை.

அவன் பிறந்ததிலிருந்து நேசித்த ஒரே விஷயம் நிலம். நாலாவது படிக்கும்போது அவனுக்கு சிறிதளவு தமிழ் படிக்கத் தெரியும். மணி என்று கையெழுத்துப் போடத் தெரியும். ஆனால், நிலம் சம்பந்தப்பட்ட வேலைகள் மொத்தமும் அத்துப்படியாயிருந்தன. புல்பூண்டு வகைகள் பெயரெல்லாம் தெரிந்திருந்தன. மண்வெட்டி தூக்கி, ஒரு அடி போட்டு நெம்ப நாலு கிலோ மண் சரியும். நாள் முழுவதும்

சேற்றில் குறுக்கும், நெடுக்கும் நடக்க முடியும். பால் பிடித்த கதிரை நாள் முழுதும் நின்று பார்க்க முடியும். வெண்டை எப்போது போடலாம். கத்தரி எத்தனை நாளில் பூக்கும். தக்காளியை எது தாக்கும் என்று அத்துப்படியாயிருந்தது.

அவன் நிலத்தை நேசித்தான். நிலமும் அவனை நேசித்தது. அவன் மண் புரட்டி நீருற்றி எது நட்டாலும் விளைந்தது. தர்பூசணி விதை நட அவனைப் பலர் கூப்பிடுவார்கள். குளிர்காலத்தில் விதை போடுவார்கள்; நன்கு மழை பெய்து ஊதல் ஆரம்பிக்கும் நேரத்தில் நடுவார்கள். டிசம்பர் முதல் வாரம் போட்ட விதை மார்ச்சில் பெருங் கொடியாய் வளர்ந்திருக்கும். ஏப்ரலில் பிஞ்சுவிடும். மே, ஜூன், ஜூலை அறுத்து மாளாது. பூமியெங்கும் பாறை பாறையாய் தர்பூசணி பன்றிக் குட்டி போல் பளபளத்து நிற்கும்.

''எப்படி காய்ப்பு?''

''உன் ராசி... அறுத்து மாளலை போயேன். கொடி மிதிச்சிடப் போறமேன்னு அன்னாண்ட அறுக்காதயே வுட்டேன்!''

''எந்தப் பக்கம்?''

இடுப்பிலிருந்து பேனாக்கத்தி விரித்துத் தரையெங்கும் படர்ந்த கொடிகளூடே விரல் நுனியில் தண்டு மிதிக்காமல் போவான். அறுத்து எடுத்து வருவான். அல்லது அங்கிருந்த படியே தூக்கி குழந்தையைப் போல் எதிராளியிடம் வீசுவான்.

ஸ்ரீராமுலு அவனைக் காரில் ஏற்றிக் கொண்டு போய் முதலில் நிலம் பற்றித்தான் பேசினார்.

''எனக்கு விவசாயம் இனிமே முடியாது, பேருக்கு கொஞ்சம் நிலம் வச்சுட்டு குடுத்திடலாம்னு இருக்கேன்.''

பதறிப் போனான்.

''ஏன் முதலாளி?''

''எதுக்குடா... இத்தினி நிலம்? மனுஷனுக்கு ஆறடிக்கு நாலடி போதாது. அஞ்சடி ஆழம் தோண்டிப் புதைச்சா போதாது?''

''சும்மா இருங்க மொதலாளி... தப்பா பேசிட்டு...''

''தப்பா பேசலை. நாலு நாள் ஆஸ்பத்திரில படுத்துட்டு பேசறேன்.''

''ஏன் முதலாளி?''

''நெஞ்சுல ரோகம். எப்ப வேணா அத்துப்பூடும்ன்றாங்க. அதான் உன்னோட பேச வந்தேன்.''

''அதுக்கோசரம் வித்துடலாம்னு பேசறீங்களே. சின்னவரு பேருக்கு எழுதிடுங்க. மாசம் அரை நாள் வந்துட்டுப் போகச் சொல்லுங்க. நான் கணக்கு கொடுத்து லாபம் காட்டறேங்க. தங்கம் விளையற பூமிங்க, தண்ணி குறைச்சல் இல்லை, கரண்ட்டுக்கு பஞ்சமில்லை. எல்லா பயிறும் தலைலேர்ந்து கால் வரைக்கும் கணக்குப் போட்டு விக்கலாம். இப்பக்கூட நாப்பது ரூபாய்க்கு கீரை விதை வித்துட்டு வந்தேன். இதப் போய் கசக்கி விதை எடுக்கறியே... எதுக்குன்னா என் பொண்டாட்டி. இப்ப பாருங்க காசாயிடுச்சு.''

''அட போடா.''

''ஏங்க?''

''எம் புள்ளைக்கு பொன்னேரி எந்தப் பக்கம் இருக்குன்னே தெரியாது.''

''பெரியவரு வரமாட்டாருங்களா?''

''அவனுக்கு என் வீட்டுக்கே வழி தெரியாது.''

''இன்னமும் வரவேயில்லீங்களா?''

''வர மாட்டான்.''

''பேசி கூட்டியாராணும் முதலாளி.''

''போனேன். போய் கூப்பிட்டேன். கடை, வூடு, நிலம் எல்லாம் எடுத்துக்கன்னேன். எச்சக்கைய ஆட்டி வேணாம்னுட்டான். எனக்கு முடியாதுடா... இத்தினி தொலைவு கார்ல வந்தா படபடன்னுது... எப்ப வேணா போயிடலாம் அப்படி போறதுக்கு முந்தி உனக்கு எதுனா செய்துட்டு போணும். சொல்லு என்ன வேணும்?''

மணி விழித்தான். இது நிஜமா...? கனவா என்று புரியாது தவித்தான். என்ன கேட்பது என்று தெரியாமல் தலை சொறிந்தான்.

ஓரக்கண்ணால் அவன் தவிப்பை ஸ்ரீராமுலு எடை போட்டார்.

''உனக்கு காசு பணம் கொடுத்தா புண்ணியமில்லை. நாலு கட்டு நோட்டு கொடுத்தா எண்ணக்கூடத் தெரியாது. நகையா கொடுத்தா நாலு பேர் பொறாமை தான் மிஞ்சும். லாரி வாங்கித் தரட்டா மணி.''

''வேணாங்க...! எனக்கு அந்த வேலை விவரம் தெரியாது. இந்த இடத்திலேயே நாலஞ்சு பேர் லாரி விடறாங்க.''

''சரி, பேசாதே! ரோட்டோரம் இருக்கிற நிலத்தை உனக்கு எழுதிக் கொடுத்திடறேன்.''

சட்டென்று மூச்சு நின்று போயிற்று மணிக்கு.

''உன் வீட்லேர்த்து புளிய மரம் வரைக்கும் உள்ள இடத்தை உனக்கு பட்டா போட்டுர்றேன். நாலு வயசிலேர்ந்து முப்பத்தி ஆறு வயசு வரைக்கும் எனக்கு உழைச்சிருக்கே. மணி நீ எடுத்துக்க. உன் சரியான பேரு என்ன?''

''வேணாங்க. யோசனை செய்யுங்க முதலாளி.''

''உன் சரியான பேரு என்ன?''

''மணிதாங்க.''

''உங்கப்பா பேரு?''

''தாயப்பனுங்க''- அவர் குறித்துக் கொண்டார்.

''முதலாளி...'' காரில் உட்கார்ந்தவரை காலைத் தொட்டான்.

''எனக்கு ஏத்துக்கறதுக்கு மனசே வரலீங்க. இன்னி தேதி வரைக்கும் ஒரு துவரைப்பருப்பு எடுத்ததில்லை. இது என்னுதில்லை. ஐயாதுன்னுதாங்க பேசிப் பழக்கம்.''

''அந்த விசுவாசம் தான் பெரிசு. அதுக்குக் கிடைச்ச பரிசு இது. எழுந்திரு மணி. நல்லா இரு.''

''பெரியவர் வருஷத்துக்கு ஒரு தடவை வரட்டுங்க. நான் கணக்கு தரேன். விளைச்சலு, அறுத்தது எல்லாத்துக்கும் கணக்கு தரேன்.''

''தெரியாதுடா. இது அருமை புரியாது, அவனுக்கு உடனே வித்துட்டு போயிடுவான். வந்த விலைக்கு புறம்போக்கு நிலம் மாதிரி கொடுத்துருவான். வேற எவனோ இங்க வந்து கொடி நடறதுக்கு நீ ஆண்டு அனுபவிக்கலாம்.''

''என்கிட்டே துட்டு இல்லையே முதலாளி?''

''போடா சோம்பேறி.''

''ஐயா...''

''உன்னைத் துட்டுக் கேட்டேனா?''

''சும்மாவா கொடுக்கிறது.''

''பதினோரு ரூபா கொடு, ஒரு மரியாதைக்கு.''

''தப்பு முதலாளி.''

அவர் சொல்கிற நிலத்தின் அளவு ஒரு லட்சம் பெறும்.

''எனக்கு மனசு ஒப்பலை முதலாளி... தானம் மாதிரி...''

''தானம்தாண்டா. அடுத்த ஜென்மத்திலேயாவது என் புள்ளைங்க என் பேச்சு கேட்டு என் மனசுப்படி நடந்து என் பேரப்புள்ளை என் நெஞ்சுல விளையாடி...''

-ஸ்டியரிங்கில் முகம் சாய்த்துக் கொண்டார்.

''வேணாம் முதலாளி. மனசு கஷ்டப்படுத்திக்காதீங்க.''

''பேரனைத் தூக்க விடலை.''

''ஒரு நாள் தெரியும், முதலாளி. அவங்க படறபோது தெரியும். தன் புள்ளை தன் பேச்சைக் கேட்காதபோது தான் அப்பனை படுத்தினது புரியும்.''

''அதுக்குள்ளார நான் பரலோகம் போயிடுவேன். சரி... இப்ப அழுது என்ன... நாளைக் காலைல வீட்டுக்கு வா. முடிச்சிடுவோம்.''

''நீங்க இருக்கிறமுட்டும் இது உங்க நிலம். பின்னால பார்த்துக்குவம் முதலாளி.''

''அதெல்லாம் சரிவராது. வந்து எழுதி வாங்கிக்க... மறக்காத பதினோரு ரூபா துட்டு எடுத்தாந்துரு.''

''இதுக்கு நான் என்ன செய்வேன்? உங்க கண்ணு மாதிரி வளர்த்த இடம் இது. பதினோரு ரூபாய்க்கு சதை அறுத்துத் தருவீங்களா?''

''என் சதை என்னோட ஒட்டலையே... இது பூமி தானேடா?''

''ஒட்டும் முதலாளி.''

''ஒட்டாதுடா. பேரனைத் தூக்கவிடலையே... அப்படியே கொத்திக்கிட்டுப் போயிடலாமா பேரப்புள்ளைய எங்கியாவதுன்னு தோணுச்சு. அடிச்சி நொறுக்கிடுவாங்களோன்னு...''

''உங்களையா...? அடிக்க வுட்டுருவம்மா?''

''பேரனைப் புடுங்கிட்டு என் சொத்து... கை வச்சா தொலைச்சிடுவேன்னுவான்...''

''உங்க வம்சம்தானங்க அது.''

''அதான் ஆறலை. என் வம்சம் என்னோட ஒட்டாதது தான் ஆறலை. எனக்கு எம் பேரப்புள்ளை கண்ணுலயே இருக்கு... எதுனா செஞ்சாவது எம் பேரப்புள்ளைய என் கிட்ட வர வைக்கணும்னு பார்க்கறேன். முடியலை. வயசாயிடுச் சில்ல?''

''நான் எதுனா செய்யணுமா... சொல்லுங்க முதலாளி?''

பேசாதிருந்தார்.

''என்ன செய்யணும் சொல்லுங்க?''

''வேணாம்டா. வம்பு வரும்.''

''நீங்க கூட இருக்கிறப்ப எனக்கு எது பத்தியும் கவலை இல்லை.''

''நிசமாவா?''

''உங்க மேல சத்தியமா.''

''என் பேரனை என்கிட்ட கொண்ணாந்து தருவியா?''

''ராவோட ராவா கொண்ணாந்துரட்டுமா?''

''மாட்டினா... எல்லோரும் கம்பி எண்ணணும்.''

''நானா... நான் சுவரு ஏறி குதிச்சு சம்பாதிச்சவன்தான ஐயா. இப்ப நீங்க பயிர் பண்ணச் சொல்லி வேலை கொடுத்தீங்க. ஒழுங்கா உட்கார்ந்து பார்த்துக் கிட்டிருக்கேன். சரின்னு சொல்லுங்க. முடிச்சுரலாம்.''

''இந்தா.''

ஒரு கவரை நீட்டினார்.

''என்னாது.''

''உன் குடிசை உன் இடம்னு பட்டா பண்ண பத்திரம். இது முடிச்சதும் நான் சொன்னாப்பால ரோடு பக்க ஏக்கர் நிலமும் உன் பேருக்குத்தான்.''

''எப்பப் போவணும்?''

''ராத்திரி வா.''

''நாம ரெண்டு பேர் மட்டுமா?''

''நான் கார்ல இருக்கேன். நீ போய் தூக்கிட்டு வந்துரு.''

''பூட்டு உடைக்கறதெல்லாம் இல்லையா?''

''இல்லை. அதுங்க டி.வி. பார்த்துக்கிட்டிருக்கும். அப்ப போயிடலாம.''

''புள்ளை தூங்கிடுமா?''

''தூங்கினாலும் சரி. முழிச்சிட்டிருந்தாலும் சரி. வாய் பொத்தி கூட்டிக்கிட்டு வா.''

''இப்ப நேர வீட்டண்ட வரட்டா?''

''வேணாம். சவுகார்பேட்டை மூலையில நில்லு.''

''கார் மாத்திடுங்க.''

''அது பத்தி கவலைப்படாத. நான் வேற வண்டியில வரேன்.''

''எத்தினி மணிக்கு?''

''ஒரு மணிக்கு நில்லு. வீட்ல திருப்பதி போறேன்னு சொல்லிட்டு வா. புள்ளைய குடுத்திட்டு அப்படியே திருப்பதி பஸ் ஏறிடு.''

''வந்து பத்திரம் மாத்திக்கலாமா?''

''வரச் சொல்லவே இது போல எழுதி வச்சு தரேன். ஆனா, ஒரு விஷயம்...''

''என்னா?''

''பத்திரம் யார் கிட்டயும் காட்டாத.''

''சரி.''

''அப்ப ஏழு மணிக்கு...''

''சரி.''

அவர் அவனை வழியில் இறக்கிவிட்டு சென்னை நோக்கி திரும்பினார்.

அவன் காலடியில் பயிர்கள் பச்சென்று சிரித்தன. மண்ணில் ஈரம் நிறைந்து சூரிய ஒளி மின்னிற்று. அவன் கரையிலிருந்து சேற்றில் இறங்கினான். பயிர்கள் தடவினான் சிரித்தான்.

முண்டாசு கட்டி பழக்கடை பின்னால் உட்கார்ந்து கொண்டான். பின் பக்கம் டீக்கடை இருந்தது. ஜனங்கள் முன்னும் பின்னும் அலைமோதியபடி நடந்து கொண்டிருந்தனர்.

''ஏய்'' என்று குரல் கேட்டது.

ஒரு மெடேடர் வேனில் ஸ்ரீராமுலு உட்கார்ந்திருந்தார். அவன் ஏறி உட்கார்ந்து கொண்டதும் கதவு சாத்தினார். ஸ்ரீராமுலு மப்ளர். குல்லாய் போட்டிருந்தார். காக்கிச் சட்டையில் இருந்தார். மெட்டேடர் சீறலுடன் பீச் ரோடு வழியே மைலாப்பூர் நோக்கிப் போயிற்று. சுற்றி திரும்பி ஆலிவர் ரோடு வந்தது. மெல்ல அந்த வீட்டு வாசலில் நின்றது.

ஒலியும் ஒளியும் ஆரம்பித்ததும் வேலைக்காரி ஹால் நோக்கி திரும்பி உட்கார்ந்து கொண்டாள். பிள்ளை படியில் நின்று சைக்கிளை உருட்டிக் கொண்டிருந்தது. மணி இறங்கி கதவு திறந்தான். கையிலுள்ள டார்ச் லைட்டை எரிய விட்டு கதவுக்கருகே தரையில் வைத்தான் முதுகு காட்டி வாசலுக்கு அருகே நின்று கொண்டான். ஆடிக்கொண்டிருந்த பிள்ளை இறங்கி வண்டி ஓட்டியபடி கதவருகே வந்தது. டார்ச் எடுத்துப் பார்த்தது..சைக்கிள் ஓட்டியபடி டார்ச் ஆட கதவருகே வந்தது. தெருவில் ஒரு சைக்கிள் மெல்லக் கடந்தது. பல்லவன் பஸ் ஓடியது.

மணி திறந்த கதவின் உள்ளே போனான். சட்டென்று பிள்ளை வாயை பொத்தி தூக்கினான் டார்ச் பிடுங்கி

அணைத்தான். பிள்ளை திமிறிற்று. வேன் ஸ்டார்ட் ஆயிற்று. கதவு மூடினான். தாழ் போட்டான். மேல் துண்டால் தொட்ட இடம் துடைத்தான். மடமடவென்று வேன் சுற்றி வந்து இடது பக்கம் திரும்பி விவேகானந்தா காலேஜ் வழியாக ராதாகிருஷ்ணன் சாலை வந்தது. சிக்னல் தாண்டிற்று, பிள்ளையைத் தளரவிட பிள்ளை திமிறிற்று. க்ளோரஃபார்ம் பாட்டில் திறந்து பிள்ளை முகத்தில் நீட்டினான். ஒரு முறை பிள்ளை முகர்ந்து துவண்டு சரிந்தது. மவுண்ட் ரோடில் ஒரு சந்தில் வண்டி நிறுத்தினார்கள்.

''நீ இறங்கி ஆட்டோ பிடிச்சு பஸ் ஸ்டாண்ட் போ. திருப்பதிக்கு போயிடு. ரெண்டு நாள் பொறுத்து வா.''

மணி இறங்கி ஜனக் கூட்டத்தில் மறைந்தான்.

எதிரே அம்பாஸடர் கார் வந்தது. கண்ணபிரான் அந்த வண்டியை ஓட்டி வந்தான். அவர் இறங்கி பையனைத் தோளில் தூக்கிக்கொண்டு காரில் ஏறினார். கார் சவுகார் பேட்டை நோக்கிப் போயிற்று.

பழக்காரிகள் கூடை நகர்த்தி வண்டிக்கு வழி யிட்டார்கள். வண்டி அவர் தெருவுக்கும் அடுத்த தெருவில் நுழைந்தது. அவர் வீட்டுக்கு நேர் பின் வீட்டின் எதிரே நின்றது. கதவு திறந்து அவர் உள்ளே போனார். உள்ளிருந்து வந்த ஆள் குழந்தையை வாரிக் கொண்டு உள்ளே போனான். கார் கிளம்பி பெங்களூர் போயிற்று.

அவர் தன் வீட்டையும், இந்த வீட்டையும் இணைக்கும் கதவை சாவி போட்டு திறந்தார், தன் வீட்டிற்கு உள்ளே போனார். தன் அறைக்குள் போய் கட்டிலில் படுத்துக் கொண்டார்.

ஒளியும் ஒலியும் முடியவில்லை.



ஒரு படத்துக்கு நாலு லட்சம் வாங்கறாளாம். நூற்றுக் கணக்கில் ரசிகர் மன்றமாம். மாடு மாதிரி இருக்கிறாள். உண்மையில் இவளைவிட அழகிகள் நிறைய பேர் சென்னையில் இருக்கிறார்கள். ஏன் நானே அழகுதான். நிச்சயம் இவளைவிட அழகுதான். அவளுக்கு நேரம். சுப்புலட்சுமி யோசிக்கும் போது அந்த நடிகை கதாநாயகனை ஆரத்தழுவிக் கொண்டாள்.

ஆனா, இதுதான் கஷ்டம். கண்டவனோடும் கட்டிப் பிடிக்கவேண்டும். யார் தொட்டாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். எப்படித்தான் கூச்சமில்லாது செய்கிறார்களோ?

மாமனாரோடு பேசும்போதே உள்ளே அடி மனதில் தனக்கு பயம் வருகிறது. ஒரு டாக்டர் மார்பையே பார்த்துக் கொண்டு பேசுகிறான். 'என்னடா இழவு' என்று நினைப்பு வருகிறது. ஆனால், இவள் இப்படி சர்வாங்கமும் படும்படி எப்படித் தழுவிக் கொள்கிறாள்.

நாலு லட்சம். இருபது நாள் வேலைக்கு நாலு லட்சம். ஒரு மாதம் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் வருமானம் இருக்கும். வருடத்திற்கு அறுபது லட்சம். நாலு வருடம் நடித்தால் இருநூத்திநாப்பது லட்சம். ஆக ஒரு குறிப்பிட்ட வாழ்நாளில் முந்நூறு லட்சம் சம்பாதித்து வாழ்வுத் தரத்தையே மாற்றி விடுவாள். பத்து லட்சம் வீடு. ஒரு லட்சம் கார். நூறு இருநூறு பவுன் நகைகள்.

கெட்டிக்காரியாய் இருந்தால் பல்வேறு முதலீடுகள் செய்து கொடி கட்டிப் பறக்கலாம். 'எவனை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கட்டிக் கொள்கிறேன்' என்றால்

முப்பது லட்சம் சுலபமாய்ச் சம்பாதிக்கலாம். கொஞ்சம் ரவிக்கையைத் தாழ தைத்துக் கொண்டு பல் தெரிய சிரித்தால் நடிகையாகி விடலாம்.

இரவும், பகலும் கம்ப்யூட்டர் படித்து மூளை உருகி கடுகடுக்கிற கஸ்டமர்களிடம் இதமாகப் பேசி எல்லா வேதனைக்கும் பிறகு வருடம் மூன்று லட்சம் நின்றால் பெரிது. நெடுந்தொலைவு காரில் போக யோசிக்க வேண்டியிருக்கிறது ஆயிரம் ரூபாய் பட்டுப்புடவையா... நாலாயிரம் பட்டுப் புடவையா என்று யோசித்து மூவாயிரம் புடவைக்கு ஊசலாட்டத்துடன் போக வேண்டியிருக்கிறது. துக்கம்தான். காசு இல்லாமலே போனால் பிரச்சினை இல்லை. கொஞ்சமாய் இருக்கிறதே அதுதான் வேதனை. ஒன்று, பெரும் பணம்... இல்லை பரம ஏழை. இரண்டும் உயர்வான இடங்கள். இது என் நிலை ப்ளடி மிடில் கிளாஸ்-சுபி பெருமூச்சு விட்டாள்.

ஆனா ஒரு சுகம். கைக்கு அடங்கின புருஷன். மணியாக ஒரு பிள்ளை. இந்த சினிமா லேடீஸ்களுக்கு நல்ல புருஷன் அமைவதில்லை. அமைந்தாலும் நிலைப்பதில்லை. அதுவும் பாவம்தான். இது... இந்த புருஷன் எத்தனை சமர்த்து. எவ்வளவு சினேகம். உயிருக்குயிராய் ஒரு பிள்ளை. எவ்வளவு சுகம்.

''டாடீ...'' பிள்ளை நினைவு வந்து திரும்பினாள். பதினைந்து நிமிடம் சப்தமே இல்லையே என்று யோசித்தாள். 'வெளிய விளையாடுதும்மா' வேலைக்காரி பதில் சொன்னாள். எட்டிப் பார்த்தாள். வாசல் வெறுமையாய் இருந்தது. அந்தப் பாட்டு முடிந்து அடுத்த பாட்டு ஆரம்பிக்க பார்த்துவிட்டு வாசலுக்கு இறங்கினாள். சைக்கிள் மட்டுமே இருந்தது.

இடது புற குரோட்டன் செடிகளுக்கு இடையே தேடினாள். பின்புறம் ஓடினாள்.

''என்ன முனியம்மா?''

''புள்ளைய காணமே...''

''என்ன...?'' அவள் எழுந்து வாசலுக்கு ஓடிவந்தாள் அவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் ஓடிப்போய் கதவு பார்த்தாள். தாளிட்டிருந்தது. திறந்து வாசலுக்கு வந்தாள். சைக்கிள் ரிக்ஷா சிரமத்துடன் போய்க் கொண்டிருந்தது. பல்லவன் பஸ் பேரிரைச்சலுடன் கடந்தது.

''என்ன சுபி...?''

''குழந்தையைக் காணமே...''

''பின்பக்கம் போயிருப்பான்.''

அவன் ஓடினான். கிணறு இருக்கிறது. அதற்கு மூடிபோட வேண்டும் என்று நினைப்பு இருந்ததே தவிர செயலாக்கவில்லை.

வேலைக்காரி திரும்பி வந்தாள்.

''இல்லம்மா.''

''உள்ள பாத்தியா?''

வீட்டுக்குள் ஓடினார்கள். வெளியே வந்தார்கள். மறுபடி குரோட்டன்ஸ் பார்த்தார்கள். டார்ச் அடித்து கிணற்றுக்குள் தேடினார்கள். மாடிப்படி சந்து... வேப்ப மரக்கிளை, மேல் மாடி என்று எல்லா இடமும் தேடினார்கள்.

குழந்தையைக் காணமே... குழந்தையைக் காணமே. பளீரென்று ஒரு வெறுமை அவளைத் தாக்கியது. 'ஐயோ!' என்று கூச்சல் எழுந்தது.

அவன் வாசலுக்கு ஓடினான். தெருவில் எதிர்ப் பட்டவர்களை விசாரித்தான். நாலு வீடு தள்ளியிருந்த இடத்தில் போலீஸ் காவல் இருந்தது. உள்ளடங்கின வீட்டு வாசலில் கூரைபோட்டு சாதாரண உடை போலீஸும், யூனிபார்ம் அணிந்த போலீஸ் பாராவும் இருந்தன.

''இங்க ஏதாவது சின்னப் பையன் வந்தானா?''

''எத்தினி வயசுங்க?''

''நாலு... சிவப்பு நிறம்''

''இல்லீங்களே. எந்த வீடுங்க?''

''நாலு வீடு தள்ளி...''

''கார் நின்னுச்சே... அந்த வீடா?''

''எப்பங்க?''

''சித்த மின்ன ஒரு கார் நின்னாப்பல இருந்துச்சே.''

''என் வண்டி உள்ள இருக்குங்க.''

''பக்கத்து வீட்ல கேட்டுப் பார்த்தீங்களா?''

பக்கத்து வீடுகளுக்குப் போனதே இல்லை. அட்வகேட் வீடு என்று வாசல் போர்ட் பார்ப்பதோடு சரி. இடது புற வீடு லேவாதேவி.

கதவு திறந்து வக்கீல் வீட்டுக்குப் போனான். விசாரித்தான். விழித்தார்கள். லேவாதேவிகாரர் வீட்டில் வேலைக்காரர்கள் மட்டுமே இருந்தார்கள் மறுபடி வாசலுக்கு வந்தான். என்ன செய்வது என்று தெரியாமல் அலைந்தான். அவள் ஓடி வந்தாள். மறுபடி வக்கீல் வீட்டுக்குப் போனார்கள். பதட்டமாய் விசாரித்தார்கள். வக்கீல் வீட்டு ஆட்கள் வாசலுக்கு வந்தார்கள். அடுத்த வீட்டு வேலைக்காரர்கள் கதவு திறந்து நின்றார்கள்.

அவன் பெருங்குரல் எடுத்து அழுதான்.

''ரிப்போர்ட் பண்ணுங்க சார். உடனே பண்ணுங்க. கவலைப்படாதீங்க. கிடச்சுடுவான்.''

உள்ளே ஓடி நூறாம் நம்பர் எண் சுழற்றினான். விவரம் சொன்னான். அவள் நடுத்தெருவில் வேலைக்காரியோடு சண்டை போட்டாள். திட்டினாள். எல்லா ஆண்களும்

அவளை விநோதமாய் பார்த்தார்கள். அவர்கள் பார்ப்பது பார்த்து அவன் அவளை சமாதானப்படுத்தினான்.

அவள் சற்று தெளிந்தாள்.

நாலு பேருக்கு நடுவே கட்டிப் பிடிப்பது வெட்கங்கெட்டத்தனம் என்று நினைத்தேனே... இப்படிப் பெருங்குரலில் சண்டை போடுவது வெட்கம் கெட்ட செயல் இல்லையா? ஐயோ என் குழந்தை... என் குழந்தை... டாடீ... டாடீ... மனசு கதறியது.

பத்தாவது நிமிடம் போலீஸ் வந்தது!

இடம் ஆராய்ந்தது. எல்லா இடமும் கலைச்சுத் தொலைச்சிட்டீங்க. போலீஸ் டாக் கொண்டாந்துரலாம். இப்படி நடமாடினா அது குழம்பிடும். நாய்க்கு சொல்லுப்பா. இடம் சொல்லு.

ஒரு ஏட்டு விசாரிக்க, ஒரு சப்இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் இடம் ஆராய்ந்தனர். வழியில் போன போலீஸ் அதிகாரி கார் நின்றது. என்னவென்று விசாரித்தது.

''குழந்தையைக் காணம்னு ரிப்போர்ட் சார்.''

''அதுக்கு ஏன் இத்தினி கூட்டம். அனுப்பு ஆளுங்களை சி.எம். மீட்டிங்லேர்ந்து வர நேரம். என்ன ஏதுன்னு கேட்பாரு. யார் இவங்க?''

''ஸ்ரீராமுலு அண்ட் சன்ஸ் புள்ளை சார்!''

''அடடே...''

''கம்ப்யூட்டர் சென்ட்டர் வச்சிருக்காரு.''

''பையன் எப்பலேர்ந்து காணம்?''

''அரை மணி முக்கா மணி இருக்கும் சார்!''

''சரியா விசாரிங்க. இரண்டு தெருக்கோடியில் இருக்கிறவனைப் புடிங்க. எது போலீஸ் ஸ்டேஷன்... அவங்களைக் கூப்பிடுங்க''

அவள் ஓடிப் போய் அவர் முன் கை கூப்பினாள். பேச முடியாது அழுதாள்.

அதிகாரி கீழிறங்கி சமாதானம் சொன்னார். ''நாங்க இருக்கோம், கவலைப்படாதீங்க. ஒன் அவர்ல ரிசல்ட் சொல்றேன். அமைதியா இருங்க.''

இப்போது வேன் நிறைய போலீஸ் வந்து, ரிக்ஷாகாரன், டீக்கடை ஆள், சலவைத் தொழிலாளி, வேர்க் கடலை விற்கும் கிழவி என்று வளைத்தது.

அந்த வீட்டுக் காவலர்களைக் கேள்வி கேட்டது.

''கார் நின்னுச்சு. ஆள் இறங்கினதைப் பார்த்தேன்...'' யாரோ சொல்ல தடம் தேடியது. காரா... இது வேன் டயர் பிரிண்டா இருக்கே.''

''வேன் கூட இருக்கலாம். நான் கவனிக்கலை. நம்பரைப் பார்த்துட்டு கார்னு நினைச்சேன்.''

''எப்பப் போச்சு?''

''முக்கா மணி இருக்கும். தலைல கம்பளி குல்லா போட்டுக்கினு ஓட்டிக்கினு போனான்.''

''கம்பளி குல்லாவா?''

''ஆமா. தலை மொத்தமும் முடி. கண்ணு, மூக்கு, பல் திறந்திருக்கிற மாதிரி.''

''குளிர் காலமில்லையே. யார் போயிருப்பா. என்ன நம்பர்?''

''நம்பர் பார்க்கலைங்க. காருதான் பார்த்தேன்.''

''என்ன?''

''பச்சை மேல மஞ்சள் புது வண்டி. சத்தமில்லாத போச்சு.''

''எப்படி கரெக்டா சொல்ற?''

''நான் வண்டி புரோக்கர்.''

''நாய் வந்து இறங்கியது. குழந்தை சைக்கிளைப் பிடித்து கதவு மீது தாவியது. இடது பக்கச் சுவர் அருகே முகர்ந்து குரைத்தது. மறுபடி உள்ளே போயிற்று. வெளியே வந்தது. எதிர்பக்கமாய் போய் நின்று குரைத்தது. இடதும் வலதும் அலைந்தது. அப்படியே நின்றுவிட்டது.

''வண்டி ஏறிட்டாங்க சார்!''

''என்ன வண்டிப்பா அது?''

''மெடாடர் சார்.''

''வயர்லஸ்ல சொல்லி வண்டி பார்க்கச் சொல்லு. ஸ்டேஷனுக்கு வாங்க ரெண்டு பேரும். கூட்டத்தைக் கலை.''

வேலைக்காரியை வாசலில் விட்டு அவர்கள் கதவு பூட்டி ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். அவள் நம்பிக்கையோடும், நம்பிக்கையில்லாமலும் அழுதாள். அவன் ஏதும் தோன்றாமல் 'நத்திங் டு வொர்ரி' என்ற வார்த்தையை அடிக்கடி சொன்னான். அதிகம் கவலைப்பட்டான்.

அவ்வளவு உயரக் கதவை குழந்தை திறக்க முடியாது. அது தெருவுக்கு ஓடும் குழந்தை அல்ல. கதவு குழந்தை தேடி வரும்போது பூட்டியிருக்கிறது. அதாவது குழந்தையை எடுத்து கதவு பூட்டி போயிருக்கிறார்கள். மிகச் சரியான நேரம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்த வேன் ஒரு முக்கிய விஷயம். குழந்தை அதில்தான் கடத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஏன் குழந்தையைக் கடத்தினார்கள்?

யார்?

சுப்புலட்சுமிக்கும், வரதராஜுவுக்கும் புரியவில்லை. அவ்வளவு பெரிய எதிரி எவருமில்லை.

ஒரு வேளை ப்ளாக் மெயிலா? அல்லது குழந்தை பிடித்து விற்கிற கூட்டமா? பிள்ளை பிடிக்கிறவர்கள்

இவ்வளவு பெரிய இடத்தில் கை வைக்க மாட்டார்கள். ப்ளாக்மெயில் எனில் காத்திருக்க வேண்டும். ஒரு முறை தொடர்பு ஏற்பட்டால் பிடித்து விடுவோம்.

வேலைக்காரி வரவழைத்து விசாரிக்கப்பட்டாள். அதிகம் மிரட்ட அலறினாள். சத்தியம் செய்தாள். சுபிக்கு கஷ்டமாக இருந்தது. அவள் மீது சந்தேகமில்லை என்று எழுதிக் கொடுத்தாள்.

போலீஸ் தீவிரமாக விசாரிப்பதாக உறுதி கூற, வீடு வந்தார்கள்.

வீடு, கடவுள் இல்லாத கோயில் மாதிரி, நாக்கு இல்லாத மணி மாதிரி, திலகம் இழந்த பெண் மாதிரி வெறுமையாய் இருந்தது. சுப்புலட்சுமி சைக்கிளைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''தப்புடா... தப்புடா கண்ணே. அம்மா யோசிச்சது. தப்புடா. எல்லாம் தப்புடா. எங்கிட்ட வந்துருடா. கண்ணே என்னை விட்டுப் போகாதேடா என் செல்லம்'' என்று கதறினாள்.

அவள் எது தப்பு என்கிறாள், என்ன யோசித்தாள் என்று யாருக்கும் தெரியவில்லை.

வாழ்க்கை சந்தோஷமாய் இருக்கிற போது மனசு நாலா பக்கமும் அலைகிறது. கிடைத்ததை விட்டு விட்டு அது போல மாறியிருந்தால்... இது போல நடந்திருந்தால் என்று எண்ணம் வருகிறது. தன்னை விட எல்லாம் உயர்வோ என்கிற ஏக்கம் வருகிறது. வாழ்க்கையின் தினசரி நடவடிக்கை சரிய கிடைத்தது போதும் என்று இறுகப் பற்றிக் கொள்கிறது. இதையும் இழந்துவிடக் கூடாது என்று தவிக்கிறது. இழப்பு வர, அழுகையில் முடிகிறது. பாவ மன்னிப்பு கேட்கிறது.

நடிகை வாழ்வு பற்றி சுப்புலட்சுமியின் யோசனையில் எந்தப் பாவமும் இல்லை. அது பாவம் என்று யோசிக்க இந்த சூழ்நிலை காரணம். எல்லா பாவ புண்ணியமும் சூழ்நிலை சம்பந்தப்பட்ட விஷயம்.

வரதராஜு இறுக்கமாய் போனான். யார் யார் இது என்று தடுமாறினான். குழந்தை பிடித்து விற்கிறவன் இந்த வீடு ஏன் தேர்ந்தெடுத்தான்? என்று குழம்பினான். போலீஸ் மீது அவநம்பிக்கை கொண்டான். தானே தேடலாம் நாலு திக்கும் ஓடலாம் என்று பதறினான்.

சுபியை யாரிடம் விட்டுப் போவது?

யாரைக் காவல் வைப்பது?

எவர் உதவியுமின்றி எப்படித் தேடுவது? அண்டை ஆட்கள் தொலைவிலேயே நிற்கிறார்கள். அடப்பாவமே என்று கேட்டுவிட்டுப் போய் விட்டார்கள். என்ன செய்வது? யார் உதவி கேட்பது? ஆபீஸ் ஆட்களிடம் கேட்கலாம். அவர்களோடு போகலாமா... ஒரு இரவு சுற்றுவார்கள் பிறகு...

அப்பா... அப்பாவிடம் கேட்கலாமா... அப்பாவிடம் ஆட்கள் உண்டே. படையே இருக்கிறதே. கேட்கலாம்.

போன் சுழற்றினான்.

''ஸ்ரீராமுலு!'' குரல் சிம்ம கர்ஜனையாய், அதட்டலாய் கேட்டது. அவனுக்கு நம்பிக்கை வந்தது.

''அப்பா, நான்தான் வரதராஜு.''

ரிசீவர் கையில் வைத்து காதில் பொருத்திக் கொண்ட சிங்கம் சிரித்தது.

இது வெற்றி. வெற்றியின் முதல் படி.



16

வெற்றியின் வெளிச்சம் கெட்டிக்காரன் மீது படும்போது அவன் சிறிது கூட அசையமாட்டான். புன்னகை கூட செய்ய மாட்டான்.

போரில் ஜெயித்துவிட்டு திரும்பும்போது கூட எவனாவது கத்தி வீசி கொன்று விடலாம். எஞ்சிய படைகள் வளைத்துக் கொண்டு தாக்கலாம்.

இங்கே கோட்டைச் சுவர் தகர்ந்துவிட்டது. பெரிய மதில் விரிசல் கண்டு மண்சரிய விழுந்துவிட்டது. 'அப்பா நான் வரதராஜு பேசறேன்' என்று விம்ம ஆரம்பித்து விட்டது.

இந்த விம்மல்தான் விரிசல். இதற்கு இடையே புகுந்து அணைத்துக்கொண்டால் ச்சீ போ என்று துரத்தி முடிய கோட்டை வசமாகும். இன்னும் விம்ம வைக்க வேண்டும். விரிசல் விழுந்த கோட்டைச் சுவரை மறுபடி சரிசெய்ய முடியாதபடி இன்னும் விழவைக்க வேண்டும்.

''என்னா நைனா? இந்த வேளைல எங்கேர்ந்து பேசற?''

எதிர் முனை மவுனமாய் இருந்தது. விரிசலுக்கு வெட்கப்படுகிறது போலும்.

''வரதராஜு, நீதான பேசற? என்னா கண்ணு வரதராஜு?'' குரலில் கனிவு குழைத்துக் குழைத்துப் பூசி பேசினார்.

''அப்பா...அப்பா...''

''வரதராஜு, அழுவுறியா என்ன ஆச்சு?''

''குழந்தையை காணம்பா...''

''என்ன?''

''டாடுவ காணம்பா...''

''என்னடா சொல்றே? எப்ப காணம்? எங்கிருந்து பேசற?''

''வீட்டுலேர்ந்துப்பா. இரண்டு மணி நேரம் முன்ன விளையாடிக்கிட்டு இருந்த குழந்தைய... காணம். எனக்கு என்ன செய்யறதுன்னே...'' அழுதான். குரல் உடைந்து உதடு கோண எச்சில் குமுற இடக்கையில் போனும் வலக்கையில் முகமும் பிடித்து அழுதான்.

''வரதராஜு வரதராஜு...'' அவர் பதறினார். போலீஸுக்குப் போனியா. உடனே போ. தேடிப் பார்த்தியா... என்னடா என்னடா சொல்றே பக்கத்து வீடுங்கள்ல...''

''தேடிப் பார்த்துட்டம். போலீஸ் வந்து ஏதோ தடம் கண்டு போயிருக்கு, கார்ல தூக்கிட்டுப் போயிருக்கலாம்னு சொல்லுது.''

''கார்லியா... என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க இரண்டு பேரும்? டேய் தேடிப் பார்த்தியா. டேய் இன்னி. வேணாம், நா வரேன். நா நேர வரேன். வீட்லதானே இருக்க...? நா வரேன். வரதராஜு.''

''அப்பா...''

''நாம் உன் வீட்டுக்கு வரலாமில்லே?''

''வாப்பா. எனக்கு யாருமே இல்லை. நீ வாப்பா. வந்து எம்புள்ளைய தேடிக் கொடுப்பா. என் செல்ல ராஜாவை என்கிட்ட...'' - மறுபடி உரத்த குரலில் அழுதான். அவள் ஓடி வந்து அவனைத் தாங்கிக் கொண்டாள். மாமனார் வருகிறார் என்பதே தெம்பாய் இருந்தது.

அவனிடமிருந்து தொலைபேசி வாங்கி, ''மாமா.'' என்று அழைத்தாள்.

''என்னம்மா? என்ன இப்படிப் பண்ணிட்டீங்க இரண்டு பேரும். அவனை படுக்க வை. அலட்டிக்கச் சொல்லாத. இன்னும் பத்து நிமிஷத்துல வரேன் அங்கே. வச்சுரட்டா.''

பளிச்சென்று போன் வைத்தார். நெஞ்சுக்குள் மலர்ச்சி பரவி புன்சிரிப்பு உள்ளே மலர்ந்தது. 'எனக்கு யாருமே

இல்லை, நீ வாப்பா' என்று விடுத்த அழைப்பு சுகமாய் இருந்தது.

மறுபடி போன் எடுத்தார், மண்ணடி லாரி கம்பெனிக்கு போன் செய்தார்.

''ஐயா!'' எதிர் முனையில் குரல் கேட்டது.

''யார் அது?''

''பாஸ்கர் பேசறேன் ஐயா.''

''நம்ம பசங்க யார் இருக்கான்?''

''நாலு பேர் கடையில இருக்காங்க ஐயா.''

''பேர்களைச் சொல்லு.''

''தாமு, மொட்டை, சூரி, குமார்.''

''சென்ட்ரலாண்ட உடனே போய் நிக்கச் சொல்லு. நான் வந்து என் வண்டியில பிக்கப் பண்ணிடறேன்.''

''ஐயா எதுனா கைல...?''

''வேணாம். சுத்தமா வரச்சொல்லு. ஒழுங்கா உடுத்தியிருக்கிறானுங்களா?''

''ஆமா ஐயா.''

''நிக்கச் சொல், வரேன்.''

சீராய் உடுத்திக் கொண்டார். பெட்டி திறந்து பணக் கற்றைகளை வாரி தோல் பையில் போட்டுக் கொண்டார். கீழிறங்கினார். மனைவி ஹாலில் எதிர்பட, ஒருகணம் நின்றார்.

''ஏய், பேரப்புள்ளையை காணுமாம். வரதராஜு போன் பண்ணான். போய் பார்த்துட்டு வரேன்.'' தெலுங்கில் பேசினார்.

''என்னத்துக்கு? வேணாம்னு போனவன் எக்கேடு கெட்டா என்ன?''

''வுட்டுறதா. கூப்பிடறானில்ல. ஒருவேளை இங்க வந்தா வரலாம். ஒரு ரூம் புருஷன் பொண்டாட்டிக்கு ஒழிச்சு வை...''

''மாடிலையா, கீழயா?''

''கீழ... மாடிக்கு யாரையும் அனுப்பாத.''

வாசலுக்கு வந்து தெருவில் இறங்கி சவுகார்பேட்டை விளிம்புக்கு வந்தார். பழக்கடைக்காரர்கள் எழுந்து நின்றார்கள்.

செருப்புக்கடை தாண்டினார். யோசனையில் ஒரு நிமிடம் நின்றார். செருப்புக்கடை வாசலில் நின்று ''ஒன்பதாம் நம்பர் செருப்பு எடு...'' என்று கட்டளையிட்டார்.

''எது ஐயா?'' கடை பரபரத்தது.

''எதுனா எடுத்துப் போடு''- நாலைந்து ரகங்கள் வந்தன.

ஒன்று போட்டுப் பார்த்தார். காலுக்கு சரியாய் இருந்தது. பழைய செருப்புகளை அங்கேயே விட்டு விட்டு புதுச் செருப்புடன் இறங்கினார். பழம் செருப்பை பையன் பெட்டியில் போட்டான்.

''காசு தரலையே?'' என்பது போல் கடை முதலாளியைப் பார்த்தான்.

''தருவார்டா. அதை அப்படி ஓரமா எடுத்து வை. பழசு எங்கேன்னு காசு தர போது கேட்டாலும் கேட்பாரு. என்ன கொடுத்தே சில்வர்லைனா? அதுல அவரு பேர் எழுதி ஓரமா வை...''

''அவரு பேர் என்னாங்க?''

''ஸ்ரீராமுலு செட்டியார்.''

அவன் பெட்டியின் மேல் பகுதியில் அவர் பெயர் எழுதினான். அன்றைய தேதி எழுதினான். கடைசி ஷெல்ஃபில் கீழ்தட்டில் வைத்தான். அவன் வைத்த

பெட்டிக்குள் அவர் பழைய செருப்புக்கள் ஒன்றோடு ஒன்று உரசிக் கொண்டிருந்தன.

தோட்டக்கதவு திறந்தது. முன் ஸீட்டில் உட்கார்ந்த இரண்டு ஆட்களும் பின் ஸீட்டில் இருந்தவனும் முதலில் இறங்கினார்கள். அவர் இறங்கி வர, கார் கதவு திறந்தார்கள்.

வேலைக்காரிக்கு யார் என்று தெரியவில்லை. கறுப்பு ஆட்கள் வெள்ளைச் சட்டையும் வெள்ளை பேண்டுமாய் இறங்குவது பார்த்து போலீஸோ என்று நினைத்தாள். பெரியவர் இறங்கி படியேறியதும் 'யார்?' என்று கேட்டாள்.

அவர் பதில் சொல்லாது ஹாலுக்குப் போனார். ஹால் சோபாவில் சரிந்து கிடந்து கண்கள் மூடிக் கிடகிறவனைப் போய் தொட்டார்.

''என்ன வரதா?''

விழித்தான். மறுபடியும் கண்களில் ஜலம் கொட்டத் துவங்கியது.

''ப்சு அழக்கூடாது. என்ன ஆச்சு?''

''ஒளியும், ஒலியும் பார்த்துக்கிட்டு இருந்தோம்.'' - பின்னே மருமகள் குரல் கேட்டது. திரும்பினார். தோட்டத்துல வண்டி ஓட்டிக்கிட்டு இருந்தான். முடிஞ்சு எழுந்து பார்க்கறோம் காணம்.'' - அழுது அழுது அவள் ஓய்ந்து விட்டாள். அழுகையைவிட காரியம் முக்கியம் என்கிற இடத்துக்கு வந்து விட்டாள்.

''வெளிய வா...? எங்க இருந்தது புள்ளை?''

''தோட்டத்துல'' -வேலைக்காரி பரபரப்புடன் பேச, சுள்ளென்று முறைத்தார்.

''நீ என்ன, மயிர புடுங்கிக்கிட்டு இருந்தியா? யார் நீ? உன் பேர் என்னா?''

''ஐயோ! நான் ஒண்ணும் செய்யலீங்க. நானும் படம் பார்த்துக்கிட்டு இருந்தேன். கேட்டு பூட்டியிருந்துச்சு.''

''பூட்டியா?'' வியப்பானார்.

''மேலே கொக்கி போட்டு சார்த்தி வச்சிருந்தது.''

''கொக்கி திறந்து ஆள் உள்ள வந்து புள்ளைய எடுத்துக்கிட்டுப் போற வரைக்கும்... டேய் வீடு சுத்தி பாருங்கடா.'' ஆட்கள் வளைந்து வீடுசுற்றி போனார்கள்.

ஸ்ரீராமுலு யோசனையுடன் வாசலுக்குப் போனார்.

''சுப்புலட்சுமி!'' -திரும்பி குரல் கொடுத்தார்.

''என்ன தடம் கண்டு பிடிச்சாங்க போலீஸ்ல?''

''அது வேனா இருக்கணும், கார் இல்லைன்னு சொன்னாங்க. வேனுக்குத் தேடறாங்க.''

''என்ன வேன்? எப்படித் தேடறது?''

''கோடில இருக்கிற டீக்கடைல ஒரு ஆள் பச்சை கலர் வேன் பார்த்ததா சொன்னான். அந்த ஆளு குளிர் தொப்பி போட்டுக்கிட்டிருந்தானாம். இந்த வெய்ய காலத்துல அப்படி போடுவாங்களா?''

''சுப்புலட்சுமி! உங்களுக்கு எதிரிங்க யாராவது உண்டா?''

''குழந்தையக் கடத்திக்கிட்டுப் போற மாதிரியா. இல்லையே. அப்படி ஒரு ஆளைக்கூட நினைக்கமுடியலையே.''

''பக்கத்து வீடுங்கள்ல?''

''பேச்சும் இல்லை. சண்டையும் இல்லை.''

''எந்த போலீஸ் ஸ்டேஷன்?''

''மயிலாப்பூர்.''

''என்னா சொல்றாங்க?''

''வேன் அடையாளம் காட்டி மடக்க சொல்றாங்க.''

''அப்பா.'' வீட்டிலிருந்து வரதராஜு குரல் கேட்டது.

''என்ன வரதா?'' -உள்ளே ஓடினார்.

''மயிலாப்பூர் போலீஸ் உடனே வரச் சொன்னாங்க.''

''ஏறு கார்ல ஏறு.''

-கலவரத்துடன் காரில் ஏறினான்.

லஸ் தாண்டி கச்சேரி ரோடு போய் ஸ்டேஷன் ஓரம் நிறுத்தினார்.

''வணக்கங்க. நான் ஸ்ரீராமுலு'' - இன்ஸ்பெக்டரை நோக்கிக் கும்பிட்டார்.

''ஸ்ரீ ராமுலுன்னா?''

''ஸ்ரீ ராமுலு அண்ட் சன்ஸ். நகை, வைர வியாபாரம். சவுகார்பேட்டை.''

''ஆமாமா... இவரு?''

''என் புள்ளைங்க. இப்பதான் நியூஸ் கிடைச்சு ஓடியாந்தேன். பையன் கிடைச்சுட்டானா?''

''இல்லீங்க.''

''வேன் ஒண்ணு பிடிச்சோம்.''

''எங்கே?''

''சபையர் தியேட்டர்கிட்ட சந்துல. பச்சை வேன். போய் பார்க்கலாமா? ஒனர் காணம் இதுவரைக்கும்.''

''வாங்க போலாம்.''

''ஜீப் எடுப்பா.''

''எதுக்குங்க நம்ம வண்டியில வாங்க.''

''நல்லா இருக்காது ஐயா.''

''பரவாயில்லை.''

''டேய், தம்பி! வீட்டுக்குப் போய்க் காவலா இரு. நான் அங்க வரேன்.''

அவரை, பிள்ளையை, மருமகளை, போலீஸ் இன்ஸ்பெக்டரை கார் ஏற்றிக் கொண்டு போயிற்று. தியேட்டர் தாண்டி சந்துக்குள் நின்றது. அது அவர் விட்டுவிட்ட வேன். யாருக்கும் அங்கு அது நிற்பது பற்றி தெரியவில்லை.

போலீஸ் படை வரும்வரை காத்திருந்தார்கள். போலீஸ் கைரேகை தேடும்வரை காத்திருந்தார்கள். கதவு திறக்கப்பட்டது. உள்ளே டார்ச் அடித்துப் பார்க்க குளோரஃபாம் நெடி வீசியது. கைக்குட்டை ஒன்று கிடந்தது. மெல்லிய அழுக்குக் கோடுகள். ஒரு குழந்தையின் விரல்கள் இருந்தவைப் போல இருந்தன. மழுங்கலான ரப்பர்ஃப்ளோர் மேட்டில் கோணல் கோணல் வரியாய் செருப்புத் தடங்கள் தெரிந்தன. டிரைவர் ஸீட்டுக்குக் கீழே வண்டிக்கு வெளியே அதே தடங்கள் நின்றன.

''போலீஸ் டாக் கூப்பிடுப்பா வயர்லஸ்ல.''

''ஏன் இன்ஸ்பெக்டர்?''


''வண்டி மாத்தியிருக்காங்க சார்.''

''அப்படியா. அப்ப வேன்தான்?''

''இருக்கலாம். இல்லை இது தப்பாவும் இருக்கலாம். இப்ப சொல்ல முடியாது. டாக் வந்தா தெரிஞ்சுடும்.''

மெல்ல கடைக்குப் போனார். வெத்தலை பாக்கு, பன்னீர் புகையிலை கொடு. பத்து ரூபாய் நீட்டினார். நிதானமாய் வெற்றிலை கிள்ளி பாக்கு போட்டு வாயில் அடக்கிக் கொண்டார். புகையிலை பிரித்தார்; கையில் வைத்து கசக்கினார். உருட்டி ஒரு உருண்டை போட்டுக் கொண்டார்; புகையிலை ஈரக்கையை புறங்களில் பிருஷ்டத்தில் துடைத்துக் கொண்டார். கூட்டம் சேர்ந்தது.

ஜீப்பிலிருந்து ஒரு நாய் துள்ளி இறங்கியது. வேனுக்கு விரட்டப்பட முகர்ந்து பார்த்தது. இறங்கி சுற்றி பக்கத்து கடைக்குப் போயிற்று. சந்தில் குறுக்கும் நெடுக்கும் உலாவியது. இன்ஸ்பெக்டரை கவ்விப் பிடித்தது. எல்லோரும் வாய்விட்டு சிரித்தார்கள். ஸ்ரீராமுலு பெரிதாய் சிரித்தார். நாய் அவரை நோக்கி குரைத்தது.



நாய் குரைக்கும் கயிறு தளர்த்தினார்கள். நாய் இரண்டே எட்டில் நகர்ந்து ஸ்ரீராமுலு கையைமுகர்ந்தது புகையிலை. தேய்த்த கையை விரித்து நாயிடம் காட்டினார். பின்வாங்கியது. முன்னேறி வேட்டியை முகர்ந்தது. இரண்டு பக்கமும் பார்த்தது. திரும்பி போலீஸ்காரனிடம் போயிற்று.

உள்ளே ஒரு நிம்மதியை ஸ்ரீராமுலு உணர்ந்தார்.

''நாய் கூட்டிட்டுப் போயிடு, தடம் தெரியலை. கார் மாறிட்டாங்க. யாருப்பா இங்க இருக்கிற ஆளு?'' -கூட்டம் போலீஸ் வம்புக்குப் பயந்து எறும்புக் கூட்டம் போல் கலைந்தது. இன்ஸ்பெக்டர் அருகே இருந்த போலீஸ்காரர்கள் பாய்ந்து நாலைந்து ஆட்களை மடக்கினார்கள்.

''எந்த ஊர் உனக்கு?''

''செவ்வாய்ப் பேட்டைங்க.''

''இங்கென்ன பண்ற?''

''சும்மா வேடிக்கை பார்த்தேங்க.''

''த்துதெறி... போடா.''

- பெட்ரோல் பங்க் பையனை மடக்கினார்கள்.

''இங்க உட்கார்ந்து டீ சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். இந்த வேன் வந்து நின்னுச்சு. டிரைவர் இறங்கி கார் கிட்டப் போனாரு.''

''எதுனா எடுத்துக்கிட்டுப் போனாரா?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''வண்டிச் சாவி கையில வச்சிருந்தாரு.''

''அதெப்படி அவ்வளோ கரெக்டா சொல்ற?''

''கார் ஆளுங்கதான் இறங்கறப்பவே சாவி எடுத்துக் கிட்டு இறங்குவான், அவரு இறங்கினது ஸ்டைலா இருந்தது.''

''ஸ்டைலானா...?''

''கார்லேந்து இறங்கினது பார்த்தா... எனக்கு எப்படின்னு சொல்லத் தெரியலை.''

''என்ன ட்ரஸ் போட்டிருந்தான்?''

''தலைல கம்பளிக் குல்லா. ஊட்டில போட்டுக்கு வாங்களே... அதுமாதிரி.''

''என்ன கலர்?''

''ப்ரௌவுன்.''

''அப்புறம்.''

''அரைக்கை சட்டை...''

''அப்புறம்?''

''பேண்ட்''

''ஷூவா, செருப்பா?''

யோசித்தான். ''செருப்புங்க.''

''எப்படிச் சொல்ற?''

''முதல்ல காலதான் பார்த்தேன். கீழே வெள்ளை. மேல தோல் கறுப்பு. அந்த மாதிரி... புது செருப்பு மாதிரி.''

''ஆள் அடையாளம் காட்டுவியா?''

''முகம் தெரியலீங்களே.''

''வேற எதுனா பார்த்தியா?''

''மோதிரம் போட்டுக்கிட்டு இருந்தார்.''

''என்ன மோதிரம்?''

''ஒன்பது கல்லு மோதிரம்.''

''ஏன் இத்தினி விஷயம் பார்த்தே?''

''நான் ஒரு ஆளுக்கு வெயிட் பண்ணேன் சார்.''

''எந்த ஆளுக்கு?''

''வாட்டர் வாஷுக்கு ஒரு வண்டி அனுப்பறேன்னு சொன்னாங்க ரகஸ்யமா.''

''என்ன ரகஸ்யம் அதுல?''

''ராத்திரி ஓனர் இருக்க மாட்டாரு.''

''அதனால?''

''ராத்திரி வாட்டர் வாஷ் வண்டி வந்தா நாங்க நாலு பேர் செய்து துட்டு வாங்கிப் பங்கு போட்டுக்குவம். வண்டி நின்னதும் வாட்டர் வாஷ்ன்னு நினைச்சு...''

புரிந்தது. அவன் எதுவோ எதிர்பார்த்துத் தேட எதுவோ குறுக்கே வர கூர்மையாய்ப் பார்த்திருக்கிறான். ஆனால், என்ன புண்ணியம், எதுவும் தெரியவில்லை.

''அப்புறம்...?''

''வண்டி நமக்கு வரலைன்னு தெரிஞ்சதும் வுட்டுட்டங்க. டீ சாப்பிட ஆரம்பிச்சுட்டேன்.''

''மிஸ்டர் ஸ்ரீராமுலு...''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்.''

''இது திட்டமிட்ட கடத்தல். ஒரு வண்டில எடுத்தாந்து இன்னொரு வண்டில மாத்தி ஒரு கூட்டம் வேலை செய்திருக்கு, தனி ஆளா இருந்தா மாட்றது கஷ்டம். இது நகைக்கு, புள்ளை படிக்கிறதுக்கு செய்த விஷயமில்லை. உங்களை ஏதோ கேட்கப் போறாங்க ஸ்ரீராமுலு சார்...''

''சொல்லுங்க?''

''உங்களுக்கு எதிரிங்க உண்டா?''

- ஸ்ரீராமுலு சிரித்தார்.

''நாப்பது வருஷக்கடை. நாலு பேரை இடிச்சுட்டுதான் மேல வந்தேன். மேல வந்ததுக்கு நூறு பேர் பொறாமை. எனக்கு எதிரி இல்லாத இருக்குமா இன்ஸ்பெக்டர்?''

''குறிப்பா யாராவது...?''

''இங்க பேச வேணாம்.''

''மறுபடி வண்டி ஏறி வீட்டுக்குள் போனார்கள். வேலைக்காரி சூடான பானம் தயாரித்து எடுத்து வந்தாள்.''

''அப்ப வரதராஜு நான் சொல்றது கேட்டுக்க. இன்ஸ்பெக்டர் கேட்டதும் எனக்கு தோணிச்சு. நீ அன்னிக்கு கடை திறக்க வந்திருக்கக் கூடாது.''

''ஏம்பா?''

''உன்னை நிறையப் பேர் கவனிச்சுட்டாங்க.''

''புரியலை.''

''நான் என் பேரனைக் கொஞ்சினது... மருமகளோட பேசினது எல்லாம் பார்த்திருக்காங்க.''

''அதுக்கும்... இதுக்கும்...''

''எனக்குக் கெடுதல் பண்ண நினைக்கிறவங்க ஏராளம். அதுல குறிப்பா. நாலஞ்சு மார்வாரி, ஒரு முஸ்லீம் க்ரூப் இருக்கு. அது சவுகார்பேட்டை சண்டை. பவர் ப்ராப்ளம். யாரு பெரிய ஆளுன்னு வெட்டுப்பழி! குத்துப்பழி!''

''அந்தச் சகதில இறங்கத்தான் என்னைக் கூப்பிட்டீங்களா?''

''ஆமா வரதராஜு. கடைய நீ கவனிச்சுக்க. சகதில நான் இறங்கறேன்னு கூப்பிட்டேன். இப்பக் கடையில ஒரு காலும், சகதில ஒரு காலும் வச்சுக்கிட்டு திண்டாடறேன்.''

''குறிப்பா யார் மேல சந்தேகம்?''

''சொல்ல முடியாதுப்பா. சொல்லவும் கூடாது. இன்ஸ்பெக்டர் சொன்னாப்ல வந்து பேரம் பேசுவான்.''

''உடனே எனக்கு இன்ஃபார்ம் பண்ணுங்க.''

ஸ்ரீராமுலு சோகமாய் சிரித்தார்.

''ஏங்க சிரிக்கிறீங்க?'' -இன்ஸ்பெக்டர் வியந்தார்.

''எங்க சண்டைக்கு நாங்க போலீஸ் கூப்புடற வழக்கமில்லை.''

''அப்ப உங்க சண்டைல எம் புள்ளை சாகணுமா?'' வரதராஜுகத்தினான். ''போலீஸ் வரும். எம்புள்ளைய மீட்கும்.''

''எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனா, போலீஸ் நுழைஞ்சா பேரம் பேசமாட்டாங்க. கதை முடிஞ்சிடும்.'' கழுத்தில் கை வைத்து கத்தி வெட்டு போல் காட்டினார்.

சுப்புலட்சுமி ''ஐயா'' என்று கூவினாள்.

''அதனாலதான் சொல்றேன், அமைதியா இருங்க.''

''ச்சே... உங்களால வந்த வினை!'' வரதராஜ் நெற்றியில் அடித்துக்கொண்டான்.

''வரதா... அஞ்சு வருஷம் அப்பன் பேர்கூட சொல்லாத இருந்தே. அப்படியே இருந்திருக்க வேண்டியதுதானே? உன்னை யார் சவுகார்பேட்டை வரச் சொன்னது? வந்ததுதான் வந்த... நீ மட்டும் வந்து தலை காட்டிட்டுப் போயிருக்கலாமில்ல. புள்ளையும் பொண்டாட்டியும் எதுக்கு? அப்பவே நான் கலவரப்பட்டேன்.''

''அப்ப நான் என்னங்க செய்யறது?'' இன்ஸ்பெக்டர் பரிதாபமாய்க் கேட்டார்.

''ஒண்ணு புரியுதுங்க தம்பி. புள்ளைக்கு ஒண்ணு நேராது, எங்கிட்ட ஏதோ கேட்கப் போறாங்க.''

''எல்லாம் கிடக்க ஏன் உங்க பேரனை...?''

''அது என் தப்பு. நான் அன்னிக்கு மடியில தூக்கி வச்சு நகை போட்டு பேரனை கொஞ்சினேன். நாலு பேர் கண்ணுல படற மாதிரி செய்திருக்கக் கூடாது. 'அட! ஸ்ரீராமுலு வீக்பாயிண்ட் இதுவா?'ன்னு புள்ளி வச்சிட்டான். என் இடத்துல நின்னு என் பேரனைக் கொஞ்சினது தப்புதான்.''

''என்ன கேட்பாங்க? நீங்க என்ன கொடுக்கப் போறீங்க?'' வரதராஜ் கத்தினான்.

''யாருன்னு... யார் மேல சந்தேகம்னு சொல்லுங்க ஸ்ரீராமுலு. மடக்கிப் போடறோம்.'' இன்ஸ்பெக்டர் பதட்டப் பட்டார்.

''மடக்கியா? கிடைச்சாதானே மடக்குவீங்க? நான் சொல்றது பெரிசில்லை. உங்களால எவனையும் கண்டு பிடிக்க முடியாது. தேடறீங்கன்னு தெரிஞ்சாலே லண்டன், பாரிஸ் போயிடுவான். போனதாக் காட்டிட்டு சவுகார் பேட்டையில் சுத்துவான்.''

''சார்.''

''நீ ஏரியாவுக்குப் புதுசா? உங்க ஐ. ஜி.ய... கமிஷனரைக் கேளு. ஏரியா பத்தி தெரியும்.''

''மாமா ஏதாவது செய்யணும் மாமா!'' சுப்புலட்சுமி அழுதாள்.

''அம்மா உன் துக்கம் எனக்குப் புரியுது. எனக்கு மட்டும் இல்லையா? நான் காட்டிக்க முடியாது. மறுபடி சொல்றேன். புள்ளைக்கு ஒண்ணும் நேராது. போ... போய்ப் படுங்க. காலைல வந்து பேசறேன். டேய்...'' கூவினார்.

வெள்ளைச்சட்டை ஆட்கள் வந்தார்கள். ''யாராவது எந்தத் தகவல் சொன்னாலும் நான் பேசத் தயாரா இருக்கிறதா சொல்லிடுங்க.''

''சரி, ஐயா.''

''அப்ப ப்ளாக் மெயில்தானா?''

''எனக்குச் சந்தேகம் அந்த மாதிரிதான்.''

''உறுதியா பேசறீங்களேப்பா.''

''ஆமா.''

''எத வச்சு?''

''வண்டியில சவுகார்பேட்டை சர்வீஸ் ஸ்டேஷன் ஸ்டிக்கர் ஒட்டியிருக்கு.''

''அடட எங்க?''

''டேஷ் போர்ட்ல. அது ஒரு ஜாயிண்ட். வண்டிங்க வந்து நிக்கிற ஜாயிண்ட்.''

''ரவுண்டப் பண்ணிரலாம்.''

''அப்படியெல்லாம் கண்டு பிடிச்சுர முடியாது தம்பி. அது செங்கல்பட்டுல எவன் அட்ரஸ்லயாவது இருக்கும். அங்க போனா ஆள் இருக்காது. இது பின்னால நிறைய விஷயம் இருக்கு. நீங்க போங்க.''

''கேஸ் என்ன செய்ய?''

''பெண்டிங்ல போடு. நான் முடிச்சுட்டு சொல்றேன்.''

''போலீஸ் உதவி தேவையில்லையா? மிஸ்டர் வரதராஜு! என்ன சொல்றீங்க?''

அவன் பேசாது இருந்தான்.

''நீ ஒண்ணும் செய்ய முடியாது தம்பி! இது எங்க சண்டை. வெளிய வராது.''

போன் ஒலித்தது.

எல்லோரும் எழுந்திருக்க, இன்ஸ்பெக்டர் கையமர்த்தினார். போய் போன் எடுத்தார். 'ஹலோ' என்றார்.

''யாரு?''

''நீ யார்?''

''இன்ஸ்பெக்டரா, போனை ஸ்ரீராமுலுகிட்ட கொடு.''

''என்ன வேணும். நீ யாரு?''

''குழந்தை உசிரோட வேணுமா கேளு?''

''ஸ்ரீராமுல, உங்களுக்குத்தான் போன்.''

''என்ன சொல்றான்?''

''குழந்தை பத்தி பேசறான்.''

வரதராஜு பாய்ந்து வந்தான். ஸ்ரீராமுலு அவனை விலக்கினார். மெல்ல போனைக் காதில் வைத்ததும் அமைதியாய் இருந்தது.

''ஸ்ரீராமுலு பேசறேன்.''

''நாளைக்கு சாயந்தரம் மீட்டிங் போடலாமா?''

''எங்க?''

''போடலாமா சொல்லு?''

''போடு... புள்ளை எங்க...?''

''நல்லா இருக்கா.''

''என்ன செய்யறான்?''

''தூங்கறான்.''

''தூக்க மருந்து கொடுத்தியா?''

''இல்லை. பார் சோறு ஊட்டி தூங்கப் பண்ணிட்டம்.''

''அழுதானா?''

''இல்லை. விளையாடினான்.''

''புள்ளைக்கிட்ட எதுனா தப்பா நடந்தீங்க! மொத்த சவுகார்பேட்டையும் எரிஞ்சுடும். ஞாபகம் வச்சுக்க.''

''மீட்டிங்குல பேசு இதெல்லாம்.''

-துண்டிக்கப்பட்டது.

''என்னப்பா?''

-சொன்னார்.

''அப்ப இந்த விஷயம் நீங்க சொன்னதுதானா?''

''ஆமா.''

''குழந்தையை ஒண்ணும் செய்துடமாட்டாங்களே?''

''ஒரு கீறல் கூட விழாதாம்.''

''எப்படி நம்பறது?''

''விழுந்தா பல கொலை நடக்கும். தேடித் தேடி அத்தினி ஊட்டுக் குழந்தைகளையும் ஸ்ரீராமுலு வெட்டுவான்னு அவங்களுக்குத் தெரியும்.'' - கோபத்தில் அவர் முகம் சிவந்து புடைத்தது. நரம்புகள் முறுக்கேறின.

''வரதராஜு.''

''அப்பா...''

''தெரிஞ்சோ தெரியாதயோ நீ இதுல சம்பந்தப்படும் படி ஆயிடுச்சு. என்கூட வீட்டுக்கு வா! நான் சொல்றதக் கேளு.''

''ஏன்?''

''இது ஜாக்கிரதையான இடம் இல்லை.''

''ஏன்...''

''பேச்சு சரியா முடியலைன்னா மேல எதுனா சிக்கல் வரும்.''

''இன்னும் என்ன சிக்கல்?''

''உனக்கும், உன் பொண்டாட்டிக்கும் குறிவைக்கலாம்.''

''வேணாங்க, போயிடலாம் மாமாகூட.'' - சுபி கத்தினாள்.

வரதராஜு தலை கவிழ்ந்தான். உள்ளே வேதனை பொங்கிப் பொங்கி எழுந்தது.

''கிளம்பு வரதராஜு''

ஸ்ரீராமுலு வெளியே வந்து தோட்டத்தில் நின்றார். இன்ஸ்பெக்டர் பின் தொடர்ந்தார்.

''அப்ப நான் வரட்டுங்களா?''

''டேய்!'' திரும்பி கூவினார். அவருடைய ஆள் தோல் பை நீட்டினான். தோல் பை வாங்கிப் பிரித்து உள்ளே கைவிட்டு நாலு கட்டு எடுத்தார். இருபதாயிரம் வச்சுக்க. நல்லா இரு. போ.''


''ஐயா...''

''உன் வாய மூடறதுக்கு இது.''

''எம்பேர்ல தப்பு வராதுங்களே?''

''இது குடும்ப சண்டை. நீ போ.''

''வரேங்க.'' சல்யூட் அடித்தார். நோட்டுக் கற்றைகளை சட்டைக்குள் திணித்துக்கொண்டார். வெளியேறினார். அவர் நடையில் சந்தோஷம் இருந்தது.



18

இந்த வீடு விட்டு எங்கே போக முடியும்? மனசு குழம்பித் தவித்தது. ஒரு ஹால்... இரண்டு அறைகள்... சிறிய சமையற்கட்டு... பின் தாழ்வாரம். வீடு அகலத்துக்குத் தோட்டம். வாங்கியபோது மாளிகையே கிடைத்து விட்டது என்கிற சந்தோஷம் இருந்தது.

சின்னது இல்ல... ரொம்ப சின்னது இல்ல... என்று சொல்லத் தோன்றியது. சவுகார்பேட்டையில் உள்ள வீட்டு ஹால் இந்த மொத்த வீட்டையும் சேர்த்தால் கொஞ்சம்தான் சிறியதாக இருக்கும்.

அந்த வீட்டில் ஒரு ஆள் மீது இன்னொரு ஆள் நின்றாலும் உச்சி தொட முடியாது. இங்கே ஒரு நாற்காலி போட்டு எம்பினால் தொட்டு விடலாம். கொஞ்சம் நோய்பட்ட மொஸைக் எத்தனை பாலீஷ் போட்டாலும் அழுக்கு நிறமாய் இருக்கும். அங்கே சிகப்புத் தளத்தை தண்ணீர் விட்டுத்துடைக்க டாலடிக்கும்.

குழந்தை பிறந்தவுடன் படுக்கை அறையில் தொட்டில் கட்ட முடியவில்லை. ஸ்டாண்ட் தொட்டில்தான் வாங்கிப் போட்டார்கள். அலுமினியத் தொட்டில். விசிறி ஆட்ட சுவரில் இடித்து நெளிந்து விட்டது. கையைக் கீறுகிறது என்று பின்பக்கம் எறிந்து விட்டாள்.

பிறகு இரட்டைக் கட்டிலில்தான் குழந்தை தூங்கினான். ரெட்டை சோபாக்களை ஈரம் செய்தான். சமையலறைக் கதவு இடுக்கு வழியே கை விரல் வைத்து தானே மூடிக் கொண்டு அலறினான். பாக்கெட் டிரான்சிஸ்டரை வராந்தாவில் வீசி எறிந்து சிரித்தான். உல்லன் கரடியை மண்ணில் போட்டுப்

புரட்டி மார்போடு அணைத்துக் கொண்டான். தோட்டம் முழுக்க ஓடினான். பழைய டயரில் டர்க்கி டவல் சுற்றி கயிறு போட்டு கொய்யா மரத்தில் ஊஞ்சல் கட்டி வீசி ஆடி மரத்தோடு கயிறு சுற்ற கத்தினான்.

இந்த மூன்று சக்கர சைக்கிள் அவனுக்கு விமானம்... நீர்மூழ்கிக் கப்பல்... விசைப்படகு... கார்.... லாரி... மாயக்குதிரை... வீடியோவில் அவன் பார்க்கிற அத்தனை வாகனமும் சைக்கிளில் கிடைக்கும், அதன் பிளாஸ்டிக் முதுகில் டாடூ என்று எழுதியிருக்கிறது.

இந்த இடத்தை விட்டு எங்கு போக முடியும்? எத்தனை வேதனை இது? ஒருவேளை குழந்தையைக் கொண்டு போனவன் மனசு மாறி இங்கே கொண்டு வந்து விட்டால் தேட மாட்டானா 'அப்பா எங்கே?' என்று அழ மாட்டானா...

மனசு பொங்கிப் பொங்கி அழுதது.

புரியவில்லை... என்ன செய்வது என்று புரியவில்லை? விடை ஏதும் இல்லை. கணிதம் என்ன என்றே புரியவில்லை? என்னைத் தீர்க்க உன்னைக் குறி வைத்திருக்கிறார்கள் என்று அப்பா சொல்கிறார். இதை எப்படி தீர்க்கப் போகிறார்? என்று புரியவில்லை.

குழந்தை இன்று இரவு எப்படி உறங்குவான்...? என்ன சாப்பிடுவான்...? என்ன குடிப்பான்...? அழுவானா... அழுதால் என்ன செய்வார்கள்... அடிப்பார்களா...?

இந்த வீட்டில் குழந்தையை எதற்கும் அடித்ததில்லை. முப்பது ரூபாய் கொடுத்து வாங்கின கிரிக்கெட் மட்டையை எடுத்து குழந்தை தன்சக்தி எல்லாம் திரட்டி வரதராஜ முதுகில் அடித்தான், எதிர்பாராத விதத்தில் விழுந்ததனால் சுளீரென்ற வலி வலியின் விளைவால் கோபத்தில் பல் கடித்து

எழுந்திருக்கதகப்பன் கோபம் கண்டு பிள்ளை மிரண்டது. ஒரு கணம்தான்... உடனே கோபம் அடங்கி பிள்ளையை வாரி மிரட்சி தணிக்க புத்தி போயிற்று. வலிக்குதாப்பா என்று முதுகு தடவி குழந்தை அணைத்துக் கொள்ள, இன்னும் இரண்டு அடி வையேன் என்று சொல்லத் தூண்டியது.

அடித்தோ, மிரட்டியோ குழந்தையை வளர்க்கலாகாது என்று தீர்மானமான எண்ணம் சட்டென்று முட்டியில் அடித்து மடங்கிப் போட்டது மாதிரி இருக்கிறது.

இந்த இடம் விட்டு எங்கே போவது? ஆபீஸ் என்னவாகும்? ஏற்றுக் கொண்ட காண்ட்ராக்ட் என்னவாகும்? வளர்ச்சி தடைப்படுமே. சுத்தமாய் பிஸினஸ் அடிபடுமே...

முகம் கவிழ்த்து பிள்ளை உட்கார்ந்திருந்த ஸ்ரீராமுலு அவன் தோளைத் தொட்டார்.

''உன் கம்பெனி என்ன ஆவும்னு யோசிக்கிறியா... எல்லாத்தையும் ஏறக்கட்டிட்டு வா! நீ இருந்தாதான் உன் கம்பெனி. உன்னை ஒரு குத்துல சரிச்சுட்டா எது வச்சு உன் கம்பெனி ஓடும்? காசு மரியாதை எல்லாம் உசிரோட இருக்கணும்கறதுக்கு அப்பாலதான். நான் சொல்றது உனக்கு புரியலைன்னு நினைக்கிறேன்.

என்னைக் கொல்ல முடியாது. கொல்லவும் மாட்டான். என்னை வழிக்குக் கொண்டு வர என்ன வேணா செய்வான். யாரை வேணா குத்துவான். பத்து நாளைக்காவது எங்கியும் போகாத. நம்ம வீட்டோட இரு.''

சுப்புலட்சுமி அவன் அருகே வந்தாள்.

''காசு போட்டும். காண்ட்ராக்ட் போட்டும். மறுபடி ஏதாவது தொழில் ஆரம்பிப்போம். உசிருக்கு மிஞ்சி என்ன...? அப்பா சொல்றது சரி. நாமளே இதை விட்டுட்டு

வேற போலாம்னு நினைக்கலையா...? இப்ப நேரம் வந்திருக்கு. வாங்கின அட்வான்ஸ் திருப்பிக் கொடுத்துட லாம். எல்லாத்துக்கும் அப்பா இருக்கார். யாரும் இல்லேன்னா தலையெழுத்தேன்னு இருக்க வேண்டியது தான், இருக்கறப்ப என்னா...?''

கிழவர் புருவம் உயர்த்தினார். ஆக நஷ்டம் வர விஷயம்தானா... மூடிடலாம்னு நினைச்ச கம்பெனிதானா, வா மருமகளே வா... வீட்டுக்கு வா... என் காசு பலம் காட்டறேன் வா.

''கிளம்பச் சொல்லும்மா... ஒரு நிமிஷம்கூட இங்க இருக்கக் கூடாது.''

சுப்புலட்சுமி பீரோ திறந்து நாலு நாள் உடுப்பு எடுத்துக் கொண்டாள். நகைகளை வாரி தோல் பையில் போட்டுக் கொண்டாள். எல்லாக் காசும் எடுத்து பெட்டியில் திணித்தாள். தயார் என்று கிளம்பினாள்.

''பூட்டின வீடு ஜாக்கிரதையா... இல்லையா...?''

''என் ஆள் இருப்பான் இங்க. அது தவிர போலீஸ் ரோந்துக்கு இப்ப சொல்லியிருக்கேன். கிளம்பு.''

பின்பக்கம் பெட்டி வைக்கப்பட்டன. மகனும், மருமகளும் ஏற வண்டி பின்னோக்கி நகர்ந்து தெருவில் சீறி ஓடியது.

சவுகார்பேட்டை அமைதியாக இருந்தது. பழக் கடைக்காரர்கள் பெட்டிகளை அடுக்கத் துவங்கி விட்டார்கள். சிலர் காசு எண்ணிக் கொண்டிருந்தார்கள். இருட்டில் அவர்கள் இறங்கி வீட்டுக்குப் போனது யாருக்கும் தெரிய வில்லை.

ஸ்ரீராமுலுவின் மனைவி 'பிள்ளையை வா' என்றாள். மருமகளைப் பார்த்துச் சிரித்தாள். வலது கால் வச்சு வா என்று

தெலுங்கில் சொன்னாள். ஸ்ரீராலுமு என்று பெயர் எழுதியிருந்த நிலைப்படி தாண்டி வலது கால் வைத்தாள்.

ஹாலின் விஸ்தீரணம் பயப்பட வைத்தது. வாசலுக்கும், ஹாலுக்கும் இடைப்பட்ட அறையை ஒழித்து வைத்து அவர்களை உள்ளே அனுப்பினாள்.

''அம்மாடி, இன்னிக்கு ஒரு நாள் அட்ஜெஸ்ட் பண்ணிக்கங்க. நாளைக்கு ஏ.ஸி. பண்ணிடறேன்.''

வாசலுக்கு வந்து செருப்புகள் அணிந்து தெருவில் இறங்கினார்.

சுப்புலட்சுமிக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. மெல்ல ஹால் தாண்டி சமையலறைக்குப் போக அதுவும் அகலமாய் இருந்தது. கல்யாண சத்திரம் வீடாய் மாற்றப்பட்டது போல் காட்சி அளித்தது.

''நான் சமைக்கட்டுமா?'' என்று மாமியாரிடம் கேட்க, அவள் திரும்பிப் பார்த்த விதத்தில் சிநேகம் இல்லை.

''என்ன சமைப்ப...? எங்களுக்கு வேற மாதிரி பதார்த்தம். உங்களுது வேற மாதிரி பதார்த்தம். என்ன வேணும் சொல்லு. செய்யச் சொல்றேன்.''

''சமையலுக்கு ஆள் போட்டிருக்கா?''

''இந்த வீட்டுக்கு வந்து ஒரு மாசம் சமைச்சேன். அப்புறம் ஆள் போட்டுட்டாங்க. என்ன சாப்பிடற...?''

''அவரு சாப்பிடணும்.''

''வரச் சொல்றியா...? எடுத்துட்டுப் போறியா...? குப்பு... இங்கே வா!''

பின்பக்கத்திலிருந்து ஒரு பெண் வந்தது. ''என்ன வேணுமோ சொல்லு... செய்வா. இவதான் சமையலுக்கும் எல்லாத்துக்கும்!''

அந்தப் பெண் கறுப்பாய்க் குண்டாய் இருந்தாள். முகத்தில் அலட்சியம் மின்னியது.

''எனக்கு மோர் சாதம் போதும். அவருக்கும் அதே கொடுத்துரு.''

''கேட்டுட்டு வாயேன்... எதுனா செய்யச் சொல்லலாம்.''

''அவரு கிட்ட இப்ப சாப்பாட்டைப் பத்தி பேச முடியாது. தட்டு எங்க இருக்கு?''

குப்பு அலமாரி திறந்தாள். இரண்டு அடுக்குகளில் வெள்ளித் தட்டுகள் சரித்து வைக்கப்பட்டிருந்தன. கதவு திறந்ததும் சூரிய பிரகாசம் போல் மின்னின.

இரண்டு தட்டு எடுத்து குப்பு டைனிங் டேபிளில் வைத்தாள். சோறு கொண்டு வந்து கரண்டியால் அள்ளினாள். வலது கையால் சோறு அணைத்தபடி இடது கையால் கரண்டியில் எடுத்துத் தட்டில் போட்ட விதம் சுபிக்கு குமட்டலைக் கொடுத்தது.

''வேணாம். நானே போட்டுக்கறேன்.''

''போட்டுக்கட்டும். விட்டுரு.''

தட்டென்று கரண்டி தட்டில் போடப்பட்டது. வந்த பத்தாவது நிமிடம் ஒரு மனக்கசப்பு படர்வது சுபி உணர்ந்தாள்.

சோறு தயிர் விட்டு பிசைந்து புருஷன் இருக்கும் இடத்திற்குக் கொண்டு போனாள். அவளுக்கு குழப்பமாக இருந்தது.

அவள் குழம்பிய நேரம் இரண்டு போலீஸ் அதிகாரி களும் குழம்பினர்.

''என்னப்பா ஆச்சு...? எங்க இன்ஸ்பெக்டர்...?'' உதவி கமிஷனர் ஸ்டேஷன் வாசலில் வண்டி நிறுத்தி கேட்டார்.

இன்ஸ்பெக்டர் விரைவாய் வாசலுக்கு வந்து சல்யூட் அடித்தார்.

''எதுங்க சார்...?''

''குழந்தை காணம்னு வந்துதே?''

''அது ஸ்ரீராமுலு மகனாம்?''

''காணாமப் போனதா...?''

''ஸ்ரீராமுலு பேரன்சார். அவர் புள்ளையோட புள்ளை.''

''அதனால...?''

''இது குடும்பச் சண்டை மாதிரின்னுட்டாரு.''

''யாரு...?''

''ஸ்ரீ ராமுலு!''

''எங்க பார்த்த?''

''அவரு புள்ளை வீட்லேயே வந்து பேசிட்டுப் போனாரு.''

''ஆக்ஷன் வேணாம்னு எழுதிக் கொடுத்தாரா?''

''இல்லீங்க. வாய் வார்த்தையா சொன்னதுதான்.''

''யோவ்... முட்டாளா இருக்கியே... அப்புறம் அந்த ஆளே அசிங்கமா பேசுவான்.''

''நானும் இத கேட்டேன் சார். வேணாம், நான் பார்த்துக்கறேன்னாரு. கூட ஆள் படையோட வந்தாரு.''

''ஆள் படையா?''

''தடி தடியா... அடியாள் மாதிரி... அவரு சவுகார் பேட்டை தாதா சார். ஸ்மக்ளர்ஸ் காண்டாக்ட்ஸ் இருக்கற ஆளு சார்.''

''இது பெரிய ஆளுங்க யாருக்கும் தெரியுமா?''

''உங்களுக்குத்தான் தெரியும் சார்.''

''இத இப்படி விட முடியாது.''

''என்ன சார் பண்றது?''

''கேஸ் வித்ட்ரா பண்ணிக்கங்க, போலீஸ் உதவி வேணாம்னு... எழுதித் தர சொல்லு.''

''கேஸ் கொடுத்தது அவரு புள்ளை வரதராஜு! அவருக்கு போலீஸ் வேணும்னு தோணுது. ஸ்ரீராமுலுக்கு வேணாம், இது லோக்கல் சண்டைங்கறாரு.''

''அப்ப வுட்டுர்றதா?''

ஸ்ரீராமுலு பெரிய புள்ளி சார். பொலிடிக்கல் பவர் இருக்கு. ஜாதி பலம் உள்ள ஆளு. என்ன செய்யறதுன்னு யோசிச்சிட்டே இருந்தேன். நீங்க வந்துட்டீங்க.''

''நம் சைட் ஆக்ஷன் என்ன?''

''வண்டி கண்டுபிடிச்சுட்டேன். நாய் குழம்பிடுச்சு.''

''வண்டி எங்கே?''

''சம்பையர் தியேட்டராண்ட.''

''எந்த நாய்?''

''ரேகா...''

''தப்புப் பண்ணாதே...''

''என்னையே புடிச்சுது சார் முதல்ல...?''

''வண்டில கை வச்சிருப்ப...?''

''ஆமா சார்.''

''அதான். நாய் வர்ற வரைக்கும், தொடக் கூடாது.''

''அப்புறம் ஸ்ரீராமுலுக்கிட்ட ஓடிச்சு. திரும்பிடுச்சு. பக்கத்துல இன்னொரு இடம் மோந்துட்டு நின்னுடுச்சு, அங்க டயர் அடையாளம் இருக்கு.''

''என்ன வண்டி?''

''அம்பாஸடர் சைஸ் டயர்.''

''வாய்யா அந்த இடம் போகலாம்.''

மறுபடி போனார்கள் இடம் அமைதியாய் இருந்தது. காவலுக்குப் போட்டிருந்த கூர்க்கா எழுந்து நின்றான்.

வண்டியைச் சுற்றி வந்தார்.

''உங்களை நாய் புடிச்சுதா?''

''ஆமா சார்.''

''அதாவது நீங்க அதுக்கு முன்னாடி வந்து செக் பண்ணிட்டீங்க?''

''ஆமா சார்.''

''ஸ்ரீராமுலு?''

''என் கூட வந்தாரு சார்.''

''எதுல...?''

''நான் அவர் கார்ல வந்தேன் சார்.''

''அவர் கூப்பிட்டாரா?''

''யெஸ் சார்.''

நிமிர்ந்து ஊடுருவி இன்ஸ்பெக்டரை அசிஸ்டெண்ட் கமிஷனர் பார்த்தார்.

''முதல்ல சட்டை பட்டனைப் போடுய்யா.''

இன்ஸ்பெக்டர் சட்டை பட்டன் போட்டு விறைப்பானார்.

''நீங்க வந்து எத்தனை நேரம் பொறுத்து நாய் வந்தது?''

''பத்துப் பதினைந்து நிமிஷம் கழிச்சு.''

''அதுவரைக்கும் என்ன செய்தீங்க.''

''செக் பண்ணிட்டு காத்துக்கிட்டிருந்தோம்.''

''எல்லாருமா...?''

''ஆமா சார்.''

''ஸ்ரீராமுலு எங்கே இருந்தாரு?''

''இங்கதான் சார், கடை வாசல்ல.''

கடைக்குள் ஏறினார். ஊடுருவி பார்த்தார். சிகரெட் வெற்றிலைப் பாக்குக் கடை. கலர், சோடா அதிகம் இருந்தன.

''இவரோட வந்த ஆள் ஏதாவது வாங்கினாரா?''

''ஆமா சார்.''

''என்னா...?''

பன்னீர் புகையிலை சார்.''

''யாரு...?''

''கிழவரு.''

''கிரிமினல்யா அவன்... பாஸ்டர்ட்.''

''யாரு சார்?''

''சொல்றேன், இது பத்தி எல்லா விஷயமும் என்கிட்ட ரிப்போர்ட் பண்ணு. நான் கமிஷனர்கிட்ட பேசணும். எதுனா ஏடாகூடமா செய்தே... தொலைஞ்சே. இது பெரிய இடத்து விஷயம். தப்பா போச்சு டிபார்மெண்ட்டையே உலுக்கிடு வாங்க.''

உதவி கமிஷனர் காரில் ஏறிப் போனார். இன்ஸ்பெக்டருக்கு வியர்த்தது.


பெட்ரோல் பங்க் போனார். பையன்கள் எழுந்தார்கள். போன் எங்கே என்று கேட்டார். காட்டினார்கள்.

சுழற்றினார்.

''ஸ்ரீராமுலு இருக்காரா...?''

''நான் அவரோட மருமக பேசறேன்.''

துண்டித்தார்; கவலைப்பட்டார்.



அந்த உதவிக் கமிஷனருக்கு புத்தி அரித்தது. 'சவுகார் பேட்டைக்குப் போ' கார் டிரைவரை திசை திரும்பினார்.

போலீஸ்காரன் லஞ்சம் வாங்கறான்னு சொல்லு... சாராயம் காய்ச்சறான்னு சொல்லு. பத்துப் பொண்ணுங்களை வச்சு... ஆயிரம் சொல்லு. ஆனா, போலீஸ்காரனை முட்டாள்னு நினைச்சே... ஒத்துக்கமாட்டேன். பன்னீர்

புகையிலை வாங்கி, கை கால்ல தேச்சுக்கிட்டா போலீஸ் டிபார்ட்மெண்ட் நாயை ஏமாத்தலாம். போலீஸ்காரனை ஏமாத்த முடியாது.

புள்ளை குழந்தையைக் காணாம்னு கம்ப்ளெயிண்ட் குடுக்கறான். கிழவன் இது நான் பாத்துக்கறேன்னு வாபஸ் வாங்கறான். போலீஸ்கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணிட்டு வாபஸ்னா முடியுமா? ஏன் ஏதுன்னு கேள்வி வரதா? வந்துருக்கும். வாயடைச்சிருப்பான். இன்ஸ்பெக்டர் சர்ட் பட்டனை கிழவனே அவுத்து நோட்டுக் கத்தையா சொருகி யிருப்பான்.

அப்ப நான் என்ன இளிச்சவாயனா? கண்டு பிடிக்கிறேன், என்ன கோல்மால்னு. யாருக்கும் தெரியாத கண்டுபிடிக்கிறேன்.

''எங்க சார் சவுகார் பேட்டைல?''

''போலீஸ் ஸ்டேஷன்.''

கார் நின்றது. ஸ்டேஷன் பாரா துப்பாக்கிக் கட்டை தூக்கி தோளில் சாய்த்து படேரென்று அதன் அடிமட்டையில் அடித்து சல்யூட் செய்தான்.

''யாருய்யா ஏட்டு?''

''நான்தான் சார்.''

''இன்ஸ்பெக்டர் எங்கே?''

''பின்பக்கம் போயிருக்காரு சார். வயிறு சரியில்லைன்னாரு.''

''வரச் சொல்லு''

இன்ஸ்பெக்டர் வந்து சல்யூட் செய்தார்.

''என்ன மேன் ட்ரபிள்?''

''ஒண்ணுமில்லே சார்.''

''வயிறு சரியில்லைன்னாங்க.''

''ஆமா சார். நேத்து ஜிலேபியும், சமோசாவும் சாப்பிட்டேன், ஒத்துக்கலை.''

''வீட்ல விருந்து வந்துதா?''

''இல்லை சார். இந்த ஏரியால ஜிலேபி, சமோசாதான் டாப் சேல்ஸ் சார். வாங்கி வரச் சொல்லட்டா.''

''ஏன் நான் நல்லா இருக்கிறது பிடிக்கலையா? சரி... ஏரியா எப்படி இருக்கு?''

''கிழக்குப் பக்கம் சைலண்டா இருக்கும் சார். அந்தாண்ட கொஞ்சம் எதுனா சலசலப்பு ஆம்பளை பொம்பளை சண்டை! பொம்பளையாலதான் சண்டையே வரும்.''

''பேட்டை பிஸ்தா யாரு?''

''அது பல குரூப்பா இருக்கு சார். நீங்க யாரையானா தேடறீங்களா சார்?''

''ஒரு செயின்ல இருக்கிற மார்க் வச்சு எந்த கடைன்னு சொல்ல முடியுமா?''

''அநேகமா சொல்லிடலாம். ஆனா, பெரிய கடைங்கள்லதான் கடை முத்திரை வச்சுக் குடுப்பாங்க.''

''பெரிய கடைன்னா?''

''பாப்பாலால், கவுரி ஜுவல்லரி, தங்க மாளிகை, ஸ்ரீராமுலு அண்ட் சன்ஸ் மாதிரி.''

''ஸ்ரீராமுலு கடை பெரிசா...''

''ஆமா சார். பெரிய வியாபாரி. நகை தொழிலாளிங்க சங்கத் தலைவர். வியாபாரிகள் தலைவர், சவுகார் பேட்டை ரோட்டரி தலைவர். ஏன் சார்?''

''தப்பான பார்ட்டியா?''

''அப்படி ஒண்ணும் இல்லை சார். இந்த இடத்துல பெரிய ஆள் சார். அவரு பேச்சுக்கு மதிப்பு உண்டு. இந்த ஏரியா அவர் கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கு சார். அவங்க

ஜாதிக்காரங்களுக்கு அவர் பேச்சுதான் வேதவாக்கு. அத்தினி மரியாதை.''

''அப்புறம்?''

''என்ன கேட்கறீங்க தெரியலையே?''

''உனக்கு தெரிஞ்சத சொல்லு.''

''அவர் மேல் ஏதாச்சும் கேஸ் இருக்கா சார்?''

''அவரு பேரனை யாரோ தூக்கிட்டுப் போயிட்டாங்களாம். அவரு புள்ளை மைலாப்பூர்ல ரிப்போர்ட் கொடுத்திருக்காரு. தலைவர் வூட்டு ரோட்ல நாலு வீடு தள்ளி அவர் புள்ளை வீடாம். என்ன ஏதுன்னு விசாரிக்க சொல்லியிருக்காங்க, பெரிய இடத்துலேர்ந்து.''

''கடை தொறக்கும் போது வந்தாங்களே...''

''யாரு...?''

''அவர் புள்ளை கடை... நகைக்கடை திறந்தாரே...''

''அந்தாளு கம்ப்யூட்டர் ஆளுய்யா.''

''இல்லீங்க. நான் சொல்றது அவரோட ரெண்டாவது சம்சாரம் பையன்.''

''இரண்டாவது சம்சாரமா?''

''சிந்தாதிரிப்பேட்டையில இருக்குது. பையன் பேரு கூட... என்னாது... என்னவோ பேராச்சே...? யோய் ஏட்டு...? புதுக்கடை திறந்தானே நடிகர் வச்சு... அவன் பேர் என்ன?''

''ரங்கசாமி சார்.''

''ஆமா சார்... ரங்கசாமி.''

''எப்போ இது?''

''ஒரு மாசம் இருக்கும்.''

''ரெண்டாவது சம்சாரம் பையனுக்கும், முத சம்சாரம் பையனுக்கும் ஏதாவது சண்டையா?''

''அதெல்லாம் இல்ல சார்.'' ஏட்டு அருகே வந்தார். ''ஸ்ரீராமுலுவோட மூத்த பிள்ளை கடை திறப்புக்கு பெண்டாட்டி, புள்ளையோட வந்தாரு. நடிகர் கடை திறந்தாரு. இவரு முதலில் போட்டாரு. பேரனை வாங்கிக் கொஞ்சிட்டு நகை போட்டு அனுப்பினாரு. போட்டோல்லாம் எடுத்தாங்களே...''

''யார் போட்டோ எடுத்தது?''

''நம்ம ஏரியா ஆள்தான் முனைல கடை போட்டிருக்கான்.''

''அந்தாளை ரெண்டு போட்டு விசாரி... தகராறு உண்டான்னு?''

''இருக்காது சார். மூத்தபுள்ளை சம்சாரமும்.ஸ்ரீராமுலு வோட ரெண்டாவது பொண்டாட்டியும் நல்லாச் சிரிச்சு பேசினாங்களே. ஸ்ரீராமுலுவோட முதசம்சாரம்தான் வரலியே தவிர... இவங்கல்லாம் ஒருத்தருகொருத்தர் நல்லா சிரிச்சு பேசிக்கிட்டாங்க. ரெண்டாவது சம்சாரம் புள்ளை மூத்த சம்சாரம் புள்ளையையும் அவ குடும்பத்தையும் வாசல் வரை வந்து வழி அனுப்பிச்சுது. தகராறு மாதிரி தெரியலியே சார்.''

''இன்னும் எத்தினி சம்சாரம்... எத்தினி புள்ளைய்யா அந்த ஸ்ரீராமுலுக்கு?''

''சம்சாரம் ரெண்டுதான் போல இருக்கு சார். புள்ளை முத சம்சாரத்துக்கு இன்னொண்ணு இருக்கு. அது கொஞ்சம் தறுதலை.''

''தறுதலைன்னா...?''

''ஏதாவது ரவுடித்தனம் பண்ணும். வெளியே வராது விஷயம்.''

''என்னா ரவுடித்தனம்?''

''பட்டுன்னு கைநீட்டி அடிச்சுடுவான்.''

''பேர் என்னா?''

''ராஜேந்திரபாபு.''

''அவன் வரலையா கடை திறப்புக்கு?''

''பார்க்கலை சார்.''

''ஸ்ரீராமுலுவுக்கு வேற யார் எதிரி?''

''இங்க சோர்டியா குரூப்னு ஒண்ணு இருக்கு. அவங்களுக்கும், செட்டியாருக்கும் ஆகாது.''

''யார் சோர்டியா?''

''இன்னொரு நகை வியாபாரிங்க. கூடவே பல பிஸினஸ்.''

''காசிச் செட்டித் தெரு வியாபாரிதானா?''

''ஆமா சார்.''

''புரியுது. ஏட்டு, நம்ம வண்டியில வா. அப்படி ஒரு ரவுண்டு போயிட்டு வரலாம்.''

ஏட்டு சந்தோஷமாய் கமிஷனர் வண்டியில் முன் பக்கம் ஏறிக் கொண்டார். வண்டி சவுகார்பேட்டை குறுகலான சந்துகளில் பவனி வந்தது.

''செட்டியார் வீட்டு வழியா போ.''

செட்டியார் வீட்டுவாசல் வழியே போனார்கள். வண்டி விளக்கு அணைத்துவிட்டு உள்ளிருந்தபடி வாசலைக் கவனித்தார்.

''இவருகிட்ட கார் இருக்கய்யா?''

''இருக்கு சார். வேற எங்கனா நிறுத்துவாருபோல.''

''எங்க நிறுத்துவார்?''

''விசாரிக்கணும் சார்?''

''விசாரிச்சுட்டு வா... முனைல இருக்கேன்.''

ஏட்டு இறங்கிப் போனார்.

உதவிக் கமிஷனர் டிரைவரை முதுகு தட்டினார். ''சார்!'' டிரைவர் திரும்பிக் கேட்டான்.

''என் வெள்ளைச் சட்டை எங்க?''

''டிக்கில இருக்கு சார்... எடுக்கவா?''

டிக்கி திறந்து ஜிப் வைத்த பேக்கில் இருந்த சலவைச் சட்டையை எடுத்துக் கொடுத்தான். உதவி கமிஷனர் காருக்குள்ளேயே உடுப்பு மாற்றிக் கொண்டார். இறங்கி வெளியே நின்றார்.

''அதுவே ஒன்வே. சுத்திக்கிட்டு நாம வந்த முனைக்கே வா.''

இறங்கி வந்த திசை நோக்கி நடந்தார். தெரு இருண்டு கிடந்தது.

ஏட்டு விசாரிக்கும் இடம் நோக்கிப் போனார். தூங்கிக் கொண்டிருக்கும் யாரையோ எழுப்பி ஏட்டு விசாரிப்பது தெரிந்தது ஒரு வீட்டு வாசற்படியில் உட்கார்ந்து கொண்டார். ஏட்டுக்கு விவரம் கிடைக்கவில்லை. வேறு யாரையோ விசாரிக்க முயன்றார். மெல்லப் போய் செட்டியார் வீட்டு வாசல் எட்டிப் பார்த்தார். யாரோ வெளியே வந்தார்கள்.

ஏட்டு விசாரித்தார்.

'அதெல்லாம் தெரியாது' என்று கை அசைத்தது தெரிந்தது. கதவு சாத்தினார்கள். திறந்தார்கள். ஏட்டு கையில் ஏதோ கொடுத்தார்கள். ஏட்டு வாங்கி பாக்கெட்டில் சொருகிக் கொண்டது தெரிந்தது. அவர் குனிந்து கொண்டார். ஏட்டு இருளில் வேகமாய் அவரை தாண்டி தெருமுனைக்கு அவர் கார் தேடிப் போனார்.

முட்டாள்? அங்கேயே போய் விசாரித்து விட்டான். இனிமே கார் இருக்கும் இடம் தெரியாது. பத்துப் பதினைந்து நிமிடத்தில் இடம் மாற்றி விடுவார்கள். விரைவாய் தெரு முனைக்குப் போனார். அவரது வெள்ளை கார் அருகே வந்து நின்றது.

''பெட்ரோல் பங்க் எங்கய்யா கிட்டக்க?''

''கிட்டக்க எதுவும் இல்லை சார். மண்ணடி இல்லன்னா மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டல்... இப்படிப் போனா ஜார்ஜ் டவுன்...''

''மண்ணடி போ...''

''நேராக நகைக் கடைகள் கடந்து மண்ணடிக்குப் போயிற்று. தெரு முனையில் பெரிய பெட்ரோல் பங்க் இருந்தது. பங்க் முழுவதும் பல கார்கள் நின்றிருந்தன. பங்க் மூடியிருந்தது.

''என்ன சார் சொல்லுங்க?''

''காத்திருப்போம்.''

காத்திருந்தார்கள்.

இது சரியான இடம்தானா... சரியான இடத்தில்தான் காத்திருக்கிறோமா. இந்த கேஸ் தடமே தெரியவில்லை. இது கேஸா? அதுவும் தெரியலை.

பத்து நிமிடம் கழித்து ஒரு ஆள் ஸ்கூட்டரில் வந்து இறங்கினான். பங்க் கதவைத் தட்டினான். யாரையோ எழுப்பினான். பெயர் சொல்லிவிட்டு ஸ்கூட்டரை ஓரம் விட்டு ஒரு கறுப்பு அம்பாசிடர் காரை எடுத்தான்.

வண்டி வேகமாய் கிளம்பி வடக்குப் பக்கம் போயிற்று. கார் நம்பர் மனசுள் பதிந்தது.

''போய் அது யார் காருன்னு கேட்டுட்டு வா.''

''ஸ்ரீராமுலு அண்ட் சன்ஸ் வண்டி சார்.''

''வெரிகுட். சிந்தாதிரிப்பேட்டை போ.''

டிரைவர் களைப்புடன் ஏறி வண்டி எடுத்தார்.

''என்னய்யா... டயர்டா இருக்கா?''

''இல்லை சார்!''

''நீ ஓரம் கட்டு. நான் ஓட்டறேன்.'' இறங்கி முன் பக்கம் ஸ்டியரிங் வீலுக்கு வந்தார். விசில் அடித்தபடி ஓட்டினார்.

''தடம் பிடிச்சிட்டீங்களா சார்?''

''என்ன தடம்?''

''ஏதோ யாருக்கும் தெரியாம நோட் பண்றீங்கன்னு நினைக்கிறேன். வேற ஒண்ணும் தெரியலை சார்.''

''உனக்குத் தெரிய வேணாம் தம்பி.''

சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் வண்டி நுழைந்தது. தோட்டத்துக்குள் இருந்த போலீஸ் ஸ்டேஷனை வண்டியில் இருந்தபடி ஆராய்ந்தார்.

பாரா ஓடிவந்து சல்யூட் அடித்தான். உள்ளே இருக்கிறவர்கள் எழுந்து வந்தார்கள்.

''ஏன் மஃப்டில இருக்கீங்க நிறைய பேர்?''

''நைட்டு பாரா சார்.''

''ஸ்ரீராமுலு செட்டியின் இரண்டாவது சம்சாரம் வீடு எது?''

''இதே வாடைலதான் இருக்கு சார். மார்க்கெட் தாண்டி...''

''வா போலாம்.''

வண்டி வீட்டு அருகே வந்து நின்றது.

''அந்தப் பையன் ரங்கசாமியை கூட்டிட்டு வா. எம் பேர் சொல்லாத.''

''சரி சார்.''

''கதவு தட்டி ஆள் எழுப்பி கூட்டி வர ஐந்து நிமிடமாயிற்று.

கலைந்த தலையும், பட்டன் போடாத சட்டையுமாய் ஒரு இளைஞன் வந்தான்.

''ஐயா கூப்பிட்டாரு உன்னை.''

''யாரு?''

''உதவி கமிஷனர்.''

''ஐயோ...ஏன்?''

''வாங்க, வந்து பேசுங்க.''

ரங்கசாமி காருக்குள் தலை நீட்டினான். கண்ணில் தூக்கம் இருந்தது.

''நான் உதவி கமிஷனர். உங்க அப்பாவோட மூத்த சம்சாரத்தோட மகன் வரதராஜு...''

''ஆமா... எங்க அண்ணன்.''

''அவரு புள்ளை காணோம்னு ரிப்போர்ட்...''

''யாரு டாடுவா... ஐயோ எப்பங்க?''

-பதறினான். பதற்றத்தில் பொய் இல்லை. உதவி கமிஷனருக்கு 'ச்சே' என்று போயிற்று.



''உங்களுக்கு அது பத்தி ஒண்ணும் தெரியாதா?'' உதவி கமிஷனர் ஒப்புக்குக் கேட்டார்.

''தெரியாதுங்களே... எப்ப நடந்தது இது?'' -அவன் பதற்றம் தொடர்ந்தது.''

''இன்னிக்கு சாயந்திரம். உங்க வீட்ல இன்னும் வேற யார் இருந்தாங்க?''

''நானும் எங்க தாயாரும்தான்.''

''அதாவது...?'' - முகம் கேள்வியாக்கினார்.

''ஸ்ரீராமுலு செட்டியாரின் ரெண்டாவது சம்சாரம்.''- தெளிவாய் பதில் சொன்னான்.

''அம்மா இருக்காங்களா?''

''இருக்காங்க. வாங்க... உள்ள வந்துட்டுப் போங்க'' அவன் கார் கதவு பிடி தேட, போலீஸ் டிரைவர் அவனை விலக்கினார்.

''இன்னொரு சமயம் வரேன். இது சொந்த வீடா?''

''ஆமாங்க. நான் பொறக்கறதுக்கு முன்னமேயே அப்பா வாங்கிக் கொடுத்துட்டாரு.''

''உங்களுக்கு யார் மேல சந்தேகம்?''

''எனக்குத் தெரியலைங்க. அண்ணன் ரொம்ப நல்லவரு. ஒரு வம்பு தும்புக்குப் போக மாட்டாரு. அண்ணி ரொம்ப சந்தோஷமான டைப். உசிராப் பழகுவாங்க.''

''ஏன் தனியா வந்துட்டாரு?''

''அவருக்கு நகை வியாபாரம் பிடிக்கலைங்க.''

''ஏன்...?''

''கம்ப்யூட்டர் கத்துக்கிட்டாரு. அது ரொம்பப் புடிச்சுப் போயி அதுல முன்னேறணும்னு நினைச்சு...''

''உங்க அண்ணி செட்டியார் பார்த்து வச்ச பொண்ணா?''

''இல்லீங்க, ஐயரு... ரெண்டு பேரும் விரும்பி கட்டிக் கிட்டாங்க.''

''அதுல எதுனா கசப்பு உண்டா?''

''இருந்துதுங்க முதல்ல லேசு பாசா. ஆனா, கட்டிக் கிட்டப்பறம் என்ன செய்யறது. அவங்களும் பெரிய குடும்பம்.''

''யாரு அது?''

''ஏதோ ஆடிட்டர், இன்கம் டாக்ஸ்னு கேள்வி... நான் பார்த்ததில்லைங்க.''

''அவங்க செய்திருப்பாங்களோ?''

''ஐயோ இருக்காது. சொந்தப் பொண்ணை யாரும் துடிக்க விடுவாங்களா? அப்படிச் செய்யற அளவுக்கு அவங்களுக்கு வெறுப்பு இல்லை. எங்கய்யாவுக்குத் தெரியுமா இது?''

''தெரியும். அவரு நான் பாத்துக்கறேன். வுட்டுருங் கன்னாராம் இன்ஸ்பெக்டர்கிட்டே.''

''எதுனா இருக்கும்.''

''என்ன இருக்கும்?''

''இப்ப வியாபாரத்துல போட்டி ஜாஸ்தி. நிறைய பாலிடிக்ஸ். நகைக் கடைக்காரங்களை ஸ்மக்ளருங்க டபாய்க்கறாங்க.''

''பேர் சொல்லுங்க.''

''எனக்கு அவ்வளவோ தெரியாதுங்க. முன்ன ஒரு தாய் புள்ளையா தமிழரும் செட்டியாரும் ஒண்ணா இருந்தோம்.''

''செட்டியாருங்க தமிழர் இல்லையா?''

''நாங்க தெலுங்கு பேசறம்.''

''ஏன் சண்டை சவுகார் பேட்டைல?''

''நான் பெரியவனா... நீ பெரியவனா. என் ஜாதி பெரிசு, உன் ஜாதி மட்டம்னு ஒரு கசமுசா. எல்லாம் பேச்சளவுல நிக்குது. அவ்வளவுதான்.''

''அப்ப புள்ளைய எடுத்துண்டு போனது அவங்க தான்னு உங்கய்யா சொன்னது யாரை?''

''தெரியலைங்களே...?''

உதவி கமிஷனர் மவுனமாய் யோசித்தார்.

''உள்ள வரலீங்களா?'' அவன் மறுபடி கேட்டான்.

''இல்ல. இன்னொரு நாள் வரேன். கிளம்புப்பா.''

அவன் நகர, கார் கிளம்பி சிந்தாதிரிப்பேட்டை சாலையில் ஓடிற்று. வீட்டுக் கதவுக்கு உள்ளே இருட்டில் ஞானாம்பாள் அவன் பேசுவது கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு சொல்கூட காதில் விழவில்லை. இருப்பினும் விசாரணையின் நோக்கம் அவளுக்குப் பிடிபட்டு விட்டது.

முத பொண்டாட்டி புள்ளை வயித்துப் பேரன் காணாம போனதுக்கு ரெண்டாவது பொம்பளை காரணமா? இதுதான் போலீஸ் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் அடி வேர். ரங்கசாமி பதறி 'அப்படீங்களா, இல்லீங்களே?' என்று பேசியது போலீஸ் சூட்டை தணித்திருக்கும்.

'உள்ள வாங்க' என்று கூப்பிட்டு நிமிர்ந்தது தெரிந்தது வந்திருந்தால் போலீஸ் தன் முகம் பார்த்து சந்தேகம் கொண்டிருக்கும். வராதது நல்லது. வா என்று அழைத்த வேகத்தில்தான் போலீஸ் உள்ளே வராமல் போய்விட்டது. இவனுக்கு எது பற்றியும் தெரியாததால் வெகுளியாய் அழைக்க முடிந்தது. இனியும் இவனுக்கு எதுவும் தெரிய வேண்டாம்.

வெகு நிச்சயமாய் பிள்ளையை செட்டியார் எடுத்துப் போயிருப்பார். ஆள் வைத்துக் கடத்திப் போயிருப்பார். பிள்ளையைத் துடிக்க வைத்துத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ள திட்டம் போட்டிருப்பார். இதில் ரங்கசாமி சிக்கக் கூடாது. தனக்குத் தெரியாமல் இவன் எவரையும் எப்போதும் பார்க்கக் கூடாது.

'அண்ணா அண்ணியைப் பார்த்துட்டு வரேன்' என்று அந்த வீட்டுக்குப் போய் நிற்கக் கூடாது. அந்த வீட்டில் ஒரு பெண் பூதம் இருக்கிறது. முதல் மனைவி என்கிற திமிருடன் செல்வச் செழிப்புடன் ஒரு நீர்யானை இருக்கிறது. அது இவனை அடித்துத் தள்ளிவிடும். தூக்கிப் போட்டு நெஞ்சு மிதிக்கும்.

ஞானாம்பாளை ஒருமுறை மிதித்தது. இருவது வருடம் முன்பு கடைக்குப் போயிருந்தபோது காரில் வந்து உட்கார்ந்தபடி உறுத்துப் பார்த்தது. பார்க்கிறாளே என்கிற கூச்சத்தில் அருகில் போய் 'வணக்கம்' சொன்னாள்.

''இதுக்கு முன்னாடி யாரோட இருந்த?''

கார் டிரைவர் சிரித்து விட்டான். ஞானம்பாள் குறுகிப் போனாள். பூதம் போ போ என்றது. தன்னையா டிரைவரையா என்று தெரியவில்லை. கார் நகர்ந்து போயிற்று.

அன்று மிதித்தது இன்னும் வலிக்கிறது. இருபது வருடம் கழித்தும் ரணமாய் நிற்கிறது. ஆறாது. ஆறும் இரணமல்ல இது.

ஆனால், பூதத்துக்கு ரணம் வர தன் ரண வேதனை குறையும். பிள்ளை வந்தால் மருமகள் வீட்டுக்குள் வருவாள். வந்தது தெரிந்தால் மருமகளை அழைத்துத் தூண்டிவிடலாம். மாமியாரை ரணப்படுத்த உரையேற்றலாம்.

'இதுக்கு முன்னாடி யாரண்ட இருந்த?'-என்கிற வக்கிரமான கேள்விக்கு இணையாய் இன்னொன்று கேட்க வைக்கலாம்.

பிள்ளை உள்ளே வந்தது. ஞானம்பாள் தெருவைக் கவனமாய் பார்த்துவிட்டு கதவு தாழ் போட்டாள்.

''என்ன ரங்கசாமி?'' என்று கேட்டாள்.

''அண்ணன் குழந்தையக் காணமாம்மா.''

''ஐயோ'' ஞானம் நடிக்க ஆரம்பித்தாள்.

எத்திராஜுலு பிறந்தது, வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான். படித்தது பச்சையப்பன் பள்ளியில் தான் நாலு தலைமுறைக்கு முன் சென்னை ராஜதானிக்கு குடும்பம் வந்தது. முதல் தலைமுறை கரி அடுப்பு போட்டு நகை ஊதி, அடுத்த தலைமுறை சிறிய நகைக்கடை துவக்கி, அதற்கடுத்த தலைமுறை அந்த நகைக் கடையை விரிவுபடுத்தி, கொடி உயரத் தூக்கி இவரிடம் கொடுத்தது. இவர் காலூன்றும் போது தங்கக் கட்டுப்பாடு வந்து இவரைக் கவிழ்த்துப் போட்டது. வாரம் பத்து சவரன் நகை விற்றுக் கொண்டிருந்தது போயிற்று.

பெரிய மாப்பிள்ளை சரிய, அவர்களிடம் உதவி பெற்றுக் கொண்டிருந்த சிறு வியாபாரிகள் மரணநிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மறுபடி அடுப்பு போட்டு நகை ஊத வெட்கமாய் இருந்தது. வந்த விலைக்கு கடையை விற்றுவிட்டு ஸ்ரீராமுலுவிடம் சேர்ந்தார். கடை விற்ற காசில் இரண்டு பெண்களுக்குத் திருமணம் செய்தார்.

தங்க நகையோடு சம்பந்தமே இல்லாத குடும்பமாய் பெண்களைக் கொடுத்தார். பெண்களால் தொந்தரவு இல்லை உதவியும் இல்லை. ஏதோ சொந்தச் சாமர்த்தியத்தில் புருஷனை மயக்கி குடித்தனம் செய்கிறார்கள். நானில்லாது முடியாது என்கிற நிலைக்கு புருஷனைத் தள்ளி, தன் நிலையை உறுதிப் படுத்திக்கொண்டு விட்டார்கள். ஆனால், அப்பாவுக்கு ஐந்து ரூபாய் அனுப்பக் கூட புருஷன் பர்மிஷன் வேண்டும். சிறிய உதவிக்குக் கூட மன்றாட வேண்டும். ஐம்பத்தி நாலு வயது நிறைந்து விட்டது. ஐம்பது வயது மனைவி எப்போதும் கரித்துக் கொட்டுகிறாள்.

'தங்கக் கட்டுப்பாடு எல்லோருக்கும் தான்வந்தது. செத்தா போயிட்டாங்க. உனக்கு சாமர்த்தியம் இல்லை' என்பாள்.

'ரங்கசாமி கடை வைத்தபோது ஏகமாய்த் திட்டினாள் கூத்தியா புள்ளை கடை போடறான், முட்டுசந்து கடையா போடறான். நீ ரோடு கடையை விட்டுட்டு வீட்ல உட்கார்ந்துக்கற. உன்னைக் கட்டிக்கிட்டதுக்கு எவனாவது சேட்டுக்கோ, செட்டியாருக்கோ, வைப்பாட்டியா போயிருக்கலாம். நாப்பது சவரன் நகையோட நடமாடலாம். காது தோட்ல எண்ணெய் இறங்கி பத்து வருஷம் ஆவுது. எடுத்துக் கட்ட வக்கில்லை. நானும் ஒரு நகைக்கடைக்காரன் பொண்டாட்டி' - இரவு பத்து மணிக்கு புலம்ப ஆரம்பித்தால். இரண்டு மூன்று மணி வரை ஓயாது.

செட்டியார் கூப்பிட்டு பேசியபோது பயமாய் இருந்தது. போலீஸ் கேஸ் ஆனால் என்கிற கேள்வி வந்தது.

''அது எம் பேரப் புள்ளை. யாராவது கேட்டா செட்டியார் நாலு நாள் எங்க வீட்ல வச்சுக்க சொன்னாருன்னு சொல்லு. எம் பேர்ல பழி போடு. நான் என்ன கொலையா செய்யப் போறேன். எம் பேரப் புள்ளைய பார்க்காம என்னால இருக்க முடியலை எத்திராஜு. எனக்கு உதவி செய்.''

''சரிங்க.''

மேஜையில் பத்தாயிரத்துக்கு நோட்டுக்கட்டு வைக்கப் பட்டது.

''எதுக்குங்க?''

செட்டியார் நிறைய சொன்னார். 'தனியே கடை வச்சுத் தரேன். உன்னை மாதிரி வேலை தெரிஞ்ச ஆள் எத்தினி நாள் கூலி வேலை செய்யறது.'

மறுபடி கனவுகள் உள்ளே விரிந்தன.

''வூட்ல அதைக் கேட்கணுமே. அது ஒரு பேய்புடிச்ச பொம்பளை! ஓயாத புலம்பிக்கிட்டிருப்பா... நொடிச்சு போனதுக்கு.''

விளக்கிச் சொன்னார்.

''அதானே... இந்தா ஒரு ஜதை எடுத்துக்க.''

காது கம்மல் நீட்டினார்.

''எத்தினி நாள் பராமரிக்கணும் ஐயா?''

''அஞ்சாறு நாள்... மிஞ்சினா பத்து நாள்.''

''வெளியூரா...?''

''இல்லை. என் வீட்டுப் பின்னால, அடுத்த ரோட்ல முடியுதே, அந்த வீட்ல.''

''சரிங்க.''

காதில் நகை மாட்டி கண்ணாடியில் பார்த்ததும் எத்திராஜுலு மனைவி எதற்கும் தயார் ஆனாள். புடவை துணிமணிகள் எடுத்து வெளியூர் போவதாய்ச் சொல்லி புருஷனும், மனைவியும் பஸ் ஏறினார்கள். இருட்டிய பிறகு செட்டியார் காரில் அடுத்த தெரு வீட்டிற்குத் திரும்பினார்கள்.

அடுத்த தெரு வீட்டில் வாசலில் காகிதக்கடை பருப்பு மொத்த வியாபாரம். பக்க சந்தில் நுழைய, மாடிப்படி ஏறி முதல் தளம் போய் படிக்கதவு சார்த்திக் கொண்டார்கள்.

பழைய வீடு அது. எல்லாம் அகலமாய் இருந்தது. அதில் குடியிருந்த மார்வாரி பம்பாய் போய்விட்டான். எத்திராஜுலு வீடு சுற்றிப் பார்த்தார். சமையல் சாமான்கள் அடுக்கப்பட்டிருந்தன. பாத்திரங்கள் இருந்தன. குழாயில் ஜலம் வந்தது. டி.வி-யும் ரேடியோவும் இருந்தன. ஹால் தாண்டி இரண்டு அறைகளில் குடித்தனம் பத்து நாள் குழந்தையுடன் செய்தால் போதும்... செட்டியார் தனிக்கடை வைத்து விடுவார்.

'வம்பு வந்தால் எனக்குத் தெரியாது' என்று சொல்லி விட வேண்டும். செட்டியார் சொன்னார் செய்தேன் என்று சொல்லி விட வேண்டும். பிள்ளை காணாமல் போனது தெரியாது என்று சாதித்துவிட வேண்டும்.

ஏன்... இங்கு மாறினால் என்ன? தன் கஷ்டம் பார்த்து செட்டியார் இந்தக் காலியிடத்தைக் குறைவு வாடகைக்குத் தர ஒப்புக் கொண்டார் என்று சொல்லி விடலாம்.

இதெல்லாம் வராது. செட்டியார் வரவிடமாட்டார். அவனவன் என்னென்னவோ தகிடுதத்தம் செய்கிறான். இது என்ன கொலையா, கொள்ளையா? ஒரு குழந்தையைப் பத்து நாள் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே. சோறு

ஊட்டி, தூங்கப் பண்ணி உடை மாற்றி, அவ்வளவுதானே... செய்து விடலாம்.

ஆனால், கண் செருகி வந்த குழந்தையைப் பார்த்ததும் சொரேல் என்றது.

''ஒண்ணுமில்ல எத்திராஜுலு. மயக்க மருந்து. கொஞ்ச நேரத்தில் சரியாயிடும் பயப்படாதே.''-புருஷனும், மனைவியும் குழந்தைக்கு அருகே உட்கார்ந்திருந்தார்கள். கொஞ்சம் கலவரப்பட்டார்கள்.

குழந்தை கண் விழித்ததும் 'மம்மி... மம்மி' என்று அழுதான். அணைத்துச் சமாதானப்படுத்தி ஹார்லிக்ஸ் கலந்து குடிக்க வைத்ததும், மறுபடியும் தூங்கினான்.

செட்டியார் மூன்று சக்கர சைக்கிளும் விளையாட்டு பொம்மைகளும் கொண்டு வந்தார்.

விடிந்ததும் பிள்ளை கண் விழித்து எல்லாம் பார்த்தது. இரண்டு கைகளிலும் பொம்மைகளை மாறி, மாறி எடுத்து வைத்துக் கொண்டது. மறுபடி தாயார் நினைவு வர, வீறிட்டு அழுதது.

'அப்பா டாட்டா, அம்மா டாட்டா' என்றதும் சமாதானமாயிற்று. பிள்ளையை விட்டு விட்டு புருஷனும், மனைவியும் வேலைக்குப் போகிறார்கள் போலிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் ஒட்டிக் கொண்டது. எனினும், முகத்தில் ஒரு சோகம், சிறிய இருள் இருந்தபடியே குழந்தை விளையாடிற்று. பெரிய ஹாலில் சைக்கிளை ஓட்டி சுற்றிச் சுற்றி வந்தது.

'நீ போலீஸ், நான் கார்' என்று ஆட்டம் ஆடியது.

செட்டியார் உள்ளே நுழைய, ஏறிட்டுப் பார்த்தது. அவர் கை நீட்ட பாய்ந்து வந்து ஒட்டிக் கொண்டது. 'தாத்தா, தாத்தா'

என்று கொஞ்சியது. செட்டியார் அழுது பார்த்தது எத்திராஜுலுவுக்கு அதுவே முதல் தடவை.

''கஷ்டந்தாங்க. இப்படியாப்பட்ட பேரனை நீங்க பிரிஞ்சிருக்கறது.''

''நீ கை கொடு எத்திராஜு. நான் மறக்க மாட்டேன். உன்னை உசரத் தூக்கி வுட்டுர்றேன். இந்த சந்தோஷத்துக்கு என்னால என்ன தரமுடியுமோ அதெல்லாம் தரேன்.''

''இரண்டு பொண்ணுங்களுக்கு கொஞ்ச சீரு போறலையாங்க. குறை சொல்றாளுங்க.'' எத்திராஜுலு மனைவி பொய் சொன்னாள்.

''என்ன குறை?''

''பதினாலும். பத்தும் தாம் போட்டம்.''

''போட்டுரலாம்'' -நாலு சவரன் பின்பக்கம் எடுத்து வந்தார். எத்திராஜுலு கையில் போட்டார்.

''எம்புள்ளை என்கிட்ட வந்துட்டான். ஜாக்கிரதை. அடுத்த வீட்டுப் பக்கம் வந்துராதீங்க.''

''கதவு தாழ் போட்டிருக்குங்க.''

''இரண்டு கதவு தாழ் போட்டிருக்கு. எதுனா தேவையானா எனக்கு போன் செய். போதும். ஹிந்தில பேசு. தமிழ், தெலுங்கு பேச வேணாம்டா.''

''மாட்டேங்க.''

ஆனால், பதட்டத்தில் எல்லோருக்கும் தன் பாஷை வரும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. இந்த இடத்தில் எப்போது வேண்டுமானாலும், பதட்டம் வரும் என்பது தெரியவில்லை.



''எனக்கு எதுவும் வேண்டாம், சுபி...'' வரதராஜன் மறுத்தான்.

''மோர் சாதம்தான். நாலு வாய் சாப்பிடக் கூடாதா?''

''இல்லை. எனக்கு மனசு சரியில்லை. என்னை விட்டுரு.''

''ஏன் ராஜன்?... அப்பாதான் முழுமூச்சா இறங்கி யிருக்காங்களே. குழந்தை நல்லாயிருக்கான்னு சொல்றாங்களே.''

''எப்படிக் குழந்தை நல்லாயிருக்கும், என்னையும் உன்னையும் விட்டு?''

''அவன் தைரியசாலி உங்களை மாதிரி.''

''இல்லை. நான் தைரியசாலி இல்லை. இதோ இப்ப என் புள்ளையைக் காணேம்னதும் என்ன ஆச்சோன்னு பயந்து சாகறேனே. என் புள்ளயும் பயந்து அழுதுட்டிருப்பானே. இந்த வீட்டில் எங்கப்பாவுக்கு இருக்கிற தைரியமும், முரட்டுத்தனமும் என் தம்பிக்கிட்ட இருக்கு. ரெண்டு பேரையும் சரியா வளர்க்கலை. எங்கப்பா நிழல்ல எதுவும் வளராது. எதுவும் மலர்ந்திடாது.''

''அவ்வளவு கோபப்படுற மாதிரி எனக்கு இங்க எதுவும் தப்பாத் தெரியலியே? நல்ல மனுஷனாத்தான் இருக்கார் உங்க அப்பா.''

''போகப் போக தெரியும். வெளியே ஒரு வேஷம். உள்ள ஒரு வேஷம். என் அப்பா யாருன்னு யாருக்கும் தெரியாது. அவருக்கே தெரியுமோ தெரியாதோ?''

''அடிப்பாரா?''

''கோபத்துல அடிக்கிற அப்பாவ மாத்தலாம். அவர் கோபப்படாத நடந்துக்கலாம். எங்கப்பா மனசு நோகச் செய்யறவரு. டென்த்ல முதல் ராங்க் வந்தேன். பள்ளிக் கூடத்துல புஸ்தகம் பரிசாக் கொடுத்தாங்க. 'ஒரு மெடல், கப்பு கிடையாதா? என்னடா இது டபாய்க்கிறாங்கள்'னாரு. அது ஸ்போர்ட்ஸ்ல வந்தாதான்னேன். வரதுக்கு என்ன... நாளைலேர்ந்து முட்டை சாப்பிடு. ஆறுமுட்டை சாப்பிடு. ஆறு முட்டை தினமும். எனக்குக் குமட்டும்.''

''எங்காவது கல்யாணத்துக்குப் போறபோது சட்டைக்கு வெளியே நல்லா தெரியுற மாதிரி செயின் போட்டுக்கினு போகணும். ஏழைப் பசங்க வீட்டுக்கு வரக்கூடாது. ஜாதி ரொம்ப முக்கியம். என் சிநேகிதன் வந்தவுடனே முதல்ல பேர் கேட்பாரு. அப்புறம் ஜாதி கேட்பாரு.''

''பழங்காலத்து மனுஷங்க அப்படித்தான்...''

''மனுஷனே இல்லை. பழக்காரியோட அவரு இருக்கிறதை பார்த்திருக்கேன்.''

''காசு பணம் இருக்கிற திமிர். முன்னபின்ன இருக்கத்தான் செய்யும்.''

''கொஞ்சத் திமிரா? வேணாம். என் வாயைக் கிளறாதே, ஆனா ஒண்ணு சொல்றேன், ஜாக்கிரதையா இரு.''

''ஜாக்கிரதையான்னா எந்த விதத்துல?''

''எல்லா விதத்துலயும்தான். கைல வச்சிருக்கிற மோர் சாதத்தை கொஞ்சம் பூனைக்கும் போட்டுட்டு சாப்பிடறதைப் பார்த்துட்டு வா. இதுல ஏதாவது இருக்கப் போவுது.''

''கஷ்டம் உங்களோட. இது நானே பிசைஞ்சு கொண்டு வந்திருக்கேன். அப்பா. என்ன அத்தனை அவநம்பிக்கை... வெறுப்பு?''

''உனக்கும் வரும் சுபி. வெயிட் பண்ணு, எல்லா மனுஷர்கிட்டயும் நல்லது, கெட்டது இருக்கும். ஆனா, இவர் கிட்ட எது நல்லது எது கெட்டதுன்னு சொல்லவே முடியாது.''

''சரி, கிடக்கட்டும். இரண்டு வாய் சாப்பிடலாமே. சுவரை வச்சுத்தானே சித்திரம். சாப்பிட்டப்புறம் தெம்பா அப்பாகிட்ட போய் என்ன ஏதுன்னு பேசலாமே.''

''முகம் கொடுக்க மாட்டார்.''

''இந்த நேரம் நமக்கு யார் துணை? யாரை நம்பறது? அப்பாவைத்தானே நம்பணும். நான் பார்த்துக்கறேன்னு வலிய வந்து உதவி பண்றபோது வேண்டாம்னு சொல்ல முடியுமா? தனக்குக் கெடுதல் பண்றவங்கதான் இதைச் செய்திருக்கணும்னு சொல்றாரே.''

''யாரும் அஞ்சு வயசுக் குழந்தைகிட்ட விளையாட மாட்டாங்க. இவரு பொய் சொல்றாரு.''

''பேசினாரே டெலிபோன்ல.''

''எனக்கு பொய்ன்னு படுது.''

''நீங்க எல்லாத்தையும் சந்தேகப்படறீங்கப்பா.''

''உனக்கு வரலையா?''

''நீங்க சொல்ற அளவு கொடுமையானவராத் தெரியலை. நீங்க என்ன சந்தேகப்படறீங்க. அவரே பையனை ஒளிச்சு வச்சு...''

''ஏய்... உனக்கு அப்படிப் படுதா?'' அவசரமாய் வரதராஜன் எழுந்தான்.

''உட்காருங்க. உங்க நினைப்பு இதுதான்னு எனக்குப் புரியுது. அவரு பேரப்புள்ளை மேல ஒரு துரும்பு பட விடுவாரா. பாக்காத இருந்து முதல் தடவை பார்த்தது. நகை கடைலேர்ந்து எடுத்துப் போடலியோ, ஆஸ்பத்திரியில போய்

பார்க்கப் போனப்ப கழுத்துச் செயினை எனக்குக் கொடுத்துடலியா? நல்ல மனசில்லாமலா செய்தார். நீங்கதான் போன் பண்ணி அவரை வரச் சொன்னீங்க.''

மெல்ல மெல்ல அவன் புத்தியை அலைக்கழித்து கடைசி வார்த்தையால் புருஷனை சுப்புலட்சுமி தாக்கினாள்.

இது பெண்ணின் இயல்பு. ஆனால், நம்பிக்கையைப் பெறுவது கடினம். அவளுக்கு நம்பிக்கையென்று ஒன்று வந்து விட்டால் அதை அறிவிப்பதும் கடினம். இந்த க்ஷணத்தில் சுப்புலட்சுமி புருஷனை விட தன் மாமனாரை நம்பினாள். கல் மாதிரி தங்கச் சங்கிலியை எடுத்து நீ வைத்துக்கொள் என்று யார் தர முடியும் என்று யோசித்தாள்.

வரதராஜனுக்கு உறுத்தியது. மனைவி தன்னை இடித்துக் காட்டியது வேதனை தந்தது. 'நீங்கதானே போன் போட்டு அப்பாவை கூப்பிட்டது?'

ஆமாம். உண்மை. அது தவறுதான். ஏதோ ஒரு வேகத்தில் யாரிடம் சொல்வது என்று தெரியாது செய்த காரியம். அவர் வந்த அரை மணியில் போன் வருகிறது. அவர் நினைத்தது போலவே அவரை எதிர்க்க என் குழந்தையைக் கடத்தல் என்று பேசப்படுகிறது.

'போலீஸை ஒதுக்கு' என்று கட்டளையிட்டால் ஒதுங்கிடுமா? போலீஸ் ஒதுங்கிக் கொண்டதே. என்னோடு என் வீட்டுக்கு வா என்று பேச சுபி முதலில் காரில் ஏறுகிறாள். வேறு வழியில்லாமல் நானும் இங்கு வந்துவிட்டேன். உன் குடும்பத்தையே எதுனா செய்துட்டா என்று பயமுறுத்தி இங்க இழுத்துக் கொண்டு வந்து விட்டார்.

ஏதோ உள்ளே ஒரு உறுத்தல் வருகிறது. என் தகப்பனை நெல் முனையளவு கூட நம்ப முடியாத ஒரு உணர்வு அடிக்கடி

எழுகிறது. ஆனால், நான் என்ன செய்ய முடியும்? முடியாது என்று முறைத்துக் கொண்டு போய் குழந்தைக்கு ஏதாவது ஆகி விட்டால் சுபி சும்மா விடுவாளா? என்னால்தான் தாங்க முடியுமா என் மகனின் பிரிவை?

இரு, வரதராஜ¨ இரு. வேடிக்கை பார். கவனமாய் எப்போதும் விழித்திரு. இந்த வீடு சரியில்லை.

வாசலில் கார் வருகிற சத்தம் கேட்டது. கட்டிலில் படுத்திருந்தவன் எழுந்து ஜன்னல் திரை விலக்கிப் பார்த்தான். வராண்டாவுக்கு வெளியே ஒரு வெள்ளை அம்பாஸடர் மெல்லப் போவது தெரிந்தது. பின்னால் ஒரு ஏரியல் இருந்தது. 'கொரகொர' என்று ஒரு வயர்லஸ் சத்தம் கேட்டது. போலீஸ் கார் கடந்து போய்விட்டது.

மறுபடி சற்று நேரம் கழித்து பேச்சுக் குரல் கேட்டது யாரோ, யாரையோ விசாரிக்கிறார்கள். மெல்ல மறுபடி திரைச்சீலை விலக்கிப் பார்த்தான். போலீஸ் ஆள் பட்டியைப் பார்த்தவுடன் தெரிந்து விட்டது. அப்பாவின் வண்டி பற்றி கேட்கிறான். மறுபடி கார் போன திக்கு நோக்கி நடந்தான்.

ஆக... போலீஸ் விடவில்லை. ஒதுங்கவில்லை. சரி என்று அப்பாவிடம் தலையாட்டிவிட்டு தன் வேலையைச் செய்கிறது. ஏன்? விட்டது சனியென்று இருக்கலாம். ஏன்? வேறு ஏதோ உள்ளே ஒரு விஷயம் இருக்கிறது. இந்த ஏரியாவில் பல மர்மங்களில் ஒன்று வெளிவரத் துடிக்கிறதே!

நகரத்தின் செல்வத்தைத் தன் கையில் வைத்திருக்கும் இந்த மார்க்கெட் பகுதி அழுகத் துவங்கி விட்டது. அடிதடி ஆரம்பமாகி விட்டது. போலீஸ் விடாது. யார் அது. காரில் அதிகாரியா? அவரை எப்படித் தெரிந்து கொள்வது. எனக்கு பயமாய் இருக்கிறது. என் தகப்பன் மேல் சந்தேகம் என்று

சொல்லலாமா? கூடாது. இது முள் மேல் விழுந்த துணி. கவனமாய் மெல்ல மெல்ல செயல்பட வேண்டும்.

வரதராஜு! நீ மக்கு இல்லை, கோழை. முதலில் பயத்தை ஒழி. உன் திறமையைக் காட்டு. பயம் ஒழிக்க முதல் வேலை தெளிவு பெறுவது! உதவியாய் இருப்பது தூக்கம். நாலு மணி நேரம் உன்னை மறந்து தூங்கு வரதராஜு.

கண் மூடினான். மனசு குவித்தான்.

'கடவுளே! என்னால் யாருக்கும் தீங்கிலலை. எனக்கு தீங்கு வராது துணை நில். என் குழந்தையைக் கொடு. காசோ, பணமோ, நகையோ, வீடோ எனக்கு முக்கியமில்லை. அமைதியான வாழ்க்கை போதும். எனக்கு அதைத் தந்த கடவுளே, அதை நீடிக்க விடு.'

தூக்கம் இழுத்தது.

விடியற்காலை கட்டை வண்டிகள் கடகடத்துப்போக உடம்பு தூக்கிப் போட்டது. விழித்து சுவர் தடவி விளக்குப் போட்டு அறைக்கதவு திறந்தான் ஹால் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஹால் நடுவே உயரமாய் வெங்கடாசலபதி படம் மாட்டப்பட்டிருந்தது. கை குவித்தான், ஹால் தாண்டி பாத்ரூமுக்குள் நுழைந்தான். கைகால் கழுவினான். முகம் துடைத்துக் கொண்டான்.

பசித்தது. சமையலறைக்குப் போனான். யாரோ வேலையாள் போல ஒருவன் தூங்கிக் கொண்டிருக்க, மேடை சுத்தமாய் துடைக்கப்பட்டிருந்தது. குளிர்ப்பெட்டியில் பானங்கள் இருந்தன. காலை நேரம் இது. பசிக்கு இது உதாவது ஏதேனும் கூடாக வேண்டும்.

வாசல் கதவு திறந்தான். ரேழிக்கதவு பூட்டப் பட்டிருந்தது. அவனிருக்கும்போதே இந்தக் கதவை பூட்டி

வைக்கும் பழக்கம் உண்டு. இதன் சாவி எங்கே. நினைவுக்கு வந்து வாசல் குறட்டில் கை வைத்து தடவினான். நீள சாவி கிடைத்தது. சாவி போட்டு பூட்டைத் திறந்தான். கைப் பையைத் தொட்டு காசு இருக்கிறதா என்று பார்த்தான். கதவு சாத்தி தெருமுனைக்கு உள்ள டீக்கடைக்குப் போனான்.

ஒரு பன், ஒரு கப் டீ என்று குரல் கொடுத்தான். டீக்கடைக்குள் தலையில் துணியைப் போர்த்தி நாலைந்து பேர் இருந்தார்கள். உள்ளே போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''ராத்திரி போலீஸ் வந்தது தெரியுமாடா?''

''எங்கே?''

-யாரோ பேசினார்கள்.

''செட்டியார் வூட்டாண்ட.''

''என்னத்துக்கு?''

''ஏதோ கார் காணமாம். அவரு கார் எங்கன்னாங்க? சொன்னேன்.''

''செட்டியார் வண்டியா காணம்?''

''தெரியலை கேட்டாங்க.''

''அந்த சேட்டுப் பையன் செட்டியாரை சும்மா விடப் போறதில்லை.''

''அந்த சண்டைதானா?''

''அவன்தான்காரு எடுத்து கொண்டு போயிருக்கணும்.''

''சேட்டுப் பசங்கதான் சவுகார்பேட்டையை வளைச்சுட்டாங்க. அடக்கிட்டாங்க.''

''அது அந்தக் காலம். மறுபடி அவனுடைய ராஜ்ஜியம் வராது. வரவிடமாட்டான்.''

''அடப் போய்யா. இவன் பம்பாய் ரவுடி. சேட்கூட இல்லை. மராட்டிகாரன். நூறு ரூபாய்க்குப் பழம் வாங்கறான், கார்ல இருந்தபடியே. இப்பகூட பாலு

அங்கதான் ஊத்தறதுக்கு எடுத்துக்கிட்டுப் போறேன். லிட்டர் பால் என்ன விலை தெரியுமில்ல?''

''நாலு ரூபாயா?''

''இவன் ஆறு ரூபாய் தரான். ஆனா அஞ்சு மணிக்குக் கொடுத்துடணும். கொஞ்சம் தண்ணி கலந்து கொடுத்தா அப்படியே மூஞ்சியில் ஊத்தறான்.''

''மணி அஞ்சாகப் போவுது.''

''போவணும். டீ போடுப்பா.''

அவன் குடித்துக் கிளம்பும்போதே வரதராஜ¨ திடீரென்று அப்பாவின் எதிரிகள் யார், யார் என்று தெரிந்துகொள்ள ஆசைப்பட்டான்.

பால்காரனைப் பின்தொடர்ந்தான். புலியும், சிங்கமும் சண்டையிட்டுக் கொள்ள, ஒரு வெள்ளாடு புலிக் குகை வாசலுக்குப் போயிற்று.



ரதன் சந்தாவாத்துக்கு பூர்வீகம் இராஜஸ்தான். அவன் குடும்பத்துக்கு சலும்ப்ரா என்று பெயர். ரதன் சந்தாவாத் சலும்ப்ரா என்றுதான் பள்ளிக்கூடத்தில் அவன் பெயரை எழுதினார்கள்.

இருநூறு வருடங்களுக்கு முன்பு இந்தப் பாலைவனப் பகுதியில் சலும்ப்ராக்கள் அரச குடும்பத்தினராய் வாழ்ந்தார்கள். குடும்பம் பெருகப் பெருக நிலங்களை பிரித்துக் கொண்டு குட்டி ஜமீன்களாய் திகழ்ந்தார்கள். பிரிட்டீஷ் அரசு இந்தியாவில் வேர் ஊன்றியபோது விவரம்

தெரியாமல் அரச குடும்பங்களை அதிகம் மதித்தது. தனக்கெதிரே போர்துவக்கி விடுவார்களோ என்று பயந்தது. தந்திரமாகப் பேசி அவர்கள் செல்வங்களை அபகரித்தது. அவர்களை விவசாயிகளாக் கிற்று. யுத்தமே தொழிலாய் கொண்ட சலும்ப்ராக்கள் கோபம் கொண்டார்கள். சேற்றில் கால்வைத்து ஏர் பிடிப்பதை வெறுத்தார்கள்; எதிர்த்தார்கள்.

எதிர்த்தவர்களை ஆங்கில ஏகாதிபத்தியம் தூக்கி விட்டது. துரத்தி துரத்தி அடித்தது. சலும்ப்ராக்கள் மண் கோட்டைகளை பீரங்கிகள் தகர்த்து எறிந்தன. நிலம், நீச்சு, வீடு, வாசல், பதவி, பட்டம் எல்லாம் இழந்த அந்த குறுநில மன்னர்கள் உயிர் வாழ்வதன் பொருட்டு நாலா திசையும் பரவினார்கள்.

ரதன் சந்தாவாத் சலும்ப்ராவின் கொள்ளுத் தாத்தா பம்பாய் வந்தார். மராட்டிய மண்ணில் இனிப்புக்கடை ஆரம்பித்தார். பிள்ளைகளைப் படிக்க வைக்க முனைந்தார். பிள்ளைக்குப் படிப்பு வரவில்லை. இவன் முட்டாள் முரடன் என்று பள்ளிக்கூடம் துரத்தியது. பம்பாய் நகரத்துப் பெரிய மனிதர்கள் வீட்டுக்கு காவல் வேலைக்கு அனுப்பினார். வியாபாரச் செழிப்பு. பம்பாயில் போட்டிகள் அதிகம் இருந்தன. காவல் வேலைக்கு மதிப்பு இருந்தது. அதுவும் ராஜா. குறுநில மன்னன் தன் வீட்டு வாசலில் காவலாளியாய் நிற்பது பெருமையாய் இருந்தது. அடுத்த தலைமுறை காவல் தொழிலுக்குப் பழக்கப்பட்டார்கள்.

ஆனால், பம்பாய் வியாபாரம் நேர்மை பாதையிலிருந்து விலகி கள்ளக்கடத்தலுக்கு வர, காவலாளிகள் அடியாட்களானார்கள். 'போய்க் குத்திட்டு வா...! ஆயிரம் ரூபாதரேன்' என்றால் உடனே செய்தார்கள். எஜமான விசுவாசம் காட்டினார்கள். அதற்கு அடுத்த தலைமுறைக்கு எஜமான

விசுவாசம்கூட இல்லை. அடியாள் ஆளுமை அதிகமாக, அவன் ஆட்சி சிவப்பு விளக்குப் பகுதிகளில் கொடி கட்டிப் பறந்தது.

சலும்ப்ராக்கள் தம் போர் குணத்தை விட்டுவிட வில்லை. மறுபடி அவர்கள் குறுநில மன்னர்கள் போல் ஆனார்கள். சுதந்திர ஜனநாயக இந்தியாவில் மன்னர்கள் என்று அழைத்துக் கொள்ளப்பட வெட்கமுற்று 'தாதா' என்று அழைத்துக் கொண்டார்கள். பெயரில்தான் வித்தியாசம். விஷயம் ஒன்றே. அதே முரட்டுத்தனம், அதே படபடப்பு, அதிகார வெறி, உயிர்ப் பணயம் வைத்துப் போரிடும் குணம் தொடர்ந்து வந்தது.

ரதன் சந்தாவாத் சலும்ப்ராவும் இந்தக் கல்யாண குணங்கள் தன்னிடம் கொண்டு வளர்ந்தான். பதினெட்டு வயதில் முதல் கொலை செய்தான். இளமையிலேயே 'தாதா'வானான். அப்பாவின் நிழலில் அப்பாவுக்குத் துணை யாய்த் தங்கம் கடத்தினான். எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள், பேண்ட்துணிகள், ஜிப்புகள், மோட்டார் உதிரிகள் கொண்டு வந்தான்.

ஆனால், சுதந்திர இந்திய ஜனநாயக அரசு விழித்துக் கொண்டது. மன்னர்கள் பம்பாய் தாதாக்களாவது கண்டு பிடிக்கப்பட்டு கடுமையாய் ஒடுக்கப்பட்டார்கள். கள்ளக் கடத்தலைத் தடுக்க பல்வேறு வித உபாயங்கள் செய்தார்கள். புதிய கப்பல் வாங்கி ரோந்துக்கு அனுப்பினார்கள். வயர்லஸ் தொடர்பில் மடக்கினார்கள். காட்டிக் கொடுப்பவனை ஊக்கப்படுத்தினார்கள், பரிசளித்தார்கள்.

ரதன் சந்தாவாத் சலும்ப்ராவை அவன் தம்பி காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுத்த தம்பியை அவன் கண்டு பிடித்து சித்ரவதை செய்து கொன்றான். தம்பியின் பிள்ளை இது தெரிந்து பெரியப்பாவை உயிரோடு கொளுத்துவதாய்

கட்டை விரல் கீறி சபதம் செய்தான். இந்த சண்டை பொறுக்காது ரதன் சந்தாவாத்தின் அப்பா மூத்த மகனை சென்னைக்குப் போ என்று துரத்தினார். கண் காணாது இருந்தால் சண்டை குறையும் என்று நம்பினார்.

'சென்னைக்குப் போய் என்ன தொழில் செய்வது' என்று ரதன் சந்தாவாத் கேட்டான்.

'இதே செய்...'

'என் பொருட்களை, தங்கக் கட்டிகளை வாங்க வக்கு உண்டா... மதராஸிகளுக்கு?''

''மதராஸிகளை வாங்க வைக்க வேண்டும். பிஸினஸ் சாமர்த்தியம் உனக்கில்லையா... செய்.'

சென்னையில் கள்ளத் தங்கம் பரவியது. பிஸ்கட் பெல்ட்டுகள் விற்கத்துவங்கின. மதராஸிகள் ஷோக்காளிகள். தங்கத்தை விட பேண்ட், மது, டேப் ரெக்கார்டர், செண்ட், பவுடர், சோப் அதிகம் விற்றது. காசிச்செட்டித் தெரு மொத்தமும் உருமாறியது. களை கட்டியது.

ஆனால், மதராஸிகளுக்கு ஏனோ வட இந்தியர்களைப் பிடிப்பதில்லை. மதராஸிகளுக்குத் தெலுங்கர்களை ரொம்பப் பிடிக்கும். மலையாளியோடு பழகுவார்கள். கன்னடத்து ஆளோடு வம்பில்லை. சர்தார்ஜிகளை வினோதமாய்ப் பார்ப்பார்கள். குறிப்பாய் ராஜஸ்தானத்து வட்டி வியாபாரி களை கட்டோடு வெறுத்தார்கள். 'பாழாப் போற சேட்டு' என்றார்கள். ரத்தம் உறிஞ்சும் பேயாய் நினைத்தார் கள். இதை விடக் கடுமையான வட்டி வியாபாரிகள் தமிழ்நாட்டிலும் உண்டு. ஆனால், ஏனோ ராஜஸ்தானத்து ஆட்கள் மீது எரிச்சலடைந்தார்கள்.

எழுபத்தி இரண்டாம் வருடம் ரதன் சந்தாவாத் தம்பியைக் கொலை செய்துவிட்டு சென்னை வந்து

சவுகார்பேட்டைக்குள் நுழைந்தபோது அது ஒரு பம்பாய் பகுதி மாதிரியான தோற்றம் தந்தது. குஜராத்தியும், இந்தியும், காதில் ஒலித்தன. எப்போதாவது தெலுங்கும் சில சமயம் தமிழும் பேசப்படும். தமிழ்நாட்டில் இப்படி ஒரு அநியாயத்தைப் பார்த்து ஆச்சரியமாய் இருந்தது. நம்பிக்கை பிறந்தது.

ஆனால், மதராஸிகள் சந்தேகப் பேர்வழிகள். தந்திரமானவர்கள். வியாபாரம் எளிதாய் இல்லை. மேலும் நாகப் பட்டினம், கீழக்கரை போன்ற இடங்களில் இதே வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது. போட்டியிருந்தது. முன்னேறக் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

தங்கக் கட்டுப்பாடு தாக்கி சவுகார்பேட்டை கலகலத்துப் போனதும் பல பனியாக்கள் பேண்ட் வியாபாரம் செய்யத் திரும்பினார்கள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதில் இலங்கைப் பிரச்சனை பெரிசாக, நிறைய இளைஞர்கள் மோட்டார் போட்டில் கடல் தாண்டி தினம் இரண்டு முறை வந்து போனார்கள். வியாபாரம் கொஞ்சம் சூடு பிடித்தது. அந்தப் போராட்ட வீரர்களில் சிலர் சிங்கப்பூரிலிருந்து போதைப் பொருள் வாங்கி சென்னைக்குக் கொண்டு வந்து பம்பாய்க்கு அனுப்பினர். பம்பாயில் இருந்து அது பல இடங்களுக்குப் போயிற்று.

பேண்ட், மது, செண்ட்டில் நொந்துபோன ரதன் சந்தாவாத் போதைப் பொருளில் கை வைத்தான். சிலர் இலங்கைப் பையன்களை நியமித்து சரக்கு எடுத்தான். பத்து ரூபாய்க்கு எடுத்த சரக்கை பம்பாயில் நூறு ரூபாய்க்கு விற்றான். டேப் ரெக்கார்டர், டி. வி. வீடியோ டெக் மாதிரி பெரிய பெரிய பெட்டிகளில் கடத்த வேண்டியதில்லை. ஒரு பிரீஃப்கேஸ் போதும், ஒரு ட்ரங்க்பெட்டி போதை மருந்து

கிட்டத்தட்ட கோடி ரூபாய். ப்ரீஃப்கேஸ் அளவு பல லட்சம் விலை. வேலை எளிது, லாபம் அதிகம்.

ஆனால், எதிர்ப்புக் கடினமாய் இருந்தது. லஞ்சம் வாங்க அதிகாரிகள் பயந்தனர். வாங்கிவிட்டு காட்டிக் கொடுத்தார்கள். மடக்கி சரக்கை நாசம் செய்தார்கள். எல்லாவற்றையும் மீறி தொழில் லாபம் காட்டியது.

வந்த லாபத்தை தங்க மார்க்கெட்டில் திருப்ப ரதன் சந்தாவாத் நினைத்தான். நிரந்தரமான தொழில் தேவைப் பட்டது. சவுகார்பேட்டையில் பெரிய கடையை காசால் அடித்து வாங்கினான். ஒரு லட்ச ரூபாய் பகடியை, நாலு லட்ச ரூபாய்க்கு உயர்த்தினான். கேட்ட தொகையைக் கொடுத்தான். ஆறு, ஏழு கடைகள் வெவ்வேறு பெயரில் துவங்கினான்.

தெலுங்குச் செட்டியார்கள் கலங்கினார்கள். பயந்தார்கள். விவரம் புரியாது எதிர்த்தார்கள். கள்ளக் கடத்தல்காரன் என்று ஏசினார்கள். போதை மருந்து வியாபாரி என்று இழித்தார்கள். ஊரை அடிச்சு உலையில் போட்ட காசு நிக்குமா என்றார்கள். ஸ்ரீராமுலு செட்டியாரிடம் போய் முறையிட்டார்கள்.

செட்டியார் கூப்பிட்டனுப்பினார். ரதன் சந்தாவாத் போய் வணக்கம் சொன்னான். செட்டியார் கெட்ட வார்த்தையில் ஆரம்பித்தார்.

''சேட்டுத் தேவிடியா மகனே... பாம்பேல மயிரப் புடுங்கிட்டியா... இங்கே வந்து ஆடறியா... ஒழுங்கா இருந்தா இரு. மிரட்டற வேலை வச்சுக்கிட்ட, அடிச்சுத் துரத்திடுவோம்.''

ரதன் சந்தாவாத் இந்த அதிரடித் தாக்குதலில் ஆடிப் போனான். கோபம் உச்சிக்கு வர முஷ்டி மடக்கினான்.

அன்றிரவே அவன் ஆளை அனுப்பி தெருக்கடைகளை சேதம் செய்யச் சொன்னான். தெருக்கடைகள் ஸ்ரீராமுலுவின் கையடக்கம் என்று அறிந்து தாக்கினான்.

தாக்கின மறுநாள் தாக்கியவனைக் கண்டுபிடித்தார்கள். ஒரு வாரம் கழித்து சாக்கடையிலிருந்து பிணமாய் எடுத்தார்கள். ரதன் சந்தாவத் விசிட்டிங் கார்டு அவன் பையில் இருந்தது. போலீஸ் அவன் மீது பாய்ந்தது. பழைய சரித்திரம் கேட்டது. கொலை குற்றம் சாட்டியது. இந்தச் சிக்கலில் இருந்து மீள்வதற்குள் ரதன் சந்தாவாத் திக்குமுக்காடிப் போனான். வக்கீலுக்குக் காசு இறைத்து சிறைவாசம் இல்லாது தப்பித்தான். போலீஸ் பழைய விஷயங்களைத் தெரிந்து, விடாது கண்காணித்து கரும்புள்ளி குத்தியது.

சவுகார்பேட்டை கெடும் முன்னரே வந்துவிட்ட சுத்தமாய் தமிழ் பேசும் குஜராத்திக்கார டாக்டர் 'நீ யாரென்று எனக்குத் தெரியும். மறுபடி ஏதாவது சிக்கலில் மாட்டினால் நானே ஜாதி அபிமானம் பார்க்காமல் அழிப்பேன்' என்று பயமுறுத்தினார். இந்த மிரட்டலுக்கும் செட்டியார்தான் காரணம் என்று புரிந்தது. தற்சமயத்துக்கு என்று ரதன் சந்தாவாத் பதுங்கினான். நேரம் வரட்டும் என்று காத்திருந்தான்.

ஆனால், ஒரு புதன்கிழமை காலையில் அவனுக்கு நல்ல நேரம் வீட்டு வாசலில் வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

மதராஸிகளுக்குப் பசும்பால் மீது மரியாதை இல்லை. கால் டம்ளர் பாலில், கால் டம்ளர் காபி கலப்பான். ராஜஸ்தான் எருமைப் பாலுக்குப் பெயர் போன இடம். பால் டம்ளர் அரை முழங்கால் உயரம் இருக்கும். ஒரு பத்து வயது பையன் ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் பால் குடிப்பான். பால் மகத்தான உணவு. போக வஸ்து. கிழங்கு மாதிரி இருக்கும்.

பாதாம் அரைத்து சுண்டக்காய்ச்சி வெறும் வயிறில் சாப்பிட வேண்டும்.

பால்காரன் படியேற, பின்னால் ஒரு ஆள் நிற்பது தெரிந்தது. நிழல் உருவமாய் இருந்தது. அவன் கிராப்பு நேர்த்தியும், நிற்கிற விதமும் அவன் தொழிலாளி இல்லை என்பது புரிந்தது. வேறு யார்... போலீஸா...? வீட்டை ஏன் உற்றுப் பார்க்கிறான்? கஸ்டம்ஸ் ஆபீஸரா...? இன்கம்டாக்ஸா...? பயந்து பின்வாங்கினான். ஆட்களை எழுப்பினான். ஆட்களும் உற்றுப் பார்த்தார்கள்.

''அவரு ஸ்ரீராமுலு புள்ளை.''

''யாரு... அந்தப் பொறுக்கியா?''

''இல்லை. இது மூத்த புள்ளை.''

இன்னும் பயம் அதிகரித்தது. மறுபடி சண்டை வருமா...? காட்டிக் கொடுக்க நோட்டம் விடுகிறானா?

''பயப்படாதீங்க சேட்டு. இவரு அந்தக் கூட்டம் மாதிரி இல்லை. நேர்மாறான ஆள். அவங்கப்பாவோட சுமுகமா இல்லை. அப்பனுக்கும், புள்ளைக்கும் ஆவாது.''

''ஏன்...?''

''இந்த ஆளு வேற ஜாதிப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டான், அவருக்குப் பிடிக்ககலை.''

''இங்க இருக்கான்...?''

''இப்பதான் கொஞ்சம் ராசியா இருக்காங்க.''

''எப்படி...?''

''இவரு புள்ளையக் காணம், யாரோ தூக்கிட்டுப் போயிட்டாங்க.''

''யாரு தூக்கிட்டுப் போனா?''

''தெரியலை. இவரு, இவரு பொண்டாட்டியும் கலங்கிப் போயிட்டாங்க. செட்டியார் போய் இட்டாந்தாரு.

அந்தப் பொண்ணு படிச்ச பொண்ணு. மாமியார் பண்றது அதுக்குப் பிடிக்காது,'

''இவரு புள்ளைய யார் எடுத்துக்கிட்டுப் போவாங்க...''

''தெரியலை. செட்டியார் ஏதோ கோல்மால் செய்யறாரு. அவருக்கு ரெண்டாவது புள்ளை சரியில்லை. மூத்த புள்ளைய தன் வழிக்கு இழுக்கப் பாக்கறாரு. அவன் மசியலை. அதான் ஏதோ கோல்மால்னு நினைக்கிறேன்.''

''நம்ம மேல பழி போட்டுருவானா?''

பாம்பறியும் பாம்பின் கால். ஒரு அயோக்கியனின் நடவடிக்கை எப்படி என்று இன்னொரு அயோக்கியனுக்கு உடனே புரிபடும்.

''இருக்கலாம்.''

''ஏன் இங்க பார்க்கறான்?''

''தெரியலை. போய் பேச்சு கொடுக்கட்டா.''

''பேச்சுக் கொடு. அவனுக்கு என்னைப்பத்தி தெரியுமா?''

''இல்லை... இங்க யார் கிட்டயும் பழக்கம் இல்லை.''

''செட்டியார் நம்மளை விட பயங்கரமா இருக்கான்.''

''இப்ப என்ன பண்றது?''

''நீ போய் அவன் கிட்டே பேச்சு கொடு. நான் சும்மா கொலுத்து மேஸ்திரி மாதிரி தலைப்பாகட்டிக்கிட்டு வரேன்.''

வெள்ளாடு நோக்கி புலிகள் மலை மீதிருந்து இறங்கின. மூன்று நிமிடத்தில் அந்த ஆட்கள் கீழிறங்கி,

''யாருங்க... அட செட்டியார் புள்ளையா, எங்க இந்த பக்கம்? யாரைத் தேடறீங்க?'' என்றார்கள்.

தலைப்பாகையுடன் ரதன்சந்தாவாத் இறங்கி வந்தான்.

''மேஸ்திரி, இது யார் தெரியுதா...? செட்டியார் பெரிய புள்ளி.''

''அப்படியா... நான் பார்த்ததில்லையே.''

''இவரு கட்டட மேஸ்திரி, ரதன் சேட் வூட்டுக்கு மாடி கட்டறோம்.''

''ரதன் சேட் இருக்காரா?''

''இல்லீங்களே... பாம்பேபோய் இருக்காரு.''

''அவரைப் பார்க்கணும்.''

''பார்க்கலாம். என்ன விஷயம்?''

''என் புள்ளை காணம்.''

''புள்ளையைக் காணமா...? எப்பலேர்ந்து?''

''நேத்திலேர்ந்து.''

''போலீஸ் கிட்ட சொல்லலையா?''

''சொன்னோம். அப்பா சவுகார்பேட்டை ரவுடிங்கதான் எடுத்துக்கிட்டுப் போயிருக்கணும்னாரு. எனக்கு ஒரே கவலையா இருக்கு.''

''அதுக்கு ரதன் சேட்டை ஏன் தேட றீங்க?''

''அவருகிட்ட சொல்லி தேடச் சொல்லலாமேன்னு பார்க்கறேன்.''

அவன் வெகுளித்தனம் அந்தக் கொடியவன் நெஞ்சையும் அறுத்தது.

''ரதன் சேட் ராத்திரி ஊருக்கு வராரு. அப்ப பேசு. வேற யார் கிட்டயும் இது சொல்லாத. தப்பாப் படும். நீ வூட்டுக்கு போ. ரதன் கிட்ட சொல்லிட்டா உன் வேலை சுலுவா முடிஞ்சிடும். போலீஸ், என்ன போலீஸ், ரதன் சந்தாவாத் நூறு போலீஸுக்கு சமம். பயப்படாத போ.''

அந்த 'மேஸ்திரி' தோளில் கை வைத்து ஆறுதல் சொன்னான்.

''ரதன் நல்ல மாதிரியா?''

''நல்லவனுக்கு நல்லவன், கெட்டவனுக்குக் கெட்டவன்... உங்கப்பா மாதிரி.''

''எங்கப்பா சரியில்லீங்க. எனக்குப் பிடிக்கலேன்னு தான் இங்க சொல்ல வந்தேன்.''

''ஏன்...?''

''நிறைய பொய் சொல்றாரு. பெத்த புள்ளைகிட்டயே பேரம் பேசுறாரு.''

''அவரு அப்படித்தான். மாத்த முடியுமா? நீ ராத்திரி பத்து மணிக்கு வா, நீ மட்டும் வா. யார்கிட்டயும் சொல்லாத வா. நான் ரதன் சேட் கிட்ட பேசிவைக்கறேன். வாடா போய் சிமெண்ட் எடுத்தாரலாம்.'' 'மேஸ்திரி' முன்னே போனான்.

புலி எழுந்து நின்றது. உள்ளுக்குள் உறுமியது.



எத்திராஜுலுவின் மனைவிக்கு எந்த விஷயமும் மெல்லத்தான் புரியும்.

ஒரு வேளை இந்தப் புள்ளைக்கு அப்பன் போலீஸுக்கு தகவல் சொல்லி, போலீஸ் வலைவீசித் தேடி, புள்ளை இங்கினத்தான் இருக்குதுன்னு கண்டுபிடிச்சா செட்டியாரு கை கொடுப்பாரா? இல்லை கவுத்து வுட்டுருவாரா? நான்தான் என் பேரனைக் கொண்டாந்து இங்க வச்சேன்னு முன்னால வந்து நிப்பாரா? இல்லை நம்மை கூப்பிட்டு பின்னாடி தள்ளிடு வாரா?

'செட்டியாரை நம்ப முடியாது' என்பது பல்வேறு விஷயங் களைத் தொகுத்துப் பார்த்தபோது அவளுக்குப் புரிந்தது.

கடை நஷ்டமடைகிறது என்று மோப்பம் பிடித்து மார்வாடிகள் பகடி தருவதாய் சொல்லி ஆள் மீது ஆள் விட்டுக்கொண்டிருந்தபோது எத்திராஜு 'அப்படியே போறதாந்தா இந்த கடை இன்னொரு செட்டியாருக்குப் போகட்டும்' என்று பெரிய மனசுடன் ஸ்ரீராமுலு செட்டியாரிடம் போக, வழக்கமான பகடிக்கும் கீழே குறைத்து முடிவான விலை என்று சொன்னதை மறுக்க முடியுமா?

எவரிடமோ, எப்படியோ விற்று பெண்களுக்கு திருமணம் என்று பத்திரிகை வைத்தபோது, 'திருமணத்திற்கு வருகிறேன்' என்று சொல்லி கூத்தியாள் பையனிடம் நூத்தியொரு ரூபாய் அனுப்பினதை மன்னிக்க முடியுமா?

நகரில் பெரிய கடை, மற்ற இடத்தைவிட கூட சம்பளம் என்று அவர் கடைக்கு எடை ஆளாய் போக, பெருக்கற பொம்பளை வரலைனா 'ஏன்ய்யா நீ பெருக்கிறதுதானே' என்று துடைப்பம் எடுக்க வைத்த கொடுமையை நினைவிலிருந்து அழிக்க முடியுமா?

அவனை அயோக்கியன் என்று தினமும் மனதில் ஏசிக்கொண்டு வாழ்க்கையை அவன் காலடியில் கழிக்கும் படியாயிற்று. இவன் காசு தருவான் தனியே கடை வைக்க உதவுவான் என்று எப்படி இந்த காரியம் செய்ய முடியும்?

இந்த புருஷன் எடுப்பார் கைப்பிள்ளை. சின்ன பையனெல்லாம் பாண்டு வாத்தியத்தோடு கடை திறக்கிற போது சொந்தமாய்த் தராசு கூட இல்லை இவரிடத்தில்.

விஷயம் வெற்றியடையாது, கேட்டது கிடைக்காது போனாலும் பரவாயில்லை. மாட்டிக்கொண்டு நின்றால் அவமானமில்லையா. கரடியாய் இது நானில்லை என்று கத்தினாலும் யாராவது உதவிக்கு வருவார்களா? ஒரு வேளை சோறு போடுவார்களா? இந்தப் பிள்ளை கழுத்துச் செயினும்

இப்போது கொடுத்த பவுனும் திருடியது என்று சொல்லி உள்ளே தள்ள மாட்டார்களா?

குழம்பினாள்.

எதுனா ஒரு சாட்சி வச்சுக்கிட்டா பின்னால நல்லதில்லையா? புள்ளைய உள்ள கொண்டார பேரனை எடுத்தாந்திருக்கிறாராம். மூத்த பிள்ளை கடையைக் கவனிக்க திட்டம் போட்டிருக்கிறாராம், ஏன் இரண்டாவது புள்ளை காணலை. இல்லை இரண்டாவது சம்சாரம் புள்ளைக்கு கடை ஆரம்பிச்சது மூத்தாளுக்கு பொசப்பாயி தன் புள்ளைய இங்க கொண்டாந்து இடிக்கிறாளா. மூத்தா இளையா சண்டையா தான் இது இருக்கும். அப்படி இருந்தா நாம யார் பக்கம் சேர்ந்துகிடறது?

மூத்த சம்சாரம் திமிரு பிடிச்சவ. என்னடி பொண்ணு எல்லாம் கட்டி கொடுத்திட்டியா, இன்னும் எதுனா வளர்க்கிறியா என்று தெலுங்கில் அதட்டலாய் கேட்கிறவள். கடை கொடுத்திட்டியாமே ஐயோ பாவம். மார்வாடியிடமா வித்தே, மார்வாரி காசு மார்வாரியிடம்தான் போவும். அவனுங்க நீ நல்லா இருக்கணும்னு துட்டு தர மாட்டான். தன்னுது திரும்பி வரணும்னு சொல்லித் தருவான். அப்படியே பூடும். பதக்கம் இல்லாத சங்கிலி. கடையில்லாத செட்டியார் என்னத்துக்கு உபயோகம், அடமானம்தான் வைக்கலாம்.

நெஞ்சு பிளந்து ரத்தம் வரும். அவள் பேச்சு கேட்கும் போதெல்லாம் எங்கேயாவது அவளைக் காயப்படுத்த முடியாதா என்று தோன்றும், முடியாது.

இளையாளிடம் போகலாம். ஆனால், இதுவரை போனதில்லை. இந்த இடம் விட்டு அவளைத் தேடி எப்படிப் போவது? அவளுக்குப் புரியும்படி எப்படி தகவல் அனுப்புவது? - யோசிக்க ஒரு நாள் தேவைப்பட்டது.

அந்த பொம்பளை தன் சொந்தப் புள்ளை வளர எதுவும் செய்வாள். செட்டியாரு வம்புல நிக்கிறாரு, நீ தள்ளி இரு என்று சொல்லிவிடலாம். என் புருஷனை மிரட்டி புள்ளையை பார்க்க சொல்லியிருக்கிறார் என்று கூறலாம்.

ஒருவேளை போலீஸ் பிடித்ததென்றால், நான் செட்டியார் சம்சாரத்திடம் சொன்னேன். அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் தெரியும் என்று நினைத்தேன் என்று தப்பிக்கலாம். புள்ளைக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டு பேரனை எடுத்தாந்தாருன்னு சொன்னாங்க, தூக்கியாரலையே யாரும். எங்களுக்குத் தெரியாதே. அப்படி ஏதாவது சொல்லி சமாளிக்கலாம்.

எப்படிச் சொல்வது அவளிடம்?

மல்லாந்து தரையில் படுத்து யோசித்தாள்.

பிள்ளை சைக்கிள் கொண்டு வந்து இடுப்பில் முட்டியது.

'சை போடா அன்னாண்ட்' - தெலுங்கில் அதட்டினாள். பிள்ளை முகம் சிறுத்தான். அழுதான். எத்திராஜுலு அவளைத் திட்டிவிட்டு, குழந்தையை வாரிக்கொண்டு ஜன்னல் விளிம்பில் இருக்கும் புறாவை வேடிக்கை காட்டினார்.

ராஜேந்திரபாபுவுக்கு அண்ணியைப் பார்க்க ஆச்சர்யமாய் இருந்தது. அவனுக்கு திருமணம் செய்து வைக்க அம்மா பல முறை அப்பாவிடம் பேசியும், 'இவன் சரியான ஒரு இடத்துக்கு வரட்டும், அப்புறம் பார்க்கலாம்' என்று ஒதுக்கி விட்டார்.

ராஜேந்திரபாபுக்கு திருமணம் ஒன்றும் அவசியமான விஷயம் இல்லை. காசு தூக்கிப் போட்டால் ஒரே ராத்திரியில் நாலு திருமணம் செய்து கொள்ளலாம். தாலி கட்டினால் தான் திருமணமா? புடவை அவிழ்ப்பது கூட திருமணம்தானே.

ஆனால், தாலி கட்டியும் ராஜேந்திரபாபு ஒரு முறை திருமணம் செய்திருக்கிறான்.

சவுகார்பேட்டை வடகோடியில் ஒரு மார்வாரிக்கும் தமிழ்ப் பெண்ணுக்கும் பிறந்த கலப்பு ஜாதி குட்டி ஒன்று அட்டகாசம் செய்து கொண்டிருந்தது. வேளைக்கு ஒன்று உடுத்தி வீதியில் சும்மா சீமைப் பசு மாதிரி சுற்றிக் கொண்டிருந்தது. மெல்ல கொக்கி போட்டு, கிரிக்கெட் மேட்ச் டிக்கெட் வாங்கித் தந்து, டி. வி. ஆன்ட்னொ மாட்டி, பன்னீர் திராட்சை ஒரு கூடை அனுப்பி வசதிகள் செய்து வெளியே கூட்டிப்போய் அது முரண்டு பண்ண திருமணம் செய்து கொள்கிறேன் என்று சத்தியம் செய்து, திருநீர் மலையில் தாலி கட்டி, கோல்டன் பீச்சில் மூன்று நாள் குடித்தனம் செய்து அனுப்பி விட்டான்.

அது பேய்க்குப் பிறந்த பெண். ஆள் வைத்துமடக்கிற்று. வந்த ஆளுக்கு வாய்க்கரிசி போட்டு மறுநாள் சொந்த ஆட்களுடன் வீட்டுக்குள் நுழைந்து ஆஸிட் பாட்டிலைக் காட்டி, நெத்திலேர்ந்து தொப்புள் வரைக்கும் வெந்துடும் என்று பயம் காட்டின பிறகுதான் ஓய்ந்தாள்.

ஆனால், இதெல்லாம் அண்ணி வருகையில் முட்டாள்தனமாய் தோன்றியது.

''இது என் தம்பி.''-அண்ணன் முகம் மலராது அறிமுகம் செய்ய,

''ஹலோ!'' குயில் கூவியது.

''பேரென்ன?'' கிளி கொஞ்சியது.

''குழந்தையக் காணம்னு கேள்விப்பட்டேங்க.''

முகம் வாட்டமாகி சேரில் பின்னால் சாய்ந்து மயில் கண்கள் மூடின.

''இது உங்க ரூமா. இந்த ஸ்டூரியோ செட் உங்களுதா, என்ன மேக்? வெஸ்டர்ன் மியூஸிக் கேட்பீங்களா? என் புள்ளைக்கே கூட பிடிக்கும். உங்ககிட்ட தனியா ஒரு விஷயம் பேசணும். அப்பாகிட்ட எப்படியாவது சொல்லி குழந்தையை உடனேகண்டுபிடிக்க ஏற்பாடு செய்யணும்.''

''இவர் ரொம்ப ஸாப்ட் டைப் ராஜேந்திரா. பவரே இல்லை. அக்ரஸீவ்வா மூவ் பண்ணவே தெரியாது. ஐ நீட் யுவர் ஹெல்ப் ப்ளீஸ்.''

ராஜேந்திரபாபுவின் உலகத்தில் தர்ம நியாயங்கள் எதுவும் கிடையாதெனினும் இந்த பேச்சு ரொம்பவும் குழப்பியது. அவள் வெள்ளையாய் மைத்துனனிடம் பேச, மைத்துனனின் சேறுபுத்தி விகல்பமாய் எடுத்துக் கொண்டது.

ராஜேந்திரபாபு சின்ன வயசில் காற்றாடி விட்டான். கொஞ்சம் வளர்ந்ததும், சூதாட்டத்தில் காசு விட்டான். வாலிபனானதும் பெண் விஷயத்தில் நேர்மை விட்டான். காசு அவனுக்கு ஆளுமையைத் தர கற்றுக் கொடுத்தது. எதில் எங்கே எப்படி எவ்விதம் என்கிற எண்ணம் சற்றும் இல்லாத மூர்க்கன் ராஜேந்திரபாபு.

''உங்களுக்கு என்ன வேணும் அண்ணி? உங்க புள்ளைதானே? அப்பாகிட்ட போவானேன். என்கிட்ட ஒரு படையே இருக்கு. சவுகார்பேட்டையில ராஜேந்திர பாபு கோஷ்டி தனியா உண்டு. எதுக்கும் வொர்ரி பண்ணாதீங்க. இரண்டு நாள்ல நான் நம்ம பையனை புடிச்சு வரேன்.''

ரத்தன்லால் சலும்ப்ரா தன் ஆட்களை செட்டியார் தெருவில் நிற்க வைத்தான். கடையை நோட்டம் போட்டு வரச் சொன்னான். மாறுதல்களை உடனே குறித்துக் கொள்ளச் சொன்னான்.

பதினோரு மணிக்கு முதல் செய்தி வந்தது. எத்திராஜுலு கடைக்கு வரவில்லை. வீட்டிலும் இல்லை. வீடு பூட்டியிருக்கிறது. வெளியூர் போயிருக்கிறார்களாம். எந்த ஊர் தெரியாதாம். செட்டியார் இரண்டாவது பிள்ளை கடை திறந்து விட்டான். அவனிடம் நேற்று போலீஸ் விசாரித்ததாம். பக்கத்துக் கடையில் பேசிக் கொண்டிருந்தானாம்.

செட்டியார் காரை போலீஸ் தேடியதாம். பெட்ரோல் பங்கில் நோட்டம் போட்டதாம்.

பகல் பன்னிரண்டு மணிக்கு வேறு செய்தி வந்தது.

ராஜேந்திரபாபு லோக்கல் ரவுடிகளை மிரட்டினானாம். 'எவனாவது எங்க வூட்டுக் குழந்தை மேல கை வச்சதா தெரிஞ்சுது செத்தீங்க, மவனே.'

பகல் ஒரு மணிக்கு இன்னொரு செய்தி எட்டியது. செட்டியார் மார்வாரிகள்தான் தனக்கு எதிரிகள் என்று போலீஸில் சொன்னதாக மைலாப்பூரில் ஏட்டு பேசியிருக்கிறார்.

ரத்தன்லால் யோசித்தான். செட்டியார் போகும் போக்கு பிடிபடவில்லை. எழுத்து மூலம் குற்றம் சாட்டவில்லை. வாய் வார்த்தையாய் சந்தேகம் என்று சொல்லியிருக்கிறார்.

செட்டியார் கத்தி எறிய நேரம் பார்க்கிறார். எதற்கோ காத்திருக்கிறார். இந்த முறை கத்தி நேரே நெஞ்சில் தைக்கும்படி எறியப் போகிறார். அதற்கு முன் நாம் முந்திக்கொண்டால், அப்படி ஒரு வம்பு செய்தால் செட்டி கோபத்தில் எகிறி ஏதும் உளறினால், அழுத்தி விட முடியாதா?

என்ன செய்யலாம். பழக்கடையை மறுபடி தொடலாமா. வேண்டாம். லோக்கல் சப்போர்ட் குறையும் அவர் கடை முன்னே கலாட்டா செய்ய ஆள் அனுப்பலாமா. தவறு, இது ஜாதிச் சண்டையாய் போகும். என்ன செய்யலாம்?

ராஜேந்திரபாபு.

ராஜேந்திரபாபுவை தட்டலாம். யாரும் கேட்க மாட்டார்கள். அவன் தறுதலை என்று அவருக்கும் தெரியும். அவன்தான் தவறு செய்திருப்பான் என்று நம்புவார்கள். எதில் மாட்டலாம். கார் இடித்துவிட்டு சண்டை இழுக்கலாமா, வேணாம். சீக்கிரம் சமாதானமாகி விடும். இன்னும் கொஞ்சம் பெரிசாய் செய்யலாம். அந்தக் குட்டி, மார்வாரிக்கும் தமிழச்சிக்கும் பிறந்த குட்டியை சீண்ட விடலாமா?

குட். அவள் செய்வாள். காசு வருமெனில் எதுவும் செய்வாள். மார்வாரி பெண்ணைக் கைப்பிடித்து இழுத்து விட்டான் என்று சொல்ல வைக்கலாம். ஒரு வேளை திட்டத் தோல்வி அடைந்தால், மார்வாரிகள் மனதைச் சரிசெய்து தமிழச்சிக்கு பிறந்ததுதானே என்று சமாதானப்படுத்தலாம்.

போன் சுழற்றினான். எதிரே பெண் குரல் கேட்டது. 'கடைக்கு வா மோதிரம் போடுகிறேன்' என்றான். அவள் அவசரமாய்க் கடைக்கு வந்தாள். திட்டம் சொல்லி இரண்டரை பவுனில் கைவளையலை எடுத்து வைத்தான். அவள் எடுக்க முயன்ற போது தடுத்து வேலை முடி என்றான்.

அவள் சிரித்துவிட்டு 'மாலையே வருகிறேன்' என்றாள்.

தென் கோடியிலிருந்து வட கோடிக்கு சைக்கிள் ரிக்ஷாவில் போனாள். ஸ்வீட் ஸ்டால் வாசலில் ராஜேந்திர பாபு நிற்பது பார்த்து இறங்கி கடைக்குள் போனாள். அவனைத் தாண்டும் போது கண் சிமிட்டினாள்.

உள்ளே போய் ரசகுல்லா கேட்டாள். மண் சட்டியில் பத்து ரசகுல்லா போட்டு ட்ரேஸ் பேப்பரில் மூடி ரப்பர் பேண்ட் போட்டுத் தர, காசு கொடுத்துவிட்டு வெளியே வந்தாள்.

ராஜேந்திரபாபு அவளின் கண் சிமிட்டலைச் சமாதானத்திற்கு வருகிறாள் என்று எடுத்துக்கொண்டு ஏளனமாக ''சவுக்கியமா'' என்று கேட்டான்.

'போடா நாயே!' சட்டியை அவன் மீது பலம் கொண்ட மட்டும் வீசினாள். சட்டி உடைந்து அவன் மீது ரஸம் தெறித்தது. ரஸகுல்லாக்கள் சுவரில் பட்டுத் தரையில் தெறித்தன.

''தேவடியா நாயே! எம்மேலயா அடிச்சே பார்த்து?'' அவளை அறைந்தான். அவள் தரையில் விழுந்தாள்.

தெருவிலே போன மார்வாரி ஒருவன் பார்த்து ராஜேந்திரபாபு சட்டையைக் கிழித்தான்.

கடைகள் சடேர் சடேரென்று மூடப்பட்டன.



சென்னையின் கல்யாண குணங்களில் தெருச்சண்டையும் ஒன்று. இரண்டு பேர் அடித்துக் கொள்ள சென்னை மாநகரம் சகல வேலைகளையும் விட்டு விட்டு வேடிக்கை பார்க்கும். வியந்து நிற்கும். நானூறு ஆண்டுகளாக யுத்தமே பார்க்காத சமாதான பூமி இது. 'டாய்' என்று கூவிக்கொண்டு யாரும் ஓடினால் கூட ஓரம் கட்டும், என்னா? என்னா? என்று பதறும்.

அன்றைக்கும் அப்படித்தான் ஆயிற்று. ஒரு பெண்ணை ஒரு ஆண் அறைந்து கீழே தள்ள, அவள் சுருண்டு மயங்கி விழுவது கண்டு பதறிற்று. உணர்ச்சி வசப்பட்ட ஆள் ஒருவன் பாய்ந்து அதற்கு சட்டை உலுக்கி நியாயம் கேட்க, சட்டையை

இறுக்கிப் பிடித்திருக்கும் போது பின்னால் திரும்ப முடியாது என்கிற தைரியத்தில் ராஜேந்திரபாபுவின் பிடரியில் முதுகில், பிருஷ்டத்தில் மடமடவென்று சிலர் தாக்கினார்கள். அடி வாங்கின வேகத்தில் அவன் முன்னே சரிய, இன்னும் ஆறேழு பேர் பாய்ந்தார்கள். கூட்டமாய் சிலர் ஒருவனைத் தாக்கியதும் மேலும் சிலருக்குத் தெம்பு வந்தது. ஆட்களை விலக்கிவிட்டு எட்டி உதைத்தார்கள். பத்துப் பதினைந்து அடிகள் விழுந்து ராஜேந்திரபாபு சரிந்ததும் சகட்டுமேனிக்கு மிதித்தார்கள்.

அவன் அசையாது கிடந்ததும் நாலா திக்கும் ஓடினார்கள். இரண்டேகால் நிமிடத்தில் ராஜேந்திரபாபு நாற்பத்து மூன்று குத்துக்கள் வாங்கி நாய் மாதிரி கிடந்தான். ராஜேந்திரபாபுவின் படை ஒன்று கூடி பேனாக் கத்திகளை பிரிப்பதற்குமுன் முழுதாக்குதல் நடந்து ஓய்ந்து விட்டது.

அதற்குள் அந்தப் பெண் சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றப்பட்டு நகர்ந்து விட்டாள். யார் அடித்தார்கள். என்ன விஷயம்? எப்படிச் சண்டை துவங்கியது. ராஜேந்திரபாபுவை விசாரித்து அறிவதற்கு அரை மணி ஆகியது.

அதற்குள் ஸ்ரீராமுலு செட்டியார் செய்தி அறிந்து கீழே ஓடி வந்தார். பழக்கடைக்காரர்கள் ராஜேந்திர பாபுவை வீட்டு வராண்டாவில் போட்டார்கள். வரதராஜு ஓடி வந்தான். சுப்புலட்சுமி மைத்துனனைப் பார்த்து 'ஐயோ' என்று கத்தினாள்.

''என்னடா இது?'' ஸ்ரீராமுலு முகம் சிவக்கக் கத்தினார்.

''மார்வாரி பொண்ணோட ஏதோ தகராறு பண்ணாருங்க. அது ரஸகுல்லா சட்டிய மேல தூக்கிப் போட்டுது. ஜனம் சுத்திக்கிட்டு மொத்திடுச்சு.''

''யார்டா கை வச்சா?''

''யார்னு தெரியலை. கும்பல்... பல பேர் அடிச்சுட்டாங்க.''

''முதல்ல கை வச்சது யார்?''

''சேட்டுதான். தெருக்கோடில இரும்புக் கடை போட்டிருக்கறவன்.''

''ஆள் சொல்லுடா.''

''பேர் தெரிலீங்க. பார்த்துருக்கேன்.''

''இடம் காட்டறா. டேய், நீ மண்ணடிப் பசங்களை கூட்டிக்கிட்டு வா. வரதராஜு, இவனை உள்ளே கூட்டிட்டுப் போ. டாக்டருக்குப் போன் பண்ணு. நீங்க யாருடா?''

''ராஜேந்திரபாபு சிநேகிதங்க.''

''மயிரப் புடுங்கிட்டிருந்தீங்களா, உங்க சிநேகிதன் அடிபடற போது?''

''நியூஸ் கேட்டு இரும்புக் கம்பி எடுத்துட்டு ஓடியாந்தோங்க. ஒரு பயலைக்காணோம். எல்லாரும் பதுங்கிட்டானுங்க.''

''போங்கடா. போய் அந்தக் கடைய அடிச்சு உடைங்க. தெருவுல போற சேட்டு கம்மனாட்டிங்களை இழுத்துப் போட்டு மிதிங்கடா.''

நூற்றுக்குத் தொண்ணூறு பேரில் முகம் சொல்லிவிடும், இவன் வட இந்தியன் என்று. தெருவில் நிற்கிறவன் நடந்தவன், போனவன், வந்தவன் எல்லோரையும் அடித்தார்கள்.

''ஊர்விட்டு, ஊர் வந்து எங்களைக் கொள்ளையடிக்கிறதுமில்லாம எங்களையே அடிக்கிறீங்களாடா?'' இளைஞர், முதியோர், நடுத்தர சேட்டுகள் அடிபட்டார்கள். என்ன, எதற்கு, ஏன் என்று புரியுமுன் மிதிபட்டார்கள்.

ஓடி ஒளிந்து கடை மூடின ஆட்களை இழுத்து வைத்து உதைத்தார்கள்.

ஒரே நேரத்தில் பத்துப் பதினோரு டெலிபோன் செய்தி அவசர போலீஸுக்குப் போக, நகர நிர்வாகம் மிரண்டது. படை படையாய் போலீஸை அங்கே விரட்டியது.

அதற்குள் அந்த இரும்புக்கடை சூறையாடப்பட்டது. விற்பவனும், வாங்கியவனும் உதைபட்டார்கள். ஏ.ஸி. மெஷின் ஒரே அடியில் இரண்டாய் பிளந்தது. கண்ணாடி அறைகள் நொறுக்கப்பட்டன. கணக்குப் புத்தகங்கள், ரசீதுகள், காகிதங்கள் வெளியே சாக்கடையில் விழுந்தன.

ராஜேந்திரபாபு அடி வாங்கின ஒரு மணி நேரத்தில் எழுபத்தியாறு பேர் தாக்கப்பட்டார்கள்.

இரண்டாவது மணி நேரத்தில் போலீஸ் உள்ளே புகுந்தது. மூன்றாவது மணி நேரத்தில் வட இந்தியர்கள் தடிகளோடும் சூரிக்கத்திகளோடும் ஊர்வலமானார்கள். போலீஸ் தடுத்து நிறுத்தியது.

ரதன் சந்தாவாத் மேற்குத் திசையில் சில ஆட்களை அனுப்பி முஸ்லீம்களின் ஹார்ட்வேர் கடைகளின் மீது கல்லெறியச் சொன்னான்.

போரா முஸ்லீம்கள் நிறைந்த பகுதியில் கல் விழுந்தவுடன் கலவரம் பெரிதாகியது. ரதன்சந்தாவாத் நண்பர்களை முஸ்லீம்களுக்கு போன் செய்யச் சொல்லி 'செட்டியார் ஆட்கள் சகலரையும் தாக்குகிறார்கள்' என்று பேசச் சொன்னான். போரா முஸ்லீம்கள் தமிழர்கள் மீது கோபம் கொண்டார்கள். சகலரும் கடைகளை அடைத்து விட்டு மத்திய சவுகார்பேட்டைக்கு வந்தார்கள்.

இனக்கலவரமாய் இந்த அடி உதை உருவாகும் நேரத்தில் பெரிய போலீஸ் அதிகாரிகள் தலையிட்டு நள்ளிரவுக்குள் சகலரையும் கைதுசெய்வதாய் வாக்குக் கொடுத்தார்கள்.

ரசகுல்லா வீசிய பெண்ணை யாரும் அடையாளம் காட்டவில்லை. ராஜேந்திரபாபுக்குத் தலையில் அடி. முகம் வீங்கி இருந்தது. இடது கண்ணில் கட்டுப் போட்டிருந்தார்கள்.

உதவிக் கமிஷனர் துணைக் கமிஷனருக்கும், கமிஷனருக்கும் விவரம் சொன்னார்.

''இது பவர் ஸ்டிரகிள் செட்டியார்களுக்கும், மார்வாரிகளுக்கும் நடக்கிற சண்டை. இன்னிக்கு அடிதடி ஆயிடுச்சு. இதுக்கு வேர் பல இடத்துல இருக்கு. நாம சரியான கவனிக்காத ஏரியா சார் இது. ரகசிய போலீஸ் வேலை செய்யணும். ஒரு ஸ்குவாடே அங்க டேரா போடணும்.''

''போடச் சொன்னார்கள்.

ஏகப்பட்ட பழக்கடைக்காரர்களை கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்களை அடித்தார்கள். பழக்கடை ஆட்கள் பணக்காரர்கள் தயவில் வாழ்பவர்கள். யார் பேரும் யாரும் சொல்லவில்லை. கமிஷனரிடம் ஒரு கிழவர் தைரியமாய்க் கத்தினான்.

''எதுக்குனா அவங்க அடிச்சுக்கிறதும், அதுக்கு எங்களைப் பிடிச்சு உள்ளே போடறதும் வாடிக்கையாப் போச்சு. உங்களுக்கு தைரியம் இருந்தா ஸ்ரீராமுலுவோட மண்ணடி ஆளுங்களையோ, ரதன் சேட்டோட சவுகார் பேட்டை ஆளுங்களையோ புடிச்சு உள்ளார தள்ளுங்கய்யா பார்ப்போம்.''

கமிஷனர் பேசாது யோசித்தார். பழக்கடைக்காரர்களை நள்ளிரவுக்குப் பின் விடுவித்தார். ஸ்ரீராமுலு செட்டியார் பிள்ளையைப் பார்க்க நர்சிங்ஹோம் போக, வரதராஜு குழம்பிப் போய் வராந்தாவில் நின்று தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

யாரோ ஒரு ஆள் கூடையைத் தலையில் போட்டுக் கொண்டு வந்து நின்றான். வரதராஜு பயத்துடன் பின்னடைந்தான்.

''ரதன் சேட் கிட்ட வரேன்னீங்களாமே, காத்திருக்காரு.''

வீடு இருளில் இருந்தது. மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள்.

''எனக்கு வீடு இருட்டில் தெரியாதே.''

''என் பின்னால் வாங்க.''

கதவைச் சார்த்தி கீழிறங்கினான். கூடைக்காரன் பின்னால் போனான். கூடைக்காரன் இடம் காட்டி விட்டுப் போக, வரதராஜு தயங்கித் தயங்கிப் படியேறினான். கட்டை வண்டிக்குக் கீழே உள்ள போலீஸ்காரன் காதோரம் வயர்லெஸ் வைத்து தெரு முனையில் உள்ள ஜீப்புக்கு சொல்ல, ஜீப்பிலிருந்து செய்தி கடற்கரைச் சாலைக்குப் போயிற்று.

''வாங்க...'' - ரதன் சந்தாவாத் எழுந்து கைகூப்பினான்.

'இவனா ரவுடி?'

வெள்ளை ஜிப்பாவும், வெள்ளை பைஜாமாவும் மெல்லிய உடம்பும் வெற்றிலை வாயுமாய் இருக்கிறவனா கொலைகாரன்? பம்பாய் தாதா...?

''வணக்கம். எம்பேர் வரதராஜு.''

''காலைல தேடிக்கிட்டு வந்தீங்களே.''

''ஆமாங்க.''

''என்ன விஷயம்?''

''வீட்ல யாரும் இல்லீங்களா?''

''இருக்காங்க.''

''யாரு?''

''என் மனைவி, குழந்தைங்க.''

''உங்களுக்குப் பசங்க உண்டா?''

''உண்டு. ரெண்டு பொண்ணு. ஒரு ஆண். எதுக்குக் கேட்கறீங்க...?''

''அப்ப என் புள்ளய ஏன் எடுத்துக்கிட்டு வந்தீங்கய்யா?'' -வரதராஜுவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

''நானா... உங்க புள்ளையையா... பைத்தியமா எனக்கு?''

''பொய் சொல்லாதீங்க ப்ரதர்.''

''பொய்யா... நானா என்ன உளறுகிறாய்?...'' கோபத்தில் ஹிந்தி வந்தது.

''என் அப்பா சொன்னாரு?''

''உங்கப்பா ஒரு ப்ராடு?''

''உங்க மேல ரிப்போர்ட் கொடுத்திருக்காரு.''

''எங்க, ரிப்போர்ட் எழுத்து மூலமா தரச்சொல்லுங்க பார்க்கலாம். உண்டு இல்லைன்னு பார்த்திடறேன்.''

''என் புள்ளை எனக்கு வேணுங்க.''

''எனக்கு வேணாம். யார் புள்ளையும் வேணாம் நான் பொறுக்கி, ஸ்மக்ளர், ட்ரக்வாலா. ஆனா பொம்பளைய, குழந்தைங்களைத் தொட மாட்டேன். உன் புள்ளை எனக்கு எதுக்கு ப்ரதர்? இது தேடித்தான் வந்தியா?''

''நான் இந்த விஷயம் எதுலயும் சம்பந்தப் படலைங்க.''

''நானும் படலை. என் தொழிலை நான் செய்யறேன். உங்கப்பா உள்ள பூந்து ஆடறாரு.''

''என் புள்ளைய கொடுத்துட்டா நான் போயிடுவேன்.''

''வா... உள்ள வந்து பாரு. யாரது வீட்டில்... எல்லா பெண்களையும் எழுந்திருக்கச் சொல். வா. உள்ள வா.''

வரதராஜு பிள்ளை போன துக்கத்தில் விவரம் இல்லாமல் வீட்டிற்குள் போனான். கட்டிலில் தூங்கும் ரதன் சந்தாவாத் பிள்ளைகளைப் பார்த்தான். சிகப்பு நைலான் போர்த்தியிருக்கும் குண்டான பெண்ணை நோக்கி வணங்கினான். தூங்கும் குழந்தைகளை மெல்ல வருடினான்.

ரதன் சந்தாவாத்துக்கு அந்த இளைஞனின் வெகுளியான பார்வை உறுத்தியது.

''ப்ரதர்... இன்னும் உள்ளே வா.'' அந்த அறையின் கதவு திறக்க, அடுத்த தெருவில் உள்ள வீட்டின் பின்பக்கம் தெரிந்தது. ''இதுவும் நம்ம வீடுதான். அடுத்த தெருவுல வாசல் இருக்கு. வா. இப்படியே போயிடலாம்.'' பல அறைகள், கூடங்கள் தாண்டி, படியிறங்கி அடுத்த தெருவுக்கு வந்தார்கள். ரதன் பூட்டின கதவு திறந்தான்.

''ப்ரதர், உன் புள்ளய நான் தொடலை. இது என் புள்ளைங்க மேல சத்தியம். என் பணப்பெட்டி மீது சத்தியம். சந்தோஷி மாதா மீது சத்தியம். எதுக்கும் உங்கப்பாவை ஜாக்கிரதையா கவனி. இங்க பல குழப்பத்துக்கு அவர்தான் காரணம். உன் தம்பியை அமைதியா இருக்கச் சொல். மறுபடி எங்கியாவது வாலாட்டினா கொலை பண்ணிடுவேன்னு சொல்.''

''இன்னிக்கு என் தம்பியை அடிச்சது.''

''நான்தான். போய் உங்கப்பா கிட்ட சொல்; இது இத்தோட போகட்டுமின்னு சொல். அவருடைய எல்லா நடவடிக்கைகளையும் ரத்தன் கவனிக்கிறான்னு சொல். ஒரு விஷயம். நீ இதுல தலையிடாத. ஒதுங்கி நில். உன் பொண்டாட்டியக் கூட்டிட்டுப் போ.''

''என் புள்ளை?''

''உங்கப்பா நெஞ்சுல கத்தி வச்சா தானா வரும் உம்புள்ளை.''

உடம்பும், மனசும் துவள வரதராஜ¨ கீழிறங்கினான். அந்தத் தெரு போலீஸ் கவனித்துக் கொண்டது. ஜீப்புக்கு செய்தி அனுப்பியது.

போலீஸ் ஆச்சரியப்பட்டது. ஒரு வீட்டில் புகுந்து வேறு தெருவிலிருந்து வேறு வீட்டிலிருந்து இறங்க முடியுமா? இப்படி எத்தனை தெரு பண்ணியிருக்கிறார்கள்?

''வரதராஜுவ என்ன பண்றது சார்?'' - ஜீப் கேட்டது.

''அரெஸ்ட் ஹிம்.''

வரதராஜு படியேறு முன் கைது செய்யப்பட்டான். போலீஸ் ஜீப்பில் ஏற்றப்பட்டான்.



''அல்வாக் கடை வாசல்ல கத்திக் குத்தாமே...'' எத்திராஜுலுவை அவர் மனைவி விசாரித்தாள்.

கட்டிலில் குழந்தை சோர்ந்து படுத்துக் கொண்டிருந்தான். ஒரு பிள்ளையை இரண்டு நாட்களுக்கு மேல் பெற்றோரிடமிருந்து பிரித்து வைப்பது கடினம். சைக்கிளோ, கார் பொம்மையோ, கை தட்டும் கோமாளியோ, உணவோ, உடையோ, உறக்கமோ அவனை சிறிது நேரம் மாற்றும். மறுபடி உள்ளே பழகிய முகத்துக்கு ஏக்கம் வரும்.

குழந்தைக்கு ஏக்கம் வந்து விட்டது. சோர்ந்து, சோர்ந்து படுத்தான். தூங்கும்போது விம்ம ஆரம்பித்தான். தூக்கத்தில் உதடு கோணி விசும்பினான். எத்திராஜுலு மனைவிக்கு இவனை இன்னும் இரண்டு நாளைக்கு மேல் வைத்திருக்க முடியாதோ என்று கவலை வந்துவிட்டது. சோர்வில் ஜுரம் வந்து ஜுரத்தில் அனத்தல் வந்தால் எப்படி வேண்டுமானாலும் முடியும்.

இந்த வேதனை தவிர அல்வாக் கடையில் கத்திக் குத்து என்று யாரோ சொன்னார்கள். அடிதடி அவள் காதில் கத்திக்குத்தாய் விழுந்தது. புருஷனை விசாரிக்க, அவர் கவலையோடு மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்ன கேட்கறேன்...? பதிலே சொல்லலை?''

''ஆமா... கத்திக் குத்து.''

''யாரு... என்ன விஷயம்?''

''செட்டியாரு இரண்டாவது புள்ளைய அடிச்சுட்டாங்களாம்.''

''ஏன்?''

''ஏதோ பொம்பளை சமாச்சாரம். சேட்டுப் பொண்ணை கண்ணடிச்சா மாதிரி... ஜனம் சுத்திக்கினு நாலு போட்டா மாதிரி... அவன் கத்தி உருவிக் காட்டினானாம்... அதையே திருப்பி சொருகிட்டாங்க.''

''யாரு...?''

''ரதன்சேட்.''

''ஐயோ... அவன் பொறுக்கியாச்சே.''

''அவங்க ஜாதிப் பொண்ணை கையைப் பிடிச்சா சும்மாவா இருப்பானுங்க?''

''அதானே...! இவனுக்கு ஏன் இப்படி புத்தி போவுது?''

''துட்டு கொழுப்பு. அது தவிர பொறப்பு சரியில்லை. செட்டியார் திமிர்ல இருந்தப்ப பொறந்தவன். அடங்க மாட்டேங்கறான்.''

''அப்பனே அடங்காத இன்னும் ஆடற போது புள்ளை அடங்குமாக்கும்?''

''அதென்னவோ தெரியலை. அப்பனும், புள்ளையும் ஆடறானுங்க. மூத்த புள்ளை பசுவா முழிச்சுக்கிட்டு நிக்குது. பாவம் அதையும் வேதனைப் படுத்தறானுங்க. அந்தப் பையன் புள்ளையக் காணம், காணாம்னு அலையறானாம்.''

-எத்திராஜுலு மனைவிக்கு வயிறு பிசைந்தது.

''இந்த அடிதடி பெரிசாவுமா?''

''ஆயிடுச்சு. செட்டியாரு தன் ஆளை வுட்டு இரண்டு மூணு சேட்டு கடைகளை நொறுக்கி... ஊர்ல பல பேருக்கு அடி. சம்பந்தா, சம்பந்தமில்லாத நிறைய சேட்டு ஆளுங்கதான் மாட்டிக்கிட்டாங்க.''

''ஐயோ...''

''பெரிசா பூடும்.''

''ஐயோ...''

''இந்த வாரத்துக்குள்ள மூணு நாலு கொலை விழும்னு தோணுது. ரதன்சந்தாவாத் விடுவானா. மீட்டிங் போடறானுங்க. இதுல என்ன தப்புன்னு. பாய் கடைகளையும் சேட்டு கடைன்னு தெரியாத அடிச்சுட்டாங்க. முஸ்லீம் இப்ப சேட்டுப் பக்கம்.''

''அப்ப செரிசாயிடும்.''

''ஊரு சுத்தி போலீஸ் போட்டுருக்கு, போலீஸ் அசர்றப்ப மறுபடி வெட்டிக்குவாங்க.''

''இத வேற இங்க கொண்டாந்து வச்சிருக்கோமே... எனக்கு இதே பெருங்கவலை.''

''அதுக்கும், இதுக்கும் சம்பந்தமில்லை.

''நம்ம கெட்ட நேரம் செட்டியார் மாட்டினா இந்தப் புள்ளைய என்ன செய்யறது?''

''அதான் நானும் யோசிக்கிறேன்.''

''இத்தை அப்படியே வுட்டுட்டு எங்கியாவது ஓடிப் போயிரலாமா?''

''அடிப்பாவி. பச்சைக் குருத்துடி. பாவம் ஏற்கெனவே ஏங்கிப் போயிருக்குது.''

''முடியாதுன்னா பெரியவர் கிட்ட சொல்லிடு.''

''வெட்டிருவாரு. முதுகுலே ஆஸிட் ஊத்திடுவாரு.''

''அவர் மேல வேற எவனாவது ஊத்திட்டாங்கன்னா நம்ம கதி?''

''எதுனா செய்யணும். நான் செய்யறேன். இன்னி பொழுது போகட்டும்.''

எத்திராஜுலு மனைவி யோசித்தாள். யோசிக்க யோசிக்க கலவரம் அதிகமாயிற்று. ஏதாவது ஒரு பிடிப்பு வேண்டுமென்று தோன்றியது.

''இன்னிக்கு சாயந்தரம் நான் லேடி டாக்டர்கிட்ட போவணும்.''

''ஏன்?''

''எனக்கு தொந்தரவு.''

''என்ன தொந்தரவு?''

''லேடி டாக்டர்கிட்ட எதுக்கு போவாங்க?''

''எப்படி இப்பப் போறது?''

''எட்டு மணிக்கு போறேன்.''

''சரி. போ.''

எத்திராஜுலு மனைவி உள்ளே துல்லியமாய் திட்டமிட்டாள். குழந்தை எழுந்து உட்கார்ந்து அழுதான். எத்திராஜுலு யோசனையுடன் அருகே போய் அவனை அணைத்துக் கொண்டார்.

''என்னை எதுக்கு அரெஸ்ட் பண்றீங்க?''

''அரெஸ்ட் பண்ணலீங்க. உங்க புள்ளையத் தேடறது சம்பந்தமா ஏதோ கேட்கணுமாம்.''

''நானே வரேன். ஜீப் எதுக்கு?''

''கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க.''

''உள்ளே போய் அப்பா கிட்ட....''

''வாங்க சார்...'' -ஒரு கான்ஸ்டபிள் அவர் கையைப் பிடித்து இழுத்தான்.

''ஏறுங்க வண்டில!'' அதட்டினான்.

''குழந்தைங்க பாடி எதுனா கிடைச்சிருக்கும். அடையாளம் காட்டறதுக்குக் கூப்பிடறாங்களோ என்னவோ...? இப்படி டக்குன்னு சொல்லிடக் கூடாது நாங்க.''

- உள்ளே வரதராஜுவுக்குத் திக்கென்றது. பேசாது வண்டி ஏறினான். ஸ்டேஷன் உள்ளே சென்றதும் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருப்பதாகச் சொன்னார்கள்.

''அப்ப வீட்டுக்கு போன் போட்டுக்கறேன். '

''நீங்க இங்க பதில் சொல்ல வேண்டியதுக்கு பதில் சொல்லிட்டு போன் பண்ணிக்கங்க.''

''என்ன...?''

''எங்க போயிருந்தீங்க...?''

''ஒரு நண்பர் வீட்டுக்கு.''

''பேர் என்னா?''

''எதுக்கு?''

''சொல்லுங்க.''

''எதுக்கு சொல்லணும், என் வக்கீலைக் கூப்பிடணும்.''

''வரதராஜு, சில பணக்கார நாய் பசங்க போலீஸ் காரனை மயிர் புடுங்கின்னு நினைச்சுட்டிருக்காங்க, இல்லை? அப்படி இல்லை, இன்னி தேதிக்கு பப்ளிக் போலீஸ்காரனைத் திட்டினா அவன் அதிகமா கண்டுக்கறதில்லை. காரியத்துல முன்ன, பின்ன இருக்கலாம். அதுக்காக மக்கு, முண்டம், முட்டாள்னு பேசிப் பாரு... பாம்பு புடுங்கறாப்பல புடுங்கிடுவான். எங்கக் கடமையை சரிவர செய்யாதிருக்கலாம். அதுக்கும் காரணம் இருக்கும். ஆனா, செய்யத் தெரியாதுன்னு மட்டும் நினைக்காதீங்க.''

''நான் எதுவும் நினைக்கல சார், உங்களைப் பத்தி. என்னைப் போல விடுங்க.''

''பதில் சொல்லிட்டுப் போங்க.''

''என்ன பதில்?''

''ரதன் சந்தாவாத் சலும்ப்ரா வீட்ல உங்களுக்கு என்ன வேலை?''

''யார் அது?''

''சொல்லுங்க.''

''எனக்கு யார் அதுன்னு தெரியலை.''

''நான் அடிச்சிடுவேன் வரதராஜு.''

''எப்படி? எதுக்கு? ஏன்?''

பளீரென்று அறை விழுந்தது. எதிர்பாராத அடியில் கிறுகிறுத்தது. வரதராஜு எகிறி உட்கார்ந்து கன்னம் பொத்திக் கொண்டான்.

''இது சாம்பிள். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிடணும்!''

வரதராஜு ப்ளஸ் டூ படிக்கும்போது அப்பாவிடம் வாங்கின அறைதான் கடைசி. பேண்டுக்குள் கை விட்டு சொறிந்து கொண்டிருந்தபோது அப்பா அதை தவறாக நினைத்து அறைய, பிறகு அப்பா எதிரே கை, கால்கூட அசைப்பதில்லை.

வரதராஜுவுக்கு வன்முறை பிடிக்காது. அதன் வேதனை தெரியும். ஆனால், வன்முறை எதிரே வந்து நிற்க அவனால் எதிர்க்கவும் முடியும். வரதராஜு எளிமையானவன். ஆர்ப்பாட்டம் வேண்டாம் என்று நினைப்பவன். ஆனால், ஆடிக்காட்டினால்தான் நிற்க முடியும் என்கிறபோது மிக வேகமாய் ஆடுவான். வரதராஜு உணர்ச்சிமயமானவன். காதலிலும் சரி... கடுமையிலும் சரி.

வரதராஜு போலீஸ் கடுமையால் உணர்ச்சி மயமானான்.

பிள்ளையைத் தொலைத்த துக்கம், ரதன் சந்தாவத் சலும்ப்ரா கொடுத்த குழப்பம், தகப்பன் மேல் பிறந்த சந்தேகம் அவனை வாட்டி எடுக்க, அந்த அறை அவனைத் துள்ளச் செய்தது. இனி யாரையும் எதற்கும் நம்பக்கூடாது என்று அவனுள் தீர்மானம் வந்தது.

கை தட்டினால் பூனை ஓடும். துரத்தினால் கண் காணாத தூரத்துக்கு மறையும். லேசான அசைவில் கூட பயமுறுத்திவிட முடியும். அதே பூனையை நாலு பக்கமும் மடக்க, பளீரென்று முகத்திற்கு நேரே பாயும். கூரிய நகத்தால் கீறும்.

வரதராஜு கால் மேல் கால் போட்டுக் கொண்டான்.

''நீ வெறும் இன்ஸ்பெக்டர். எவனாவது ரவுடிக்கிட்ட ஆடிக்காட்டு உன் ஆட்டத்தை. கை நீட்டி அடிச்சிட்டல்ல. உன்னைக் கதறக் கதற அடிக்கிறேம்பார். விசாரிக்கக் கூப்புட்டு அடிக்கிறியா? உள்ள வச்சு அடி. முடிஞ்ச வரைக்கும் அடி. ஆனா, ஒவ்வொண்ணுக்கும் பதிலுக்கு நீ வாங்கப் போற. என் சொத்தே போனாலும் உன்னை ஒழிச்சிட்டுத்தான் மறுவேலை. அடிறா.''

''யோவ், இந்தாளை உள்ளே தள்ளிப் பூட்டு.''

பூட்டினார்கள்.

இருண்ட அறையில் கம்பிகளுக்குப் பின்னே வரத ராஜு... கம்ப்யூட்டர் டெக்னாலஜி படித்தவன், அழகிய சிவந்த நிறமுள்ள கம்ப்யூட்டர் படித்த பெண்ணை மணந்தவன், பதினேழு லட்ச ரூபாய் முதலீடு செய்து கம்பெனி நடத்துபவன், ஒன்றரைக் கோடி ரூபாய் சொத்து உள்ள தந்தையையே உதறியவன், தன் திறமையை நம்பி

நின்றவன். அடிபட்ட புலியாய் உறுமினான். சகலரின் மீதும் கோபம் கொண்டான்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது.

உலகத்தில் சாதுவானவை எவை? பசு, பன்றி, பாம்பு, பத்தினி என்று பட்டியல் போடுவார்கள். பசுவையும், பத்தினியையும் துன்புறுத்தி கூட்டில் அடைத்தால்... காடு... அது மரமாயிருப்பினும், மனித கூட்டமாய் இருப்பினும் சரி... மிரண்டு அவை சுற்றியுள்ள இடத்தை நாசப்படுத்தும். வெறி அடங்கும் வரை அழித்துவிட்டுத்தான் ஓயும்.

சவுகார்பேட்டை வியாபார ஏரியா சரி. போட்டி இருக்கும் சரி. அதில் இத்தனை ஆட்டமா? யார் இது ஆடுவது...? பிள்ளையைத் தூக்குவதும், பெண்ணை இழுப்பதும், கடைகள் உடைப்பதும் கேட்பாரில்லையா?

சாது மிரண்டது.

"துரை, பெரியவருக்கு சொல்லிட்டேன். வரேன்னுட்டாரு." - ஒரு போலீஸ்காரன் 'பூட்டு சரியாய் இருக்கிறதா' என்று அசைத்துப் பார்த்துவிட்டு அடிக்குரலில் கூறினான்.

"சரி. சாயந்திரம் வந்து நூறு ரூபாய் வாங்கிக்க."

"போறாது துரை."

"கூட ஒரு நோட்டு வாங்கிக்க."

"சரிம்மா. டீ சாப்பிடறியா?'-பாசம் பொங்க கேட்டான்.

"வேணாம்."

"எதுக்கு அரெஸ்ட் பண்ணீங்க?" வக்கீல் உள்ளே நுழைந்தார்.

"ராத்திரி சந்தேகமா நடமாடினாரு. கூப்பிட்டு விசாரிச்சோம்."

''உள்ளே போட்டுருக்கீங்க.''

''நான் உள்ளே போடுவேன். வாசல்ல நிக்க வைப்பேன்... அது என் இஷ்டம்.''

''சரி, இப்ப என்ன செய்ய சொல்றீங்க?''

''கூட்டிட்டுப் போங்க. அந்தாளைக் கவனிக்கிற விதத்துல கவனிச்சுக்கறேன்.''

வரதராஜுலு வெளியே வந்தான். வக்கீல் காரில் ஏறி உட்கார்ந்தான்.

வரதராஜுவைச் செட்டியார் பிள்ளை என்று தெரிந்து கொண்டான். ஒரு இருபது வயது முஸ்லீம் பையன். கார் தாண்டிப் போய் நின்று திரும்பிப் பார்த்தான். இவனாலதான் நம்ம கடை உடைச்சாங்க என்று கோபப்பட்டான்.

திரும்பியும் கல் எடுத்து இடது பக்கக் கண்ணாடிக் கதவு நோக்கி உடைத்தான். தலை தெறிக்க ஓடினான்.

வரதராஜு முகத்தில் கண்ணாடி சில்லுகள் தெறித்து குத்தின. உடம்பு பயத்தில் ஒரு க்ஷணம் நடுங்கியது, அடுத்த கணம் வெறி வந்தது.

''டேய்...'' - கார் கதவு திறந்து அவனைத் துரத்திக் கொண்டு ஓடினான். மறுபடி கடைகள் சடேர் சடேரென்று மூடப்பட்டன.



உடைந்து சிதறிய கண்ணாடி சில்லொன்று செருப்புக்கும், காலுக்கும் நடுவே நின்றது. ஓடும்போது உறுத்தி உள்ளங்காலைப் பொத்து ரத்தம் வரச் செய்தது.

ஆனால், வரதராஜு தன்னை மறந்த நிலையில் இருந்தான். காமமும், கோபமும் தன்னை மறக்கச் செய்யும் விஷயங்கள். தன் வலியேகூட சுகமாய் மாற்றும் நிலைகள். இருபது கடைகள் தாண்டிய தூரத்தில் அந்த முஸ்லீம் பையனை வரதராஜு தாவிப் பிடித்துவிட்டான். சின்னப் பையன் பதினேழு, பதினெட்டு வயது இருக்கும். நொசுங்கிப் போன உடம்பு. ஆனால், திமிறலில் ஒரு அசாத்திய பலம் தெரிந்தது. அழுத்தி மல்லாக்கப் போட்டு முகத்தில் நாலு குத்து விட அடங்கினான். தலைமுடியைக் கொத்தாய்ப் பிடித்து குனிய வைத்து அப்படியே இழுத்து அவனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வர, கூட்டம் வழிவிட்டு பிறகு பின் தொடர்ந்தது.

குடைக்கார முஸ்லீம் முன் வந்து என்ன என்ன என்று வரதராஜுவை மடக்க, அவனை நெத்தித் தள்ளிவிட்டு முன்னேறினான். என்ன நடந்தது என்று தெரியாத ஜனங்களே கூட்டத்தில் அதிகம் இருந்தார்கள். முஸ்லீம் பையனை அடித்து வரதராஜு இழுத்துப் போகிறான் என்று நினைத்தார்கள். 'இரண்டாம் பிள்ளைதான் செட்டியார் மாதிரி ரவுடித்தனம் பண்ணுது மூத்ததுமா?' என்றார்கள். சவுகார்பேட்டைக்குக் கேடு காலம்தான் என்றார்கள்.

குடைக்கார முஸ்லிம் வரதராஜுவின் தள்ளலில் நிலை குலைந்து விழுந்து சுதாரித்து உருதுவில் ஏதோ கோபமாய்

கத்தினார். யாரையோ ஏவினார். ஏவப்பட்டவன் தலை தெறிக்க முஸ்லிம்கள் வாழும் பகுதிக்கு ஓடினான்.

ஜனக்கூட்டம் அவன் போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தது. கத்தி, கட்டையுடன் ஒரு கூட்டத்தின் வருகைக்குக் காத்திருந்தது. கடை ஆட்கள் ஷட்டருக்கு வெளியே உள்ள ஷோ-கேஸில் இருந்தவற்றை உள்ளே எடுத்து வைத்தார்கள். கடைக்குள் இருந்த கஸ்டமர்களை சீக்கிரம் என்று விரட்டினார்கள். ஷட்டரின் விளிம்பில் கை வைத்து காத்திருந்தார்கள்.

பல ஆண்டுகள் அமைதியாய் வியாபாரம் செய்தவர் களுக்கு கொஞ்சம் பரபரப்பு தேவைப்பட்டது. ''போன வருஷம் நம்ம இடத்துல பெரிய அடிதடி பதினாறு, பதினேழு கடைகளை உடைச்சுட்டாங்க.'' விவரித்து கதை சொல்ல விரும்பி காத்துக் கொண்டிருந்தது.

வரதராஜு இழுத்து வந்த கையோடு போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ஏறினான்.

''இந்தப் பையன் என் மேலே கல் அடிச்சான்.'' கூட்டம் அரை வளையம் கட்டியது.

''தெருவுல நடந்து போனதுக்கு சந்தேகக் கேஸுன்னு என்னைப் புடிச்சியே. இப்ப கல்லடிச்சவனை கொண்ணாந் திருக்கேன் என்ன செய்யப்போற?''

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார். சவுகார்பேட்டை சுகமான இடம், போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மரியாதை தரும் இடம். வியாபாரிகள் எவரும் அதிகாரிகளை எதிர்ப்பதில்லை. வாங்க முயற்சிப்பார்கள். வாங்க முடியவில்லை என்றால்தான் கோபப்படுவார்கள்.

'நம்ம பொண்ணு பெரிசாயிடுச்சு சேட்டு' என்று லாலா கடைக்காரனிடம் பேச, அவன் மகிழ்ந்து 'வாழ்க வளர்க' என்று வாழ்த்த மாட்டான்.

''ம்ம்'' என்று ஒரு வார்த்தையில்தான் பதில்.

''ஒரு கிலோ ஸ்வீட்டு வேணும்.''

-எடை போடாமல் ஒரு கிலோவுக்கு மேலேயே ஒரு டப்பாவில் போட்டு அனுப்பி விடுவான்.

இன்ஸ்பெக்டருக்கு வாழ்த்தைவிட ஸ்வீட் முக்கியம்.

சவுகார்பேட்டை எப்படி வருமானம் வரும் இடமோ அதேபோல் உணர்ச்சி தூக்கலான இடமும் கூட. மதம் அங்கே முக்கிய விஷயம். நாலு ஜாதி ஆட்கள். நாலு ஜாதியும் பணக்கார ஆட்கள். இங்கு காசு சண்டை வரலாம், வியாபாரப் போட்டி இருக்கலாம். ஜாதிச் சண்டை வரக்கூடாது. வந்தால் நிற்காது. இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

விழுந்து கிடக்கிற பையனைப் பார்த்தவுடன் முஸ்லிம் என்று தெரிந்துவிட்டது. தள்ளியது இந்து. லோக்கல் இந்துவுக்கும், வட இந்திய இந்துவுக்கும் சண்டை. இதில் முஸ்லிம் வட இந்திய இந்து பக்கம். என் செய்வது... புத்தி வேகமாய் இயங்கியது.

''உன் பேரு என்னா?''

''அகமது உசேன்.''

''எங்க இருக்க?''

''லாலா கடையில.''

''அட, அவரு கடையா? இவரு கார்ல கல்லடுச்சியா?''

''இல்ல சார்.''

''அப்ப ஏன் உன்னை புடிச்சாரு?''

''தெரியலை சார்.''

''நான்பாட்டுக்கு போயிட்டிருந்தேன். பின்னால வந்து தோளைப் பிடிச்சு இழுத்துட்டு வந்தாரு.''

''சரி... நீ போ.''

''எங்க போற?'' வரதராஜு கூவினான்.

''நீங்க ஒரு புகார் எழுதிக் கொடுங்க.''

''இவனைப் போன்னுட்டியே?''

''அது என் வேலை. இவனை என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியும். நீ எழுதிக் கொடுத்துட்டுப் போ.''

''அதுக்குள்ளயும் மால் வாங்கிட்டியா?''

''அனாவசியமா பேசாதே. புகாரை எழுதிக் கொடு. நீ போ தம்பி.''

அவனை எழுப்பி வாசல் வரை அழைத்து வந்து வெளியே விட்டார். 'ஓட்றா' என்று காதோடு கூறினார்.

பையன் சிட்டாய் கூட்டம் பிளந்து ஓடினான். கூட்டம் சுவாரஸ்யமற்று கலைந்தது.

''அப்ப... அவன் என் மேல கல் அடிச்சா நான் பொறுத்துக்கணும், நான் சும்மா நின்னுட்டிருந்தா என்னை இழுத்துட்டு வருவே...?''

''அப்படித்தான். வேணும்னா புகார் எழுதிக் கொடு, இல்ல... வெளிய போ.''

போலீஸ் தந்திரம் வரதராஜுவுக்குப் புரியவில்லை. வாசலில் முஸ்லிம் கூட்டம் வந்து கலாட்டா அதிகமாவது கூடாது என்கிற செயல் புரியவில்லை. பாரபட்சமாய் நடப்பது மட்டும் புரிந்தது. வெகுண்டான்.

இறங்கி தெருவில் நடந்தான். விறுவிறுவென்று வீட்டுக்குப் போனான். படியேறி வீட்டுக்கதவு உதைத்துத் திறக்க, ஹால் நடுவே அப்பா நின்றிருந்தார். சுற்றி அவருடைய ஆட்கள் இருந்தார்கள்.

''என்ன வரதராஜு?''

''கல் அடிக்கறாங்கப்பா. போலீஸ் துணையா இருக்கு.''

''ஆமாம்ப்பா. அப்படித்தான் அடிப்பாங்க.''

''என்ன அப்படித்தான்...?''

வேற வழியில்லை வரதராஜு... பொறுத்துதான் போகணும். கல்லுதான் விழுந்தது... கத்தி, செருப்பு, ஆஸிட் பாட்டில் எல்லாம் விழும். நீ புதுசு... கோபப்படற. நான் தினம் அனுபவிச்சாச்சு.''

''இதுக்கு முடிவே இல்லையா.''

''இல்லை. அடிக்கு அடிங்கறது தவிர வேறு வழி இல்லை.''

''ஏம்ப்பா இப்படி?''

''அவங்க ஜனம் அதிகமாயிடுச்சு. நம்மளை ஒழிக்க விதம் விதமா ஆட்டம் காட்டறாங்க. அவன்களுக்கு உதவ சேட்டுப் பசங்க இருக்காங்க. இன்னும் பத்து வருஷத்துல சவுகார்பேட்டை அவங்க இடமாப் போயிடும். நாம வேற இடம் பார்த்துக்க வேண்டியதுதான்.''

''அப்பா கஷ்டப்படறாரு தம்பி. நம்ம ஆளுங்கக்கிட்ட ஒத்துமையில்லை. அறுபது கடை ஆளுங்களை வரச் சொன்னா... இதப் பாருங்க ஏழு பேருதான் வந்திருக்கம். ஆனா, அவங்க கெட்டியா ஒருத்தருக்கொருத்தர் உதவியாக இருக்காங்க.''

''அப்பா...''

''என்ன வரதராஜு?''

''இதை விடச் கூடாது.''

''என்ன செய்ய முடியும் சொல்லு?''

''அப்பாவுக்கு வயசாயிடுச்சு தம்பி. ஒண்ணும் செய்ய முடியலை.''

''கடை கடையா ஏறி இறங்கி ஆள் சேர்க்கணும். போலீஸ்கூட மல்லுக்கு நிக்கணும். அந்தந்த மேட்டரை அப்பப்ப தீர்க்கணும். அதுக்கு ஒரு வயது வேணுமில்ல தம்பி.''

''அப்பா, நீங்ககூட இருங்க. இதை என்கிட்டே விடுங்க.''

சட்டென்று ஒரு கணம் செட்டியார் அதிசயித்தார். 'தன் மகன்தானா' என்று வியப்புடன் பார்த்தார். 'ஆரம்ப சூரத்தனமோ' என்று நினைத்தார். கல் லேசாய் அசைகிறதே என்று சந்தோஷப்பட்டார். ஆவலை முகம் காட்டாது இருந்தார்.

''ஏற்கெனவே நீ நொந்துபோய் இருக்க. இது வேற உனக்கு எதுக்கு? உன் இடத்துல போய் நீ உன் வேலைய கவனி. இது என் தலையெழுத்து.''

''இல்லப்பா. புள்ளைய நீங்க ஒளிச்சு வச்சிருக்கறதா ரதன் சந்தாவாத் சொல்றான்.''

''என்ன...?'' செட்டியார் கடும் கோபத்துடன் திரும்பினார்.

''ஆனா, நான் நம்பலை.''

''வரது... வரது... நீ நம்பாத வரது. நீ உள்ள நுழைஞ்சதுமே அவங்க கூட்டம் பயந்து உன்னையும், என்னையும் பிரிச்சுப் போடப் பாக்குது. என் புள்ளைய எனக்கெதிரா திருப்பப் பார்க்குது. என் முதுகெலும்பை உடைக்கப் பார்க்குது. நீ தேடு வரதராஜு. என் தடம் இருக்கிறதா ஒரு இடம் சொல். உடனே சகலமும் விட்டுட்டு ஓடிப்போயிடறேன். என் மேல் சந்தேகம்னா சொல்லிடு. போதும் இத்தோட சவுகார்பேட்டை வாசம் முடிஞ்சுதுன்னு போயிடறேன்.''

''இல்லப்பா...''

''நீ ஏய்யா அவன்கிட்ட போனே?''

''கூப்புட்டாங்கப்பா.''

''மாதர்சோத். ரெண்டு நாள் டைம் கொடு. உம்புள்ளை எங்க இருந்தாலும் தேடிக் கண்டுபிடிச்சு உன்கிட்ட சேர்க்கறேன்.

''இப்ப போன் வந்தது. வரதய்யா. புள்ளை விளையாடினானாம். சாப்பிட்டானாம்; தூங்கறானாம்.'' - செட்டியார் ஆள் பேசினான்.

''குழந்தையை கொடுக்கச் சொன்னீங்களாப்பா.''

''நாம கடை வித்துட்டுப் போயிடணுமாம். பத்திரம் கை மாறின நேரம் புள்ளை வந்து சேர்ந்துடுமாம்.''

''தேவையில்லை. என் புள்ளை செத்தாலும் பரவாயில்லை. இவனுங்க அடாவடித்தனத்துக்குப் பயந்து ஓடணுமா.''

''நான் சரின்னுட்டேன் வரது.'' செட்டியார் தலை குனிந்து சொன்னார்.

''ஏம்ப்பா சொன்னீங்க?''

''எனக்கு குழந்தை முக்கியம். நீ முக்கியம். என் மருமக முக்கியம். நீங்க படற வேதனை தாங்கலைடா எனக்கு.''

''யாருப்பா வச்சிருக்கறது?''

''தெரியலை. ஆனா, ரதன் சந்தாவாத்துக்கு இதுல சம்பந்தம் இருக்கு.''

''அவன் வீட்ல தேடினேன். இல்லை.''

''ஆறு வீடு வச்சிருக்கான். எதுல பார்த்த நீ எனக்கு பலமா நில்லுப்பா. நம்ம கடைல எனக்குத் துணையா இருக்கேன்னு சொல்லு. எனக்கு நூறு யானை பலம் வந்துடும். அந்தாளோட வீடு புகுந்து புள்ளைய தூக்கிட்டு வந்துருவேன்.''

''தேடலாம்பா?''

''நீ நிக்கிறியா?''

''நிக்கறேன்.''

''வரது, இது கோரமான விளையாட்டு.''

''விளையாடலாம்.''

''அடி விழும். ரத்தம் சொட்டும்.''

''சும்மா கார்ல உட்கார்ந்திருக்கும்போதே கல்லால அடிக்கறாங்கப்பா.''

''ஊதித் தள்ளிடலாம்.''

''நான் இருக்கேன். உன்கூட நான் இருக்கேன்.'' வரதராஜன் கத்தினான்.



நகரத்தின் எல்லா அசைவுகளும் ஒவ்வொரு நாளின் அட்டகாசங்களும், ஆர்ப்பாட்டங்களும் மறுநாள் சென்னை நகர கமிஷனர் அலுவலகத்தில் பேசப்படும். காலை எட்டு மணிக்கு நகரில் முதல் அமைச்சர் இருந்தால் சந்தித்துவிட்டு, பத்து மணிக்கு அலுவலகம் வந்து அன்றைய ஆரம்ப வேலைகளை முடித்துவிட்டு, பகல் பதினோரு மணிக்கு அதிகாரிகள் கூட்டம் ஆரம்பிக்கும்.

எக்மோரில் உள்ளடங்கின கட்டடம். வாசலுக்கும், கமிஷனர் அறைக்கும் இடையே இருபது லாரி தூரம். கட்டடம் சுற்றி பச்சென்று பராமரிக்கப்பட்ட தோட்டம் பழைய கட்டடத்தில் புதிய பெயிண்ட் தடம். உயரமான மேல் தளம். உள்ளே குளுமை தரமின்விசிறிகள் சுற்றும்.

அதிகாரிகள் உள்ளே நுழைந்து விறைப்பாகி சல்யூட் அடிக்க, கமிஷனர் தலையசைத்து ஏற்றார். ''உட்காருங்க, யார் வரணும்?''

தொப்பிகளைக் கழற்றி அதற்கான இடத்தில் மாட்டி விட்டு மர நாற்காலிகளில் அமர்ந்தனர்.

நகரம் நான்காகப் பிரிக்கப்பட்டு குற்றவியல், மது விலக்கு, சட்டம்-ஒழுங்கு என்று தனித்தனியே அதிகாரிகள் இருந்தனர்.

''நார்த் மெட்ராஸை நாம கொஞ்சம் அதிகம் கவனிக்கணும்! தொந்தரவு அதிகமாயிடுச்சு.''

''முன்னைக்கு இப்ப ரொம்ப பரவாயில்லை சார். நிறைய அடக்கிட்டோம்.''

''சும்மா இருங்க செல்லதம்பி. நாட்டுப்புறத்திலே நடக்கிற மாதிரி ஜாதி சண்டை நடக்குது! சி.எம். திட்டறாரு, என்ன பண்றீங்கன்னு?''

''எப்பவாவது ரேரா எரப்ட் ஆயிடுது சார்.''

''ஜாதி சண்டை எப்படிங்க ரேரா எரப்ட் ஆகும்?''

''பதினைந்து வருஷத்துல ஏழு தடவைதான் சார் இப்படி ரிப்போர்ட் ஆயிருக்கு. இந்த வாட்டி கொஞ்சம் மோசமாயிடுத்து.''

''எத்தினி அரெஸ்ட்?''

''பதினேழு பேர் சார்.''

''லிஸ்ட் கொண்டாங்க.''

பட்டியல் தரப்பட்டது.

''என்னங்க நிறைய நார்த் இண்டியன் பேரா இருக்கு? அடிபட்டது அவங்கதான் நிறையன்னு சொல்றாங்க. அடிபட்ட ஆளையே புடிச்சு உள்ள போட்டீங்களா?''

''இது உடனே செய்த அரெஸ்ட் சார். இன்னும் பல பேரை தேடிக்கிட்டிருக்கோம்.''

''நோ... நோ... எனக்கு இது சரியா படலை. அவங்க ஒட்டுமொத்தமா சி.எம். கிட்ட ரிப்போர்ட் பண்ணியிருக்காங்க.''

''அடிச்சுட்டு நிறைய பேர் ஓடிட்டாங்க சார்! சரியா தடயம் கிடைக்கலை. அவங்க பேர் சொல்லுங்கன்னா சுத்தியிருந்தவங்க யாரும் பேச மாட்டேங்கறாங்க. மார்வாரி அசோஸியேஷன் லீடர்கிட்ட லிஸ்ட்கொடுன்னு பர்சனலா கேட்டேன். சார்! இது என் வேலை இல்லன்னுட்டான். கோவாபரேட் பண்ணலைன்னா யாரைன்னு புடிக்கிறது?''

''அப்ப இவங்க மேல யார் ரிப்போர்ட் கொடுத்தா?''

- லிஸ்ட் தூக்கிப் போட்டார்.

''ஸ்பாட்ல புடிச்சோம் சார்.''

''ஏமாத்திக்கிறீங்க செல்லதம்பி. இவங்களை வெளிய விட்டுருங்க.''

''சார்...''

ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனர் எழுந்து நின்றார்.

''யெஸ் மிஸ்டர் பாண்டியன்.''

''என் ஒபினியன் சொல்லலாமா சார்...?''

''நீங்க சவுத் மெட்ராஸ். இதுல ஏன் நுழையறீங்க பாண்டியன்?'' செல்லதம்பி கடுகடுத்தார்.

''ஒபினியன்தானே... சொல்லுங்களே! ஏன் சிடுசிடுக்கிறீங்க?''

''ஒரு ஏரியா ஸ்டடி பண்ணாத...''

''சார்! எனக்கு ஏரியா பத்தி தெரியாது. ஆனா, நேத்து சவுகார்பேட்டை கலவரத்துக்கு ரூட் காஸ் ஜாதியில்லை. இது பணக்காரங்க சண்டை. இரண்டு ரைவல் க்ரூப் எப்பவும் போட்டுக்கற சண்டை.''

''எப்படிச் சொல்றீங்க?''

''சி.எம். சொல்லி அவர் தெருவுல இருக்கற ஒரு குழந்தை காணாமப் போன ரிப்போர்ட் அட்டெண்ட் பண்ணேன் சார். அதை ஃபாலோ பண்ணி போறப்ப பல விஷயம் கிடைச்சுது. காணாம போன குழந்தையோட, க்ரேண்ட் பாதர் ஸ்ரீராமுலு செட்டியார், அவரு மயிலாப்பூர் இன்ஸ்பெக்டர்கிட்ட இது ரதன்சந்தாவாத்தோட வேலை, நான் பார்த்துக்கறேன். நீ சும்மா இருன்னுட்டாரு...''

''அவர் சொன்னா சும்மா இருந்துடறதா?''

''சும்மா இருக்க வச்சுருக்கலாம்.''

''யாரை?''

''இன்ஸ்பெக்டரை!''

''இப்படி நாமே நம்மைப் பத்தி பேசறது தப்பு.'' உதவி கமிஷனர் செல்லதம்பி சீறினார்.

''என் ஒபினியன் இது.''

''புரியலை பாண்டியன். சரியா சொல்லுங்க.''

''சார்! ரதன்சந்தாவாத் பாம்பே கேடி. ஸ்ரீராமுலு செட்டியார் லோக்கல் தாதா. அவங்க பர்சனல் மேட்டர் ரோடு சண்டையா மாறிடுச்சு.

''என்ன பர்சனல் மேட்டர்?''

''ராஜேந்திரபாபு, ஸ்ரீராமுலு பையன். ஒரு மார்வாரி லேடி.... அந்தப் பொண்ணு லோக்கல் ப்ராஸ்டிட்யூட். அதைக் கையப் புடிச்சு இழுத்துட்டானாம்.''

''சார்! இவரு தப்பா சொல்றாரு அந்தப் பொண்ணு ப்ராஸ்டிட்யூட் இல்லை. மார்வாரி கேர்ள்...''

''இப்ப அது முக்கியம் இல்லை. நீங்க சொல்லுங்க பாண்டியன்.''

''சார்! இந்த பொம்பளைகூட ப்ளான் பண்ணப்பட்ட விவகாரம். செட்டியாரை சீண்டறதுக்கு, செட்டியார் பையனை தர்ம அடி போட்டாங்க.''

''செட்டியாரை ஏன் சீண்டணும்?''

''செட்டியார் ஒரு வேகத்துல மார்வாரிக்ரூப்பை மடக்க நினைக்கறாரு.''

''என்ன காரணம்?''

''ஒரு பர்டிகுலர் நார்த் குரூப் ஸ்மக்ளர்ஸ் சார்.''

''செட்டியார் ரொம்ப ஒழுங்கா? பொம்பளைப் பொறுக்கி...'' செல்லதம்பி சிரினார்.

''செல்லதம்பி. நீங்க யாரையாவது சப்போர்ட் பண்ணணும்னு நினைக்கறீங்களா?''

''இல்ல சார்...''

''தென் கீப் கொய்ட்! பாண்டியன் சொல்லுங்க!''

''ஸ்ரீராமுலு செட்டியார் பையன். அதாவது ரெண்டாவது சம்சாரத்துப் பையன் பெரிய நடிகர் வச்சு சமீபத்துல நகைக்கடை திறந்தான். தங்க நகைகடை திறந்தான். தங்க நகைக்கடை சார். அப்ப அவரு முத சம்சாரத்து பையன், மருமக, பேரன் எல்லாம் அந்த பங்ஷனுக்கு வந்தாங்க...''

''இதுக்கும் அதுக்கும்...?''

பாண்டியன் விளக்க ஆரம்பித்தார்.

''அப்புறம் அவரு பேரனைக் காணம்னு அவரு பையன் ரிப்போர்ட் பண்ணாரு. சி.எம். செல்லித்தான் நான் குழந்தைய கண்டுபிடிக்க இறங்கினேன். ஸ்ரீராமுலு, பேரன் காணாம போனதுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்க வேணாம். நான் பாத்துக்கறேன்னு விசாரிக்கப்போன இன்ஸ்பெக்டர் கிட்ட சொல்லிட்டாராம்.''

''இப்ப குழந்தை எங்கே?''

''தெரியலை சார்! ரதன் சந்தாவாத் வீட்டுக்கு மூத்த பிள்ளை போய் பேசிட்டு வந்தாரு.''

''சமாதானமா? பேரமா?''

''தெரியலை. ஒரு தெருவுல வாசல், பின் தெருவுல வேற ஒரு வழி. இப்படி பூந்து அப்படி வந்தாரு. ஏதோ பேரம் பேசியிருப்பாரு போல. குழந்தை காணங்கற படபடப்பு விட மீட்க முடியலைன்னு வருத்தம்...''

''ஆமா. குழந்தை காணாம போன ரெண்டு நாள் படபடப்பு இருக்கும். அப்புறம் வருத்தமாதான் இருக்கும். இதுல ஒண்ணும் தப்பு தெரியலையே...''

''நான் அப்படிச் சொல்லலை சார். குழந்தையைக் காணாம போயிருக்கு. உயிருக்கு ஆபத்தில்லை. எங்கேயோ இருக்கு எங்க...? அதான் தெரியலை.''

''பிஸினஸ் சண்டை... பர்சனலா மாத்தறாங்களா? அப்ப தெரு சண்டை எதுக்கு?''

''பலம் காட்டறாங்க சார். ராஜேந்திரபாபுக்கு தர்ம அடி விழுந்தது. முதல் அடி. யாருது...மார்வாரி பையன் அடிச்சானா... சேட்டுகடையா, பாத்து நொறுக்கு. ஆறு கடைங்களை செட்டியாரு ஆளுங்க அடிச்சி உடைச்சிருக் காங்க. இதுல முஸ்லிம் கடைகளும் தவறிப்போய் மாட்டிக்கிச்சு.''

''அதெப்படி தவறிப்போய் மாட்டிக்கும்?''

''நார்த் இண்டியன் முஸ்லிம் காஸ்ட்யூம்ஸ் கிட்டத்தட்ட ஒண்ணா இருக்கும். பைஜாமா, குர்தா... அதான் நாலஞ்சு முஸ்லிம் அடிப்பட்டுட்டாங்க. அந்தக் கோபம்.''

''இது பெரிசாக வுடக்கூடாது. யார் அது ரதன்சந்தாவாத் அவர் பயோடேட்டா கொடு.''

உத்தரவுகள் மேலேயிருந்து கீழிறங்கி வர, கம்ப்யூட்டர் தட்டப்பட்டு விவரம் கேட்டார்கள்.

ரதன்சந்தாவாத் சலும்ப்ரா. ஆறடி ஓரங்குலம் உயரம். தோள் பட்டையில் கறுப்பு மச்சம், பழுப்பு நிறம். நீலக் கண்கள். மராத்தி தாய்மொழி. பம்பாய்வாசி. நோட்டட் கிரிமினல் இன் பாம்பே. சகோதரனைக் கொலை செய்த வழக்கில் அலிபி நிரூபித்து சட்டத்திலிருந்து தப்பினான். ஏகப்பட்ட விவரங்கள் இருந்தன.

''என்ன ஒபினியன்? உங்களது புரியலையே?''

''பெரிய சண்டை வரப்போகுது சார். அதுக்கு அறிகுறி இது. நீயா. நானா பலப்பரீட்சை ஸ்ரீராமுலு செட்டியாருக்கும், ரதன்சந்தாவாத் சலும்பராவுக்கும்.''

''டாமிட். புடிச்சு உள்ள போட்டு மெறிச்சா என்னா?''

''கஷ்டம் சார். உடனே பொலிடிகல் ப்ரஷர் வரும்.''

''அப்ப ஒண்ணு செய்யலாம். குழந்தைய மும்முரமா தேடுங்க. வீடு, வீடாத் தேடணும். காணம்னு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்திருக்காங்களா?''

''யெஸ் சார்! குழந்தையோட அம்மா, அப்பா ரெண்டு பேருமே எழுதி கையெழுத்து போட்டு கொடுத்துருக்காங்க.''

''அப்பா பேர் என்ன?''

''வரதராஜுலு.''

''இந்த ஆள் எப்படி?''

''நைஸ் ஜென்டில்மேன் சார். சுத்து வட்டாரத்துல நல்ல பேர். ஆனா, மாட்டிக்கிட்டு முழிக்கிறார்.''

''அப்ப உதவி செய்யலாம். சரியா பாண்டியன்? இவரைக் கூப்பிடுங்க. இந்த ஆபீஸுக்கு வரச்சொல்லுங்க.''

''சார்! எனக்கு வேற தோணுது.''

''சொல்லுங்க.''

''இவங்களைக் கன்ஸல்ட் பண்ணாத தேடினா என்ன?''

''ஏன்?''

''இவங்க அப்பாவுக்கு நம்ம மூவ்மெண்ட்ஸ் தெரிஞ்சா பல இடங்களை அடைச்சிருவாரு.''

''ஸ்ரீராமுலுவா... அவ்ளோ பெரிய தாதாவா?''

''ஆமா சார். சவுகார்பேட்டை தாதா. ரதன் சந்தாவாத்துக்கு அந்த இடத்தைப் பிடிக்கணும். ஸ்மக்ளிங் கோல்ட், அது தவிர...''

''இன்னும் என்னா?''

''ஹெராயின் டிரான்ஸ்போர்ட்.''

''வாட்?''

''ரீஸண்டா இன்வால்வ் ஆயிருக்குன்னு சி.பி.ஐ ரிப்போர்ட்டே சொல்லுது சார்.''

''எப்ப கேட்டீங்க?''

''நேத்து டெலக்ஸ் அனுப்பி கேட்டேன்.''

''அது ஏன்யா முதல்லேயே சொல்லலை?''

''முருகா... மன்னிக்கணும் சார். கிடைச்ச பிறகு பேசலாம்னு இருந்தேன் சார்.''

''கன்ஃபர்மட் நியூஸா. டெலக்ஸ் கொண்டா?''

சி.பி.ஐ. ஆம் என்று சொல்லியிருந்தது. சிலோன் சிங்கப்பூர் தொடர்பும் உண்டு என்று கூறியிருந்தது.

''இதுபோதுமே! மடக்கிடலாமே.''

''தடயம் கிடைக்கலை சார் இதுவரைக்கும். அவன் இப்போ ஸ்ரீராமுலுவை ஒழிக்கறதுல மும்முரமாக இருக்கான்.''

''ஒண்ணு செய்யலாம். சி.எம். பார்த்துருவம். வா... டிஸ்மிஸ்.''

செல்லதம்பி சோர்வடைய, மற்றவர்கள் விறைப்பானார்கள்; சல்யூட் செய்தார்கள். பாண்டியனை பின் தொடரச் சொல்லிவிட்டு கமிஷனர் காரில் ஏறி உட்கார்ந்தார்.

''க்ரைம்ல நாலு வருஷம் இருந்தேன் சார். மது விலக்கு மாத்தினீங்கன்னா நல்லா இருக்கும்.'' காருக்குள் தன் கோரிக்கையை பேச்சோடு பேச்சாய் போட்டார். எல்லோரும் முன்னேறத்தான் கடுமையாய் உழைக்கிறார்கள், பிறரை எட்டி உதைத்து விட்டு மேலே ஏறுகிறார்கள். பாண்டியன் இதைத் திறம்படச் செய்தார்.

''மாத்திடலாம். இப்ப கண்டுபிடிச்சதை ஒழுங்கா முடி.''

அவசரமாய் ரகசியக் கூட்டம் கோட்டையில் நடந்தது. ஜாதிக் கலவரம் என்று நினைத்தது எதுவாகவோ முடிகிறதே என்ற கவலை எல்லோருக்கும் வந்தது.

''போதைப் பொருளா? சென்னையிலா... அடி... நொறுக்கு... கூண்டோடு ஒழி. யாராயிருந்தாலும் கைதுசெய். காவலில் வை. எவன் வந்தாலும் விடாதே. குலை நடுங்க வைக்கும் அளவுக்கு பயப்பிரவேசம் செய். பயமுறுத்து. என் கட்சிக்காரனாய் இருப்பினும் தயங்க வேண்டாம். சட்டம் தன் கடமையைச் செய்யட்டும்.'' உத்தரவு வந்தது.

போலீஸ்காரனுக்கு கம்பும் கொடுத்து கையையும் கட்டிப் போட்டிருந்தார்கள். அதை சட்டமாக்கியிருந்தார்கள். அந்த கட்டு தளர்த்தப்பட்டது. முற்றிலும் நீக்கப்பட்டது.

போலீஸ் லத்தி சுழற்றி வெறியோடு வியூகம் போட்டது. சதுரங்கம் ஆடியது.

முதல் காய் நகர்த்தினார்கள்.

வரதராஜுவை விசாரிக்க கமிஷனர் ஆள் அனுப்பினார்.

ஸ்ரீராமுலு உஷாரானார்.



அப்பாவிகள் ஜெயித்ததாக சரித்திரமில்லை. 'பிஹைண்ட் எவ்ரி சக்ஸஸ் தேர் இஸ் எ ஸின்' என்பது அனுபவ வாக்கு.

எல்லா வெற்றிக்குப் பின்னாலும் பாப காரியம் புரையோடி இருக்கிறது. ஸ்ரீராமுலுக்கும் தெரியும். ஆனால், மனிதனால் பாபம் செய்யாது இருக்க முடியாது என்பது அவர் எண்ணம். 'பாபமோ, பாபமில்லையோ செய்கிற காரியத்தால் பத்து பைசா லாபம் உண்டா' என்பதே அவர் கணக்கு. பத்து பைசா லாபம் பார்க்க எத்தனை கவனம் வேண்டும் என்பது அவருக்குப் புரியும்.

நல்ல வியாபாரி, சதுரங்கம் ஆடுபவன். ஒரு சேவகன் அசைய, பதினாறு காய் நகர்ந்ததும் மனசுள் கணக்கு போடுகிறான்.

வரதராஜுலுவை உதவி கமிஷனர் அழைத்ததும் மனசு திடுக்கிட்டது. தீவிரமாய் யோசித்தது.

போய் என்னன்னு கேட்டுட்டு வாப்பா. குளுமையாய் சாதாரணமாய் பிள்ளையை வழியனுப்பியதும் மீண்டும் யோசித்தது.

'மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனா? யார் பேசறது? ரைட்டரா? உங்க இன்ஸ்பெக்டர் எங்க...? நான் ஸ்ரீராமுலு...''

'தூங்கறாரு ஐயா...'

''நினைச்சேன். கூட துட்டு பார்த்துட்டானில்ல. இப்ப குடிச்சிட்டு தூங்குவான் எழுப்பு அவனை. என்னன்னு எழுப்பறதா? அவனுக்குக் குழி வெட்டறாங்கன்னு சொல்லி எழுப்பு. ஜெயிக்க நினைக்கிறவன் தூங்கக் கூடாது. அப்படியே தூங்கினாலும் காலை ஆட்டிக் கிட்டே தூங்கணும். அசந்து, தூங்கினா செத்துட்டான்னு சொல்லிடுவாங்க. எழுப்பு அவனை.''

''ஐயா! நான் இன்ஸ்பெக்டர் பேசறேங்க...''

''கூட துட்டு வேணுமா? கேட்டு வாங்கிக்க... இந்தக் கைல துட்டு வாங்கி அந்தக் கையால வேற யாரையோ உசுப்பி அனுப்பிறியே...''

'ஐயா! நான் அனுப்பல்லீங்க?'

'பின்ன ஏன் உங்க ஏஸி ஆள் விட்டு கூப்பிட்டு அனுப்பினார்?'

'அவரு எனக்கு அதிகாரிங்க. சந்தேகப்படறாரு போல இருக்கு?'

'என்ன சந்தேகம்?'

'எனக்கு துட்டு கொடுத்து அடைச்சிட்டீங்கன்னு.'

'அவனுக்கும் அடைக்கிறேன்.'

'ரொம்ப கேட்பாருங்க. அதுவுமில்லாது இதுல நல்ல பேர் வாங்கிட்டு நினைச்ச இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் வாங்க ட்ரை பண்றாரு.'

'அவன் வூடு எங்க?'

'விசாரிச்சு போன் பண்றேங்க.'

'உடனே சொல்றா.'

'ஐயா.'

'என்ன சொல்லு.'

'மேட்டர் பெரிசாயிடுச்சினு கேள்வி.'

'பெரிசாயிடுச்சா?'

'யாரோ ரதன் சந்தாவாத் சலும்ப்ராவாம்.'

'ஆமா'

'ட்ரக் டீலராம்.'

'இருக்கலாம். எனக்குத் தெரியாது.'

'சி. எம். லெவல்ல அவனை மடக்க உத்தரவு போடறதா. கோட்டைல மீட்டிங்க போட்டு பேசியிருக்காங்க.'

'அதுக்கு எம் புள்ளைய...'

'உங்க புள்ளை அவரை... ரதன் சந்தாவாத்தப் பார்த்தாராமே.'

ஸ்ரீராமுலு நடு நெஞ்சில் குத்து விழுந்தது.

'யார் சொன்னது?'

'சி. ஐ. டி. ரிப்போர்ட்.'

'உடனே எனக்கு சொல்ல வேண்டியது தானே.'

'பராபரியா என் காதுல வுழுந்துதுங்க.'

'போடா சோம்பேறி...' போன் துண்டித்தார். காசு வீசி எறிந்த கர்வம் காவல்துறையைக் காலால் உதைத்தது. சொல்லால் அடித்துத் துப்பியது. காவல்துறை கடும் பூனை. சீற்றம் மிகுந்த ஆட்கள் உள்ள இடம். பூனைக்கு எத்தனை பால் வார்த்தாலும் நன்றி காட்டாது. தப்பித்துக் கொள்ள எவரையும் கடிக்கும். எதுவும் செய்யும். தாக்கப்பட்டால் ரோஷம் கொள்ளும். உறுத்து பல் காட்டும்.

'பத்து ரூபா கொடுத்துட்டு சோம்பேறின்றியா?' இன்ஸ்பெக்டர் கருவினார்.

'யோவ் ரைட்டர் அந்தப் புள்ளையக் காணோம்கற ரிப்போர்ட் எடுத்தா...'

'மூடிட்டோமே சார்.'

'திறந்திடு.'

அப்படியானால் லஞ்சம் வாங்கிய காசு? தட்டில் ஊற்றிய பால்? கடுவன் பூனை நன்றி உள்ள பிராணியில்லை.

வரதராஜு, ரதன் சந்தாவாத்தைப் பார்த்ததாக சி.ஐ.டி ரிப்போர்ட்டா? வரதராஜுவை கண்காணித்ததா சி.ஐ.டி? அல்லது ரதன் சந்தாவாத்தையா? ஏன்? எதற்கு? போலீஸ் ஆட்கள் ரதனைக் குறி வைக்கிறார்களா? உத்தரவு கோட்டையில் இருந்தா? போதை மருந்து விஷயம் இப்போதுதான் புரிகிறதா? அதற்கு வரதராஜு ஏன்?

யோசி... யோசி...

வரதராஜு போலீஸ் ஸ்டேஷனில் செய்த கலாட்டா. இந்து - முஸ்லிம் கலாட்டா. இதற்குக் காரணம் மார்வாரி லோக்கல் இந்து கலாட்டா. அதற்குக் காரணம், ஸ்ரீராமுலு - ரதன்சந்தாவாத் சலும்ப்ரா பகை. ஸ்ரீராமுலு நகை வியாபாரி - இப்போதைய தாதா. ரதன் சந்தாவாத் போதை மருந்து டீலர். தாதாவாக முயற்சி செய்கிறான். வெரி குட். போலீஸ் இப்படித்தான் போயிருக்கும்.

என்ன செய்யலாம்?

சலும்ப்ராவை நேரடியாய் காட்டிக் கொடுக்கலாம். கொடுத்தால் தாக்குவான். என்னை, என் கடையை... என் ஆட்களை. அதன் விளைவு போலீஸ் இன்னும் தீவிரமாகும். அவனை உள்ளே தள்ளும். என் புள்ளைக்கும், சலும்ப்ராவின் குணம் புரியும். நான் தாக்கப்பட்டது பரிதாபம் தரும். என் பக்கமே நிற்பான். பிள்ளை கடையில் நிற்க, சலும்ப்ரா சிறைக்குச் செல்ல, சவுகார்பேட்டை என்னுடையதாகவே இருக்கும். நான் சாகும் வரை புகழ் சொல்லப் போவது நிஜம்.

'ஸ்ரீராமுலு, அதிர்ஷ்டம் எப்போதாவது வரும். வந்து இருக்கிறது. வரவேற்று உபசரி.'

நகை வியாபாரிகள் சங்கம் மறுபடி சவுகார்பேட்டை மார்வாரி மீது புகார் எழுதட்டும்.

பிறகு, வரதராஜுவைக் கூப்பிட்ட உதவி கமிஷனர் வீட்டுக்குப் போவோம். ரதன் சந்தாவாத் விவரம் சொல்வோம்.

என்ன விவரம்?

போதை மருந்து டீலர் என்பதற்கு என்ன அத்தாட்சி எங்கே சரக்கு, தடயம் என்ன... கண்டுபிடி. கண்டுபிடித்து அதை அப்படியே உதவிக் கமிஷனரிடம் சொல், அவனாய் தேடி வந்ததுபோல் நடக்கட்டும். அவனுக்குப் பதக்கம். எனக்கு வெற்றி.

எப்படிக் கண்டுபிடிப்பது?

வாங்கு.

எவ்விதம்?

இன்ஸ்பெக்டரை வாங்கின மாதிரி ரதன் சந்தாவாத் ஆட்கள் எவனையேனும் வாங்கு.

செலவு?

செலவு பத்தி கவலைப்படும் நேரமா இது. அவனை ஜெயிலுக்கு அனுப்ப சொத்தில் பாதி அழிக்கலாம்.

பத்து லட்சம் என்று ஆரம்பி. தகவல் பரப்பு. ரதன் சந்தாவாத் எதிரி யார்? அவன் குடும்பம். சகோதரனைக் கொலை செய்து ஓடிவந்தவன்தானே... சகோதரன் குடும்பம் தேடு.

'டேய்' - குரல் கொடுத்தார். தன் அந்தரங்க அடி ஆட்களைக் கூட்டினார் பேசினார்.

''ஐயா, அவன் அண்ணன் புள்ளை அவன்கிட்ட தான் சார் வேலை செய்யறான். அந்தப் பசங்க ஒண்ணுக்குள்ள ஒண்ணு. பிரிக்க முடியாது. அப்பனை சித்தப்பன் சொன்னது

தெரியும். இருந்தாலும் அவங்க சோறு திங்கற விசுவாசம் இருக்குமே.''

'புடிறா அவனை.'

'மாட்டாது செட்டியாரே.'

'கரன்ஸி காட்டு.'

'எத்தினி தருவ?.'

'நீ கூட்டி வா சொல்றேன். எப்படி அவன்கிட்ட பேசுவ?'

'நான் பேச முடியுமா? குல்ஃபி விக்கிறவன் ஒருத்தன் இருக்கான்.'

'அவனுக்கு ஆயிரம் ரூபா கொடு. ஆள் இங்க வந்தப்புறம் இன்னொரு ஆயிரம்னு சொல்லு.'

'வரலைன்னா உஷாராயிடுங்க.'

'அதுக்கு விடாதே. கூட போ. கத்தி காட்டு. தூக்கிட்டு வந்துடு. துட்டுக்கு மசியலைன்னா எட்டி இடுப்புல உதை. மார்ல கோடு போடு. காதுல பெட்ரோல் பஞ்சு வைச்சு, நெருப்புக் குச்சி கிழிச்சு வை. நல்லா இருக்கிற முன் பல்லைப் புடுங்கு. கரன்ஸிய கண் முன்னாடி வை.'

'என்ன தெரியணும்?'

'மால் வர இடம்.'

'பார்ட்டிய எங்கக் கொண்டாரணும்?'

'ரிஸர்வ் பாங்க் பாலம் இல்லை... அதுக்குக் கீழ எலெக்ட்ரிக்ட்ரெய்ன் போவும் இல்லை. அங்க கொண்டு வா.'

'ஏங்க அந்த இடம்?'

'அடிபட்டு செத்துட்டா ஏதாவது வண்டி சிக்னல்ல நிக்கும். அப்ப பாடிய தூக்கிப் போட்டுரலாம்.'

'எப்போ...?'

'பத்து பத்தரைக்கு புடிச்சா'

'எதுனா கைச் செலவுக்கு கொடேன்.'

பத்தாயிரம் கட்டு தரையில் விழுந்தது. பொறுக்கிக் கொண்டார்கள்.

ரதன் சந்தாவத் சலும்ப்ராவும் வியாபாரிதான். ஒரு காய் நகர்ந்தால் பதினாறு காய் நகர்த்தும் சதுரங்க ஆட்டக்காரன் தான். நகர்த்திய கணக்குத் தப்பாயிற்று. இந்து - முஸ்லிம் சண்டை அவன் எதிர்பாராத ஒன்று. கார்மீது கல்வீசிய பையனுக்குப் பின்னே முஸ்லிம்கள் திரண்டுவர, தன் ஆட்களைப் பின்னடையச் செய்தான். கூட்டம் கூடாது தனித்தனியே இருக்கச் சொன்னான். இது பிசகு. மாபெரும் பிசகு.

உன்னைத் தெரு முனையில் நாலு ஆட்கள் கூப்பிடுகிறார்கள். குல்ஃபிக்காரன் சந்தாவாத்தின் அண்ணன் மகன் லூன் சந்தாவாத்திடம் சொன்னான்.

லூன் என்றால் ஹிந்தியில் உப்பு. பல பெண்களுக்கு பிறகு பிறந்த பிள்ளை. இரண்டு குழந்தைகள் தவறிய பிறகு பிறந்த பையன். எனக்குப் பையன் பிறந்தால் அவனை உப்பு என்றழைக்கிறேன். கரிப்பு உணர்வாய் பிள்ளையை ஏற்கிறேன் என்று வேண்டிப் பிறந்த பிள்ளை.

அவன் பிறந்த எட்டாம் வருடம் அவன் தகப்பன் குத்துப்பட்டு இறந்துபோனான்.

லூன் சந்தாவாத் வாழ்க்கையே கரித்துப் போயிற்று. இனிப்பே தெரியாது போயிற்று. எடுபிடி வேலையே உத்தியோக லட்சணமாயிற்று.

'இந்தக் கடிதம் கொடுத்து விட்டு வா. அங்கிருந்து இதை வாங்கி வா...' என்ன கொடுக்கிறோம், என்ன பெறுகிறோம் என்பதே தெரியாது. ஆனால், எல்லா இடமும்

தெரியும். என்ன இருக்கிறது என்று தெரியாது. ஏதோ கள்ளத்தனம் நடக்கிறது என்பது தெரிகிறது. என்ன கள்ளத்தனம் என்று தெரியாது.

'உனக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை. எருமை மாடே' - சித்தப்பா சீறுவார்.

'சரி' என்று சிரிக்கவேண்டும். சுருங்கக் கூடாது. பெல்ட்டால் அடிப்பார். இருபது வயசுக்கு பெல்ட் அடி பலமுறை வாங்கி இருக்கிறான்.

'கோன் ஹை...?' இருட்டில் நின்ற ஆட்களிடம் போனான். சட்டென்று ஒரு பிச்சுவா இருட்டில் நின்றது.

'மரியாதையா என்னோட நடந்து வா... திமிறினால் கத்தி கிழித்து விடும்.' தமிழ் கலந்த முரட்டு ஹிந்தியில் பேசினார்கள்.

'கோன் சம்...?'

'செத்துருவ வா. பேசாத வா.' இப்போது தமிழிலேயே பேசினார்கள்.

உடம்போடு ஒட்டிக் கொண்டு பல காத தூரம் தாண்டிப் போனார்கள், விலாவில் கத்தி நெருடிக்கொண்டே இருந்தது.

மெயின் ரோடு திருப்பத்தில் வேனில் ஏற்றினார்கள். பாலத்தடியில் இறங்கி கைகோத்துக்கொண்டு சிரித்தபடி ரயில்வே லைனுக்குள் புகுந்து வந்தார்கள்.

ரதன் சந்தாவாத் வீட்டில் மணி அடித்தது.

'மைலாப்பூர் இன்ஸ்பெக்டரா? கொஞ்சம் இருங்க.'

ரதன் எலெக்ட்ரானிக் போன் பட்டன் தட்டி திறந்து காதில் பொருத்திக் கொண்டான்.

'என்னா?'

'ஸ்ரீராமுலு உன்னைப் பத்தி கோட்டைக்குத் தகவல் சொல்லி இருக்காரு. நீ போதை மருந்து வச்சிருக்கேன்னு

இன்னிக்கு மீட்டிங்ல பேசி உன்னை உள்ள தள்ள உத்தரவு போடப் போறாங்க...''

'நீ யாரு?'

'சொன்னா வாரிக் கொடுத்துருவியா?'

'தரேன்.'

'நேர வா.'

'எங்க?'

'காந்தி பீச்சுக்கு.'


உடனே காரில் ஏறினான். ரிஸர்வ் பாங்க் பாலம் கடந்தான்.

கீழே நாடகம் நடப்பது தெரியாது. வேகமாய் வண்டி ஓட்டினான்.

''தம்பி, லூன் சந்தாவாத், உனக்கு தமிழ் புரியுமா? பெட்ரோல்ல பஞ்சு நனைச்சு காதுல வச்சிடுவேன். சில்லுன்னுடும். நெருப்புக் குச்சி கிழிச்சி அப்படி இப்படின்னு காட்டினா போதும். சூடாகி பக்குன்னு பத்திக்கும், சுள்ளுன்னு நெருப்பு உள்ளே போகும். காது உள்ள கருகிப் போயிடும். அப்புறம் சீழ் புடிச்சு... கன்னம் வீங்கி... காத்துப் பட்டாக் கூட ஆ ஊன்னு கத்துவ.

என்னா பயந்துட்டியா...? நான் அடிக்க மாட்டேன். யாரையும் அடிக்கறதெல்லாம் இல்லை. ஆனா, அடிக்க ஆரம்பிச்சா நாயடி பேயடிதான். சொல்லு... காது கொளுத்திக்கிறியா...? கரன்ஸி வாங்கிக்கிறியா?''

பையன் கரன்ஸி வாங்கிக் கொண்டான்.



சேட் பையனுக்கு உண்மையான இடம் எது என்று தெரியவில்லை. யாருக்கும் தெரியாது... அது மாறிக் கொண்டே இருக்கும் என்றான்.

பதினாறு இடங்கள் சொன்னான். எல்லாம் சந்துகளில் உள்ள வீடுகள். கோடவுன்கள். அந்தப் பையன் சொன்ன முக்கிய தகவல் சுவாரஸ்யமானது. போதைப் பொருட்கள் கையிலோ அல்லது பெட்டியிலோ இல்லை. புதுத்துணி சுற்றப்பட்ட அட்டை உருளைக்குள் இருக்கிறது. அந்த அட்டை உருளைகளின் மீது நைலக்ஸ் புடவைகள் சுற்றி பேல் என்கிற கட்டாக இருக்கும்.

இது தவிர கரடி பொம்மைகளில் இருக்கும். புஸ் புஸ்வென்ற கரடிகளில் ஒருகண் இல்லாத பொம்மைகள் சரக்கு பொம்மைகள்.

சிவகாசியில் இருந்து வட இந்தியாவுக்கு கடவுள் படங்கள் ஆயிரம், ஆயிரமாய் அட்டைப் பெட்டிக்குள் இருக்கும். அதில் காளி படத்தில் கடத்தல் சரக்கு இருக்கும்.

இஸ்திரி பெட்டி பம்பாயில் இருந்து வரும். 'அவை சரியில்லை' என்று திருப்பி அனுப்பப்படும். அனுப்பப் படுபவைகளில் 'மால்' போகும். இது தவிர, அவசரமெனில் பம்பாய் போகும் லாரிகளில் இரட்டை டீசல் டாங்க் இருக்கும். இரண்டாவது டாங்கில் சரக்கு அமுக்கி வைக்கப் படும். விமானத்திலும் அனுப்பப்படும் தஞ்சாவூர் கண்ணாடி பெட்டி உள்ளே சரக்கு போவதுண்டு.

இன்ன வகை, இன்ன விதம் என்றில்லை. இவை யெல்லாம் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாத இடங்கள். லாரி ஷெட்டும். கடவுள் படப் பெட்டிக்கும் இடையே பல கிலோமீட்டர்தூரம் உண்டு.

மால் அநேகமாய் சனிக்கிழமைகளில்தான் நகரும். அல்லது ஞாயிறு காலைகளில் நகரும். திங்கட்கிழமை எந்த கெட்ட வேலையும் நடக்கவே நடக்காது. அரசு அலுவலகங்கள் அயரும் நேரம். தீபாவளி, ஆயுத பூஜை நாட்கள் சுறுசுறுப்பாய் வேலை நடக்கும். அநேகமாய் எல்லா ரெய்டும் திங்கட்கிழமைதான் நடக்கும்.

ஸ்ரீராமுலு அவனை தன் ஆட்களில் ஒன்றாய் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவனுக்கு அடைக்கலம் தர வேண்டும். அவன் இந்தியில் நிதானமாய் மெல்ல பேச, ஸ்ரீராமுலு புரிந்து கொண்டார். சவுகார்பேட்டை அவர் பிறந்து வளர்ந்து பழகிய இடம். அதன் சகல மூலையும் அவருக்கு அத்துப்படி. அவன் சொன்ன இடங்கள் அவர் மனதில் பதிந்தன.

தான் கூர்மையாய்க் கேட்டது போல் வேறு யார் கேட்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டார். ஒரே ஒரு வயசுப் பையன் அவரிடம் புதுசாய் சேர்ந்தவன்-விரல் விட்டு எண்ணிக் கொண்டு இருந்தான். இடங்களின் பெயர்களை அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டு இருந்தது. இத்தனை துடிப்பு கூடாது. மனசு கணக்குப் போட்டது.

'சகோதரா!' - தகவல் சொன்னவனை இந்தியில் கூப்பிட்டார். 'நானிருக்க பயமேன்?' என்றார். வெகு கூர்மையாய்க் கவனித்துக் கொண்டு இருந்தானே அவனை அருகே அழைத்தார்.

''புள்ளைய ஜாக்கிரதையா கொண்டு போய் அவன் இடத்துல விட்டுட்டு வா... போறப்ப டீ வாங்கிக் குடு. வேர்த்துப் பூட்டான் பாரு. தொண்டை நனைச்சுக் கட்டும்.''

முதலாளி அருகே அழைத்ததும், உத்தரவு கொடுத்ததும் அவனுக்கு சந்தோஷம் கொடுத்தது. ''டேய், ஒரு பைல போட்டு கொடுறா.'' - கொண்டு வந்த பையிலேயே கரன்ஸியைப் போட்டு அந்தப் பையனிடம் கொடுத்தார்கள்.

'நானிருக்கேன்' என்று அவர் தடவிக் கொடுக்க, அவன் அவர் கால் தொட்டு விட்டு பாலம் ஏறினான். பின்னே நடந்த ஸ்ரீராமுலுவின் அடி ஆள் உதவி செய்தான். வெளிச்சத்துக்கு வந்தார்கள். கீழே கூட்டம். நாலாதிக்கும் அலைந்தது. பர்மா பஜார் அருகே அந்த உற்சாகமான பையன் தகவல் கொடுத்தவனுக்கு டீ வாங்கிக் கொடுத்தான். டீக்குக் காசு கொடுத்தான்.

''என்னப்பா சேட்டு பையனுக்கு டீ வாங்கித் தரே! சேட்டு எதுனா வேலை தரானா?'' யாரோ உள்ளே வந்து பேசி விட்டுப் போனார்கள். கடையில் உள்ளவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

மறுபடி தெருவைக் கடந்து இருட்டுப் பகுதிக்குள் நடந்து சந்துக்குள் திரும்பி அடுத்த சந்துக்கு நகர, எதிரே சைக்கிளில் வந்த ஆள் தகவல் கொடுத்த பையனை மணி கேட்டான். அவன் கை உயர்த்தி மணி பார்க்க, நச்சென்று சின்ன இரும்புத் தடியால் மண்டையில் அடித்தான். பையைப் பிடுங்கினான். தடுக்க வந்த உற்சாகப் பையனை எட்டி உதைத்தான். பறந்தான். மூலையில் உட்கார்ந்து இருந்தவர்கள் எழுந்தார்கள்.

என்ன? என்ன? என்றார்கள். யாரோ ஒருவன் ஸ்பிரிங் கத்தி எடுத்து சேட்டுப்பையன் காதுக்கு கீழே பட்டென்று அறுத்தான். இவனையும் அடிங்கடா என்றான். உற்சாகப் பையன் தலைதெறிக்க சந்துகளில் ஓட, துரத்தியவர்கள் கொஞ்ச தூரம் போனதும் விட்டு விட்டார்கள்.

எதற்கு... என்ன.. யார் எதுவும் புரியவில்லை. உற்சாகப் பையன் ஸ்ரீராமுலு வீட்டுக்கு நேர் பின்வீட்டிற்கு ஓடினான். கதவு தட்டினான். யாரும் திறக்கவில்லை. உள்ளே அசைவு கூட இல்லை. சட்டென்று விளக்குக் கம்பத்தில் கால் வைத்து மேல்மாடி வராண்டாவுக்குக் கால் வைத்து சுவருக்குத் தாவினான். உள்ளே குதித்தான்.

கதவு தள்ளினான். கதவு கொஞ்சம் திறந்து கொண்டது. சந்தில் கை விட்டு சங்கிலி கொக்கியைக் கழட்டினான். உள்ளே நகர, இன்னொரு கம்பிக் கதவு தென்பட்டது. உள்பக்கம் பூட்டி இருந்தது. முதலில் திறந்த கதவை மூடி விட்டு கால் சட்டை விளிம்பில் இருந்து கத்தி எடுத்தான். பூட்டை நெம்பியதில் பூட்டு திறந்து கொண்டது. மெல்ல ஓசைப் படாமல் கூடத்துக்கு வந்தான்.

விடிவிளக்கில் ஒரு கிழவர் படுத்துக் கொண்டு இருப்பது தென்பட்டது. உள்ளே அறைப்பக்கம் ஒரு கிழவி வாசற்படியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டு இருந்தாள். வராண்டா வழியாக அடுத்த வீட்டிற்குப் போக வழி தேடுகையில், 'ஹாய்' என்று பிஞ்சுக் குரல் கேட்டது. சட்டென்று கத்தி எடுத்துத் தயாரானான்.

இருட்டில் ஒரு குழந்தை வந்தது, 'மூச்சா.' என்று சட்டையைத் தூக்கிக் காட்டியது. 'யார் குழந்தை அது?'

-பயந்தான். குழந்தை மறுபடி அவனிடம் 'மூச்சா' என்று சட்டையைத் தூக்கினான்.

அருகே போய் உட்கார்ந்து அதன் நிக்கரைக் கீழே இறக்கினான். குழந்தை வராண்டா பக்கத்தில் திறந்தவெளி முற்றத்தில் ஒன்றுக்கிருந்தது. நிக்கரை மறுபடி அவனிடம் காட்டியது. அவன் போட்டு விட, உள்ளே போய் கிழவிக்கு அருகே படுத்தது. படுத்திருந்த கிழவிக்கும், அந்தக் குழந்தைக்கும் சம்பந்தமேயில்லை என்று தோன்றியது.

'யாராய் இருந்தால் உனக்கென்ன...? இடத்தைக் காலி பண்ணு. செட்டியாரிடம் தகவல் சொல்லு போ' என்று மனசு விரட்டியது.

முற்றத்துச் சுவரில் கால் வைத்தான். ஓடு ஏறி ஓட்டின அடுத்த சரிவு வழியே பார்த்தான். அது ஸ்ரீராமுலு வீட்டின் முற்றம். இரண்டு மாடி ஆழம் இருந்தது. குதிக்க முடியாது. சுவரில் உள்ள ஓடு தொங்கி இறங்கும் கனம் தாங்காதது. மெல்ல நகர்ந்து புகை போக்கி போல் உள்ள இடத்துக்கு வந்தான். புகை போக்கி மேல் தட்டை அசைத்தான். சிமெண்ட் பலகை காரை வைத்துப் பூசப் பட்டு இருந்தது.

பலமாய் அசைத்து சிமெண்ட் பலகையை நகர்த்தினான். தம் பிடித்து இறங்கி சிமெண்ட் பலகையை புகைப்போக்கி ஓரம் வைத்தான். எட்டி உள்ளே பார்த்தான். இருட்டாய் இருந்தது. ஒரு ஆள் இறங்க முடியும் என்று தோன்றியது.

சுவர் ஓரம் ஒட்ட கறுப்பாய் பல ஆண்டுகளில் படிந்த கரி மை போல அப்பியது. உடம்பு நிறமே மாறும் என்று தோன்றியது. சுவர்ப் பக்கங்களில் கையூன்றி குதித்து விடலாம். இரண்டு மாடி ஆழம் முற்றத்தில் குதித்து கை - கால் உடைத்துக் கொள்வதற்கு இது பரவாயில்லை.

ஒரு வேளை பூச்சி பொட்டு இருந்தால்... பயம் வந்தது. தேள் கடித்தால் செத்தா போய் விடுவோம். விஷம் ஏறும். மருந்து போட்டுக் கொள்ள வேண்டியதுதான். ஏறி கூரையில் நின்று உள்ளே இறங்கினான்.

பல ஆண்டுகளாக இருந்த ஒட்டடை வழுக்கியது. பக்க சுவர்களில் கை வைத்து அழுத்திக் கொண்டான். நாலடி அகலமுள்ள சந்தில் கையின் பலத்தால் நின்றான். கால் ஊன்றி கை தளர்த்தினான். மெல்ல மெல்ல கீழே வந்தான். ஏதோ பூச்சிகள் மேலே ஊறின. கழுத்தில் குறுகுறுத்தது. புகை போக்கி முடிவில் பத்தடி இடம் இருந்தது. கனமான மேடை. உடம்பு குலுக்கி மேடையில் குதித்தான். தடேரென்று மேடை குலுங்கிற்று. காத்திருந்தான்.

யாரும் வரவில்லை. மேடை விட்டு இறங்கினான். சட்டையை உதறினான். கை மொத்தமும் கறுப்பாய் இருந்தது. முழங்கை, உள்ளங்கை எல்லா இடமும் கறுப்பு தெரிந்தது. சமையல் பாத்திரங்கள் போடப்பட்டு இருந்த குழாயடிக்கு நகர்ந்து மெல்ல குழாய் திறந்து கை, கால், கழுத்து எல்லாம் கழுவிக்கொண்டான், சாப்பிடும் இடம் நகர்ந்தான். சாப்பிடும் இடத்து ஜன்னல் வழியே ஹாலை நோட்ட மிட்டான்.

கதவு அசையும் ஓசை கேட்டது. ஸ்ரீராமுலு உள்ளே வருவது தெரிந்தது. அவர் முகத்தில் உற்சாகம் இருந்தது. பின்னே ஆள் வருவது தெரிந்தது.

காத்திருந்தான்.

'என்னடா?'

'பேக் கொண்ணாந்துட்டம், முதலாளி'

'கொடு.'

ட்யூப் லைட் வெளிச்சத்தில் பை தரப்பட்டது. சேட்டுப் பையன் வைத்திருந்த அதே பை. உற்சாகப் பையன் வியந்தான், 'அட... இது முதலாளி ஐடியாவா... பயந்துட்டமே.'

'என்ன பண்ணீங்க பையனை?'

'தலைல அடிச்சேன். மூர்த்தி கழுத்து அறுத்துட்டான்.'

'கூட அனுப்பின பையனை?'

'விரட்டிட்டோங்க.'

'ஏண்டா அவனையும் தலைல போடறதுதானே?'

உற்சாகப் பையனுக்கு திக்கென்றது.

'நம்ம ஆளு தானேங்க?'

'எங்கினா போய் உளறி வைக்கப் போறான்.'

'மாட்டான் முதலாளி.'

'புதுசு... நம்ப முடியாது.'

'என்ன பண்ணச் சொல்றீங்க.'

'ம்ம்...' முதலாளி யோசிப்பது தெரிந்தது. அவர் யோசிப்பு பயம் கொடுத்தது.

காத்திருந்தான்.

'அவன் நம்ம ஆளு. அடிச்சுப் போட்டா நம்மக்கிட்டதான் விசாரிப்பாங்க. எரிச்சுடு. கூட்டிக்கிட்டுப் போய் தண்ணி வாங்கிக் கொடுத்து சாஞ்சதும் பெட்ரோல் போட்டு அடையாளம் தெரியாதபடி எரிச்சுடு.'

உற்சாகப் பையனின் உடம்பு உதறிற்று. கால்கள் நடுங்கின.

'எரிச்சாலும் போலீஸ் கண்டுபிடிச்சி கேட்டாங்கன்னா?'

'எரிச்சு சாக்கடைல போட்டு மூடிரு. மூடி மேலே வண்டி நிக்க வை. போனதாட்டி செய்யலை?'

'சரிங்க.'

'ஏன் தயங்கற?'

'இல்லங்க.'

'வச்சுக்க.'

நாலைந்து நோட்டுக் கற்றைகள் தரையில் விழுந்தன.

'வரேங்க.'

ஹாலில் உள்ள வெங்கடாசலபதி பொம்மைக்குக் கீழே உள்ள மரப் பீடத்தில் கீழே பையை தள்ளி வைத்தார், முற்றத்துக்கு அருகே இருந்த படியேறி போனார்.

காத்திருந்தான். உடம்பெல்லாம் வியர்த்து இருந்தது. மெல்ல நகர்ந்து ஹாலை எட்டிப் பார்த்தான். உள்ளே நகர்ந்தான். மரப் பீடத்தில் இருந்து பையை எடுத்தான். கைக்கு வந்த நோட்டுக் கற்றைகளை எடுத்து பேண்ட் பைக்குள் நிரப்பிக் கொண்டான். இடுப்பில் சொருகிக் கொண்டான். சமையல் அறைக்கு மேல் புகைக்கூண்டு வழியே மேலேறினான்.

கூரைக்கு வந்தான்; வந்த வழியே அடுத்த கட்டுக்கு இறங்கினான்; வாசல் வரைக்கும் வந்து எட்டிப் பார்த்தான். அந்தத் தெரு வழியே காய்கறி லாரி வந்தது. சட்டென்று விளக்குக் கம்பம் பிடித்து நாலடி இறங்கி லாரி மேல் தார்பாலினில் குதித்தான். குப்புறப்படுத்துக் கொண்டான். லாரி சந்து தாண்டி கொத்தவால் சாவடி திரும்ப, தார்பாலினில் இருந்து சறுக்கிக்கீழ் குதித்தான்.

யாரோ ஒரு பெண் கோணிப்பை தலைக்கு வைத்துப் படுத்து இருந்தாள். மெல்ல தலை தூக்கி பையை எடுத்தான். அருகே உட்கார்ந்து நோட்டுக் கற்றைகளைப் பையில் போட்டுக் கொண்டான். இரண்டு நூறு ரூபாய்களைப் பிரித்து எடுத்துக் கொண்டான். இரண்டு கூடை கத்தரிக்காய் வாங்கிக் கோணியில் போட்டான். தலையில் தூக்கி பஸ் ஸ்டாண்டுக்கு


ஓடினான். தெற்கே தாம்பரம் பஸ்ஸில் ஏறினான். கோணியை அருகே வைத்து உட்கார்ந்து கொண்டான்.

மொத்தமும் யோசித்தான். உடம்பு முழுவதும் தீ பரவுவதாய் தோன்றியது. பயத்தில் உடம்பு தூக்கிப் போட்டது.

பஸ் கிளம்ப தாம்பரம் டிக்கெட் வாங்கினான். விடியும் காலை ஐந்து மணி. தாம்பரம் இறங்கி ஸ்டேஷனில் 'அடுத்த வண்டி என்ன' என்று பார்த்தான். மதுரைக்கு பகல் வண்டி கிளம்பும் என்றார்கள். மதுரைக்கு டிக்கெட் வாங்கினான். இரண்டு கூடை கத்திரிக்காயும், அவனோடு மதுரைக்கு வந்தது.

பகல் இரண்டு மணிக்கு மதுரையில் அந்த வண்டியில் கத்தரிக்காய் மட்டும் இருந்தன. கூலிகள் அதை பங்கு போட்டுக் கொண்டார்கள். அவன் புதுச் சட்டை, வேட்டி, தகரப் பெட்டியோடு பஸ்ஸில் பெங்களூர் ஏறினான்.

அவன் மனசுக்குள் பயம் குறைந்தது. அடுத்துச் செய்ய வேண்டிய திட்டம் தோன்றியது. அதற்கு வேண்டிய பணம் அவனிடம் இருந்தது. பலம் இருந்தது.



30

'ராஜேந்திர பாபு, எச்சக்கலை நாயே, நீ பணம் எடுத்தியாடா இந்தப் பையிலிருந்து?' ஸ்ரீராமுலு வீட்டில் ராட்சஸன் மாதிரி கூவினார்.

★

ரதன் சந்தாவாத் சலூம்ப்ரா பல்கலைக்கழக வாசலில் தன் வண்டியை நிறுத்தினான். இருண்ட கடற்கரையில் இருந்து குளிர்ந்த காற்று வீசியது. கார் ஸ்டியரிங் வீலில் முகவாய் பொருத்தித் தீவிரமாய் யோசித்தான்.

பதினாறு வயதில் இருந்தே வாழ்க்கைப் போராட்ட மாகத்தான் அவனுக்கு இருக்கிறது. யாரையாவது எதிர்த்து யாருடனாவது போராடி, எதற்காகவோ சண்டையிட்டு பயமும், கலவரமுமாகத்தான் வாழ்க்கை கழிந்திருக்கிறது இருபது வயதில் சந்தோஷமான இந்த விஷயம், 'முப்பது வயதில் சாதனை' என்று நினைத்துக் கொண்டு இருந்த காரியம், இந்த நாற்பது வயதில் அயர்ச்சியைக் கொடுக்கத் துவங்கிவிட்டது. பயம் அதிகமாகி விட்டது. இந்தப் பரபரப்பு அவசியமா என்கிற கேள்வி அடிக்கடி எழுந்தது.

ஐம்பது வயதில் இத்தனை ஆட்டம் தேவையில்லை என்கிற நினைப்பு வருமோ என்கிற சந்தேகம் வந்தது. இப்போது என்ன செய்வது. ரதன் சந்தாவாத் சலூம்ப்ரா தீவிரமாய் யோசனையில் இறங்கினான்.

மைலாப்பூர் இன்ஸ்பெக்டர் கொடுத்த தகவல் முன்னெச்சரிக்கை மிக உத்தமமான விஷயம். இது காசுக்கு ஆசைப்பட்டு கொடுத்த தகவல் அல்ல. வேறு யாருக்கோ இடைஞ்சல் தரவேண்டி, வேறு யாரையோ பழிவாங்க

நினைத்து தனக்கு பரிமாறப்பட்ட விஷயம். அதற்குக் காசும் கொடுக்க வேண்டியிருந்தது என்பது வேறு விஷயம்.

போதைப் பொருட்கள் மதராஸிகளுக்கு அறிமுகமாக வில்லை. சரியாய் பரவவில்லை. பம்பாயும், டெல்லியும் இதற்கு உயர்தர மார்க்கெட், போடிநாயக்கனூர் கஞ்சா கட்டியும், சிங்களத்திலிருந்து வரும் வெள்ளைப் பவுடரும் அந்த நகரங்களில் நல்ல சரக்கு, குறைந்தவிலை என்று விற்கப்பட்டன. நினைத்துப் பார்த்திராத அளவிற்கு லாபம் கொடுத்தன.

கையில் கரன்ஸியாகவே இருபது லட்சம் இருக்கிறது. படுக்கைக்குக் கீழே பத்தும், பாத்ரூமில் பத்தும் ஒளித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. தாவர சரக்கும், பவுடர் சரக்கும் லாரி கோடவுனில் இருக்கின்றன. நேற்றைக்கு வந்த ஆறு கிலோ வெள்ளைப் பவுடர் அவனுக்கு சொந்தமான பெட்ரோல் பங்கில் பூமிக்கடியில் இருக்கும் டீசல் டேங்கில் காற்றுப் புக முடியாத பைகளில் சீல் வைக்கப் பட்டு மூழ்கடிக்கப்பட்டு இருக்கின்றன. கடவுளாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. கிட்டத்தட்ட 17 லட்ச ரூபாய் சரக்கு அது.

இன்றோ அல்லது நாளையோ போடி மலைகளிலிருந்து மறுபடியும் தாவரம் வரும். உலர்த்தி இடிக்கப்பட்டு சோப்புக்கட்டி அளவாய் செய்யப்பட்ட கஞ்சா வில்லைகள் வாழைஇலை கட்டுக்குள் வரும். கொத்தவால் சாவடியில் இறங்கும். 'அதை எப்படி நகர்த்துவது' என்று யோசிக்க வேண்டும் ஒரு நம்பிக்கையான ஆளிடம் அதை கொடுத்து டெல்லிக்கு அனுப்ப வேண்டும்.

அண்ணன் மகன் ஒரு தண்டச்சோறு. அவனிடம் கொடுத்து அனுப்பலாமா? இல்லை அந்த கலப்பு ஜாதி பெண்

இருக்கிறதே, ஸ்ரீராமுலுவின் மகனை வீழ்த்த சண்டைக்கு அனுப்பினோமே, அவள் மூலம் அனுப்பலாமா? அந்தப் பையன் கொஞ்சம் உளறு வாய். அந்தப் பெண் மூலமே அனுப்பலாம். சரக்கு என்னவென்று சொல்லாமல் இந்தப் பட்டுப் புடவைகளை இங்கே கொடுத்துவிட்டு வா என்று அனுப்பலாம். பட்டுப் புடவைகளுக்கு நடுவே தாவரக் கட்டிகளை வைத்து விடலாம் ஒரு ஐம்பது பட்டுப் புடவைகள் வாங்கி வரச் சொல்லலாமா?

சொல்லுவோம். பட்டுப்புடவைகள் வாங்க உளறு வாயனை அனுப்புவோம். அந்தப் பெண்ணும் அவள் அம்மாவும் டெல்லிக்குப் போக இரண்டு ரயில் டிக்கெட்டுகள் எடுப்போம். ஸ்ரீராமுலுவை என்ன செய்வது? போலீஸுக்கு துப்புக் கொடுத்துக் கொண்டு இருக்கும் அந்த ஆளை என்ன செய்வது? வரதராஜுவை மடக்கி உன் பிள்ளை கடத்தப் பட்டது உன் தகப்பனால்தான் என்று சொல்லுவோம்.

ஆக உடனடியாய் செய்ய வேண்டிய வேலைகள் மூன்று. இருக்க வேண்டிய சரக்குகளைக் காத்தல். நகர்த்த வேண்டிய சரக்குகளை நயம்படச் செய்தல். வரதராஜுவை உசுப்பி விடுதல். இந்த வேலைகளை வேறு யாரிடமும் ஒப்படைக்க முடியாது. நானே செய்ய வேண்டும். வீட்டை விட்டு அசையாது கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும்.

ரதன் சந்தாவாத் சலூம்ப்ரா நிதானமாய் வீடுநோக்கி கிளம்பினான். சவுகார்பேட் சந்துகளுக்குள் திரும்பினான். வண்டியை திருப்பினான். ஒரு சந்து கடக்கும்போது அந்த சந்தின் நடுவே கும்பல் தெரிந்தது. போலீஸ் தலைகள் இருந்தன. 'என்ன அங்கே சகோதரா?' இந்தியில் கேட்டான். கேள்வியை முடிப்பதற்குள் யாரோ குறுக்கே பாய்ந்தார்கள்.

''உங்காளுதான் சேட்டு, உங்காளுதான். செட்டியார் ஆள் மடக்கி கழுத்தறுத்துட்டான். நான் கண்ணால பார்த்தேன். சுத்து வட்டாரம் முழுக்க செட்டியார் ஆளுங்க சுத்துறாங்க.'' மூச்சிரைக்கப் பேசினான்.

சொன்னவன் பழ வியாபாரி. இன்ஃபார்மர். ரதன் சந்தாவாத்திற்கு மட்டுமில்லை. எல்லோருக்கும் இன்ஃபார்மர். வண்டியை விருட்டென்று கிளப்பி வீடு நோக்கி வந்தான். கோபத்தில் உடம்பு கொதித்தது. கூடவே ஓடி வந்து விட்டோமே என்கிற வெட்கம் வந்தது.

ஆனால், கலவரங்களில் தலைவன் நேரடியாய் சம்பந்தப்படக் கூடாது. அவன் பிடிபடவே கூடாது. வீட்டின் பின்புறம் கதவை திறந்ததும் அவனுடைய அந்தரங்க ஆட்கள் பத்து, பதினைந்து பேர் ஹாலில் உட்கார்ந்து இருந்தார்கள். எல்லார் முகத்திலும் பயம் இருந்தது.

''என்ன ஆயிற்று ராம்லால்?'' - ரதன் சந்தாவாத் கத்தினான்.

'நமது பையன்' ராம்லால் தடுமாறினான்.

'யார் அது?'

பெயர் சொன்னார்கள். ரதன் சந்தாவாத், உறைந்து போனான் அண்ணன் பிள்ளையைக் கொன்று விட்டார்களா? பயத்திலும் ஆத்திரத்திலும் ஆடினான். ஆட்களை அடிப்பார்கள், ஏஜெண்டுகளை மிரட்டுவார்கள், நண்பர் களிடம் பரிகசிப்பார்கள். ஆனால், முதல் முறையாக குடும்பத்தில் கை வைத்து இருக்கிறார்கள். கொலை செய்து இருக்கிறார்கள். இனி யுத்தம் தவிர வேறு வழியில்லையா? செய் அல்லது செத்து மடியா...?

இவர்கள் முகத்திலெல்லாம் ஏன் இத்தனை பயம்? கொலை விழுந்துவிட்டது என்றா? என் சொந்தப்

பிள்ளையைக் கொன்றால்கூட நான் ஆட மாட்டேன். என் மனைவியின் சிகைபிடித்து இழுத்துச் சேதப்படுத்தினால் கூட கலவரப்பட மாட்டேன். கடத்தல்காரனுக்கு மனைவி யில்லை. குழந்தைகள் இல்லை. குடும்பம் இல்லை. உயிர் அவனுக்கு வெல்லம் இல்லை. உயிர் வெல்லமாய் நினைத்தவனுக்கு வளர்ச்சி இல்லை. என் வளர்ச்சிக்கு தடையாய் இருந்த அண்ணனையே கொன்றவன்.

- ரதன் சந்தாவாத் சலூம்ப்ரா யோசித்தான். சிரித்தான்.

பாண்டியனும் யோசித்தார். ஐ. பி. எஸ் படிக்கும் போது அவருக்கு சொல்லிக் கொடுக்கப்பட்ட முதல் பாடம் புலனாய்வு போலீஸ்காரன் பொறுமையாய் இருக்க வேண்டும் என்பதுதான். இரண்டாவது பாடம், ரொம்பப் பொறுமையாய் இருந்துவிடக் கூடாது என்பதுதான்.

மிகுந்த பொறுமைக்கும், அதீத அவசரத்திற்கும் இடையே ஒரு இடம் இருக்கிறது. 'அது என்ன இடம்' என்பதை ஒரு போலீஸ்காரன் உணர வேண்டும். அது என்ன இடம் என்பதை கற்றுக் கொடுக்க முடியாது. போலீஸ்காரன் உணர வேண்டும். அதை உணர உள் மனசோடு பேச வேண்டும், உள் மனசோடு பேச தனிமை அவசியம்.

தனது அறையில் குறுக்கும், நெடுக்குமாக நடந்து பாண்டியன் யோசித்தார். இதில் தன் சகாக்களை நம்புவதில்லை என்று தீர்மானித்தார். கான்ஸ்டபிள், ஹெட்கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர் என்கிற பிரிவுகளில் இருந்து இருபத்தி மூன்று பேரை தேர்ந்து எடுத்தார். ஒரு மணி நேரத்தில் சகலரையும் தன் அறைக்குள் நிற்க வைத்தார். விவரம் சொன்னார். முதல்வர் போதைப் பொருட்களை அடியோடு ஒழிக்க ஆர்வம் காட்டியதை குறிப்பிட்டார்.

''வர்ற பொங்கலுக்கு பதக்கம் குத்திக்கணும்னு ஆசைப்பட்டீங்கன்னா, இது ஒரு சான்ஸ். ஆத்திரப்படாத நிதானமா இருந்தா மடக்கிடலாம். தூங்காத மூணு நாள் சுத்துனம்னா புடிச்சிடலாம். நிறையத் துப்பு கிடைச்சிருக்கு. நெருக்கினா, கூட கிடைக்கும். நம்ம கோட்வேர்ட் நம்ம டிப்பார்ட்மெண்ட்டுக்கே தெரியக் கூடாது. வயர்லெஸ்ல, நம்ம கோட்வேர்ட் - **பிசிராந்தையார்.**''

காவலர்கள் சிரித்தார்கள். இருபத்தி மூன்று பேரை ஏழு குழுக்களாக பிரித்தார்.

''நடமாட்டம் கவனி நான் சொல்ற ஆள ஃபாலோ பண்ணு. என்ன நடந்தாலும் நான் சொல்ற வரைக்கும். உன்னைக் காட்டாதே.''

''கொலை நடந்தாலுமா சார்?'' ஒரு கான்ஸ்டபிள் சாதாரணமாகக் கேள்வி கேட்டார்.

''கொலை நடந்தாலும்.'' உதவி கமிஷனர் பாண்டியன் தீர்மானமாய் சொன்னார்.

''அப்போ கொலை விழும்னு சொல்றீங்களா சார்?'' பாண்டியன் குரலில் இருந்த பதட்டம் கண்டு இன்னொரு காவலர் வினவினார்.

''விழற அளவுக்கு ரிஸ்க்கான வேலை.'' பாண்டியன் பதிலில் தெளிவு இருந்தது.

''அப்போ எங்க பாதுகாப்பிற்கு?'' காவலர்கள் முகத்தில் கேள்விகள் தொங்கின.

அம்யூனிஷன் லிஸ்ட் அவர்களிடம் காட்டப்பட்டது காவலர்கள் திருப்தியாயினர். மாறுவேடங்கள் பற்றி பேசப் பட்டது. ஆந்திராவில் இருந்து எருமை ஓட்டிக் கொண்டு வந்த

விவசாயியாகவும், சோன்பப்படி ஆளாகவும், ஆபீஸிற்கு போகும் ஐயராகவும். கொத்தவால் சாவடிக்கு போகும் சில்லறை காய்கறி கடைக்காரராகவும், பான்பீடாக் கடை ஆளாகவும், கட்டை வண்டி இழுப்பவராகவும், நீலச்சட்டை ஹார்பர் தொழிலாளியாகவும், பர்மாபஜார் முஸ்லீமாகவும், தமிழக போலீஸின் அந்த சிறிய குழு உருமாறிக் கொண்டது.

ஏழு குழுக்களுக்கும் ஒயர்லெஸ் கருவிகள் தரப்பட்டன. 'பிசிராந்தையார் ஒன்று' 'பிசிராந்தையார் இரண்டு' என்று தொலைவில் போய் கூப்பிட்டுக் கொண்டனர். தலைமைச் செயலகத்தோடு ஏழு கருவிகளையும் ட்யூன் செய்து கொண்டனர். ஹால் விட்டு போவதற்கு முன் கடைசி நேரக் கேள்விகளை உதவிக் கமிஷனரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர். ரதன் சந்தாவாத்தின் படம் எல்லோருக்கும் காண்பிக்கப்பட்டது.

''இந்த நாய்தான் நமது முதல் குறி. வெறும் நாய் போதாது. அது கவ்விக் கொண்டு இருக்கும் இரையும் முக்கியம்.''

''ஸ்ரீராமுலு செட்டியாருக்கு இதுல என்ன பங்கு சார்?''

''எனக்குத் தெரியாது. ஆனால், அந்த ஆள் இரண்டாவது குறி.''


''ரெண்டு பேருமே கொலைகாரப் பசங்க சார்!'' சப்-இன்ஸ்பெக்டர் முணுமுணுத்தார்.

''யெஸ்!'' பாண்டியன் பதில் சொல்லு முன் டெலிபோன் மணி அடித்தது. வயர்லெஸ் செய்திக்கு காத்திருக்கச் சொன்னது. ஒரு நிமிடத்தில் வயர்லெஸ்ஸில் சவுகார்பேட் சந்தில் கழுத்து அறுக்கப்பட்டு கொலையுண்ட

பையனைப் பற்றிய முழு விவரங்கள் எல்லார் காதுக்கும் கேட்கும்படி சொல்லப்பட்டது. போலீஸார் கூர்மை யானார்கள். கொஞ்சம் கவலைப்பட்டார்கள்.

''எனி சஸ்பெக்ட்?'' பாண்டியன் வயர்லெஸ்ஸில் கேள்வி கேட்டார்.

'இல்லை' என்று பதில் வந்தது. அவரும் கவலைப் பட்டார்.



''எதுக்குடா பயப்படறீங்க? துட்டு சம்பாதிக்க ஆசை இருக்குல்ல... காண்டஸா கார்ல போகணும், நாலு அடுக்கு வூடு வேணும், தோட்டம் துறவு, எடுபிடி ஆள்வேணும்னு கனவு வருதுல்ல. கண்ணுல பார்த்த பொம்பளைய சொடக்கு போட்டு கூப்புட்டு, காசு காட்டி அவுக்க வைக்க ஆசை இருக்குல்ல...?

அதுக்குதானடா, இங்க வந்து சேர்ந்தீங்க. நான் சாமி கும்புடவா கூப்புட்டேன். கோவில் கட்டறேன்.. கூடமாட வேலை செய்யின்னா வரவழைச்சேன். காசுதான்டா கடவுள். காசு சம்பாதிக்கணும்னா எதுவும் செய்யணும்...

டேய்... கோபத்துல கொலை பண்றவன் முட்டாள். வெறில வெட்டறவன் மடையன். அவனுங்க வெட்டிட்டு அழுவானுங்க. ஜெயில்ல உட்கார்ந்து ராமபஜன் செய்வானுங்க.

சிரிச்சுகிட்டுக் கொல்லணும்டா. பேசிக்கிட்டே கழுத்தறுக்கணும். இன்ன சந்து, இந்த நேரம் வெட்டறேன்னு சொல்லிட்டு வெட்டணும்.

ஸ்ரீராமுலு செட்டி அப்படித்தான் பண்ணியிருக்கான். உனக்கு வெட்ட முடியாது? மராட்டிக்காரன், மதராஸி பார்த்து பயப்படறியே... இதுக்கு பொண்டாட்டிய வித்துட்டு கடல்ல விழுந்து சாவலாம்.

நாளைக்கு இதே நேரம் நான் சொன்ன ஆளை அறுத்துக் காட்டறேம் பார்... கழுத்துலேர்ந்து தொப்புள் வரைக்கும் கோடு போடறேன் பார்... பயந்தவன் இந்த இடம் வுட்டு போவலாம். ஊரை வுட்டு போறதுக்குக் காசு நான் தரேன்.''

-பேசிவிட்டு கண் மூடிக் காத்திருந்தான் அவன். ஆட்கள் அநேகமாய் பம்பாய் ரவுடிகள். திருட்டு, கொலை, கொள்ளைகளில் சம்பந்தமாகி வேறு பெயரில் வேறு உருவில் இங்கு நடமாடிக் கொண்டிருப்பவர்கள். சொந்த ஊரில் கால் வைத்தால் வெட்டிப் போட ஒரு கூட்டமே உண்டு.

இங்கே நிலைமை மோசமானால், போலீஸ் தலையிட்டால் வாழ்வின் நிம்மதி குலையும். இதுதான் பயம். இதுதான் யோசனை. ஆனால், ரதன் சந்தாவாத் சொல்வது போல காசு சம்பாதிக்க வேணுமானால் எதற்கும் தயாராய் இருக்க வேண்டும்.

யாரும் நகராதது கண்டு ரதன் சந்தாவாத் சலூம்ப்ரா மறுபடி சிரித்தான். ''பேட்டை முழுக்க போலீஸ் இருக்கிறது. அதுதானே உங்கள் பயம்? இரவு நேரம் ரோந்து இருக்கிறது. அதுதானே கலக்கம். வேண்டாம், பகலில் வெட்டுவோம்.''

ஊர் நடுவே மசூதி இருக்கிறது. பன்னிரண்டு மணிக்குக் கடை மூடும் முஸ்லிம்கள் நமாஸ் முடித்து பன்னி ரண்டரைக்குத் திரும்புவார்கள். லுங்கியும், தொப்பியும் போட்டுக் கொள்ளுங்கள். ஆயிரம் முஸ்லிம்கள்

தொழுகையிலிருந்து திரும்பி வரும்போது யாருக்கு யாரை அடையாளம் தெரியும்?

ஸ்ரீராமுலு ஆள் யார் கிடைத்தாலும் கிழித்து விடு. ஸ்ரீராமுலு கிடைத்தாலும் அடி. நாலு இடங்களில் நமது மெட்டோடார் வண்டிகள் நிற்கும். நீங்கள் ஏறினதும் ஊர் விட்டுப் பறக்கும். அப்படியே மாட்டினாலும் பயப்படாதே. மூணாவது நாள் உன்னை வெளியே கொண்டு வந்து புகாரி பிரியாணி வாங்கிப் போட எனக்குத் தெரியும்.''

''ஸ்ரீராமுலு முத பிள்ளை கிடைச்சா?''

''விட்டுரு. அவனை அடிக்காத. அவன் இந்தக் கூட்டம் இல்லை.''

''தடுக்க வந்தா?''

''தட்டி ஓரம் போடு. மொள்ள தட்டு.''

''பேசாத ஸ்ரீராமுலு வூட்டுக்குள்ளபோய் தபதபன்னு சாத்திட்டு வந்துரலாம்.''

''கிட்ட போக முடியாது. சுத்தி ஆள் இருக்கு.''

''சாஹப் சொல்றது சரி. வாங்க போலாம்.'' -கலைந்து போனார்கள்.

மொத்தக் கூட்டமும் கலைந்ததும் கதவு சாத்தியபிறகு, கதவு தட்டப்பட்டது. ரதன் திறந்தான். நின்றிருந்தவர்கள் இரண்டு பேர் மீண்டும் உள்ளே வந்தார்கள்.

''மால் என்ன செய்வது?'' கேட்டார்கள்.

''இந்த நேரம் இடம் மாற்ற வேண்டாம் என்று தோன்றுகிறது.''

''இல்லை. பையனை ஸ்ரீராமுலு ஆட்கள் ஏன் கொன்றார்கள்? அவன் ஏதும் விவரம் சொல்லியிருந்தால்?''

''மாட்டான். அது தவிர, அவனுக்கு எல்லா இடமும் தெரியாது.''

''அப்படியில்லை...''

ஸ்ரீராமுலு போலீஸுக்கு தகவல் தருவார் என்கிறாயா?''

''ஆம்.''

''அது எனக்கு வந்துவிடும். நீ போ.''

''பையன் பாடியை...''

''போலீஸ் வரும். அதுவரை யாருக்கும் எதுவும் தெரியாது என்கிற விதமாகவே நடந்து கொள்ளலாம். நாளைக் காலை காணோம் என்று ரிப்போர்ட் தரலாம்.''

ரதன் அவனை அனுப்பிவிட்டு கட்டிலில் உட்கார்ந் தான். ஒரு வேளை சரக்கு மாட்டினால்...? போலீஸ் கைது செய்ய வந்தால்...? பெங்களூருக்கு போன் செய்து நண்பனை பம்பாய்க்கு ஒரு ஏர் டிக்கெட் வாங்கச்சொல்லி தன்னுடைய டூரிஸ்ட் டாக்ஸியை பெங்களூரிலேயே தயார் செய்யச் சொல்லி பையிலுள்ள கரன்ஸிகளை படுக்கை ஸிப் அவிழ்த்து உள்ளே அடுக்கி மல்லாந்து படுக்கும் போது நாலரை மணி.

தூக்கம் வரவில்லை.

அந்தப் பையன் நினைவு சிறிது நேரம் நெஞ்சில் நின்றது. ஸ்ரீராமுலு முகம் வந்தது. உடனடியாய் எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்ற வேகம் வந்தது. வெளியே மெல்ல விடிந்தது.

ஸ்ரீராமுலு வீட்டு எண் சுழற்றினான். மணி அடித்துக் கொண்டே இருந்தது.

தூங்கி விட்டானா அந்த அயோக்கியன்... போன் வைக்க நினைக்கும்போது எதிர்முனையில் ஆண் குரல் கேட்டது.

''டேய், ஸ்ரீராமுலு. ஒண்ணு நான், இல்லை நீ. இரண்டே நாள்ல ஒரு முடிவு தெரிஞ்சுடும். ஒரு உறையில் இரண்டு கத்தி இருக்க முடியாது. இந்த சவுக்கார் பேட்டைல நீ ரவுடியா, நான் ரவுடியா பார்த்துடலாம்.''

போனை ஆத்திரத்துடன் துண்டித்தான். கண் மூடினான்.

ராஜேந்திரபாபுவுக்கு உடம்பெல்லாம் எரிச்சல் இருந்தது. கை காலை அசைத்தாலும் எரிச்சல் அதிகரித்தது.

'நானில்லை, நானில்லை' என்று கத்திய பிறகும்கூட விடவில்லை. பெல்ட் எடுத்து அப்பா வலதும், இடதுமாய் அடித்து நொறுக்கி விட்டார். இந்த வாரம் நேரமே சரியில்லை. சுபயோகத்தில் அப்படித்தான் போட்டிருந்தது.

அவன் அடி வாங்கும்போது அம்மா வந்து தடுக்க வில்லை. வரதராஜ¨ எழுந்து வரவேயில்லை. அண்ணிதான் உள்ளே ஓடி வந்து தடுத்தாள்.

''உனக்குத் தெரியாதும்மா.''

''தெரியும். அவர் எடுக்கலை.''

''எப்படித் தெரியும்?''

''நானும், அவரும்தான் வீடியோ பார்த்துக்கிட்டிருந் தோம். ஃபுட் பால் ஃபைனல்.''

''வரது எங்க?''

''தூங்கறாரு.''

''நீ ஏன் ராஜேந்திரபாபு இடத்துக்குப் போன?''

''வீடியோ பார்க்க. வரதும் அங்கதான் தூங்கறார்?''

ஸ்ரீராமுலுவுக்குப் புரியவில்லை. இந்த பணக்கார பாப்பாத்திகளே இப்படித்தான்... எதுக்கும் பயப்படுவ தில்லை.

''இப்ப வச்சுட்டுப் போனேன். விடிகாலை மூணு மணி இருக்கும்.''

''நான் படுக்கப்போறபோது நாலே கால். நாலு மாட்ச் பார்த்தோம். இவங்க ரெண்டு பேரும் தூங்கிட்டாங்க. அர்ஜெண்டினா ஃபைனல்ல ஜெயிச்சதும் நான் தூங்கப் போயிட்டேன்.''

''எடுத்தியாடா?''

''இல்லப்பா.''

அடிபட்ட இடத்தில் ரத்தம் கசியத் துவங்கியது. அண்ணி மறுபடி துடைத்தாள். மருந்து போட்டாள். 'என்ன கோபமோ எல்லாருக்கும் இந்த வீட்ல?' என்று படுக்கப் போனாள்.

'இவளுக்கு குழந்தை மீது அக்கறையே இல்லையோ... விடிய, விடிய வீடியோ... அதுவும் ஃபுட்பால் மேட்ச் பார்க்கிறாள்?' என்று வியப்பு வந்தது.

ஹாலில் டெலிபோன் அடித்தது. யாரோ அப்பாவை அசிங்கமாய்த் திட்டினார்கள். யார்... இரண்டு கத்தி ஒரு உறை... 'ரதன் சந்தாவாத், சீக்கிரம் எங்கப்பனைக் கொன்று போடு. எனக்கும் நிம்மதி.'

தள்ளாடி அறைக்குள் போக, மறுபடி பெல் அடித்தது.

இந்த முறை ரதன் பேசினால் அவனிடம் நேரே பேச வேண்டும். அப்பாவுக்கும் தனக்கும் சரிப்படவில்லை என்று

சொல்லிவிட வேண்டும். தனியே பேச அழைக்க வேண்டும். 'ஹலோ' போன் எடுத்து பேசினான்.

''என்னம்மா கண்ணு...? என்னை எரிச்சுப் போட பிளானா...? உங்க ஊட்டு கூரைல ஏறி உள்ள குதிச்சு உன் துட்டையே கிளப்பிட்டு வந்துட்டேன்... என்னா செய்வ. மயிரப் புடுங்கிடுவியா நீ. டேய்... பெத்த புள்ளையோட குழந்தையை அடைச்சு வச்சிருக்க... நீயெல்லாம் ஒரு அப்பனாடா... உருப்புடுவியா நீ...?''

''ஹலோ... யார்...? யாரு அது?''

''நீ யாருடா?''

''நான் ராஜேந்திர பாபு.''

''பாபு, நான்தான். ஏன் உங்கப்பா உங்கண்ணன் குழந்தைய தூக்கிட்டுவந்து அடைச்சு வச்சிருக்கான். பின் வீட்டுலதான். போய் கதவு உடைச்சி குழந்தைய எடுத்துரு. இல்லன்னா செத்துரும்.''

''டேய் யார் நீ?''

''உங்க மச்சான்!''

-போன் துண்டிக்கப்பட்டது. பேச்சு கேட்ட விதம் தொலை தூர டெலிபோன் என்று உணர்த்தியது. அவன் பேசியது உண்மையா என்று தெரிய ஆசை வந்தது. மாடி ஏறி வராண்டா தாண்டி அடுத்த கட்டடம் போகும் வழியே அடைந்தான். தாழ்ப்பாள் அகற்றி இரண்டு வீட்டையும் இணைக்கும் இடம் தாண்டி கதவில் காது வைத்து உற்றுக் கேட்டான். குழந்தை அழும் குரல் கேட்டது.

கீழே வந்தான்.

வரதராஜுவை எழுப்ப கதவைத் தட்டினான்.

அண்ணி திறந்தாள்.

''அண்ணி, உங்க குழந்தை பின் வீட்ல இருக்கு. உடனே வாங்க.''

''எனக்குத் தெரியும்.''

''என்ன...?''

''எனக்குத் தெரியும் என் புள்ளை எங்க இருக்குன்னு.''

''எப்படி? யாரு சொன்னா?''

''ஞானாம்பா.''

''ஞானாம்பாளா...?''

''அவங்க சிந்தாதரிப் பேட்டைல இருக்காங்க. இவரை வரவழைக்க உங்கப்பா திட்டம் போட்டு குழந்தைய எடுத்துட்டு வந்ததாச் சொன்னாங்க.''

''அண்ணி, நீங்க எப்படி இதுக்கு?''

''கம்பெனி லாஸ்ல ஓடுது பாபு. இவரு உங்கப்பா கூப்பிட்டா போக மாட்டாரு. உங்கப்பா திட்டப்படி போகட்டும்னுதான் நான் சும்மா இருக்கேன். வரும்போது கதவு தாப்பா போட்டுட்டு வந்தியா?''

''போடலை.''

''நான் போய் குழந்தைய எட்டிப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''குழந்தை ஏங்கிடாதா அண்ணி?''

''நல்லா கவனிச்சுக்கறாங்க. பாபு.''

''எதுக்கு இதெல்லாம் பண்றாரு அப்பா.''

''கடையை எங்களுக்கும், பெட்ரோல் பங்க், தோட்டம் இதெல்லாம் உனக்குத் தர முடிவு செஞ்சிருக்காரு உங்கப்பா.''

''கடை உங்களுக்கா?''

''வேற பொழப்பு?''

''அப்ப நான் என்ன சும்பனா? எங்க வரதராஜு?''

''அவருக்குத் தெரியாது. நான்தான் ஞானாம்பாக்கிட்ட பேசி...''

''எல்லாம் அந்த தேவடியா யோசனையா?''

''ச்சு... அவங்களை ஏன் திட்டற?''

''அப்ப கடைல எனக்குப் பங்கு இல்லையா?''

''அதான் தோட்டம்...''

''யாருக்கு வேணும் தோட்டம்?''

''பாபு, கொஞ்சம் அமைதியா இரு. உனக்குக் கடைல பங்கு வேணும். அவ்வளவுதானே. இவரு தருவாரு. ஏன் சண்டை போட்டு பாழடிக்கற எல்லாத்தையும்?''

''வரதராஜு தரமாட்டான்.''

''இல்லை, அவருக்கு இஷ்டமேயில்லை இதெல்லாம்.''

''அப்ப நீ ஏன் இதுல தலையிடற?''

''எங்களுக்கு அப்பா சொத்துல பங்கு வேணாமா?''

''அடிசக்கை... அங்க வந்துட்டியா நீ...?''

- முதன் முதலாய் அவளை உற்றுப் பார்த்தான். அவள் அழகு தெரிந்தது.

———



உதவி கமிஷனர் கறுப்பு மார்பும், சாய வேட்டியும், தலைப்பாகை மேல் கவிழ்த்த கூடையுமாய் நிற்பது அந்த இன்ஸ்பெக்டருக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்த இன்ஸ்பெக்டர்கூட சைக்கிள் தள்ளியபடி கட்டம்போட்ட சட்டையும், லுங்கியும் கட்டியபடி சைக்கிள் பின்னே கோணிப் பைகள் மடித்து வைத்து கட்டிக் கொண்டு போனார்.

''நல்லா இருக்கு சார்... உங்க கெட் அப். அடையாளமே தெரியலை.''

''இது ஒண்ணும் புதுசு இல்ல மணி. இப்படி பத்து வயசுல எங்க கிராமத்துலேர்ந்து சந்தைக்குப் போவோம்.''

சட்டென்று ஏஸியின் செருப்பு அறுந்தது. வலது கால் கட்டை விரல் மோதிரம் பிய்த்துக் கொண்டு நின்றது.

''அடட, செருப்பு பிஞ்சிடுச்சு சார்.''

''நடந்துடலாம். ஓட முடியாது.''

''என்னுது போட்டுப் பாருங்க சார்.''

''உனக்கு...?''

''எதுனா கடை இருக்கும் சார்.''

''பத்தாயிடுச்சே!''

''அதோ ஒருத்தன் கடை மூடறான் சார்.''

''பிடி...! மிரட்டாத பிடி!''

''செருப்பு வேணும்.'' -இன்ஸ்பெக்டர் கதவு மூடின ஆள் முதுகு தட்டினார்.

''நாளைக்கு வா. இப்ப கடையைச் சாத்தறோம்.''

''ஏய் தொறடா...!''

''என்ன ஏய் ஊய்ன்ற?''

''நாங்க போலீஸ்! கதவத் தொறடா.''

- மூடிய வேகத்தில் கதவு திறக்கப்பட்டது.

''நல்லதா எடுத்துப் போடு. ஸ்டைலா வேணாம். உழைக்கற செருப்பா எடு.''

கடைப் பையன் பதறினான். காசு வருமா என்று கவலைப்பட்டான். மடமடவென்று பெட்டிகளைப் பிரித்துப் போட்டான்.

''எவ்வளவோ இது?''

''கொடுக்கற கொடுங்க சார்! உங்களுக்கு என்ன சொல்றது...?''

''இது எவ்வளவோ... என்னடா பழசு மாதிரி இருக்கு. இப்படி ஒரு வியாபாரமா... பேமானி...''

''சார்... அது வந்துங்க... செட்டியார் ஒரு வாரம் முன்ன வந்து புதுசு வாங்கிட்டு இத கடையிலேயே வுட்டுட்டுப் போயிட்டாரு.''

''நல்லாதான இருக்கு...''

''அவரு அடிக்கடி மாத்துவாரு சார்.''

செருப்பைத் தூக்கிப் போட்டார். செருப்பு தரையில் பட்டு எகிறி சுவரில் மோதிற்று. வரி வரியாய் தடங்கள் பதிந்தது. அந்தத் தடங்கள்... சட்டென்று ஏதோ மூளைக்குள் பொறி தட்டியது. எங்கு பார்த்தோம்... புரிந்தது.

''எந்தச் செட்டியாருது?''

''ஸ்ரீராமுலு...''

''எப்ப கொண்ணாந்து போட்டாரு?''

''ஒரு வாரம் முன்னாடி.''

புத்தி சரியான இடத்தில் தொடவில்லை. ஆனால், அப்படியே இது தெரிந்தாலும் இப்போது தடயம் ஆகுமா அறுபது ரூபாய்க்கு உறுதியான செருப்பு வாங்கினார். போட்டுக் கொண்டார்.

''மணி, இந்த செட்டியார் செருப்பை எடுத்துட்டு வா.''

''ஏன் சார்?''

''செட்டியார் வீடு இந்தப் பக்கம் தானே இருக்கு?''

''ஆமா...''

''மொள்ள அவர் வீட்டுக்குள்ள அதைப் போட்டுரு.''

''என்ன ஐடியா சார்?''

''இந்தத் தடயம் வேல்ல பார்த்த ஞாபகம். மறுபடி வேன் பார்த்துட்டு இது சரியா இருந்தா இது அவருதான்னு கேட்கலாம். இங்க இருந்தா கேட்க முடியாதே?''

''புரியுது சார்.''

செருப்புகள் ஸ்ரீராமுலு வீட்டிற்குள் தூக்கிப் போடப் பட்டன.

தெருத் தெருவாய் போலீஸ் சுற்றியது. விடியலில் கொஞ்சம் சோர்வாய் நின்றது.

பாண்டியன், 'தடயமே இல்லாது சுற்றுகிறோமோ?' என்று கவலைப்பட்டார். கொத்தவால் சாவடியில் இருந்து வண்டிகள் நகர் நோக்கி விரைந்தன.

ராஜேந்திரபாபு இடைக்கட்டு கதவு திறந்து அடுத்த கட்டடம் போனான். தூங்குகிற கிழவரை எட்டி உதைத்தான்.

''குழந்தை எங்கடா?'' என்றான்.

''ஏமி பில்லா... நாக்கு தெலிலேதே.'' தூக்கத்தில் ஊன்றி எழுந்தவரின் கன்னத்தில் அறைந்தான்.

''ஐயோ...'' - அவர் அலற, கிழவியும் எழுந்து அலறினாள். குழந்தை புரண்டு எழுந்து 'வீல்' என்று கத்தியது. அறைக்குள் ஓடி குழந்தையை எடுத்துக் கொண்டான். மறுபடி இடைக்கட்டு வழியே கீழிறங்கினான்.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டிய போலீஸ் என்ன அலறல் என்று அங்கே தயங்கியது. பூட்டிய கதவையே வேடிக்கை பார்த்தது.

ஸ்ரீ ராமுலு தன் அறைக் கதவு பூட்டி டெலிபோன் சுழற்றினார். சேட்டுப் பையன் சொன்ன தகவல்களை போலீஸுக்கு சொன்னார். டெலிபோன் மீது துணி போட்டு ஐயர் பாஷையில் எல்லாச் சந்தேகமான இடங்களையும் தெரிவித்தார்.

பாண்டியனிடம் உள்ள ஒயர்லெஸ் அதே தகவல்களை மூன்றாவது நிமிடம் அவருக்கு சொல்லியது.

''யாரு இன்ஃபார்மர்?''

''தெரியலை.''

''விட்டுடுங்க. நான் தடம் புடிச்சதும், ரெண்டு வேன் போலீஸ் அனுப்புங்க.''

''அண்ணே எழுந்துரு. இந்தா உன் புள்ளை.'' - வரதராஜு கட்டிலில் குழந்தையை வைத்து விட்டு ராஜேந்திரபாபு எழுப்பினான்.

''டாடி... டாடி...'' - பிள்ளை பொங்கிப் பொங்கி கத்தியது.

வரதராஜு தூக்கம் கலைந்து, வாய் பிளந்து பிள்ளையைத் தழுவிக் கொண்டான்.

''பாபு... பாபு... என் குழந்தை... எங்க எங்க இருந்தது...? ரொம்ப தாங்க்ஸ் பாபு. என் ராஜா... என் அப்பா... என் கண்ணே...''

''உங்கப்பன் பின்னால வீட்ல மறைச்சு வச்சிருந்தான். நம்ம கடை ஆளைக் காவல் போட்டிருந்தான். எல்லாம் அந்தத் தேவடியா ஞானம்பா ஏற்பாடு, உனக்குத் தேவையா இது. உன்னையும் என்னையும் கூண்டோடு ஒழிக்க அவ திட்டம் போடறா.

''வேணாம், எனக்கு எதுவும் வேணாம் பாபு. என் குழந்தை போதும். என் புள்ளை போதும். யாரு வேணா எப்படி வேணா போகட்டும்.''

''அது எப்படிப் போறது? உங்க அப்பாவுக்கு உங்க உதவி வேணும். உங்க புள்ளைக்கு உங்கப்பா சொத்து வேணாமா?''-சுப்புலட்சுமி அருகே வந்து நின்றாள்.

''கேட்டுக்க வரதராஜு. இது உன் பொண்டாட்டிக்கு ஏற்கெனவே தெரியும். புள்ளைய மறைச்சு வச்சது ஞானம்பா சொல்லியிருக்கா.''

''எந்த ஞானாம்பா?'' பின்னே ஸ்ரீராமுலுவின் குரல் கேட்டது.

''எந்த ஞானாம்பாடா மறைச்சு வச்சது?''

''மறைச்சது நீ... திட்டம் போட்டது அந்தத் தேவடியா.''

''டேய்... உதைபடுவ.''

''அட சர்தாம் போய்யா... கிரிமினல் ஆளு நீ. யோக்கியன் மாதிரி கூவாத.''

''பாபு...''

''என்ன கத்தறே...? அடிச்சு பல்லைப் பேத்துடுவேன்.''- பிள்ளை அப்பனை நோக்கி கை ஓங்கிற்று.

''ஞானாம்பாளுக்கு இதுல எந்தச் சம்பந்தமும் இல்லீங்க.'' - ஹாலில் எத்திராஜுலு நின்று வரதராஜுவைப் பார்த்துச் சொன்னார். ''ஐயா சொல்லித்தான் நாங்க செஞ்சோம், அந்தம்மாவுக்கு இதுல சம்பந்தம் இல்லீங்க.''

''ச்சீ... போடா நாயே...'' ஸ்ரீராமுலு அவரைத் தள்ளி விட்டார், கிழவர் தடுமாறி விழுந்தார்.

''அடப் பாவி... எம் புருஷனை தள்ளி விட்டுட்டியே... நீ பண்ற அக்கிரமத்துக்கு கடவுள் கேட்காத வுடமாட்டான். ஞானம்பா உத்தமி. என்கிட்ட சொன்னதை புள்ளையோட தாயார் கிட்ட சொல்லிடு, அவ மனசு படாதபாடு படும்னா.''

எத்திராஜுலு மனைவி புருஷனைத் தாங்கியபடி பேசினாள்.

''நீதான் ஞானாம்பாக்கிட்ட சொன்னியாடி...?''

''ஆமா... சொன்னேன், நீ கவுத்து வுட்டுட்டீன்னா? உன்னை என்னாத்த நம்புறது?''

''என் சோறு துன்னுட்டு... நாயே...'' இடுப்பு பெல்ட் உருகி அவள் தலையில் அடித்தார்.

கிழவர் எழுந்து மனைவி அடி வாங்குவதைத் தடுத்தார்.

வரதராஜுவுக்குத் தலை சுழன்றது.

''யோவ்... ஏய்யா அந்தக் கிழவிய போட்டு அடிக்கிற, உன் கூடவே சுத்திக்கிட்டிருந்த என்னைக் கவுக்கறதுக்கு உன் பெரிய புள்ளையா இட்டாற ணும்னு பார்த்த. அவன் பொண்டாட்டிக்கு நகை ஆசை காட்டின... அந்த மலையாள பாப்பாத்தி கைகாரி. எல்லாம் தெரிஞ்சு, புருஷன்கிட்டக்கூட சொல்லாம எப்ப எதைப் புடுங்கலாம்னு காத்துட்டிருக்கா.''

''டேய் பாபு...'' -வரதராஜு எழுந்தான். ''எனக்கு வேணாம் உங்க சொத்து. என் பங்கு, உங்க சங்காத்தம் எதுவும் வேணாம்.'' எழுந்தான்.

''இல்லை வரதராஜு, இவன் குழப்பறான்.''

''நானா குழப்பறேன்?''

''சொல்லுங்க அண்ணி. உங்களுக்கு புள்ளைய மறைச்சு வச்சது யார் சொன்னது...? இந்தாளு சொஞ்ச மோசடி எப்படித் தெரியும் உங்களுக்கு?''

சுப்புலட்சுமி பேசாதிருந்தாள்

''கிழவர் நகைய காட்டி வாய அடைச்சிருக்காருல்ல. உங்களால பேச முடியாதுதான்.''

''டேய்...'' ஸ்ரீராமுலு அவனை அதட்டினார். ''இன்னும் ஒரு வார்த்தை பேசின... வெட்டிருவேன்.''

''அதுக்கு வேற ஆள் பாரு. எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். கடை எனக்கா வரதனுக்கா?''

''உனக்கு இல்லை.''

''ஏன்...?''

''அது என் சொத்து.''

''எங்க பாட்டன் சொத்து. இல்லைன்னு சொல்ல உனக்கு அதிகாரம் இல்லை.''

''சட்டம் பேசறியா? உன்னால ஆனது பார்த்துக்க...! போடா?''

''பேமானிதான் சட்டம், கிட்டம்னு பேசுவான். எனக்குத் தெரிஞ்சது என் வலிவு!'' முஷ்டி மடக்கிக் காட்டினான்.

'சகலமும் கெடுக்கிறானே' என்கிற படபடப்பு ஸ்ரீராமுலுவுக்கு வந்தது. போலீஸுக்குச் சொன்ன தகவல்

என்ன விதமாய் நடைபெறுகிறது என்று பார்க்கும் ஆவல் வேறு வந்தது.

''உன்னை வந்து பேசிக்கிறேன்.'' நகர்ந்தார்,

''யோவ், எங்க போற...? உட்காருய்யா... கடை எனக்கா, அண்ணனுக்கா?''

இவனைப் பேசித் திருத்த முடியாது என்று ஸ்ரீராமுலுவுக்குத் தெரிந்து போயிற்று. மிரட்டி சாய்த்தால்தான் சரிப்படுவான் என்று உள்ளே கோபம் படர்ந்தது.

''உனக்கு சொத்துதானே வேணும் இரு.'' பீரோ திறந்தார். சட்டென்று ரிவால்வர் எடுத்துத் திரும்பினார்.

''ஓடிப் போடா! படவா இங்கேருந்து'' என்றார்.

''அப்பா...'' - வரதராஜு ஓடிப் போய் அவர் கையைப் பிடித்தான். சுப்புலட்சுமி பயத்தில் கத்தினாள்.

அந்த விநாடி ராஜேந்திரபாபுவுக்கு போதுமானதாய் இருந்தது. நேரே போய் அவரை முட்டினான். துப்பாக்கி தரையில் விழ, எடுத்துக் கொண்டான்.

''இப்ப சொல்லு... கடை எனக்கா இல்லையா?''

''உனக்கு இல்லை...!''

''ராஜேந்திரா... கடை உனக்குத்தான், எனக்கு வேணாம்.'' - வரதராஜு கூவினான்.

முதலாளிக்குத் துரோகம் செய்துவிட்டோமே... தன் மனைவி காட்டிக் கொடுத்து கெடுத்து விட்டாளே. எத்திராஜுலு குழம்பினார். பின்னால் போய் ராஜேந்திர பாபுவை ஒரே கட்டாய் கட்டினார். அவன் உதறியதில் துப்பாக்கி வெடித்தது.

ஸ்ரீராமுலு இடது கண்ணில் ரவை புகுந்து பின் மண்டை வழியே வெளியே வந்தது. குபீரென்று ரத்தம் சுவரெங்கும் பரவியது. எல்லோர் மீதும் சிதறியது.

''ஐயோ!'' சுப்புலட்சுமி அலறினாள். எத்திராஜுலு பிடியை விட்டு மயங்கினார். ராஜேந்திர பாபு பயந்தான்.

வாசலுக்கு ஓடினான்; கதவு திறந்தான்; தெருவில் இறங்கி மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட் செய்தான்.


டீக்கடையில் இருந்த ரதன் சந்தாவாத் ஆட்கள், மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். டீக்கடைக் காரனை நகர்த்தி விட்டு ஒரு பெரிய சொம்பு நிறைய ஒரு ஆள் கொதிக்கும் வெந்நீர் பிடித்தான்.

மோட்டார் சைக்கிள் திரும்பி கடை நோக்கி வர, சட்டென்று வீசினான்.

கொதிக்கும் வெந்நீர் ராஜேந்திர பாபு முகத்தில் வேகமாய் விழ... மோட்டார் சைக்கிள் நழுவிற்று.

தரையில் விழுந்தவன் மீது நாலு பேர் பாய்ந்து சரமாரியாய் வெட்டினார்கள். மூலைக்கொருவராய் ஓடினார்கள்.

நகரத்தின் மீது வெளிச்சம் படர்ந்தது.



பிறப்பும், இறப்பும் கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து விடுகின்றன. இவை எப்போது எங்கே நிகழும் என்று தெரியாத வேதனைதான் மனிதனை மதம் என்கிற ஊன்றுகோல் தேட வைக்கிறது. கடவுள் என்கிற கானல் நீர் நோக்கிப் போக வைக்கிறது.

மதமும், கடவுளும் 'நீ நிறைய நாள் வாழ்வாய், சுகமாய் ஜீவிப்பாய்' என்கிற வெற்று நம்பிக்கையைத் தருகின்றன. ஆளுயரப் படத்துக்கு தினமும் பூமாலை போட்டு 'எல்லாம் அவனருள்' என்று வாழ்வு நகருகிறது. வாழ்க்கை நடுவே ஏதேனும் வம்பு செய்தாலும் 'அதான் பெரிய பூமாலை போடறோமே, இனி இரண்டு பூ மாலையா போட்டா போச்சு... கடவுளே மன்னிச்சுக்கப்பா' என்கிறது.

'செய்த வம்புக்கு விளைவு இல்லை' என்றதும், அதான் நான் சொல்லலை... தினமும் பூமாலை போடற புண்ணியம்... நான் என்ன செய்தாலும் காப்பாத்தும். இன்னிக்கு நேத்தா போடறம். ஏழு தலைமுறையா போடறோமே. வுட்டுருவாரா கடவுள்? வம்புக்கு மேல் வம்பு செய்வதே வாழ்க்கையாகி அயோக்கியத்தனமும், கர்வமும், ஆளுமைக்கு ஆத்திரப்படும் குணமும் இயல்பாகி கடவுள் மறந்து போய் தன் மரணம் மறந்து போய் வாழ்வின் தெளிவு மறந்து போய், உழப்பலாய் போய் விடுகிறது.

எல்லா வம்புக்கும் எதிர்விளைவுகள் உண்டு. சில சமயம் எதிர்விளைவுகள் தனித்தனியே வரும். சில சமயம் சேர்ந்து வரும். சேர்ந்து வந்து நெஞ்சைத் தாக்குகிறபோது

கடவுளே என்று கூவுகிறது. ஏன் இந்த வேதனை... என்னிக்கு மாலை போட மறந்து போனேன் என்று கணக்கு பார்க்கிறது.

தவறு... தவறு இங்கே எல்லாம் தவறு. மதம் சொல்லிக் கொடுத்த வாழ்க்கை முறை தவறு. எல்லா மதமும் தவறு. மண்டியிட்டு மன்னிப்புக் கேள். கடவுள் தருவார். இறைவன் இல்லையென்று சொல்வதில்லை. எங்கும் அவன் இருக்கிறான் என்றெல்லாம் சொல்கிறார்கள். பரிணாம வளர்ச்சியை, ரசாயன மாற்றத்தை ஒன்றோடு ஒன்று கூடுவதால் உண்டாகும் சாதாரண விளைவை ஜனங்கள் ஏற்க மறுத்து யாரோ ஒரு ஆளை கடவுள் என்று கற்பிதம் செய்து விட்டார்கள்.

கொடுக்கவும், தடுக்கவும் வல்லமை உள்ள ஆளாய், கேட்கவும், பேசவும் முடிந்த மனிதனாய் வைத்து விட்டார்கள். துளைத்து கேட்க இயற்கையை கடவுள் என்கிறோம் என்றார்கள். இயற்கை மனிதனோடு பேசுவதில்லை. அதற்குத் தொடர்பே இல்லை. அது மனிதனை இலட்சியமே செய்வதில்லை. அதன் இயல்பு அதன் வேலை மனிதனை அது கேட்பதுமில்லை. பார்ப்பது மில்லை.

மனிதன் குனிந்து தன்னை, தன் மனதைப் பார்த்துக் கொள்வதற்கு பதில் தன்னுள் தன் புத்தி அலைவது பார்ப்பதற்கு பதில், வெளியே தேடத் துவங்கி வீணாய்ப் போனான். விபத்துக் கத்தியால் குத்தப்பட்டதும் 'ஐயோ... ஐயோ' என்று அலறுகிறான்.

- மின்னல் வெட்டும் நேரத்தில் வரதராஜு வாழ்க்கை பற்றி மொத்தமும் யோசித்தான். சரிந்த அப்பாவைத் தாங்கிக் கொண்டான்.

கண் வழியே மூளைக்குப் போனதுப்பாக்கி ரவையின் விளைவால் கண்ணிமைக்கும் நேரத்தில் பிராணன்போய் விட்டது. கத்தரித்ததுபோல் நாடித்துடிப்பு அடங்கியது. அவர் கூச்சல்கூட முழுவதும் முடியவில்லை. பாதியில் நின்று விட்டது. இரண்டு நிமிடம் முன்பு அது நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. இன்று படுக்கை விட்டு எழுந்து சோம்பல் முறித்தபோது யாருக்கும் தெரியாது.

இல்லை. இனி இவர் இல்லை. இந்த இடம் வெற்றிடம். எல்லாக்கர்வமும் வெற்றிடம். எல்லாஆட்டமும் வெற்றிடம். சின்ன ஈயக்குண்டு... செங்கல் செங்கலாய், பாளம் பாளமாய் தங்கம் வைத்திருப்பவர்களுக்கு சிறிய ஈயக்குண்டு மரணம் தந்தது. இப்போது அந்தத் தங்கமெல்லாம் இவருக்கு என்ன உபயோகம்? என்ன செய்ய முடியும்? ரத்தவெள்ளத்தில் கிடக்கும் இவரை அந்தத் தங்கத்தால் என்ன செய்ய முடியும்?

அந்த தங்கக் கட்டிகளுக்கு இவர் எத்தனை பாடுபட்டிருக்கிறார். எத்தனை யோசிப்பு. எவ்வளவு கண்விழிப்பு. நடை, அலைச்சல், கோபம், ஏமாற்றம், சூழ்ச்சி. ஏன் விட்டுவிட்டுப் போனார் அவைகளை?

வாசலில் தடதடவென்று ஆட்கள் வரும் சத்தம் கேட்டது.

''ஐயோ முதலாளி? நம்ம சின்ன ஐயாவை தெருவுல அடக்கறாங்கய்யா.''

வந்தவர்கள் கூடத்தில் ரத்தம் தோய்ந்து கிடக்கும் முதலாளியைப் பார்த்துவிட்டுப் பின் வாங்கினார்கள்.

''ஓடிருங்கடா... மாட்டிக்குவோம்'' - யாரோ குரல் கொடுக்க, அதே வேகத்தில் திரும்பினார்கள்.

முதலாளி கை விரித்து, வாய் பிளந்து ரத்தத் தலையணை மீது கிடந்தார்.

வரதராஜு சிரித்தான். வாய்விட்டுச் சிரித்தான்.

ஆக, தங்கமும் இல்லை. ஆட்களும் இல்லை. மனிதர்கள் துணையில்லை. தூக்கிப் போடக்கூட ஆட்கள் இல்லை. 'ஓடிருங்கடா' என்றுதான் உடனே சொல்ல முடிந்தது. விசுவாசம் ஓடிவிட்டது. கைகட்டிப் பேசினவர்கள் கால் பிடரி, தலையில் பட ஓடி விட்டார்கள்.

''என்னன்னு போய்ப் பாருங்களேன்?'' - சுப்புலட்சுமி உலுக்கினாள்.

வரதராஜு புன்னகையுடன் வெளியே வந்தான். நிதானமாய் கூட்டமாய் இருந்த தெருமுனை நோக்கி நடந்தான். கூட்டம் பிளந்து முன்னேறினான். தரை பார்த்தான்.

இது அதைவிட கோரம். கொதிக்கிற வெந்நீர் முகத்தில் பட்டு பளபளவென்று தோல் உரிந்து சிவந்து திட்டுத் திட்டாய் பிளந்திருக்க, மோட்டார் பைக் சரிந்து விழுந்ததில் கால் ஒரு விதமாய் மடங்கிக் கிடக்க, சரமாரியாய் அடி விழுந்திருக்கிறது. இரும்புக் கம்பியை நேரே வயிற்றில் சொருகி விட்டார்கள். கட்டையால் மண்டை பிளந்திருக்கிறார்கள். இரும்புச் செயினால் விலாவில் அடித்திருக்கிறார்கள். சட்டை கிழிந்து சதையுடன் தொங்கியது. ஆண்குறியில் மிதித்திருக் கிறார்கள். மலமும், மூத்திரமும், ரத்தமும் வெளிப் பட்டிருக்கிறது.

வரதராஜு மெல்ல அவனருகில் உட்கார்ந்தான். எந்த அடியில் உயிர் போயிருக்கிறது. என்பது தெரியவில்லை. தலை முடி மட்டும் ஷாம்பு போட்டு அடர்த்தியாய், பூவாய் பம்மென்று கிடந்தது. மெல்ல கோதிக் கொடுத்தான்.

இவனோடு பள்ளிக்கூடம் போனதும், ராத்திரி வீட்டு வாசலில் குல்ஃபி சாப்பிட்டதும், ஏகப்பட்ட காஸ் பாலூன்கள் வாங்கி ஒவ்வொன்றாய் பறக்கவிட்டதும், தெலுங்கு வருஷப் பிறப்புக்கு வேட்டியும், நாமமும் தரித்து கோவில் போனதும் ஞாபகம் வந்தன.

''தம்புடு... நாதம்புடு... ஏமிரா இதி?'' துக்கம் சொந்த பாஷையைக் கொண்டு வந்து கொடுத்தது. மெல்ல அவன் தலை கோதி வாய்விட்டு அழுதான்.

இந்தக் குழந்தையை யார் கெடுத்துப் போட்டார்கள். இந்த இளைஞனை யார் மோசமாக்கினார்கள்? இந்த கெட்டிக்காரப் பையனை யார் முரடனாக்கினார்கள்? வாழ்க்கை தெரியும் முன் இவன் ஏன் செத்துப் போனான் என்று அழுதான்? வாய்விட்டு அலறினான்.

போலீஸ் சுற்றிக் கொண்டது. நாலா தெருவிலிருந்தும் ஜனங்கள் ஓடி வந்தார்கள். எவனோ சோடா பாட்டில் எடுத்து எதிர்பட்ட கடையில் வீச, சரசரவென்று கடை ஷட்டர்கள் கீழே விழுந்தன. ஜனங்கள் சிதறினார்கள்.

வந்த போலீஸ் அதிகம் கேள்வி கேட்டது. வரதராஜுவை மெல்ல தூக்கி டீக்கடையில் உட்கார வைத்தது.

''சார், வீட்ல எங்கப்பா செத்துக்கிடக்காரு. இவன் என் தம்பி, துப்பாக்கியால சுட்டுக் கொன்னுட்டான்.'' தகவல் சொன்னான்.

அவனை வீட்டுக்கு போலீஸ் கூட்டிப் போயிற்று. இருபது போலீஸ் தடதடவென்று உள்ளே நுழைந்தது. வயர்லெஸ் இடைவிடாது பேசிற்று.

ஹாலில் ஆட்களை அப்புறப்படுத்தினார்கள். எல்லோரையும் வராண்டாவுக்குள் போகச் சொன்னார்கள். வராண்டாவில் நாற்காலி போட்டு வரது உட்கார்ந்தான். சேர் ஆடியது. குனிந்து பார்க்க அப்பா செருப்பு தெரிந்தது. எடுத்து ஓரம் போட்டான். போட்டதை எடுத்துப் புரட்டிப் பார்த்தான்.

அந்தக் கோடுகள் எதையோ ஞாபகப்படுத்தின. ''அட... இது போல கோடு உள்ளே பார்த்தோமே... பார்த்தோமே, வேன்... அப்போ அவரே வேனில் கடத்திப் போய்... அவரே வீட்டுக்கு வந்து கடத்தினாரா... கடத்துவதற்குத்தான் உறவாடினாரா...? ஏன் என்னை சும்மா இருக்க விடவில்லை இந்த ஆள்?'' மனசு நூறு கேள்வி கேட்டது.

போலீஸ் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னான். சகல உண்மைகளும் சொன்னான். போலீஸ் பதிவு செய்து கொண்டது.

ரதன் சந்தாவாத் எட்டி தெரு பார்த்தான். ஜனங்கள் முன்னும், பின்னும் அலைந்தார்கள். எல்லோர் கவனமும் கொலைக் கதையில், போலீஸ் விரட்டலில் இருந்தது.

''டேய்... வாழை இலைக் கட்டை ஏத்திரு.'' ரதன் உத்தரவிட்டான்.

''எங்க சாப்?''

''பாம்பே லாரில போட்டுரு. உடனே செய்!''

''போலீஸ் சுத்துது சாப்.''

''அவனுங்க வேற விஷயத்துக்குச் சுத்தறானுங்க. நம்மைக் கவனிக்க மாட்டாங்க.''

ஆனால், பாண்டியன் படை அசையக்கூட இல்லை. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருந்தது.

காத்திருந்தது. ஒரு இலைக் கட்டு நகர்த்த, நாலு ஆட்கள் வருவது கண்டு தகவல் சொல்லிற்று.

''ஏத்தட்டும். வெயிட்.''

''ஏத்திட்டாங்க சார்.''

''போட்டும், வெயிட்!''

''கிளம்பிடுச்சு சார்.''

''ஃபாலோ பண்ணு!''

''பெட்ரோல் பங்கில் டீசல் பிடிக்குது சார்.''

''வெய்ட்.''

''கார் டீசல் ஸ்டோர் பண்ணியிருக்கிற கிரவுண்ட் டேங்க்லேர்ந்து பை எடுக்கறாங்க சார்.''

''எடுக்கட்டும் வெய்ட்!''

''சார்! பைய லாரியில போட்டுட்டாங்க. என்னை நோட் பண்றாங்க.''

''அங்கேயே இரு. நான் வேற குரூப் அனுப்பறேன். நீ பின்னால போவாதே! சந்தேகம் வரும்.''

சத்தமே வராது வேற குரூப் மாறியது. ''சார், கார் தங்கசாலை வந்திடுச்சு, லாரிய மடக்கட்டுமா?''

''வெய்ட்!''

''சார்! பேஸின் பிரிட்ஜில மடக்கிடலாமா?''

''வெய்ட்!''

பெரம்பூர் வழியாக ஆயுதப்படை ரயில் பாலத்துக்குக் கீழே நின்று கொண்டது. லாரி வருவது தெரிந்து நாலா பக்கமும் பரவிற்று. லாரி பாலத்துக்குக் கீழே மெல்லப் போக எதிரே மாட்டு வண்டி மடக்கிற்று. உள்ளே போலீஸ் தாவி ஏறியது.

''இறங்குடா நாயே.'' டிரைவரை பளிச் சென்று அடித்து இறக்கினார்கள். கிளீனரை இறக்கி சுவரோடு அழுத்தினார்கள். லாரி மீது இருந்தவன், குதித்து ரயில்வே லைன் பக்கம் ஓடினான். போலீஸ் நாய் அவிழ்த்து விடப்பட்டது. நாய் அவனை மடக்கி குதறிற்று. பிரம்பால் பேய் அடி அடித்தார்கள்.

ரதன் மூலக்கடையிலிருந்து போன் வரும் என்று காத்திருந்தான். அவனே போன் பண்ணிக் கேட்டான். 'வரவில்லையே' என்றார்கள். எங்கோ இடித்தது. ஆள் ஏவினான். பத்து நிமிடத்தில் மடக்கப்பட்டது. தெரிந்தது.

வாசலை எட்டிப் பார்த்தான். ஆட்கள் தவறாய் இருப்பது தெரிந்தது. உள்ளே ஓடினான். பெட்டி எடுத்துக் கொண்டான். மனைவியை அதட்டி, சகலமும் மறைக்கச் சொன்னான். பின் வீட்டு வழியே எட்டிப் பார்த்தான். அங்கேயும் ஆட்கள் தெரிந்தது.

ஓடிப்போய் ரிவால்வர் எடுத்தான். பெட்டியிலிருந்து பணம் எடுத்து தோல் பையில் போட்டு, அடுத்த வீட்டுக் கூரை ஏறினான். பதுங்கிப் பதுங்கி நாலு வீடு தாண்டினான். போலீஸ் உள்ளே நுழைந்தது. ஐந்தாவது சேட் வீட்டில் இறங்கினான். பெண் உடை கேட்டான். மார்வாரிப் பெண் மாதிரி முகம் மறைத்து அந்த வீட்டு வாசல் வழியே தெருவில் இறங்கி நிதானமாய் நடந்து இரண்டு போலீஸ் ஜீப்புகள் தாண்டினான். சந்தில் நடந்து ஆட்டோ பிடித்தான். பீச் ரோட் வழியாக அட்யார் வந்தான்.

ஆட்டோக்காரனுக்கு அவன் பதட்டம் சந்தேகமாக இருந்தது. மார்வாரிப் பெண் தனியாக தோல் பையுடன் வருவது சந்தேகம் கொடுத்தது. வண்டியை ஓரம் நிறுத்தி, 'ஏய்

நீ யாரு?' என்று அதட்ட, மேல் துணி உதறிவிட்டு ஆட்டோக்காரனை வாயில் அடித்தான். நெட்டித் தள்ளிவிட்டு பாவாடை சட்டைக் கழற்றிவிட்டு பைஜாமா ஜிப்பா அணிந்து கொண்டு, ஆட்டோ ஓட்டியபடி திருவான்மியூர் வந்தான். ஆட்டோவை ஓரமாக நிறுத்திவிட்டு பஸ் ஏறி இரண்டு பஸ் ஸ்டாப் தள்ளி இறங்கி டூரிஸ்ட் டாக்ஸி பிடித்தான். அரை மணியில் செங்கல்பட்டு வழியே பெங்களூர் பயணமானான்.

பாண்டியனுக்கு எல்லா இடத்திலிருந்தும் பவுடர் பைகள் கிடைத்தன. ரதன் சந்தாவாத் சலூம்ப்ராதான் கிடைக்கவேயில்லை.

ஞானாம்பாள் ஓடி வந்தாள். அவள் பிள்ளை ரங்கசாமி தரையில் புரண்டு அழுதான். அவர்களையும் போலீஸ் விசாரித்தது. ஏகப்பட்ட ரவுடிகளை கைதுசெய்தது. சவுகார் பேட்டையைப் புரட்டிப் போட்டது.

போலீஸ் நாலு நாட்கள் கழித்து சடலங்களைக் கொடுத்தது. நாலு மணி நேரத்தில் சகலமும் முடிக்கச் சொன்னது. அழுகி துர்நாற்றம் எடுத்த சடலங்களை வராண்டாவிலேயே வைத்தார்கள். அப்படியே காட்டுக்கு எடுத்துப் போனார்கள். எரித்தார்கள்.

ஸ்ரீராமுலு செட்டியார் அண்ட் சன்ஸ் கதை முடிந்து விட்டது' என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். 'மார்வாடிப் பசங்க போதைப் பொருள் கடத்தறானுங்க, ஒரு நகைக் கடைக்காரனும் அவனுங்களைக் கிட்ட சேர்க்கக் கூடாது. நல்லது கெட்டதுக்குப் போகக் கூடாது.' - சட்டம் போட்டார்கள்.

எரித்த பிறகு ஆடிட்டரும் வக்கீலும் உட்கார்ந்து நேர் வாரிசான வரதராஜுவுக்கு எல்லா சொத்தும் போக வேண்டும்

என்றும், ஸ்ரீராமுலுவின் மனைவி அவர் கணவர் அவருக்குக் கொடுத்த சொத்துக்களுடன் வாழ வேண்டும் என்றும் பிரித்தார்கள்.

ஞானாம்பாள் ''தன் பங்குக்கு என்ன?'' என்று கேட்டாள். 'ஏதுமில்லை' என்று பதில் வந்தது. 'பாவி... பாவி... இருபத்தி நாலு வயசுல என்னை அழிச்ச பாவி' என்று புருஷனைத் திட்டினாள்.

வரதராஜு எழுந்தான். ஆடிட்டருடனும், வக்கீலுடனும் தனியே பேசினான். கடையை ரங்கசாமி பெயருக்குத் தான் மாற்றுவதாய்ச் சொன்னான். வீட்டில் உள்ள நகைகளில் ஒரு பகுதியைத் தன் மகனுக்கும், ஒரு பகுதியைத் தன் மனைவிக்கும் எழுதினான். இந்த வீட்டின் சாபம் அகல இதைப் பொதுச் சொத்தாய் மாற்றி கல்யாணச் சத்திரமாய் நகை வியாபாரிகள் சங்கத்திற்குத் தந்தான். அதைப் பராமரிக்க அதற்கு நிலங்கள் எழுதி வைத்தான். பின் கட்டடத்தை சவுகார் பேட்டை சிவன் கோவில் தேவஸ்தானத்திற்கு எழுதி வைத்தான்.

இரண்டு நாள் தங்கி வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தான். அம்மாவின் அருகில் உட்கார்ந்தான்.

''ஏண்டா இப்படிப் பண்ணிட்ட?'' அம்மா கேட்டாள்.

''உனக்கும் எனக்கும் இதாம்மா நல்லது. நீ உன் பேரில் இருக்கும் வீட்டுக்குப் போயிடு. இங்க இருக்காத. கடை வாடகையை வச்சுக்கிட்டு சந்தோஷமா இரு. நான் வரேன்.''

பிள்ளையைத் தூக்கிக் கொண்டு படியிறங்கினான் ஞானாம்பாள் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''என்னாங்க.''

''நான் அவரோட சட்டப்படி மனைவி இல்லீங்க.''

''சரி... அதுக்கு என்ன இப்ப?''

''ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''நான் பொட்டு எடுத்திடணுமா?''

சிரித்தான்.

''சட்டப்படி இருந்தாக்கூட எடுக்க வேணாம்மா.''

''ஸ்ரீராமுலு அண்ட் சன்ஸ்னே பேர் இருக்கட்டுமா கடைக்கு?''

''இருக்கட்டுமே. அவரு புள்ளைதானே ரங்கசாமி. எனக்கு ஆட்சேபனையில்லை.''

''அண்ணே, மறுபடி கடை திறக்கிறபோது நீங்க வரணும்.''

''வேணாம் ரங்கசாமி.''

''ஏன்?''

''மறந்து போய்க்கூட நான் சவுகார் பேட்டை பக்கம் வர மாட்டேன்.''

''ஏன் அப்படிச் சொல்றீங்கண்ணே?''

''பணம் பணம்னு பறக்கற இடம்டா இது. மனுஷனை மனுஷனா நடத்தாத இடம். மனுஷா உயிருக்கு, உணர்ச்சிக்கு மதிப்புத் தராத இடம். நான் மனுஷனா இருக்கணும்னு ஆசைப்படறேன். நீயும் இருக்க முயற்சி பண்ணு. வரட்டா?''

பிள்ளை ஞானாம்பாள் பார்த்து சிரித்தது. எத்திராஜ்வைப் பார்த்து கையசைத்தது.

''எனக்கு ஒண்ணுமே கிடைக்கலீங்க.'' எத்திராஜ் அடிக்குரலில் பேசினார்.

''என்ன வேணும்?''

''ரங்கசாமி தம்பிக்கிட்ட பேசி கடைல...''

''ரங்கசாமி...''

''அண்ணே...''

''நீ திறந்த கடையை இவரு இருக்கிறவரை நடத்தட்டும். லீஸுக்கு வுட்டுரு.''

''சரிண்ணே.''

கார் ஏறினான். மனைவி அருகே உட்கார்ந்து கொண்டான். பிள்ளையை மடியில் வைத்துக் கொண்டான்.

''ஏன்டல்லா இருக்கேள்?'' - சுப்புலட்சுமி கேட்டாள்.

''மறுபடி உசிர் வந்தது இல்லையா?''

''உசிர் வந்ததா...? எப்ப செத்துப் போச்சு?''

''அப்பா சாகும்போது ஒரு சாவு எனக்குள்ளேயும் நடந்தது. காசுக்கு ஆசைப்பட்ட ஆள் செத்துப் போய் சும்மா ஏதாவது செய்திட்டிருக்க ஆள் வந்துட்டான்.''

''சும்மா ஏதாவதுன்னா?''

''எது வேணா... மறுபடி சாகற வரைக்கும்... ஏதாவது, யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வேலையா செய்யற ஆள்...''

''பயந்துட்டேளா?''

''இல்லை. பயத்தை வுட்டுட்டேன்.''

''எனக்குப் புரியலையே?''

''புரியாது. எல்லோருக்குமே இது புரியாது. எப்பவோ, யாருக்கோ இது கிடைக்கும். எனக்குக் கிடைச்சிருக்கு!''

''எம்மேல ஆசையா இருப்பேளா?''

''எல்லார் மேலேயும் ஆசையா இருப்பேன்.''

''எல்லார் மேலேயும்னா?''

''எல்லா உயிர்கள் மேலேயும்.''

-சுப்புலட்சுமி பேசுவதை நிறுத்திக் கொண்டாள். கார் தெற்கு நோக்கிப் போயிற்று.

முற்றும்



மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

சுகஜீவனம்



பாலகுமாரன்